# உதயன்

www.onlineuthayan.com

52 பக்கங்கள் சுடர் 28 கதிர் 006 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 17 ஞாயிற்றுக்கிழமை (02/12/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 20.00





# பயங்கரவாதச் சட்டத்தின் கீழேயே 4 பல்கலை. மாணவர்களும் கைது

## உடன் விடுவிக்குமாறு தலைவர்கள் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,டிசெம்பர்2 பொலிஸாரால் விசாரணைக்கு என்று அழைத்துச் செல்லப்பட்ட யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் நால்வரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்த ஜயகொடி தெரிவித்தார்.

கட்சி அலுவலகம் ஒன்றின் மீது பெற்றோல் குண்டு வீசித் தாக்கியமை மற்றும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவான சுவரொட்டிகளை ஒட்டியமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஏற்கெனவே மூன்று மாணவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் உரும்பிராயைச் சேர்ந்த மருத்துவபீட மாணவரான கணேசமூர்த்தி சுதர்சனும் (வயது 22) நேற்று அதிகாலையில் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் பரமலிங்கம் தர்சானந்த் (வயது 24 கந்தர்மடம்), கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவரான கனகசுந்தரசுவாமி ஜெனமேஜெயன் (வயது 24 புதுக்குடியிருப்பு), விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத்தைச் சேர்ந்த சண்முகம் சொலமன் (வயது 24 யாழ்ப்பாணம்) ஆகிய மாணவர்கள் முன்னதாகக் கைது செய்யப்பட்டிருந்தனர்.

நேற்றுக் காலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவுக்குக் கொண்டு செல்லப்பட்ட அவர்கள் பின்னர் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. கொழும்பு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் அவர்களிடம் விசாரணை நடத்துவார்கள் என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

மாணவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளமை அரசின் மிக மோசமான அடக்குமுறை என்று அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள், சிவில் தலைவர்கள் கண்டித்துள்ளனர். மாணவர்களை உடனடியாக விடுவிக்குமாறும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கட்சி அலுவலகம் தாக்கப்பட்டமை குறித்து தாம் விசாரணைக்கு உட்படுத்தப் போவதாகத் தெரிவித்து 10 மாணவர்களின் பெயர் பட்டியல் பொலிஸாரால் யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டிருந்தது.

அதில் ஜெனமேஜெயன் மற்றும் சொலமன் ஆகிய இருவரும் பதில் துணைவேந்தர் வேல்நம்பியுடன் நேற்றுமுன்தினம் மாலை கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றிருந்த சமயத்தில் தடுத்து வைக்கப்பட்டனர். தர்சானந்த் நேற்று அதிகாலையில் பொலிஸாரால் வீட்டிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டிருந்தார்.

பார்க்க பக்கம் 4

# தாக்குதல், கைதுகளைக் கண்டித்து செவ்வாயன்று நகரில் ஆர்ப்பாட்டம்

### கூட்டமைப்பு தமிழ்த் தேசிய முன்னணி இணைந்து ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிசெ.02

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதல் மற்றும் நான்கு மாணவர்கள் கைது செய்யப்பட்டமை ஆகியவற்றைக் கண்டித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியன இணைந்து நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளன.

யாழ். நகரில் பஸ் நிலையம் முன்பாக முற்பகல் 11 மணி தொடக்கம் நண்பகல்12 மணிவரை இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியன இணைந்து இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்த் தேசிய இனம் என்ற வகையில் ஜனநாயக செயற்பாடுகளுக்கு ஏற்படுத்தப்படுகின்ற இடையூறுகளுக்கு

பார்க்க பக்கம் 4

# மாணவரை விடுவிக்கும் வரை காலவரையறையற்ற பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 02

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நான்கு பேரையும் விடுவிக்குமாறு வலியுறுத்தி யாழ். பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களும் காலவரையறையற்ற வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளதாவது:

கடந்த புதன்கிழமை பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்த கண்டன ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். நான்கு மாணவர்க்ளை அன்றைய தினம் கைது செய்தனர். அதற்கு முதல்நாள் மாணவர்களின் விடுதியினுள் அத்துமீறி நுழைந்துள்ளனர்.

இவற்றைக் கண்டித்தும் மாணவர்களது பாதுகாப்பை உறுதி செய்யும்படி கோரியும் கடந்த வியாழன், வெள்ளி ஆகிய இரண்டு நாள்களும் அனைத்துப் பீட மாணவர்களும் வகுப்புப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

ஆயினும் நேற்றுமுன்தினம் நான்கு மாணவர்களைப் பொலி

பார்க்க பக்கம் 4

# மாணவர்களை விடுவியுங்கள்

### கோருகிறது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 02.

பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நால்வரையும் உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியச் செயலாளர் உட்பட 4 பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இதுகுறித்துக் கருத்து வெளியிடும்போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது :-

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இந்த மாணவர்களைக் கைது செய்தமையைத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது.

பல்கலைக்கழக மாணவர்களினால் அமைதியாக நவம்பர் 27 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட அஞ்சலி நிகழ்வுகளை இராணுவத்தினர் உள்ளே புகுந்து குழப்பியடித்ததுடன், அடிதடியும் நடத்தினர். இதனைக் கண்டித்து மாணவர்களால்

பார்க்க பக்கம் 4

# 6 ஆண்டுகளுக்கு ஐ.தே.க. தலைவர் ரணில்

கொழும்பு, டிசெ. 2

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராக இன்னும் 6 ஆண்டுகளுக்கு ரணில் விக்ரமசிங்க இருப்பதற்கான யோசனை கட்சியின் மாநாட்டில் பெரும்பான்மையான வாக்குகளுடன் நேற்று சனிக்கிழமை நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக 4978 பேரும், எதிராக 337 பேரும் வாக்களித்துள்ளனர்.

ஐக்கியத் தேசிய கட்சியின் 54 ஆவது மாநாடு கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் நேற்றுக் காலை 9 மணிக்கு ஆரம்பமானது. இந்த மாநாட்டை முன்னிட்டு அந்தப் பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் மாநாட்டுக்குச் சென்ற

பார்க்க பக்கம் 4

# இரும்பு வியாபாரம் இப்போது உயர்பாதுகாப்பு வலயத்துக்குள்

### பொலிஸ் முறைப்பாட்டை அடுத்து

யாழ்ப்பாணம், டிசெ. 2

இறுதிக்கட்டப் போரில் பொதுமக்களாலும், அரச திணைக்களங்களாலும் கைவிடப்பட்ட வாகனங்களை, இரும்பாக்கித் தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்யும் நடவடிக்கைகள் திடீரென உயர்பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் இடம்மாற்றப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக பிரதேச சபைத் தலைவர்களால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஏழா

பார்க்க பக்கம் 4

# மணல் ஏற்றும் தொழிலாளர்கள் அம்பனில் நேற்றுப் போராட்டம்

### மூன்று கோரிக்கைகளை முன்வைத்து

வடமராட்சி, டிசெ.2

வடமராட்சி கிழக்கு அம்பனில் மணல் ஏற்றும் பணியில் ஈடுபடும் உழவு இயந்திர உரிமையாளர்களும், தொழிலாளர்களும் நேற்று சனிக்கிழமை மூன்று கோரிக்கைகளை முன்வைத்து பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

ஒக்ரோபர், நவம்பர் மாதங்களுக்குரிய சம்பளம் வழங்கப்பட வேண்டும், மணல் அள்ள ஒதுக்கப்பட்ட மேடுகளில் மாத்திரம் மணல் எடுக்கப்பட வேண்டும், மகேஸ்

பார்க்க பக்கம் 4

# அனைத்துப் பல்கலை மாணவரும் இணைந்து மாபெரும் ஆர்ப்பாட்டம்

### யாழ். மாணவர் மீதான கெடுபிடிகளை கண்டித்து

கொழும்பு, டிசெ. 2

யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டமையை கண்டித்தும், மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை கண்டித்தும் நாட்டிலுள்ள சகல பல்கலைக் கழகங்களும் ஒன்றிணைந்து மாபெரும் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அகில இலங்கை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் சஞ்ஜீவ பண்டார தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் அமைதி வழியில் முன்னெடுத்த கவனவீர்ப்புப் போராட்டத்தை இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து கலைத்துள்ளனர். இதன்போது மாணவர்களை அவர்கள் விரட்டி விரட்டி மூர்க்கத்தனமாகத் தாக்கியுள்ளனர். மேலும் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் உள்பட நான்கு மாணவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுமுள்ளனர்.

இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக நாட்டிலுள்ள சகல பல்கலைக்கழக மாணவர்களும் ஒன்றிணைந்து போராட்டத்தை நடத்தவுள்ளனர்.

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக மாணவர்கள் தூண்டிவிடப் படுகின்றனர்

## இராணுவப் பேச்சாளர் சொல்கிறார்

கொழும்பு, டிசெ. 2

இராணுவத்தின் செயற்பாடுகள் தொடர்பாக யாழ். மக்கள் நன்கு அறிவார்கள். பிரிவினைவாதத்தை நோக்கமாகக் கொண்ட அணியொன்றுக்கு மக்களுக்கும் இராணுவத்துக்கும் இடையில் இருக்கும் தொடர்புகளைச் சீர்குலைக்கும் தேவையிருக்கின்றது. இதனாலேயே பல்கலைக்கழக மாணவர்களை அவர்கள் தூண்டிவிட்டுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக சூழலில் அண்மையில் ஏற்பட்ட சம்பவம் குறித்துக் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட சம்பவம் தொடர்பாக கடந்த 27 ஆம் திகதி பொலிஸாரின் கோரிக்கைக்கு அமைய இராணுவம் தயார் நிலையில் இருந்தாகவும் 28 ஆம் திகதி பொலிஸார் அப்படியான கோரிக்கையை விடுக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

யாழ். மக்களுக்கும், இராணுவத்துக்கும் இடையில் நீண்டகாலமாக நெருங்கிய தொடர்புகள் இருந்து வருகின்றன. 'ரிவிரச' இராணுவ நடவடிக்கை மூலம் படையினர் யாழ்ப்பாணத்தை கைப்பற்றியது முதல் இந்த தொடர்புகள் இருந்து வருகின்றன. 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி பயங்கரவாதிகளிடம் இருந்து முழு நாடும் விடுவிக்கப்பட்ட பின்னர், இந்த தொடர்புகள் மேலும் உறுதியாகின என்றும் அவர் கூறினார்.

இராணுவம் செயற்படும் முறை குறித்து யாழ்.மக்கள் நன்கு அறிந்துள்ளனர். அவர்கள் இராணுவத்துடன் ஒத்துழைப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு மக்களுக்கும், இராணுவத்திற்கும் இடையில் இருக்கும் தொடர்புகளை சீர்குலைக்க ஒரு குழுவினருக்குத் தேவையாக உள்ளது. இந்தக் குழுவின் நோக்கம் பிரிவினைவாதமாகும். எதிர்காலத்தைப் பொறுப்பேற்கும் பல்கலைக்கழக மாணவர்களையும் இதில் இணைத்து கொண்டுள்ளமையே எமக்கு கவலையளிக்கும் விடயமாக உள்ளது எனவும் இராணுவப் பேச்சாளர் கூறியுள்ளார். (த-5)

# அம்பாறையில் நில அதிர்வு

அம்பாறை, டிசெ. 2

அம்பாறை மாவட்டத்தின் சில பகுதிகளில் நேற்றும் ஒருவகை நில அதிர்வு உணரப்பட்டதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

அம்பாறை தமண, மடினாகம, கிவுலேகம, பொல்கஸ்ஹார, தேவாலகித ஆகிய பகுதிகளில் சிறிய அதிர்வு உணரப்பட்டதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று அதிகாலை 1 மணியளவில் இந்த அதிர்வு உணரப்பட்டுள்ளது. இதுவரையில் 13 தடவைகள் அந்தப் பகுதியில் நில அதிர்வு உணரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாறைக்கு வெடி வைத்து தகர்த்தல் போன்ற மனித செயற்பாடுகளால் இந்த அதிர்வு உணரப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (த-5)

# பொலிஸார் கையில் லத்திகள் மட்டுமே

கொழும்பு, டிசெ. 2

பொலிஸார் தமது கடமைக்குச் செல்லும் போது ஆயுதங்களை எடுத்துச் செல்லக் கூடாது என்றும், லத்திகளை மாத்திரம் எடுத்துச் செல்லுமாறும் பாதுகாப்புச்செயலர் கோத்தாபய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பான அறிவுறுத்தலை அவர், பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பியுள்ளார்.

இது தொடர்பாகக் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குத் தகவல் வெளியிட்டுள்ள பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ,

மோசமான குற்றவாளிகளைக் கைது செய்வது போன்ற சிறப்பு நடவடிக்கைகள் தவிர்ந்த வழக்கமான பொலிஸ் கடமைகளுக்குச் செல்லும் போது, துப்பாக்கிகளை எடுத்துச் செல்ல வேண்டிய தேவையில்லை.

அமைதியான சூழல் நிலவும் நாட்டில், பொலிஸாருக்குத் தன்னியக்கத் துப்பாக்கிகள் அவசியமில்லை. ஆள்களைக் கைது செய்யும் போது குறைந்தளவு பலத்தையே பயன்படுத்த வேண்டும், என்று தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய நடைமுறை தொடர்பான உத்தரவு ஏற்கனவே பொலிஸாருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகப், பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

முக்கிய பிரமுகர்களின் வதிவிடங்களில் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள, சோதனைச் சாவடிகளில் பணியில் ஈடுபட்டுள்ள பொலிஸார் மட்டும் ஆயுதங்களை வைத்திருக்க அனுமதிக்கப்படுவர். (த-5)

# இந்தியாவிடமும் அமெரிக்காவிடமும் உதவி கோரியது இலங்கை அரசு

## புலிகளின் விமானத் தாக்குதலைத் தடுக்க

கொழும்பு, டிசெ. 2

தமிழீழ விடுதலைப்புலிகளின் விமானத் தாக்குதல்களையடுத்து இலங்கை இந்தியாவிடமும், அமெரிக்காவிடமும் உதவிகளைக் கோரியதாக விக்லீக்ஸ் தகவல்களை வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் தொடர்ச்சியான விமானத் தாக்குதல் நடத்தப்படலாம் என்ற அச்சத்தில் இலங்கை அரசு இந்தியாவிடமிருந்து மேலும் மூன்று ரடார் கருவிகளை கோரியது.

அத்துடன் அப்போதைய வெளியுறவு அமைச்சர் ரோஹித போகல்லாகம, அமெரிக்காவின் உதவி ராஜாங்க செயலாளர் ரிச்சட் பௌச்சரிடம், கொள்கலன் பாதுகாப்பு உதவியையும் கோரினார்.

விடுதலைப்புலிகள் விமான தயாரிப்புக்களுக்கான உபகரணங்களை துறைமுகங்களின் ஊடாக தருவிப்பதை கட்டுப்படுத்தும் முகமாகவே இந்த கோரிக்கை அமெரிக்காவிடம் விடுக்கப்பட்டதாக அமெரிக்கத் தூதரகம் வோஷிங்டனுக்கு தகவல் அனுப்பியுள்ளது.

2007 ஆம் ஆண்டு ஏப்ரல் 5 ஆம் திகதியன்று இந்த தகவல் இராஜாங்க திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அன்றைய வெளியுறவு அமைச்சர் போகல்லாகம, கொள்கலன் பாதுகாப்பு உதவியை, அமெரிக்க இராஜாங்க செயலாளர் ரைஸிடமும் கோரியதாக அமெரிக்கத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது. (த - 5)

# நுளம்புச் சுருளினால் இருவரின் உயிர்கள் அநியாயமாக பறிப்பு

கொழும்பு, டிசெ. 2

நுளம்புச்சுருளினால் ஏற்பட்ட தீ விபத்தினால் தாயும் மகளும் தீயில் எரிந்து உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் குளியாப்பிட்டிய, சேனானிகம பிரதேசத்திலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் 37 வயதுடைய பெண்ணொருவரும் அவரது 8 வயது மகளும் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, இந்தத் தீவிபத்தில் மேற்படி பெண்ணின் கணவரும் அவரது மற்றுமொரு குழந்தையும் எவ்வித ஆபத்துமின்றி உயிர் தப்பியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் வைக்கப்பட்டிருந்த நுளம்புச் சுருளே இந்தத் தீவிபத்துக்குக் காரணமெனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (த-5)

# கோப்பாயில் முகாமைத்துவ பயிற்சி

யாழ்ப்பாணம், டிசெ. 2

அரச திணைக்களங்களின் உற்பத்தித் திறனை உயர்த்துதல் எனும் தலைப்பில் மூன்று நாள் விசேட முகாமைத்துவ பயிற்சி கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெற்றது.

முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவன ஏற்பாட்டில் செயலாளர், நிர்வாக அலுவலர், நிகழ்ச்சித் திட்ட அலுவலர் என பல தரப்பட்ட 28 அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

முகாமைத்துவ நிபுணரும் - விசேட பயிற்சியாளருமான சி.கோணேஸ்வரன் அரச அதிகாரிகளுக்கான பயிற்சியை வழங்கினார்.

பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. (ம-50)

# வர்த்தகரின் மரணத்தில் சந்தேகம்

கொழும்பு, டிசெ.2

காணமல் போன நிலையில், காட்டுக்குள் தூக்கில் தொங்கியவாறு மீட்கப்பட்ட வர்த்தகரின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தம்புள்ள வியாபாரியான லொறி உரிமையாளர் கடந்த 28 ஆம் திகதி வெண்டிக்காய் ஏற்றிவந்ததன் பின்னர் அவர் தொடர்பில் எவ்விதமான தகவல்களும் கிடைக்கவில்லை என்று உறவினர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்தனர்.

இந்த நிலையிலேயே ரிதியெல்ல காட்டிலில் தூக்கில் தொங்கிய நிலையில் அந்த வியாபாரியின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

சடலம் மீட்கப்பட்டுள்ளமை தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் அவர் கொலை செய்யப்பட்டு தூக்கில் ஏற்றப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும் மரணத்தில் சந்தேகம் இருப்பதாகவும் தெரிவித்தனர். (த-5)

# இலங்கை முதலிடம்

கொழும்பு, டிசெ. 2

பாலியல் தொந்தரவுகள் தொடர்பான வழக்குகளில் தென்னாசியாவில் இலங்கை முதலிடம் வகிப்பதாகச் சட்ட உதவி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

விசேடமாக பொதுப் போக்குவரத்துக்களில் பெண்கள் எதிர்கொள்ளும் தொந்தரவு தொடர்பான வழக்குகளில் இலங்கை முதலிடம் வகிப்பதாகச் சட்ட உதவி ஆணைக்குழுவின் தலைவர் எஸ்.எஸ்.விஜேரட்ன தெரிவித்தார். (த-5)

# கடைக்காரரை தாக்கிய இருவர் நாச்சிக்குடாவில் கைது

யாழ்ப்பாணம்,டிசெ.2

கிளிநொச்சி ஜெயபுரம் பகுதியில் கடைஉரிமையாளர் ஒருவர் இனந்தெரியாத இருவரால் தாக்கப்பட்டு முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் துரைராசா சுரேஸ்கண்ணா (வயது-32) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என மக்களால் இனங்காணப்பட்ட இருவர் நாச்சிக்குடா பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, கடந்த வெள்ளிக்கிழமை குறித்த கடை உரிமையாளர் தனது கடையை மூடிவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த போது பின்தொடர்ந்து வந்தவர்களால் தலையில் தாக்கப்பட்டுள்ளார். சம்பவத்தை நேரில் கண்ட சிலர் நாச்சிக்குடா பொலிஸ் நிலையத்தில் தகவல் கொடுத்துள்ளதுடன் காயத்துக்கு இலக்கானவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த நிலையில் சந்தேக நபர்கள் இருவரும் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் நடத்தி வருகின்றனர்.(ஐ)

# நாடாளுமன்ற உறுப்பினர்களை நீதிமன்றம் விசாரிக்க முடியும்

## சிரேஷ்ட சட்டத்தரணி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.2

நாடாளுமன்ற உறுப்பினர்களை நீதிமன்றம் விசாரணை செய்ய முடியும். நீதிமன்றின் இந்த நடவடிக்கை நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறலாகக் கருத முடியாது, என்று சிரேஷ்ட சட்டத்தரணியும், ட்ரான்பெரன்சி இன்டர்நெசனல் அமைப்பின் முன்னாள் தலைவருமான ஜே.சி. வெலியமுன தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல் அமைப்பின் 35 ஆம் சரத்தின் அடிப்படையில் நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை மட்டுமே நீதிமன்றுக்கு அழைத்து விசாரணை செய்ய முடியாது.

நாடாளுமன்றின் கருத்துச் சுதந்திரம், விவாதங்கள் போன்றன தொடர்பில் நீதிமன்றம் தலையீடு செய்ய முடியாது என்ற போதிலும் நிலையியற் கட்டளை உத்தரவுகள் தொடர்பில் நீதிமன்றம் தலையீடு செய்ய முடியும்.

நீதிமன்றின் இந்த நடவடிக்கையானது நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறலாக கருதப்பட முடியாது என்றார்.(த-5)

# முல்லைத்தீவுப் பகுதி மக்களுக்கு அரிசி, எண்ணெய்யுமே நிவாரணம்

## கையிருப்பே பகிரப்படுவதாகத் தகவல்

யாழ்ப்பாணம், டிசெ.2

முல்லைத்தீவில் அண்மையில் மீள்குடியமர்ந்த மக்களுக்கு கடந்த மாதத்துக்கான உலக உணவுத் திட்டத்தின் நிவாரணத்தில் அரிசியும், எண்ணெய்யும் மட்டுமே வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

நவம்பர் மாதத்துக்கான நிவாரணத்தில் பத்தரைக் கிலோ அரிசியும், 600 மில்லி லீற்றர் மரக்கறி எண்ணெய்யுமே வழங்கப்பட்டன என [illegible] பருப்பு, சீனி இல்லாது தாம் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட செயலக புனர்வாழ்வு கிளையில் திட்டப் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது:

அரசு தருவதையே நாம் மக்களுக்கு பங்கிடுகிறோம். உலக உணவுத் திட்டம் மூலம் கிடைக்கும் பொருள்களில் இவை மட்டுமே எமக்கு கிடைக்கின்றன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு முன்னுரிமை வழங்கி கிடைக்கும் பொருள்களைப் பகிர்ந்து வருகிறோம். அரிசியும், எண்ணெய்யும் கையிருப்பில் இருந்ததால் அவற்றை மக்களுக்கு வழங்கினோம். தற்போது ஒரு தொகுதி அளவில் பருப்பும் கிடைத்துள்ளது. அதுவும் பகிர்ந்தளிக்கப்படும் - என்றார்.

உலக உணவுத் திட்டத்துக்கான நிதி மற்றும் உலர் உணவுப் பங்களிப்பு போதாமையே இந்த நிலைக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# எச்.ஐ.வி. தொற்றினால் இந்த ஆண்டு 22 பேர் சாவு

கொழும்பு, டிசெ. 2

எச்.ஐ.வி. தொற்றினால் இந்த ஆண்டு இலங்கையில் 22 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் 1597 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர், என்று தேசிய பாலியல் நோய் எயிட்ஸ் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

தேசிய பாலியல் நோய் எயிட்ஸ் தடுப்புப் பிரிவு வெளியிட்டுள்ள புள்ளி விபரவியல் தரவுகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எச்.ஐ.வி. தொற்றினால் இந்த ஆண்டு முதல் மூன்று காலாண்டுகளில் 22 பேர் மரணமடைந்துள்ளதுடன் 1597 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இவர்களில் 950 பேர் ஆண்கள், 647 பேர் பெண்களாவர்.

இதேவேளை, 2011 ஆம் ஆண்டில் 32 பேர் மரணமடைந்திருந்ததுடன் 1463 பேர் பாதிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 866 பேர் ஆண்கள், 597 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோரிக்கைகளை செயற்படுத்துமாறு சுகவீன லீவுப் போராட்டம் செவ்வாயன்று

## 13 ஆசிரிய தொழிற் சங்கங்களும் இணைந்து நடத்த தீர்மானம்

யாழ்ப்பாணம், டிசெ.2

ஆறு அம்சக் கோரிக்கைகளையும் நடைமுறைப் படுத்துமாறு வலியுறுத்தி 13 தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து நாளைமறுதினம் செவ்வாய்க் கிழமை சுகவீனவிடுப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளன என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆசிரியர்கள் தந்தி மூலம் அதிபருக்கும், அதிபர்கள் தந்தி மூலம் கோட்டக் கல்வி அதிகாரிக்கும் தமது சுகவீன லீவை அறிவிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

★ அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்ட, அதிபர் ஆசிரியர்களின் இடைக்காலச் சம்பளத் திட்டத்துக்கு அமைவாக நிலுவையுடனான சம்பளத்தை உடன் வழங்கு.

★ அதிபர், ஆசிரியர்களின் பதவி உயர்வுகளை தாமதமின்றி வழங்கு.

★ நிலுவைச் சம்பளம், இடர்கடன், வீடமைப்புக் கடன் முதலான அதிபர், ஆசிரியர்களுக்கு உரித்தான கொடுப்பனவுகளை வழங்குவதற்கு போதிய நிதியை ஒதுக்கீடு செய்.

★ மொத்தத் தேசிய உற்பத்தியின் 6 வீதத்தை கல்விக்காக ஒதுக்கீடு செய்வதன் மூலம் இலவசக் கல்விக்கான பாதுகாப்பை உறுதி செய்.

★ கல்வித்துறையை அரசியல் மயப்படுத்துவதை உடன் நிறுத்து.

★ ஆசிரியர் இடமாற்றக் கொள்கையை நடைமுறைப் படுத்து.

ஆகிய கோரிக்கைகளை முன் வைத்து சுகவீன விடுப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தக் கோரிக்கைகள் உள்ளிட்ட கல்வித்துறை தொடர்பான பிரச்சினைகள் குறித்துக் கடந்த 16 ஆம் திகதி கல்வி அமைச்சர், பிரதிக் கல்வி அமைச்சர், கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர், கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் உயரதிகாரிகளுடன் பேச்சு நடைபெற்றது.

அதன் போது ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வை முன்வைக்காமையால் அன்றைய பேச்சு தோல்வியில் முடிவடைந்தது.

இந்த முறை வரவு செலவுத் திட்டத்தில் எமது கோரிக்கைகளை நிறைவேற்றத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் எதுவும் செய்யப்படவில்லை.

நாடு முழுவதும் உள்ள ஆசிரியர்களின் இடர் கடன் மற்றும் நிலுவைச் சம்பளங்களை வழங்குவதற்கு மாத்திரம் பல மில்லியன் ரூபா நிதி தேவைப்படும் நிலையில் வரவு - செலவுத்திட்ட வாசிப்பின் போது நிலுவைச் சம்பளம் அனைத்தும் வழங்கப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எமது கோரிக்கைகளை வலியுறுத்தி 13 சங்கங்களும் கடந்த ஒக்ரோபர் 24 ஆம் திகதி இராஜகிரியவிலிருந்து கல்வி அமைச்சு வரை மாபெரும் எதிர்ப்பு யாத்திரைப் போராட்டம் ஒன்றை நடத்தின. அதனை நிறைவேற்றுமாறு கோரியே நாளைமறுதினம் சுகவீன லீவுப் போராட்டத்தை முன்னெடுக்கின்றன.

இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம், அனைத்திலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கம், தேசிய கல்விச் சேவைச் சங்கம், பொது ஆசிரியர் உத்தியோகத்தர் சங்கம், சுயாதீன கல்விச் சேவையாளர் சங்கம், ஐக்கிய தமிழ் ஆசிரியர் சங்கம், ஸ்ரீலங்கா தேசிய அதிபர்கள் சங்கம், முதல் தரம் பெற்ற அதிபர் சங்கம், சுயாதீன இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை அதிபர் சேவைச் சங்கம், தரம் பெற்ற அதிபர் சேவைச் சங்கம், அனைத்திலங்கை அதிபர் சங்கம் ஆகிய 13 தொழிற்சங்கங்கள் இணைந்து சுகவீனப் லீவு போராட்டத்தில் ஈடுபடவுள்ளன என்றுள்ளது. (ம-4-422)

# யாழ்.கரையோரப் பகுதிகளில் அபிவிருத்தியை அதிகரிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.2

போரால் பாதிக்கப்பட்ட யாழ்.நகர கரையோரப் பிரதேசங்களின் அபிவிருத்தியில் கூடுதல் கவனமெடுத்து அப்பகுதி மக்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

மாநகர சபை உறுப்பினர் அ.கொர்னேலியஸ் சபையில் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் மகேந்திரபுரம், எழிலூர், வசந்தபுரம், வளன்புரம், குருநகர் ஆகிய கிராமங்கள் தொடர்பாக கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

மக்கள் நெருக்கமாக வாழும் இப்பகுதிகளில் சுகாதார வசதிகளை மேம்படுத்தி நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்த வேண்டும்.

சந்தைகளில் பழுதடைந்த மீன்கள் விற்கப்படுவதாக மக்கள் முறையிடுகின்றனர். இதனை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாழ்.மாநகர சபையின் வீதிகளில் பிரதான இடங்களில் வேகக் கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்தி விபத்துக்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளும் விடுக்கப்பட்டன.

இதேவேளை, கொழும்புத் துறையில் சென்.யோசப் வீதி, சுவாமியார் வீதி, விபுலானந்தர் வீதி என்பன நெல்சிப் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது. (ம-135)

# மண்டைதீவில் ஆஸ்பத்திரி அமைக்க 36 மில்லியன் ரூபா தேவை

யாழ்ப்பாணம், டிசெ.2

மண்டைதீவுக்கு பிரதேச வைத்தியசாலை அமைக்க 36 மில்லியன் ரூபா தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

மண்டைதீவு பிரதேச வைத்திய சாலைக்கு மதில் அமைப்பதற்கு 2 மில்லியன் ரூபாவும், தளபாடங்களுக்கு 2 மில்லியன் ரூபாவும் மருத்துவ உபகரணங்களுக்கு 2 மில்லியன் ரூபாவும், வெளி நோயாளர் பிரிவு அமைக்க 30 மில்லியன் ரூபாவுமாக 36 மில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட அபிவிருத்திக்கு 72 மில்லியன் ரூபா தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சிறுப்பிட்டி, நெடுந்தீவு மேற்கு, சரவணையில் கிராம சுகாதார நிலையம் அமைக்க மட்டும் 18 மில்லியன் தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது என்று மேலும் கூறப்பட்டது. (ம-50)

# ஆனைக்கோட்டை, நவாலி மக்களுக்கு நுளம்பு வலை வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.2

டெங்கு நுளம்பின் கடுமையான தாக்கத்துக்கு ஆளாகி வரும் ஆனைக்கோட்டை நவாலிவடக்கு, நவாலி தெற்கு குடும்பங்களுக்கு நுளம்பு வலை வழங்குமாறு மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ஆலோசனை வழங்கியுள்ளது.

கல்லுண்டாயில் இருந்து பெருகும் பெருமளவிலான நுளம்புகள் இந்தப் பிரதேச மக்களை கடுமையாக தாக்கி வருகின்றன.

தற்போது டெங்கின் தாக்கம் அதிகரித்துள்ளதால் இந்தப் பிரதேசத்தில் வாழ்வோரில் சிறுவர்கள், வயோதிபர்கள் அதிகம் உள்ள குடும்பங்களுக்காவது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நுளம்பு வலைகளை வழங்கி உதவ வேண்டும்.

அப்பகுதிப் பொது சுகாதாரப் பரிசோதகர்களும் மாணிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

இதேவேளை கல்லுண்டாய் பகுதியை திண்மகழிவு, மலக்கழிவு, கொல்களக் கழிவுகள் ஆக்கிரமித்து வருகின்றன என்று அப்பகுதி மக்கள் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர். (ம-41)



சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு சுகாதார திணைக்களத்தின் அனுமதியுடன் வடமாகாண பெண்கள் சாரணியர் சங்கம் ஓவியக் கண்காட்சியை ஏற்பாடு செய்திருந்தது. இந்த நிகழ்வு யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையில் நடைபெற்றது. இந்தக் கண்காட்சி மண்டபத்தை பாடசாலை அதிபர் திருமதி வேணுகா சண்முகரத்தினம், முன்னாள் அதிபர் திருமதி பொன்னம்பலம் ஆகியோர் இணைந்து நாடாவெட்டித் திறந்து வைத்தனர். இலங்கை பெண்கள் சாரணியர் தலைமை அலுவலக செயற்திட்ட அதிகாரி பிரியந்தி ஹேமமாலினி ராஜபக்ஷ, திட்டமிடல் இயக்குநர் திலினி அத்துக்கோரள மற்றும் யாழ்.மாவட்ட பெண்கள் சாரணியர் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-13)

# மாணவருக்கு உதவித் திட்ட அங்குரார்ப்பணம்

தியாகி அறக்கொடை நிறுவன ஸ்தாபகர் வாமதேவா தியாகேந்திரனின் 61 ஆவது அகவையை முன்னிட்டு மாணவர்களுக்கான உதவித்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு இன்று முற்பகல் 10.30 மணிக்கு, 527, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை நிறுவன சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிறுவனப் பணிப்பாளர் செ.கமலநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழுத் தலைவர் இரா.செல்வவடிவேல், சமதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு இணைப்பாளர் சு.பரமநாதன், நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா, யாழ்.மத்தியஸ்தர் சபைத் தலைவர் வி.சத்திவேல் ஆகியோரும், கௌரவ விருந்தினராக நாடாளுமன்ற தகவல் இணைப்பாளர் ப.சுதர்சனும் கலந்து கொள்வர்.

ஆசியுரைகளை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், புனித யோசப் குருமட அடிகளார் வண.பி.சத்தியசீலன் , வண. மீகஹஜந்துரே ஸ்ரீவிமல தேரர், மௌலவி முகமட் நசீர் ஆகியோர் நிகழ்த்துவர். (ம-14)

# நிகழ்வுகள் இன்று

### முன்பள்ளிக் கலைவிழா

பருத்தித்துறை புலோலி கிழக்கு ஞான சம்பந்தர் கலைமன்ற முன்பள்ளி கலைவிழா இன்று காலை 9 மணிக்கு மன்ற உபதலைவர் டாக்டர் சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் எம்.பகிரதன் கலந்து கொள்வார். (8)

### விசேட தேவைக்கு உட்பட்டோர் விழா

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச விசேட தேவைக்குட்பட்டோர் தின விழா முற்பகல் 10 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. சங்கத் தலைவர் வி.கனகசபை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நாளாயினி இன்பராஜ் கலந்து கொள்வார். (ம-288)

### நாள்காட்டி வெளியீடு

காரைநகர் புகலி சிவசுப்பிரமணிய ஞானியார் ஆலயத்தின் சிறப்பு நாள்காட்டி வெளியீட்டு விழா முற்பகல் 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

### பொதுக்கூட்டம்

வட்டு.செம்பாட்டான் தோட்ட அம்பான் சனசமூக நிலைய பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளன. (ம-41)

### சான்றிதழ் வழங்கல்

சர்வதேச எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு வடமாகாண பெண்கள் சாரணியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை மண்டபத்தில், யாழ்.மாவட்ட [illegible] இயக்க [illegible] சன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-13)

# அரச காணிகளில் பனை நடுகை செய்வதற்குத் திட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.2

உள்ளூராட்சி சபை மற்றும் பிரதேச செயலக அரச காணிகளில் பனை மர நடுகைத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அழிந்த பனைகளை ஈடுசெய்தல் என்ற நோக்கில் இந்தத் திட்டம் மாவட்ட மட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் 17 உள்ளூராட்சி சபைகள், 15 பிரதேச செயலர் பிரிவுகள் ஊடாகவுமே இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ்.குடாநாட்டில் 35 லட்சம் பனை மரங்கள் உள்ளதாகக் கணக்கிடப்பட்டது.

அதன் அழிவு என்பது தொடர்ந்து அதிகரித்த வண்ணம் உள்ளது.

இதன் தாக்கத்தை குறைப்பதற்காகவே பனைமர நடுகைத் திட்டத்தை ஆரம்பித்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (ம-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனநாயகத்தின் மீதான தாக்குதல்

திருமலை நகரசபை உறுப்பினர் கண்டனம்

திருகோணமலை,டிசெ.2

யாழ்.பல்கலைக்கழக விடுதியில் இடம் பெற்ற சம்பவங்களை பதிவு செய்யச் சென்ற உதயன் ஆசிரியர் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் ஜனநாயகத்தின் மூன்று தூண்களில் ஒன்றான பத்திரிகைத்துறை மீதான தாக்குதலாக்க் கொள்ளப்பட வேண்டும்.

இந்தத் தாக்குதல் ஒரு பத்திரிகையாளன் சுதந்திரமாக செய்திகளைச் சேகரிக்கவும், செய்திகளை வெளியிடவும் உள்ள ஊடகத்துறை சுதந்திரத்தை கேள்விக்குரியதாக்கியுள்ளது.

பல்வேறு நாடுகளில் அரசியல் மாற்றங்களுக்கும், ஆட்சி மாற்றங்களுக்கும் வித்திட்ட பெருமை ஊடகவியலாளர்களின் பேனா முனைகளே என்பதை ஊடகத்துறை மீதான அடுக்கு முறையில், அடக்கு முறையில் ஈடுபடுவோர் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு திருகோணமலை நகரசபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சி.நந்தகுமார் தனது கண்டனத்தில் தெரிவித்துள்ளார். (ம-40)




திருமறைக் கலாமன்றமும் சுனேரா நிறுவனமும் வண்ணக் கோலங்கள் என்னும் நிகழ்வை கலைத் தூது கலையரங்கில் நடத்தின. உடுவில் 'ஆர்க்' மாற்று ஆற்றல் உடைய பிள்ளைகளது கலை நிகழ்வுகள் இதில் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் சுனேரா நிறுவன தவிசாளரான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் சகோதரியான சுனேத்திரா பண்டாரநாயக்கா, திருமறைக் கலாமன்ற இயக்குநர் மரியசேவியர் அடிகளார், யாழ். பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-23)

## அனைத்தூர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
விரைவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அத்துடன், கைது செய்யப்பட்ட மாணவர்களை உடனடியாக விடுதலை செய்ய உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும். கைதான மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்று சஞ்சீவ பண்டார கூறினார். (த-5)

## மாணவரை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
ஸார் கைது செய்து கொழும்புக்குக் கொண்டு சென்றுள்ளனர். எனவே அவர்களை விடுவிக்கும்வரை காலவரையறையற்ற வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம் என்றுள்ளது.

இந்த அறிவிப்பை அடுத்து விடுதிகளில் தங்கியிருந்த மாணவர்கள் நேற்று முதல் வீடுகளுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்தன. (த-4)

## பயங்கர...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
கடந்த புதன்கிழமை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய அமைதியான போராட்டம் மீது பொலிஸாரும் படையினரும் கடும் தாக்குதல்களை நடத்தியிருந்த நிலையில், இந்த நான்கு மாணவர்களும் கைது செய்யப்பட்டுள்ளமை மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக சமூகத்தின் மத்தியில் கடும் அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பை வன்முறையாக்காமல் மாணவர்கள் அமைதியான வழிமுறைகளில் தமது எதிர்ப்பைக் காட்ட முற்படவேண்டும் என்று மதத் தலைவர்களும் சிவில் தலைவர்களும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## தாக்குதல்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

எனவே அனைத்து மக்களையும் நாளை மறுதினம் நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிணைந்து எதிர்ப்பை வெளியிடுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியுள்ளது.

கட்சியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் சி.வீ.கே. சிவஞானம் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொது மக்களுக்கு பொலிஸார் மீது நம்பிக்கை இருக்கிறது. அந்த நம்பிக்கையை மழுங்கடித்து விடாது நியாயமாகச் செயற்பட வேண்டும் என்று பொலிஸாரிடம் வேண்டுகோள் விடுக்கிறோம்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்படுகிறார்கள்.மாணவர் ஒன்றியச் செயலாளர் உட்பட நான்கு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் குற்றவாளிகளாகப் பார்க்கப்படுகிறார்கள். இதனை ஏற்றுக்கொள்ளமுடியாது.

எனவே இவற்றைக் கண்டித்து சிவில் சமூகத்தினர், பொது மக்கள், பல்துறைப்பட்ட அனைவரையும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம் -என்றார். (த-4)

# திட்டமிடப்பட்ட தாக்குதல்கள்

## அரச பொது ஊழியர் சங்கம் கண்டனம்

அம்பாறை,டிசெ.2

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் வைத்து 'உதயன்' ஆசிரியர் தாக்கப்பட்டமை உதயன், சுடரொளி நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவனின் வாகனம் அடித்து நொருக்கப்பட்டமை போன்றன கண்டிக்கப்பட வேண்டியவை.

இவ்வாறு அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் சார்பில் அவர் விடுத்துள்ள இந்த கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கில் குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் ஊடகவியலாளர்கள் மீதான அராஜக தாக்குதல்கள் முற்றுப்புள்ளி வைக்கப்படாத விடயமாகவே தொடர்ந்த வண்ணமுள்ளன.

இதன் ஓர் அங்கமாகவே யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெற்ற மாணவர் ஆர்ப்பாட்டம் தொடர்பில் நேரடித் தகவல் பெறச் சென்ற உதயன் ஆசிரியர் தாக்கப்பட்ட சம்பவம் குறிப்பிடத்தக்கது.

சட்டத்தின் காவலர்களாக மக்களின் பாதுகாவலர்களாகத் திகழ வேண்டியவர்களே இத்தகைய ஈனத்தனமான தாக்குதல்களில் ஈடுபட்டமை ஓர் திட்டமிட்ட செயலாகவே கருத வேண்டியுள்ளது.

ஊடக சுதந்திரத்தை அள்ளி வழங்கியுள்ளோம் என்று எவ்வளவுதான் வாய் ஜாலங்கள் வெளியிடப்பட்டு வருகின்ற போதிலும், உள்ளாந்தரமாக ஊடகங்களை அடக்கியாளும் செயற்பாடுகளும், ஊடகங்களின் குரல் வளையை நசுக்கும் செயற்பாடுகளுமே நாட்டில் மேலோங்கி நிற்கின்றன.

குறிப்பாக வடக்கில் மக்களின் குரலாக, ஊடக தர்மத்துடன் செயற்படும் 'உதயன்' நாளிதழ் சில தரப்பினருக்கு சிம்மசொப்பனமாகவே திகழ்கின்றது.

இதுவே யாழ்.வளாக சம்பவத்துக்கும் காரணமாகவுள்ளது.

உதயன் ஆசிரியர், நிர்வாக இயக்குநர் மீதான தாக்குதலை எமது சங்கம் வன்மையாகக் கண்டிப்பதுடன், இந்தச் சம்பவத்தில் எத்தரப்பினர் சம்பந்தப்பட்டிருப்பினும் அவர்கள் மீது உரிய நீதி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் கோருகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-30)

## மாணவர்களை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
அமைதியான முறையில் மேற்கொள்ளப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டத்தையும் படையினரும், பொலிஸாரும் இணைந்து அடக்கியுள்ளனர். இந்தச் சம்பவங்களை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். அத்துடன் பல்கலைக்கழக மாணவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளமையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

கைதுசெய்யப்பட்ட 4 மாணவர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். அத்துடன் மாணவர்களை விடுவிப்பதற்கான சட்ட நடவடிக்கைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்ளும் - என்றார். (த-5)

## 6 ஆண்டுகளு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
சகலரும் கடுமையான உடற்சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

அங்கு மேலதிக பாதுகாப்புக்கெனப் பொலிஸார், ஆயுதம் தரித்த பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், தண்ணீர் பீச்சியடிக்கும் வாகனத்துடன் குண்டாந்தடி ஏந்தியிருந்த படையினர், கறுப்பு உடையணிந்த விசேட கலகம் அடக்கும் படையினர் உட்பட 3000 இற்கும் மேற்பட்ட படையினர் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இந்த மாநாட்டுக்கு 6143 பேருக்கு அழைப்பிதழ்கள் அனுப்பிவைக்கப்பட்டிருந்தன. அதில் 5315 பேர் மாநாட்டுக்கு வருகைதந்திருந்தனர்.

மாநாட்டில் முதலில், கட்சி தலைமையின் பதவிக்காலத்தை மேலும் 6 வருடங்களுக்கு நீடிப்பதற்கான யோசனையை ஜனாதிபதி சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜேதாஸ ராஜபக்ஷ முன்மொழிந்தார். அதனை அஜித் பி.பெரேரா வழிமொழிந்தார்.

இந்த யோசனைக்கு அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நாடாளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, தலதா அத்துகோரளை மற்றும் புத்திக பத்திரண ஆகியோர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இறுதியில், தலைமைப்பதவியை ஆறு வருடங்களுக்கு நீடிப்பதற்கான யோசனைக்கு 4978 பேர் ஆதரவாகவும் 337 பேர் எதிர்த்தும் வாக்களித்து குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (த-5)

## இரும்பு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
லைப் பகுதியில் நடைபெற்றுவந்த இரும்பு வியாபாரம் இப்போது வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் இடம்மாற்றப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது :-

இறுதிக்கட்டப் போரில் முல்லைத்தீவில், பொதுமக்கள் மற்றும் அரச திணைக்களங்களால் பெருமளவான வாகனங்கள் கைவிடப்பட்டன. இந்த வாகனங்கள் முல்லைத்தீவிலிருந்து ஏற்றிக்கொண்டுவரப்பட்டு ஏழாலைப் பிரதேசத்தில் வைத்து இரும்பாக்கி தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன.

ஏழாலையிலுள்ள குறித்த வீடு சுன்னாகம் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியிலும், வாகனங்கள் குவிக்கப்பட்டிருந்த காணி வலி. வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதியிலும் இருந்தன.

இதுதொடர்பாக வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளரால் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, வலி. வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதியிலிருந்த வாகனங்கள் அகற்றப்பட்டுச் சுன்னாகம் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிக்கு மாற்றப்பட்டிருந்தன.

கடந்த வியாழக்கிழமை நடந்த யாழ். மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டத்தில், வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவரால் மேற்படி விடயம் தொடர்பாக கேள்வியெழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளித்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா, மேற்படி வாகனங்கள் இராணுவத்தினரால் ஏல விற்பனை செய்யப்பட்டவை. அதனையே கொள்வனவு செய்து இரும்பாக்கி தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்யும் நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டனர் என்று தெரிவித்தார். இது தொடர்பில் விசாரணை செய்வதாகவும் தெரிவித்தார்.

இந்த நிலையில் ஏழாலைப் பிரதேசத்தில் குவிக்கப்பட்டிருந்த சகல வாகனங்களும் கனரக வாகனத்தில் ஏற்றப்பட்டு தெல்லிப்பழை ஆஸ்பத்திரி வீதியூடாக பலாலி வீமன்காமம் உயர்பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (த-5)

## மணல்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
வரி நிதிய உழவு இயந்திரங்கள் மாத்திரமன்றி உள்ளூர் உழவு இயந்திரங்களும் மணல் ஏற்றும் பணிக்கு அமர்த்தப்பட வேண்டும் ஆகிய மூன்று கோரிக்கைகளையும் முன்வைத்தே அவர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்ட உழவு இயந்திர உரிமையாளர்கள், தொழிலாளர்களுடன் பேச்சு நடத்திய மகேஸ்வரி நிதியப் பிரதிநிதி வழங்கப்படாத சம்பளம் எதிர்வரும் திங்கட்கிழமை வழங்கப்படும் என உறுதி அளித்தார்.

ஏனைய இரு கோரிக்கைகள் தொடர்பாக அவர் எதுவித பதிலும் அளிக்கவில்லை. சம்பளம் வழங்க உறுதி அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து முற்பகல் 10 மணியுடன் பணிப் புறக்கணிப்பை முடித்து உழவு இயந்திர உரிமையாளர்களும், தொழிலாளர்களும் தாங்கள் வந்த உழவு இயந்திரங்களில் திரும்பிச் சென்றனர்.

சம்பளக் கோரிக்கையுடன் தமது ஏனைய கோரிக்கைகளையும் நிறைவேற்ற வேண்டும். இருப்பினும் பொறுத்திருந்து பார்த்து அடுத்த நடவடிக்கைகளை முன்னெடுப்போம் எனப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்ட தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

குறித்தொதுக்கப்பட்ட மணல் மேட்டில் உழவு இயந்திரங்கள் மணலை ஏற்றி ஒரு இடத்தில் இறக்கிவிட அந்த இடத்திலிருந்து மணல் ஏற்றப்பட்டு வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது.

மணல் மேட்டில் இருந்து குறித்த இடத்துக்கு மணல் ஏற்றி இறக்கும் பணியில் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த 160 உழவு இயந்திரங்களும், வெளி இடங்களைச் சேர்ந்த 80 உழவு இயந்திரங்களும், மகேஸ்வரி நிதிய உழவு இயந்திரங்களுமே சுழற்சி முறையில் சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த சுழற்சிமுறையில் தனியார் உழவு இயந்திரங்களுக்கு மிகக் குறுகிய நாள்களே அனுமதி வழங்கப்படுகிறது. மகேஸ்வரி நிதிய உழவு இயந்திரங்களுக்கு அதிக நாள்கள் சுழற்சிமுறையில் வழங்கப்படுவதாக உழவு இயந்திர உரிமையாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (த-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வடக்கின் கடல் வளப் பொருளாதாரம் தலை உயர்த்த வழிபிறப்பது எப்போது...?

வடக்கின் இயற்கை வளங்களில் பனை வளம் போன்று கடல் வளமும் முதல்நிலை வகிக்கிறது. போருக்கு முந்திய காலத்தில் விவசாயத்தால் கிடைக்கும் வருமானத்துக்கு அண்ணளவு நிகராக கடற்றொழிலும் வருமானத்தைத் தந்தது. இங்கு கிடைக்கும் கடல் உணவுகள் தலைநகர் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டதன் மூலம் இந்தப் பிரதேசத்தின் பொருளியல் வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பு நல்கியது.

மூன்று தசாப்த காலப் போர் வேளையின் போது, வடக்கின் கடற்றொழிலாளர்கள் எதிர்கொண்ட பல்வகைப்பட்ட கட்டுப்பாடுகள், கெடுபிடிகள், கடல் அன்னையின் மடியில் தொழிலாளர்களின் உயிரிழப்புகள் போன்ற காரணங்களால் கடற்றொழில் சாய்ந்து வீழ்ந்தது; வீழ்த்தப்பட்டது என்றும் சொல்லலாம்.

ஆனால் போர் முடிவுற்று மூன்று ஆண்டுகள் கடந்தோடிச் சென்றுவிட்ட போதிலும் முந்தியதில் காற்பங்கு தானும் கடல் வளப் பொருளாதாரம், தலை உயர்த்த வாய்ப்பும் வசதியும் கிட்டவில்லை.

கடல் சார் தொழில்வளங்கள் முன்னரை விட ஒப்பீட்டளவில் குறைவாக இருந்த போதிலும், தொழிலாளர்கள் புத்துணர்வுடனும் ஊக்கத்துடனும் பெருமுயற்சியுடனும் தமது தொழிலை மேற்கொள்ள ஆரம்பித்தனர்.

ஆனால் தென் இலங்கையிலிருந்து வந்து, வடக்கின் கடல் வளங்களை ஆட்சியில் உள்ளவர்களின் ஒரு வகையான கண்டும் காணாத மற்றும் 'பெரும் தலைகளின்' ஆசீர்வாதம் போன்ற ஊக்குவிப்பு வகையறாக்கள் மூலமும் வடக்கின் கடல் வளம் சுரண்டப்பட்டு வருகிறது. அது மட்டுமன்றி கடற்றொழிலாளர்களுக்கு அதிக வருவாய் தரக்கூடிய தொழில் முறைகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் கழுத்தறுப்புகளும் அரசியல் செல்வாக்குள்ளோரின் முகம் தெரியா உத்திகளுடன் வடக்கின் சில பிரதேசங்களில் முகம் உயர்த்திக் காட்டுகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்திலும் மன்னார் மாவட்டத்திலும் பொறி வலைகளால் கடற் சூழலுக்கும் மீனவர் தொழிலுக்கும் பேராபத்து உண்டாகும் ஆபத்து உள்ளதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. பொறி வலைகள் வகை சார்ந்த தொழிலால் வடக்கு மீனவருக்கு தொழிற்பாதிப்பு ஏற்படுவது மட்டுமன்றி, முருகைக் கற்பாறைத் தொடர்கள் அழிவுறும் ஆபத்து உண்டாகி வருவதாகவும் அபாயச் சங்கு ஊதப்பட்டுள்ளது.

வடக்கின் கடற்றொழிலைப் பொறுத்தவரையில் உள்வீட்டுப் பிரச்சினைகள் புதிது புதிதாக முளைத்து, அதில் ஈடுபட்டிருப்போரின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்கான வழிதுறைகளை அடைத்து வருகின்றன. மொத்தத்தில் அத்துறையின் மேம்பாட்டுக்குப் பாதகமான நிலைக்களனுக்கே இழுத்துச் செல்கிறது எனலாம்.

அதற்குச் சமாந்தரமாக தமிழகத்தின் மீனவர்கள் குறிப்பாக அந்த மாநிலத்தின் கரையோரப் பிரதேசங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள், வகுக்கப்பட்ட கடல் எல்லைகளைத் தாண்டி, வடக்கின் கடற்பரப்புக்குள் அத்துமீறிப் பிரவேசித்து தொழிலில் ஈடுபடுவது அதிகரித்து வருகிறது.

இலங்கையின் வடக்குக் கடற்பரப்பில் மீன்வளம் அதிகம் உள்ளதால், தமிழக மீனவர்கள் அத்துமீறிப்பிரவேசித்துத் தொழில் புரிவதால், வடக்கின் கடல் வளம் ஒருவகையில் சூறையாடப்படுகிறது. இதில் இரண்டு கருத்துகளுக்கு இடம் இருக்க முடியாது. இங்கு தடை செய்யப்பட்ட றோலர் விசைப் படகுகளைத் தமிழக மீனவர்கள் பயன்படுத்துவதால் இந்தப் பிரதேசத்துத் தொழிலாளர்களின் வலைகள் சேதமுறுகின்றன. இதனை அடாத்தான செயற்பாடாக வகுத்துக் கொள்ளலாம். அதனால் வடபிரதேச - தமிழக மீனவர்களிடையே அடிக்கடி மோதல்கள் உண்டாவதும் இயல்பாகிவிட்டது.

இருபக்க அதிகாரத் தரப்புகளும் மேற்கூறிய நிலையைத் தவிர்ப்பதற்கு ஆக்கபூர்வமான அணுகுமுறைகளைக் கைக்கொள்வதாக இல்லை. பல வகையான காரண காரியங்களைக் கூறி தமிழக - வடக்கு கடற்றொழிலாளர்களுக்கு இடையில் மூண்டுவரும் பிணக்குகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதனை அவை இழுத்தடித்து வருகின்றன. இரு தரப்பு அதிகாரிகளும் அரசுகள் இரண்டும், இவ் விவகாரம் குறித்துக் கூர்மையாகச் செயற்படுவதற்கான அசுகை தானும் இதுவரை தென்படுவதாக இல்லை. இலங்கை அரசும் தமிழக அரசும் அவற்றின் அதிகாரிகள் தரப்புகளும் வேளைக்கு வேளை வெவ்வேறு நிலைப்பாடுகளைக் கைகளில் எடுத்து கீச்சுமாச்சுத் தம்பளம் விளையாடுகின்றன.

அதனால் இது விவகாரத்தில் காலத்தை வீணாக்கலாகாது என்ற முடிவுக்கு வடக்கின் கடற்றொழிலாளர்கள் அண்மையில் வந்துள்ளார்கள்.

தமிழக மீனவர்கள் தமது கடல் எல்லையைத் தாண்டி, வடக்கு கடற்பகுதியில் இழுவை விசைப் படகுகள், நாட்டுப் படகுகளில் வந்து தொழில் செய்வதால் தமக்கு உண்டாகும் பாதிப்புகள், நட்டங்கள் குறித்து இந்திய அரச தரப்புக்கு யாழ். கடற்றொழிலாளர் மிகத் தெளிவாகவும் விஸ்தாரமாகவும் விளக்கியுள்ளனர்.

ஆகையால், இந்த விவகாரம் இனியும் நீடிக்க இரண்டு நாட்டு அரசுகளும் இடங்கொடுக்காமல், சமரசமான நிலையை உண்டாக்குவதில் உடனடிக் கவனம் செலுத்த வேண்டும்.

இலங்கை, இந்திய அரசுகளின் தாமதத்தால் தமிழக - வடபிரதேச கடற்றொழிலாளர்கள், சகோதர உறவுகள், இரத்தத்தின் இரத்தங்கள் மோதிக்கொள்ளும் நிலை உருவாகக் கூடாது. என்ன விலை கொடுத்தும் அது தவிர்க்கப்பட வேண்டும். கொழும்பு, சென்னை அரசுகள் இப்போதைய பாதிப்பு நிலையை மேலும் வளர்ந்து உயர இடங்கொடாது அதனைத் தறித்து எறிவதற்கு இணைந்து செயற்பட வேண்டும். அது விரைந்து இனிப்பான பழமாகப் பறிக்கப்பட வேண்டும். இதுவே வடக்குவாழ் தமிழ் மக்களின் தணியாத ஆவலாகும். இன்றே செய்மின், அதனை நன்றே செய்மின்!

# 25 முஸ்லிம், தமிழ் இளைஞருக்கு ஒரே தடவையில் வேலை வாய்ப்பு

### கல்முனை மாநகர சபையில் நாளை நியமனக் கடிதம் வழங்கல்

அம்பாறை,டிசெ.2

கல்முனை மாநகரசபையில் 25முஸ்லிம், தமிழ் இளைஞர்கள் ஒரே தடவையில் வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

கல்முனை மாநகர முதல்வர் முஹமட் சிராஸ் மீராசாகிப்பின் புதிய சிந்தனை நோக்கிய பயணத்தின் ஓர் அங்கமாக மாநகரசபை ஒரே தடவையில் இவ்வாறு வேலை வாய்ப்பை வழங்கவுள்ளது.

இதன்படி 20 இளைஞர்கள் நடுக்கட்டு உத்தியோகத்தர்களாகவும் ஐந்து இளைஞர்கள் பாவனையாளர் சேவைக் கட்டணம் அறவீடு செய்யும் உத்தியோகத்தர்களாகவும் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

குறித்த நடுக்கட்டு உத்தியோகத்தர்களாக நியமனம் பெறும் 20 பேரும் மாநகர சபைக்கு மக்களிடமிருந்து செலுத்தப்பட வேண்டிய சோலை வரியை மக்கள் வீடுகளுக்குச் சென்று அறவீடு செய்தல் மற்றும் சோலைவரி தொடர்பான விழிப்பூட்டலை மக்கள் மத்தியில் முன்னெடுத்தல் போன்ற பணிகளை முக்கியமாக செயற்படுத்த வேண்டும்.

ஏனைய பாவனையாளர் சேவைக் கட்டணங்களை அறவீடு செய்யும் ஐந்து உத்தியோகத்தர்களும் திண்மக் கழிவகற்றுவதற்கு அறவீடு செய்யப்படவிருக்கும் கட்டண அறவீடுகளை முக்கிய பணியாக மேற்கொள்ளவுள்ளனர்.

மேலும் குறித்த 25 முஸ்லிம், தமிழ் இளைஞர்களுக்கும் ஒரே தடவையில் மாநகர சபையில் வேலை வாய்ப்பு வழங்கல் தொடர்பான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை கல்முனை மாநகர சபை வளாக அரங்கில் நடைபெறவுள்ளது.

முதல்வர் முஹமட் சிராஸ் மீராசாகிப் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த வைபவத்தில் மாநகரசபை உறுப்பினர்கள் உட்பட, முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ம-30)

### மஹிந்தவின் பிறந்த தினத்தை முன்னிட்டு

## நடப்பட்ட மரங்களின் நிலை என்ன? விவரம் கோருகிறது யாழ்.செயலகம்

யாழ்ப்பாணம்,டிசெ.2

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்தை முன்னிட்டு நடப்பட்ட மரங்களின் முன்னேற்ற விவரங்களை மாவட்ட செயலகத்துக்கு இரு மாதத்துக்கு ஒரு தடவை அனுப்பி வைக்க வேண்டும்.

யாழ்.செயலகத்தால் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் இவ்வாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் 'தேசத்துக்கு நிழல்' என்ற தலைப்பில் ஜனாதிபதி பிறந்த தினத்தில் குடாநாட்டில் அரச திணைக்களங்களிலும் அவற்றின் கீழ் வரும் நிறுவனங்களிலும் மரங்கள் ஆயிரக் கணக்கில் நடப்பட்டன.

இவ்வாறு நடப்பட்ட மரங்களின் அபிவிருத்தி தொடர்பாக இரு மாதங்களுக்கு ஒரு தடவை முன்னேற்ற அறிக்கைகளைத் திணைக்கள தலைவர்கள் அனுப்பி வைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

முன்னேற்ற விவரங்களைப் பார்வையிட யாழ்.செயலக மட்டத்தில் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

(ம-50)

## திருமறைக் கலாமன்ற ஆண்டு நிறைவு நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.2

திருமறைக் கலாமன்றத்தின் 47ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் நாளை திங்கட்கிழமை காலை முதல் மாலை வரை பல்வேறு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

காலை 6.45 மணிக்கு யாழ். திருமறைக் கலாமன்றப் பணியகத்தில் கொடியேற்றல் நிகழ்வைத் தொடர்ந்து காலை 7 மணிக்கு குருநகர் தூய புதுமை மாதா ஆலயத்தில் நன்றி வழிபாடு இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து முற்பகல் 10.30 மணியளவில் கலைத்தூது மணிமண்டபத்தில் இரத்த தானம் வழங்கும் நிகழ்வு இடம் பெறும்.

திருமறைக் கலாமன்றத் தினத்தை முன்னிட்டுச் சிறப்பு கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. அதில் 'காலதூரிகை' என்னும் நடன நிகழ்வு இடம் பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து கலைஞர் கௌரவிப்பு இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ்.இந்தியத் துணைத் தூதர் பெ.மகாலிங்கமும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, யாழ்ப்பாண வர்த்தக வங்கியின் உதவி முகாமையாளர் ஐ.தே.அரவிந்தன், யுனிசெவ் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், திருமதி சர்மிலி சதீஸ் ஆகியோரும் கலந்து கொள்வர்.

(ம-23)

## முப்படையினருக்கும் வீடமைப்பு இரண்டாம் கட்டப் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.2

நாடு தழுவிய ரீதியில் முப்படையினருக்கும் 55 ஆயிரம் வீடுகள் அமைக்கும் இரண்டாம் கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இரண்டாம் கட்ட வீடுகள் அமைக்கும் பணிகளில் கிளிநொச்சியிலும் முல்லைத்தீவிலும் முப்படையினருக்கும் வீடுகள் அமைத்து கொடுக்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்துள்ளார்.

முதல் கட்டமாக திவுலபிட்டியில் 120 வீடுகள் முப்படையினருக்கும் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளன.

மஹிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழ் முப்படையினருக்கும் கிளிநொச்சி, முல்லைத்தீவில் வீடுகள் அமைக்கும் பணி தொடர்பான முன்வரைவையும் ஒதுக்கும் வீடுகளின் எண்ணிக்கை தொடர்பான பத்திரத்தையும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் ஒப்புதலைப் பெற சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன் அனுமதி கிடைத்ததும் கிளிநொச்சி, முல்லைத்தீவில் முப்படையினருக்குமான வீட்டுத் திட்டம் குறித்து இறுதி முடிவெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயமாக 5 பேர் கொண்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் குழு ஆராய்ந்து வருகின்றது என்று தகவல் வெளியாகியுள்ளது. (ம-41)

# மொழி உரிமை மீறும் பிரச்சினைகளை முறையிடத் தொலைபேசி இலக்கம்

யாழ்ப்பாணம்,டிசெ.2

மொழி உரிமை மீறப்படும் பிரச்சினைகள் தொடர்பான முறைப்பாடுகளை 1956 எனும் தொலைபேசி இலக்கத்துடன் அழைப்பை ஏற்படுத்தித் தெரிவிக்கலாம் என்று மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்துள்ளது.

அரச கரும மொழிகளாக சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளை நடைமுறைப் படுத்தல் தொடர்பான பல்வேறு செயற்திட்டங்களை மேற்கொண்டு வரும் இந்த அமைப்பு தற்போது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழி மீறப்படுகின்றமையை இனங்கண்டு அதற்கான தீர்வுகளைக் கண்டு வருகிறது.

சிவில் சமூகத்தினர் மத்தியில் மொழி உரிமை மீறப்படுகின்றமை உயர்மட்ட அதிகாரிகளுக்கு மறைக்கப்படுகிறது. இதனால் தனி ஒரு மொழிக் கொள்கை எனும் நிலைப்பாடு தோன்றியுள்ளது. எனவே இதனை மாற்றியமைக்கும் விதத்தில் பொதுமக்கள் தமது மொழி உரிமை மீறப்பட்டால் 1956 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம்.

பொதுமக்களால் கொடுக்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைவாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு எதிராக அரச கரும மொழிகள் ஆணைக்குழு, மனித உரிமை ஆணைக்குழு, உயர் நீதிமன்றம், நீதிவான் நீதிமன்றம் ஆகியவற்றில் முறைப்பாடுகளை மேற்கொண்டு மாற்று நடவடிக்கைகளை எடுக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேட்டு நிலமாக மாற்றப்படும் கிளிநொச்சி வயல் காணிகள்

## விவசாயச் செய்கை பாதிக்கப்படும் நிலை

**வயல் நிலங்களை மேட்டுக்காணிகளாக மாற்றுவதற்கு கமநல அபிவிருத்தி ஆணையாளரின் அனுமதி பெறவேண்டும்.**

அக்கராயன், டிசெ. 2

கிளிநொச்சி மாவட்டத்தில் வயல்நிலங்கள், மேட்டுக் காணிகளாக உருவாக்கப்பட்டு வருகின்றமையால் எதிர்காலத்தில் விவசாயச் செய்கை பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் நெற்செய்கை பிரதானமாக இடம்பெறும் நிலையில் பெருமளவு வயல் நிலங்களின் மண் தோண்டி எடுக்கப்பட்டுக் கட்டடங்கள் கட்டுவதற்கும் வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

வயல் காணிகளில் கிரவல் கழிவுமண் நிரப்பப்பட்டு மேட்டு நிலங்களாக உருவாக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. இதனால் எஞ்சிய வயல் நிலங்களுக்கும் நீர்ப்பாசனம் செய்வதில் இடர்கள் காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் கிளிநொச்சி அரச செயலகத்தில் நடைபெற்ற விவசாயக் கூட்டத்தில் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட போதும் தடுப்பதற்கான எந்த நடவடிக்கையும் இது வரை எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

வயல் நிலங்களை மேட்டுக்காணியாக மாற்றுவதற்கு கமநல அபிவிருத்தி ஆணையாளரின் அனுமதி பெற வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-18)

## வவுனியாவில் சிவில் பாதுகாப்பு குழுக் கூட்டம்



வவுனியா, டிசெ.2

வவுனியா மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில் வவுனியா மாவட்ட பொலிஸ் அதிகாரிகள், அரச அதிபரின் பிரதிநிதி, சிவில் அமைப்புகளின் தலைவர்கள், கிராம அலுவலர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலில் வவுனியா மாவட்டத்தில் தொடர்ச்சியாகக் கலாசாரச் சீர்கேடுகள் அதிகரித்து வருகின்றன. அவற்றைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூட்டாக இயங்கி நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவித்ததுடன் பொலிஸாரும் தமது ஆதரவை பூரணமாக வழங்குவதாக உறுதியளித்தனர். (ஐ)

## கிராமிய அமைப்புகளுக்கு வலுவூட்டல் செயலமர்வு

அக்கராயன்,டிசெ.2

உள்ளூராட்சி மேம்பாட்டுக் கருத்திட்டத்தின் கரைச்சிப் பிரதேசத்தின் பதிவு செய்யப்பட்ட கிராம அபிவிருத்தி அமைப்புகளுக்கு இடையிலான விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்று கடந்த வியாழக்கிழமை கரைச்சிப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் கிராமிய அமைப்புக்கள் பலவும் பங்கெடுத்தன. இதில் கிராமிய அமைப்புகளைப் பலப்படுத்துவது, எதிர்காலத்தில் அவற்றின் செயற்பாடுகள் உட்பட பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

இந்த நிகழ்வில் உள்ளூராட்சிக் கருத்திட்டத்தின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ஆ.கேதீஸ்வன், ஐ.நா. அபிவிருத்தித் திட்ட கருத்திட்ட உதவியளிப்பு அலுவலர் எஸ்.ரூபாகரன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தனர்.

இதில் எதிர்காலத்தில் கிராமிய அமைப்புகளுக்கு நிதி வழங்கல், இதர வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. (ஐ-18)

## கிளிநொச்சியில் பண்பாட்டு விழா

கிளிநொச்சி,டிசெ.2

கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பேரவையின் பண்பாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவுச் சபை பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரும், சிறப்பு விருந்தினராக கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலனும் கலந்துகொள்வர்.

மாவட்ட பாடசாலைகள், கலை மன்றங்கள் ஆகியவற்றின் கலை நிகழ்வுகளும் பாரதிபுரம் வேணுகான சபாவின் அரிச்சந்திர மயான காண்ட இசைநாடகமும் இடம்பெறும்.

கிளிநொச்சி மாவட்ட அரச அலுவலர்களுக்கிடையிலான போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் வழங்கல், மாவட்ட கலைஞர்கள், படைப்பாளிகளுக்கு கலைக்கிளி விருது வழங்கல் போன்றவையும் இடம்பெறும். (ஐ-9)

## போக்குவரத்துக்கு உதவாத துணுக்காய் பிரதான வீதி



துணுக்காய், டிச.2

துணுக்காயிலிருந்து அம்பலப்பெருமாள் குளம் சந்தி வரை செல்லும் பிரதான வீதி போக்குவரத்துக்கு உதவாத நிலையிலிருப்பதாக இங்குள்ள கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியை துணுக்காய்ப் பிரதேசத்தின் மிகவும் பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த சுமார் 500 இக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்தி வுருகின்றன.

குறிப்பாக உயிலங்குளம், தென்னியங்குளம், கோட்டைகட்டியகுளம், அம்பலப்பெருமாள்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

தற்போது பெய்து வரும் மழை காரணமாக இந்த வீதி மோசமாகச் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. இதனால் கிராம மக்கள் பெரும் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தமது அவசிய தேவைகளின் பொருட்டு துணுக்காயிலிருந்து கிளிநொச்சி வரை இந்த வீதியில் நீண்ட பயணங்களை மேற்கொள்ளும் மக்கள் சிரமங்களை எதிர்கொள்வதுடன் நேரத்தையும் விரயம் செய்ய வேண்டிய நிலையிலுள்ளனர்.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் இந்த வீதியின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அவை ஆமை வேகத்தில் நகர்ந்து செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (க-415)

## மாற்று ஆற்றல் தினம் நாளை வவுனியாவில்

வவுனியா, டிசெ.2

சர்வதேச மாற்றாற்றல் உடையோர் தினம் நாளை திங்கட்கிழமை வவுனியாவில் நடைபெறவுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் மாவட்ட சமூக சேவை அலுவலகம் ஆகியன இணைந்து ஹண்டிகப் இன்ரநஸனல் நிறுவனத்தின் பங்களிப்புடன் இந்த நிகழ்வை ஒழுங்குசெய்துள்ளன.

வவுனியா அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர, வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரன், பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் எஸ். மகேந்திரன், மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன், ஹண்டிகப் இன்ரநஸனல் நிறுவன திட்டமுகாமையாளர் வி.பிறேம்குமார், ஒகான் நிறுவனத் தலைவர் வே.சுப்ரமணியம், உளவளத்துணை ஆலோசகர் எஸ்.அம்பிகைபாகன், மற்றும் அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், சமூகசேவை உத்தியோகத்தர்கள் போன்றோரும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இரு அமர்வுகளாக இடம்பெறவுள்ள இந்த விழாவில் காலை 8 மணிக்கு பஸ் நிலையத்தில் அங்கவீனர்களுக்கான ஆசனங்களை ஒதுக்கும் ஸ்டிக்கர்கள் தனியார் மற்றும் அரச பஸ்களில் ஒட்டும் நிகழ்வு இடம்பெறும்.

தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு வவுனியா பஸ் நிலையம், மாவட்ட செயலகம் முன்னுள்ள முச்சந்தி, குருமன்காடு சந்தி ஆகிய இடங்களில் குறியீட்டு நிகழ்வாக அனைவருக்கும் அணுகும் வசதி விழிப்புணர்வு நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

இதில் அனைவருக்குமான அணுகும் வசதிகள் கொண்ட கட்டடங்களை அமைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி மாதிரி கட்டடங்கள் அமைக்கப்பட்டு அவை காட்சிக்கு வைக்கப்படுவதுடன் பொருத்தமற்ற கட்டடங்கள் அகற்றப்பட வேண்டும் என்பதும் செய்கை முறையில் விளக்கமளிக்கப்படும். (ஐ)

## தேசிய இளைஞர் கொள்கை; கிளிநொச்சியில் செயலமர்வு

அக்கராயன், டிசெ.2

கிளிநொச்சி மாவட்ட இளைஞர்களுக்கான செயலமர்வு கடந்த வியாழக்கிழமை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் நடைபெற்றது.

இளைஞர்களுக்கான தேசிய கொள்கை வகுப்புத் தொடர்பில் இடம்பெற்ற இந்தச் செயலமர்வில் கிளிநொச்சி வலய முன்னாள் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா, கிளிநொச்சி மாவட்ட முன்னாள் ஆசிரிய ஆலோசகர் சோ.செல்வராணி, அருட்தந்தை யாவிஸ் அடிகளார் கலந்துகொண்டு கருத்து வழங்கினர்.

மாவட்ட மட்டத்தில் இளைஞர்களை ஒருங்கிணைத்து இளைஞர்களுக்கான தேசிய கொள்கை வகுக்கும் நோக்குடன் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இளையோர் விவகார அமைச்சு மற்றும் திறந்த பல்கலைக்கழகம் இணைந்து இந்த செயற்திட்டத்தை மேற்கொண்டு வருகின்றன. (ஐ-18)

## வான்பாயும் குளங்கள்

முல்லைத்தீவு, வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள 7 குளங்கள் வான்பாய்கின்றன. அண்மையில் பெய்த மழை காரணமாக இந்தக் குளங்களுக்கான நீர்வரத்து அதிகரித்து தொடர்ச்சியாக வான்பாய்ந்த வண்ணமுள்ளன.

மருதங்குளம், தேறாங்கண்டல் குளம், பழைய முறிகண்டிக்குளம், கோட்டைகட்டியகுளம், அம்பலப்பெருமாள் குளம், ஐயன்கன்குளம், கொல்லவிளாங்குளம் ஆகிய குளங்களே வான் பாய்கின்றன.

இதேவேளை வவுனிக்குளம், மல்லாவிக் குளம், தென்னியன்குளம், கல்விளான் குளம் ஆகியன வான்பாயும் நிலையில் உள்ளதாக வவுனிக்குளம் நீர்ப்பாசன அதிகாரி தெரிவித்தார். (ஐ-18)

## சுகாதாரப் பரிசோதகர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

### மன்னார் மீன் சந்தையில் சம்பவம்

மன்னார், டிசெ. 2

மன்னார் நகர மேற்கு பொதுச் சுகாதார பரிசோதகர் ஒருவர் கடந்த வியாழக்கிழமை காலை மன்னார் மீன் சந்தைப் பகுதியில் சிலரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார் என்று மன்னார் மாவட்டப் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். ஜீ.குணசீலன் தெரிவித்தார்.

மன்னார் மீன் சந்தைப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை காலை கடமையில் இருந்தபோது குறித்த சுகாதாரப் பரிசோதகரை அந்தப் பகுதியில் இருந்த சிலர் தாக்கியுள்ளனர்.

இதுதொடர்பாக உடனடியாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மன்னார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனையின் பின்பு அவர் வீடு திரும்பியுள்ளார் என்றும் பொலிஸார் தாக்குதலாளிகள் தொடர்பில் விசாரணை நடத்தி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-12)

## சமிக்ஞைகள் அற்ற ரயில்களால் வவுனியாவில் விபத்து அதிகரிப்பு

### பாதுகாப்பை உறுதிப்படுத்த மக்கள் கோரிக்கை

**பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் சமிக்ஞைகளையும் பாதுகாவலரையும் நியமிக்கவும்.**

வவுனியா, டிசெ. 2

வவுனியாவில் இருந்து ஓமந்தை நோக்கிவரும் ரயில்கள் சிலநேரங்களில் எச்சரிக்கை ஒலி எழுப்புவதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பயணிகள் ஆபத்துக்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. வவுனியாவில் இருந்து ஓமந்தை வரையான பகுதிக்கிடையில் 10 க்கு மேற்பட்ட பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் உள்ளன. வவுனியா பாரக் வீதியை அண்மித்த ரயில் கடவை தாண்டிக்குளம், ஏ-9 வீதியை அண்மித்த ரயில் கடவைகளில் ஏற்பட்ட விபத்துக்களில் ஆறுபேர் வரை உயிரிழந்துள்ளனர். சிலர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்.

பாதுகாப்பற்ற ரயில் கடவைக்கு முன்பாக உரிய சமிக்ஞைகள் அற்ற நிலையில் ரயில்களும் எச்சரிக்கை ஒலி எழுப்பாத நிலையில் குறித்த பகுதிகளில் விபத்துகள் ஏற்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்தும் விபத்துக்கள் ஏற்படாதிருக்க சம்பந்தப்பட்ட தரப்பினரை அணுகி பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் சமிக்ஞைகளையும் பாதுகாவலரையும் நியமித்து உரிய நேரத்தில் பயணிகளுக்கும் பாதசாரிகளுக்கும் பாதுகாப்பு வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. (ஐ-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடத்தில் மூன்று பக்க சுற்று மதிலுடன் 1½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 3043 206 (26026) (15.6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 04★04★1993 மறைவு 14★12★2011

செல்வி
**சிந்துஜா சதீஸ்குமார்**

ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லை உன் நினைவுகள்
என்றும் எம்மை விட்டகலாத
செல்வமே உன் ஆத்மா
சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர். (26022) (5.6)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## காணி விற்பனைக்கு

தாவடி மானிப்பாய் பிரதான வீதியில் தாவடியில் புதிய மலசலகூடம், சிறியகடை, கிணற்றுடன் கூடிய மூன்று பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 7568 686 (சி/3182) (45.6)

## வைத்தியம்

உடைவு முறிவு, மூட்டுக்கள், மூட்டுவாதம், பக்கவாதம்,. தசைநெரிவு நாள்பட்ட நோவு விசேஷமாக முள்ளந் தண்டு சம்பந்தமான நோய்களுக்கு சித்த ஆயுள்வேத முறைப்படி சிகிச்சைகள் அளிக்கப்படும். நாள்கள்: ஒவ்வொரு வியாழன், வெள்ளிக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை. பதிவுகளை முன்கூட்டியே செய்யவும்.

தொடர்புகளுக்கு: 077 6544338

இடம்: யார். சிவன் கோவிலடி வைத்தியசாலை,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
(கோப்பாய் A.G.A காரியாலயத்திற்கு முன்பாக)
வைத்தியர்: Dr.சோமசுந்தரம், T.விஜயன் Reg No:8688

(25781) (8-7-9)

## 61ஆவது பிறந்ததின வாழ்த்து



தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகரும் தலைவருமாகிய

**வாமதேவா தியாகேந்திரன் (தியாகி)**

அரிய மானிடப்பிறவியிலே வறுமையிலும் வாழ்வதென்பது துன்பத்திலும் துன்பம். இத்தகைய நிலைமையிலும் கொடிய [புற்று] நோய்க்கு ஆளாகி எப்பொழுதும் மரண பயத்தோடு நாள்களை எண்ணிக் கொண்டு வாழ்ந்து கொண்டு இருக்கும் நோயாளர்களுக்கு சிறிதள வேனும் உதவுதொகை அளித்து அன்புக்கினிய வார்த்தை கூறி அனுப்பிவைக்கும் வா.தியாகேந்திரன் உள்ளமானது கடலிலும் ஆழமானது. நல்ல சிந்தனையாளன். இத்தகைய ஒருவர் எமக்கு கிடைப்பதென்பது இறைவனின் வரப்பிரசாதமாகும். இவரது பிறந்த தினத்தில் அவர் நலமாக வாழ்ந்து என்னைப் போன்றோருக்கு தொண்டாற்ற வேண்டி வாழ்த்துக்கள் பல கூறி நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

அதிரியாம்பிள்ளை செபமாலை
[மாதாந்த மருத்துவ உதவி பெறும் பயனாளி]
43, சென்.மேரீஸ் வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

(...5) (5.6)

## கடை வாடகைக்கு

84, ஸ்ரான்லி வீதியிலுள்ள கடை ஒன்று வாடகைக்குண்டு. பாமசி அல்லது Clinic விரும்பத்தக்கது. (International Dental Care Hospital அருகில்).

தொடர்பு: 0718601366 (26973)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் 3ஆம் குறுக்குத் தெருவில் சகல வசதிகளுடன் கூடிய மாடி வீட்டின் கீழ்ப்பகுதி வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0750524698, 0771968185 (26976)

## வான் விற்பனைக்கு



Toyoto 52 - x x x x தொடர் இலக்கமுடைய வான் விற்பனைக்கு உண்டு.

விலை - 745,000/-

தொடர்பு: 077 2378 053 (25326) (45.6)

## வேலை வாய்ப்புகள்

கல்வி அறிவு அவசியமில்லை. நிரந்தர வேலைகள் எங்களிடம். கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளில் (ஜேம், கோடியல், பிஸ்கட், சொக்லட், கிளவுஸ்---) போன்றவற்றுக்கு உற்பத்தி/லேபல்/ பொதியிடல் பிரிவுக்கு ஆண் ,பெண் 17 -50 வயதினர் உடனடியாகத் தேவை. சம்பளம் 18000/ , 25000/ , 32000/ உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் ''வருகை தரும் நாளிலே வேலை வாய்ப்புகள்''.

தொடர்பு: 0775561883 (26011)

## நீங்காத நினைவுகளில் மூன்று ஆண்டுகள்

அமரர் **கந்தையா குணபாலசிங்கம்**



மண்மகிழ 13.03.1940

கண்நெகிழ 05.12.2009

அன்பினை குழைத்து அதனோடு அறிவையும் புகட்டி எம்மைக் கண்ணெனக் காத்து கருத்துடன் வளர்த்தீரே மின்னிடும் மனிதராவோம். ஊரார் மெச்சிடும் வாழ்வைப் பெற்றோம். இன்னும் பல ஆண்டுகள் உங்களோடு வாழ்வோம் என்று எண்ணியிருக்க, எம்மைக் கண்ணீரில் மூழ்கவிட்டு காலனுடன் சென்று ஆண்டுகள் மூன்று ஆனதோ! ஆனாலும் ஆறவில்லை எம்சோகம் வாழ்நாள் எண்ணி வாழ்கின்றோம் கண்ணீரில். எந்நாளும் எங்கள் நெஞ்சில் இறைவனாய் வாழும் அப்பா!

(26107) (45.6)

**மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.**

# "இழப்பினும் சக்தியுண்டு"

## பாடற் தொகுப்பு வெளியீடு – VAROD

**வெளியீடு**
VAROD வவுனியா

**இசை & ஒலிப்பதிவு**
T. பிரியன்

**இசைக்கோர்வை**
P. பிரசாத்

**ஒலிப்பதிவுக்கலையகம்**
ராகிகலையகம்
ஆவரங்கால் அச்சுவேலி
யாழ்ப்பாணம்

**வரோட் கீதம்**
பாடியவர் : பிரியன், லிண்டன், சாலினி, சுஜி
ஆசிரியர் : அருட்தந்தை அல்பேட் ஜோ. அருள்ராஜா CMF

பாடல் : இயற்கை அழகில் எழிலில் ...
பாடியவர் : V.S. மோகன்
ஆசிரியர் : முத்துமாதவன்

பாடல் : காலைப் புலர்விலே ...
பாடியவர் : சுஜி
ஆசிரியர் : பரனிதரன்

பாடல் : இயற்கை எழிலில் இதயம்...
பாடியவர் : S.K. நாதன்
ஆசிரியர் : தே. செந்துயன்

பாடல் : உறுதிவேண்டும்...
பாடியவர் : நிர்மலன், ரஞ்சித், பிரியன்
ஆசிரியர் : N. றோகினி

பாடல் : இதயம் விரும்பும்...
பாடியவர் : தினிஷா
ஆசிரியர் : இ.சு. முரளிதரன்

பாடல் : இழப்பினும் ...
பாடியவர் : நிர்மலன் & ஜெராட். ரஞ்சித்
ஆசிரியர் : T. பிரதாபன்

பாடல் : சித்திரைமாத ...
பாடியவர் : பிரியன், தினிஷா, ஜெராட், கிருபா
ஆசிரியர் : S. துவாரகன்

பாடல் : அரிது அரிது...
பாடியவர் : ஜீவிதா
ஆசிரியர் : அருட்தந்தை அல்பேட் ஜோ. அருள்ராஜா CMF

பாடல் : உழைப்போம் உயர்வோம்...
பாடியவர் : M.M .லிண்டன்
ஆசிரியர் : N. றோகினி

VAROD அழைப்பையேற்று பாடல்களை அனுப்பி வைத்த அனைவருக்கும் எமது பாராட்டுகளும் நன்றியும்!

தெரிவுசெய்யப்பட்ட பாடல்கள் இசைத்தொகுப்பு செய்யப்பட்டு வெளியீடு செய்யப்படுகின்றது




**தயாரிப்பு**
அருட்தந்தை அல்பேட் ஜோ. அருள்ராஜா CMF
**நிறைவேற்று இயக்குனர், வரோட்.**

சமூகத்தில் வாழும் யாவரும் பொது வளங்கள் யாவற்றையும் அணுகிப்பயன்பெற ஆவன செய்வோம்

Removing barriers to create an inclusive and accessible society for all.

எமது மகுடவாக்கு - (03.12.2012 - 03.12. 2013)

**இச்சமூகத்தில் வாழும் மாற்றுவலுவுடையோராகிய நாம் எம்மை சிறுகுழுக்களாக கட்டி எழுப்பி ஆன்மீக, கல்வி, பொருளாதார, நல்லாரோக்கிய விடயங்களில் வளர்ச்சி அடைவோம்.**

(24339) (10,6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



திருமதி சின்னத்தம்பி இரத்தினம்

புகையிரத நிலைய வீதி மல்லாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி இரத்தினம் நேற்று முன்தினம் (30.11.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமு-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசையா, நல்லமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கனகசபை, ரங்கநாதன் மற்றும் யோகராசா, மங்கயர்க்கரசி, கந்தசாமி, கெங்காகரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், நல்லமுத்து, ஜெயராணி, சித்திராதேவி, தர்மராசா, சந்திரகலா, யோகாதேவி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், கலாஜினி - ஸ்ரீதரன், துஷாயினி - ஜெயகாந்தன் (சுவிஸ்), கலியுகதாசன், தவேஸ்வரன் - பானுஷா, காலஞ்சென்ற தவகரு ணேஸ்வரன், றங்கேஸ்வரி - பிரதீபன், பானுஷா, தட்சாயினி, லக்ஷிகா, ஸ்ரீலக் ஷன், நிஷாளினி, லக்ஸ்மினி, கர்ணி ஆகியோரின் பேர்த்தியும், மதீஷன், மதுஷனா, ஜதுஷனா, ஷகானா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2012) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிர நிலைய வீதி,
மல்லாகம். (26023) (45.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.

# வாகன பராமரிப்புச் சேவை

உங்கள் வாகனங்களின் அடிப்பாகத்தினை துருப்பிடிக்காமல் தவிர்ப்பதற்கு எங்களிடம் ஜேர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நிறப்பூச்சினால் உத்தரவாதத்துடன் ஒரே நாளில் செய்து தரப்படும். (Under Corting)

தொடர்புகளுக்கு:
S.N.T. வாகன சுத்திகரிப்பு நிலையம்,
யாழ். வீதி, மானிப்பாய்,
(மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு அருகில்)
தொ.பே. 021 7200 290

(சி/3:53) (45.6)

# 61ஆவது பிறந்ததின வாழ்த்து

தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகரும் தலைவருமாகிய

## வாமதேவா தியாகேந்திரன் (தியாகி)




(A PHILANTHROPIST IN SWIZERLAND)

"எல்லோரும் இன்புற்றிருக்க" விரும்பும் உயர்ந்த எண்ணங்களும், செயற்பாடுகளும் தனது சுய உழைப்பிலேயே அறப்பணி செய்து இன்னலடைந்தவர்களுக்கு, உதவ வேண்டும் என எண்ணி ஆரம்பித்ததே இந்த அறக்கொடை நிலையமாகும்.

அறப்பணி நிலையத்தை ஆரம்பித்து, இங்கு பணிபுரியும் பணியாளர்களையும் அறப்பணியாளர்களாக்கி, எமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தியது மட்டுமன்றி ஆயிரமாயிரம் ஏழை எளிய உள்ளங்களுக்கு, அவர்கள் தேவை அறிந்து அறப்பணி புரிந்துவரும் நிறுவுனர் வா.தியாகேந்திரனின் 61ஆவது அகவையை முன் னிட்டு அவரை வெறும் வார்த்தைகளால் வாழ்த்தி விடமுடியாது.

சமூகத்தின் ஒளி விளக்காக திகழும் அவரின் அறம் வளர நாமும் ஒத்துழைத்து பல நூற்றாண்டுகள் ஞான வைரவப் பெருமானின் அருள் பெற்று வாழ அவரின் பிறந்த நாளிலே வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பணிப்பாளர், பணியாளர்கள்
தியாகி அறக்கொடை நிறுவனம்
527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(சி/3347) (8.6)

# வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி மற்றும் புளியங்குளம் கடைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2013

வவுனியா வடக்கு பிரதேச சபைக்குச் சொந்தமான கீழ்காணும் அட்டவணையில் காட்டப்பட்ட நிலையங்களை 01.01.2013 திகதி தொடக்கம் கீ மணி அடிப்படையில் வாடகைக்கு விடுவதற்கான அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்குறிப்படப்படும் நிபந்தனைக்கு அமைய கோரப்படுகின்றன. கேள்விபத்திரம் 03.12.2012ஆம் திகதி முதல் நெடுங்கேணி தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். கேள்விகள் 19.12.2012 ஆம் திகதி ந.ப 12.00 மணிவரை வவுனியா வடக்கு பிரதேசசபை தலைமைக் காரியாலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று பி.ப 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "தவிசாளர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி" என்ற முகவரிக்கு அரக்குமுத்திரையிடப்பட்டு தபால் உறையின் இடதுபக்கமேல் மூலையில் கேள்வியின் பெயரும், கடையின் இலக்கமும் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்குமுன் இடப்படல் வேண்டும். இணைப் பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், வவுனியா." என முகவரியிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.

குறிப்பு:
1 ஆகக்குறைந்த கேள்வித்தொகைக்கு கீழ்க் குறிப்பிடப்படும் கேள்விக்காரரின் கேள்விவைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.
2 உரியகாலத்தில் கிடைக்கப்பெறாத கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.
3 விண்ணப்பங்களை சபையில் உரியமுறையில் பெற்று விண்ணப்பக்கலாம். ஆனால் சித்திபெற்ற விண்ணப்பங்களில் ஒருவருக்கு ஒரு கடை மட்டுமே வழங்கப்படும்.
4 தங்களினால் கோரப்படும் கேள்வித்தொகையுடன் VAT 12%, NBT 2% செலுத்தப்படல் வேண்டும். மேற்படி தொகையும் விண்ணப்பபப் படிவத்தில் காட்டப்படல் வேண்டும்.
5 கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ நிராகரிப்பதற்கோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு.
6 சித்தியடையும் கேள்விக்காரர் கேள்விதொகையின் முழு பணத்தினையும் 31.12.2012ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.
7 மாத வாடைகையினை சபையின் தீர்மானத்திற்கு அமைய செலுத்துதல் வேண்டும்.

| கடை | | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளப் படும் ஆகக் குறைந்த கேள்வித் தொகை VAT+NBT தவிர |
|---|---|---|---|---|
| நெடுங்கேணி புளியங்குள வீதியில் அமைந்துள்ள கடை (நெடுங்கேணி மீன் சந்தைக்கு அருகில்) | A | 1000.00 | 5000.00 | 180000.00 |
| கடை இலக்கம் | B | 1000.00 | 5000.00 | 180000.00 |
| | C | 1000.00 | 5000.00 | 180000.00 |
| நெடுங்கேணி புதிய பஸ்நிலைய கடை இலக்கம் | C-9 | 1000.00 | 5000.00 | 250000.00 |
| | C-14 | 1000.00 | 5000.00 | 250000.00 |
| நெடுங்கேணி மரக்கறிசந்தை கடைத் தொகுதி | A1 | 1000.00 | 5000.00 | 210000.00 |
| | A2 | 1000.00 | 5000.00 | 210000.00 |
| | A3 | 1000.00 | 5000.00 | 210000.00 |
| | B1 | 1000.00 | 5000.00 | 180000.00 |
| | B2 | 1000.00 | 5000.00 | 180000.00 |
| | B3 | 1000.00 | 5000.00 | 180000.00 |

மு.பாலசுப்பிரமணியம்
தவிசாளர்.
வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி.

(24340) (10,6)

# கேள்வி அறிவித்தல் -2013 வவுனியா வடக்கு பிரதேச சபை

வவுனியா வடக்கு பிரதேச சபைக்குச் சொந்தமான கீழ் காணும் அட்டவணையில் காட்டப்பட்ட நிலையங்களை 2013.01.01 திகதி தொடக்கம் 31.12.2013 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்குறிப்பிடப்படும் நிபந்தனைக்கு அமைய கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரம் 03.12.2012ஆம் திகதிமுதல் நெடுங்கேணி தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். கேள்விகள் 19.12.2012ஆம் திகதி ந.பகல் 12.00 மணிவரை வவுனியா வடக்கு பிரதேச சபை தலைமைக் காரியாலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று பி.ப 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்வி தாரரோ அல்லது அவரது பிரதி நிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "தவிசாளர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி" என்ற முகவரிக்கு அரக்குமுத்திரையிடப்பட்டு தபால் உறையின் இடது பக்கமேல் மூலையில் கேள்வியின் பெயரும், கடையின் இலக்கமும் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப் பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்குமுன் இடப்படல் வேண்டும். இணைப்பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், வவுனியா". என முகவரியிட்டு அனுப்பிவைத்தல் வேண்டும்.

குறிப்பு:
1 ஆகக்குறைந்த கேள்வித் தொகைக்கு கீழ்க் குறிப்பிடப்படும் கேள்விக்காரரின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.
2 உரியகாலத்தில் கிடைக்கப்பெறாத கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.
3 விண்ணப்பங்களைச் சபையில் உரியமுறையில் பெற்றுவிண்ணப்பிக்கலாம். ஆனால் சித்திபெற்ற விண்ணப்பங்களில் ஒருவருக்கு ஒருகடை மட்டுமே வழங்கப்படும்.
4 தங்களினால் கோரப்படும் கேள்வித் தொகையுடன் VAT 12%, NBT 2% செலுத்தப்படல் வேண்டும். மேற்படிதொகையும் விண்ணப்பப் படிவத்தில் காட்டப்படல் வேண்டும்.
5 கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ நிராகரிப்பதற்கோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு.
6 சித்தியடையும் கேள்விக்காரர் கேள்விதொகையின் முழுபணத்தினையும் ஒருவார காலத்துக்குள் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

| இல | குத்தகையின் பெயர் | கேள்விவைப்பு பணம்(மீளப் பெறக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (NBT, VAT நீங்கலாக) | ஏற்றுக் கொள்ளக் கூடியஆகக் குறைந்த கேள்வி மதிப்பீடு (NBT, VAT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| மாட்டிறைச்சிக் கடைப் பெயர் | | | | |
| 01 | நெடுங்கேணி | 15000.00 | 1000.00 | 300000.00 |
| 02 | கனகராயன்குளம் | 10000.00 | 1000.00 | 200000.00 |
| ஆட்டிறைச்சிகடைபெயர் | | | | |
| 01 | நெடுங்கேணி | 1500.00 | 1000.00 | 30000.00 |
| மீன் சந்தை | | | | |
| 01 | நெடுங்கேணி | 4000.00 | 1000.00 | 75000.00 |
| 02 | கனகராயன்குளம் | 5000.00 | 1000.00 | 100000.00 |
| மரக்கறிச் சந்தை | | | | |
| 01 | நெடுங்கேணி | 5000.00 | 1000.00 | 90000.00 |
| 02 | கனகராயன்குளம் | 3000.00 | 1000.00 | 60000.00 |

மு.பாலசுப்பிரமணியம்
தவிசாளர்.
வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி.

(24340) (10,6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

பிரபல கம்பனி ஒன்றிற்கு மிக்சர், கச்சான் அல்வா போன்றவற்றை தயாரிப்பதற்கு அனுபவமுள்ள ஆண், பெண் இருபாலாரும் உடன் தொடர்பு கொள்ளவும்.
கவர்ச்சிகரமான சம்பளம், தங்குமிடம், உணவு என்பன இலவசம்.
தொடர்பு : 077 356 5607
(25803)

## பல் வைத்தியர் தேவை

கொழும்பு கொட்டாஞ்சேனையில் இயங்கும் பிரபலமான கிளினிக் ஒன்றுக்குப் பல் வைத்தியர் உடன் தேவை.
தொடர்பு:
311, ஜம்பட்டா வீதி, கொழும்பு - 13.
T.P. 011 2421882, 0772912958
(25961)(2,6,7)

## பணியார்கள் தேவை

சம்பளம் 18000/=, 25,000/=,30,000/= வரை எங்கள் தனியார் விமான நிலையத்திற்கு கிளீனர், பாதுகாப்பு உத்தியோகத்தர், சாரதிகள் உடனடியாக தேவை. 18 வயது தொடக்கம் 50 வயது வரை உணவு, தங்குமிடம் உண்டு.
தொடர்பு: 077 456 8264
(24332)(5-6-7)

## பணியாளர் தேவை

25,000/=, 35,000/=,40,000/= வரையான சம்பளத்திற்கு எங்கள் தனியார் துறை முகத்தில் கப்பல் வேலைக்கு 18-55 வயது வரையான ஆண்கள் தேவை. உணவு, தங்குமிடவசதிகள் உண்டு
தொடர்பு: 077303 3803
(24333)(5-6)

## நாய்க்குட்டி விற்பனைக்குண்டு

Three months old Rotweiler male puppy for sale.
தொடர்பு : 077 775 6904
(2598)

## மணமகன்

யாழ். இந்து கௌரவ குடும்பம், அரச உயர் பதவி வகிக்கும், செவ்வாய் குற்றம் இல்லாத, உத்தரட்டாதி நட்சத்திரம், பாவம் 20,1975 இல் பிறந்த, சைவ போசன பெண்ணுக்கு பட்டதாரி மணமகனை எதிர்பார்க்கிறோம்.
தொடர்பு: 077 60 93 255, 021 222 7492
(25897)(6,7)

## வாடகைக்கு

யாழ். நகருக்கு அண்மையில் (750 ச.அடி விஸ்தீரண முடையது) 2ஆம் மாடி வீதி முகப்புடன் உடன் வாடகைக்குண்டு.
அலுவலகம், கல்வி நிலையம், வைத்தியம் என்பவற்றுக்கு உகந்தது.
தொடர்பு: 077935 3036

## விற்பனையாளர் தேவை (பெண்)

எமது Serendib Enterprise நிறுவனத்திற்கு Electrical, Garments, General materials போன்றவற்றை விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை.
நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்
0716647692, 0714855215
127 /5, மின்சார நிலைய வீதி, நூபிலி பஜார், யாழ்ப்பாணம்
(25927)

## காசி யாத்திரை

சென்னை, புதுடெல்லி, ஹரித்துவார், ரிஷிகேஷ், மதுரா, தாஜ்மகால், அலகாபாத், வாரணாசி, காசி, கயா, புத்தகயா, இராமேஸ்வரம், மதுரை, திருச்சி, தஞ்சாவூர், ஸ்ரீரங்கம், சமயபுரம், திருத்தணி, சுவாமிமலை, பழமுதிர்சோலை, திருப்பரங்குன்றம், திருப்பதி மற்றும் பல கோவில்கள். விமான, ரயில், பஸ் டிக்கட், தங்குமிடம், உணவு, தேநீர், தண்ணீர் வசதி உள்ளடக்கப்பட்டுள்ளது.
புறப்படும் திகதி: 06.02.2013 மொத்த நாட்கள்: பத்தொன்பது (19)
மொத்தத்தொகை: ரூ 87400/-

தொடர்புகளுக்கு
S.Shanmuham, 52,Galawatte,
Katugastota, Kandy. T.P: 0717061379
(25779)(3,14)

## மணிவிழா நாயகிக்கு மகாஜன அன்னையின் சேவைநலன் பாராட்டு



திருமதி
**பாகீரதி கணேசதுரை**
(உப அதிபர்)
ஆசிரியசேவை தரம் -I
[சங்கீத ரத்னம், டிப்புளோமா இசை விசேட பயிற்சி, கலைமாணி, பட்டப்பின் கல்வி டிப்ளோமா, நாடகக் கலாவித்தகர், உளவளத்துணையாளர்.]
Best Wishes

### ஆசிரியர் கல்வி கற்ற பாடசாலைகள்

ஆரம்பக்கல்வி - யா/வீமன்காமம் மகா வித்தியாலயம்
இடைநிலை,உயர்தரம் - யா/நடேஸ்வராக் கல்லூரி

### ஆசிரியர் சேவைகள்

23.05.1977 - 30.06.1982 - மட்/அமிர்தகழி ஸ்ரீசித்தி விநாயகர் வித்தியாலயம் 05 வருடம் 1மாதம்.
01.07.1982 - 31.12.1999 - யா/கீரிமலை நகுலேஸ்வா மகா வித்தியாலயம் 17 வருடம் 06 மாதம்
01.01. 2000 - 01.12.2012 - யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை 12 வருடம் 11 மாதம்

மகாஜனவில் 13 வருட சேவைக்காலத்தில் நாடக ஆசிரியராகவும், உயர்தர மாணவர் மன்றப் பொறுப்பாசிரியராகவும், விளையாட்டுக்குழு உறுப்பினராகவும், உளவளத்துணையாளராகவும், உப அதிபராகவும் சேவையாற்றி ஆசிரியர், மாணவரது நன்மதிப்பைப் பெற்று 02.12.2012 இல் ஓய்வு பெற்றுக் கொள்கின்றார். அவரின் ஓய்வுக்காலம் சிறப்புற வாழ்த்துவதுடன் அவர் சமூகத்தில் பன்நெடுங்காலம் தொண்டாற்றி வாழ மனம் நிறைந்து வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/மகாஜனக் கல்லூரி,தெல்லிப்பழை.

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி தபாற்பெட்டி சந்திக்கு அருகில் 5 7/8 பரப்புக்காணி சுற்றுமதிலுடன் கூடிய குழாய் கிணற்றுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 194 9845
(13980)(6,7,8)

## அறை வாடகைக்கு

யாழ்ப்பாணம், திருநெல்வேலி மருத்துவ பீடத்திற்கு முன்பாக உள்ள வீட்டில் கல்வி கற்கும் பெண்களுக்கு அறை உள்ளது.
தொடர்பு: 077 641 1928
(26006)(5-6)

## பணியாளர்கள் தேவை

சம்பளம் 20,000/= தொடக்கம் 28,000/=, 38,000/= வரை எங்கள் நிறுவனத்திற்கு பிஸ்கட், சொக்லேட், சவர்க்காரம், பால்மா, ரயர், கிளவுஸ், சிமெந்து, சீற் ஆகிய தொழிற்சாலைகளுக்கு உற்பத்தி பொதியிடல், லேபல் அடங்கிய சுப்பவைசிங் 17 தொடக்கம் 55 வரை ஆண்கள், பெண்கள் தேவை. உணவு, தங்கு மிடம் உண்டு. நண்பர்கள் குழுக்களாகவும், கணவன் மனைவியும் சேர்த்துக் கொள்ளப் படவுள்ளார்கள்.
தொடர்பு: 071 346 0295
(24334)(5-6)

## HAPPY BIRTHDAY

"ஓம் விராட் விஸ்வ பிரமனே நமஹ"

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




இல.40,யமுனாவீதி, நல்லூரைச் சேர்ந்த
**விஷ்ணுராசன் - சத்தியவதனி** தம்பதியரின்
செல்வப் புதல்வன் **அக்ஷயன்**
தனது முதலாவது பிறந்த நாளை இன்று (02.12.2012) ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் அண்ணன் துவேனுஜனுடன் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அண்ணன் துவேனுஜன், மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார், மச்சாள்மார், மச்சான்மார் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.
Best Wishes

**விஷ்ணுதாசன் குடும்பத்தினர்,** விஷ்ணு நகைத் தொழிலகம்,
40,யமுனா வீதி, நல்லூர்.
(25841)(2,6)

## நியூ லக்கி அழகுக்கலை நிலையம்

தற்போது புதிய முகவரியில் இயங்கி வருவதுடன் புதிய பிரிவுகளும் ஆரம்பம்....



நவீன முறையிலான அழகுக் கலை பயிற்சியுடன் தையல், பூச்செண்டுகள் வடிவமைத்தல், கேக் ஐஸ்சிங் போன்றவற்றுக்கான வகுப்புகள் நடைபெறும்.
இடம்: இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
(குமாரசாமி விடுதி அருகில்)

- ★ இந்தியாவில் சிறப்புச் சான்றிதழ்கள் பெற்ற பயிற்சியாளர்கள்.
- ★ தரச்சான்றிதழுடன் கூடிய செயன்முறை வகுப்புக்கள்.
- ★ குறைந்தளவில் மதியளவான கட்டணங்கள்.

முன் பதிவுகளை உடனே மேற்கொண்டு உங்கள் பயிற்சிகளை ஆரம்பித்து நீங்களும் ஓர் அழகுக் கலை வல்லுனராக மிளிருங்கள்.
(25979) (10,7)

தொடர்புக்கு: 0775925397

## இன்று 61ஆவது பிறந்ததினம் வாழ்த்துகின்றோம் வாழ்க நீடு

HAPPY BIRTH DAY



தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகரும் தலைவருமாகிய
**வாமதேவா தியாகேந்திரன் (தியாகி)**

பெற்றோரை வயதான காலத்தில் பிள்ளைகள் ஒதுக்கி வைக்கும், இக்கால கட்டத்திலே கிராமப் புறங்கள் தோறும் முதியவர்கள், ஆதரவற்றவர்கள், நோயுற்றவர்களைத் தெரிவு செய்து, மாதாந்தம் உதவி புரிவது மட்டுமன்றி வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் கிராமப் புறங்களுக்கு வாகனம் அனுப்பி மருத்துவ உதவி தேவைப்படுவோரை ஏற்றி வந்து நோய்க்கு இலவசமாக மருந்தளித்தும், சத்துணவாக இலைக்கஞ்சி வழங்கியும் வருகின்றார்கள். மருந்துகளினால் எமது உடல்ரீதியான நோய் குணமாக்கப்படுவதோடு, இன்முகத்தோடு இலைக்கஞ்சி வழங்கி அன்பாகப் பேசிப் பரிமாறுவது எமது உளத்திற்கு உளரீதியான திருப்தியையும் மிகுந்த மகிழ்ச்சியையும் அளிக்கின்றது.

இச்சேவையாளன் 61ஆவது அகவை கண்டு நீண்ட காலம் நீடூழி வாழ்ந்து அரும் பணியாம் அறப்பணி தொடர எமது மன மார்ந்த வாழ்த்துக்களை அனைத்துப் பயனாளிகள் சார்பில் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

*பரமசுந்தரம் பஞ்சலிங்கம்* (இலவச மருத்துவ சிகிச்சை பெறும் பயனாளி)
(சி/3142)(5.6) 42/5, விதானையார் வீதி, கண்டுக்குளி.

## 2013 இற்கான புதிய அனுமதிகள்

## BBC ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை

11 வது வருடத்தில்

| வயது 2+ முதல் வயது 3+ வரை | வயது 3+ முதல் வயது 4+ வரை | வயது 4+ முதல் வயது 5+ வரை |
|---|---|---|
| Play Group | Montessori | Pre School |

இப்பொழுது பெற்றோர்களின் வசதி கருதி எமது சில வளாகங்கள் இடமாற்றப்பட்டுள்ளன.

கற்பித்தல் முறை:
- ★ சர்வதேச ரீதியாக அங்கிகரிக்கப்பட்ட Dr. Maria Montessori + Canadian ECE Method
- ★ தமிழ் கட்டாய பாடம்.
- ★ ஆங்கில மொழி மூல கற்பித்தல்
- ★ சிறார்களின் திறமைகளை வெளிக் கொணரும் நிகழ்ச்சிகளில் சகலரும் பங்கு பெறுவார்.
- ★ விளையாட்டுப் போட்டி. English Concert, முத்தமிழ் விழா. சித்திரக்கலைவேலைக் கண்காட்சி. Graduation Ceremony.

### பாலர் பாடசாலை வளாகங்கள்

தலைமைக் காரியாலயம் → யாழ்ப்பாணம்: 64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| **யாழ்ப்பாணம்** மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம் (ஓட்டுமடச் சந்தி அருகாமை) | **நீர்வேலி** [illegible] |
| **கோப்பாய்** பருத்தித்துறை வீதி கோப்பாய் சந்தி | **சாவகச்சேரி** சாவகச்சேரி Hindu College Primary School அருகாமை |
| **மானிப்பாய் 1** 252, ஆலடிச் சந்தி, யாழ் வீதி | **அச்சுவேலி** ஆதார வைத்தியசாலை அருகாமை |
| **மானிப்பாய் 2** சங்கரப்பிள்ளை வீதி (மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி) | **சங்கானை** பிரதேச செயலகம் அருகாமை [illegible] |
| **சுன்னாகம்** Dr. சுப்பிரமணியம் வீதி சுன்னாகம் | **வடமராட்சி** பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, கரவெட்டி |

## சனி, ஞாயிறு மற்றும் வார நாட்களில் ஆங்கில வகுப்புகள்

- **Certificate in English** — இலக்கணம், பேச்சுத்திறனை வளர்ப்பதற்கு
- **Diploma in English** — G.C.E (O/L), (A/L) பூர்த்தி செய்தோர் ஆங்கில அறிவை வளர்ப்பதற்கு
- **ESOL A1, A2** — Sponsor Scheme ஊடாக வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு
- **IELTS** — உயர் கல்வி கற்கவும், வெளி நாடு செல்ல விரும்புவோருக்கும்

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள்
- ★ Pre Foundation
- ★ Foundation
- ★ Level 1,2,3,4

பாடசாலை பாடத்திட்டத்திற்கமைய ஆங்கில பாடநெறிகள்

## BRITISH BUSINESS COLLEGE

64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
Tel:021 222 5796, 077 362 7055
British Council இனால் அங்கிகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு நிலையம்.
Registered as an Education & Training Company with the Registrar of Companies - Sri Lanka. Reg. No: P 9718

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிலப்பதிப்புக் கற்களின் சிறந்த தெரிவுகளுக்கு**



இருபதுக்கும் மேற்பட்ட
வடிவமைக்கப்புக்களைக் கொண்ட
நிலப் பதிப்புக் கற்களை யாழ். கிளிநொச்சி
போன்ற இடங்களில் உள்ள காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளலாம்

பிரணவன் என்ரபிறைசஸ் இல:-365 பருத்தித்துறை வீதி நல்லூர் யாழ்ப்பாணம்
(சங்கிலியன் சிலைக்கு முன்பாக) T.P - 0773818799

# உடனடி வேலை வாய்ப்பு

**ஒப்பந்த அடிப்படையில் தொழிநுட்ப உதவியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.**

**தகைமை**

★ ஆகக் குறைந்த தகைமையாக NCT Civil இருக்க வேண்டும்.
★ 5 வருட வேலை அனுபவம்
★ சம்பளம் மாதாந்தம் 30,000/- ற்கு குறையாமல் + மேலதிக நன்மைகளும்.

**ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் உங்கள் விண்ணப்பங்களை டிசெம்பர் 10ஆம் திகதிக்கு முன்பாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

**Email-rahama.vav@rahama.lk** அல்லது
**Project Manager,**
RAHAMA Office, Forut Building,
No-60/15, Sinthamany Pillayar Kovil view,
Vavuniya.

(24329) (6-10)

**தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மட்டும் தொடர்புகொள்ளப்படுவர்.**

## அறிமுகமாகிறது...

இப்போது அறிமுகமாகிறது G.Kஇன் கையடக்க தொலை பேசி திருத்தும் விசேட DVD China வில் இருந்து நேரடியாக கொண்டு வரப்பட்ட கையடக்க தொலை பேசிகளை திருத்தும் வீடியோக்கள் அடங்கிய Special DVD

★கையடக்க தொலை பேசி Repairing படிக்க விரும்பும்
★Repairing படித்தவர்கள்
★Repairing செய்பவர்கள்
★ போன்களைப் பற்றி அறிய விரும்புபவர்கள். இத் துறை சார்ந்த அனைவரும் கட்டாயம் வாங்க வேண்டிய DVD விலை 1990/- மட்டும்

உள்ளடக்கம் 3.6 GB Data

Repairing செய்து காட்டப்படும் 210 Video கள் தபால் மூலம் பெற்றுக் கொள்ள அழையுங்கள். 0776131358 குறைந்தளவு DVDகளே கையிருப்பில் உள்ளதால் இப்போதே பெற்றுக்கொள்ளவும். இந்த DVD Copyrightசெய்ய முடியாது.

Lanka Voice Advertising
No-24 Station Road, Vavuniya **0776131358**

(24335) (6.7)

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 26 ★ 11 ★ 1939

உதிர்வு 08 ★ 12 ★ 2006

## அமரர் நமசிவாயம் சண்முகரட்ணம்

(இளைப்பாறிய லங்கெம் விற்பனைப் பிரதிநிதி
யாழ். பொதுநூலக நிலத்தோற்ற வடிவமைப்பாளர்)

திதி: 02.12.2012

அன்பின் தீபமானவரே
புன்னகையுடன் உலா வந்த நிழலே
பண்பின் உயர்விடமாய் பாசத்தின் மகுடமாய்
பரிவுடனே எமை வளர்த்து
பாரினிலே உயர வைத்தீர்!
அன்பின் உறைவிடமே ஆண்டு ஆறு உருண்டு ஓடினும்
அப்பாவே நீர் எமக்கு அணையாத தீபம் தான்.

சொர்ணமகால்
மல்வம், உடுவில்,
சுன்னாகம்.

என்றும் உங்கள் நீங்காத நினைவுகளுடன் வாழும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

[25937] [5.6]

## மணமகன் தேவை

34 வயது கிறிஸ்தவம், நற்குணமுள்ள மணமகளுக்கு மணமகன் தேவை. தேவ ஊழியர், அரச தொழில், வெளிநாடு விரும்பத்தக்கது.

**தொடர்பு: 077 5169 253**

(#/3139) (45.6)

## கடை வாடகைக்கு

பருத்தித்துறை பொதுச் சந்தையை சுற்றியுள்ள பிரதான வீதியுடனான கடை வாடகைக்கு விடப்படும்.

**தொடர்பு: 0777 25 7393**

(25940) (45.6)

## வான் விற்பனைக்கு

N.P - K.P xxxx Model 2011
Company AC, Stereo,
சீற் பூட்டியது. நல்ல நிலையிலுள்ள வான் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0779938592, 0775937174, 0213008231.

(25964) (6)

# இன்று 61 ஆவது அகவையில் கால் பதிக்கும்



தியாகி அறக்கொடை நிறுவனத்தின்
ஸ்தாபகரும் தலைவருமாகிய

## வாமதேவா தியாகேந்திரன் (தியாகி)

எமது பிரதேசத்தைப் பொறுத்த வரையில் எத்தனையோ பேர்கள், செல்வம் படைத்தவர்கள், வெளிநாட்டு வசதி வாய்ப்புள்ளோர். சுய மனமின்றி வாழ்வோர் மத்தியில் தனக்கென வாழாது எமது பகுதியில் கல்வி கற்று வேலை வாய்ப்பற்று இருக்கும் பெண்களுக்கு தையல் பயிற்சி அளித்து, முன்பள்ளிக்கு உதவி புரிந்து, வறுமைக்குட்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக பல உதவிகள் புரிந்து வரும் வா. தியாகேந்திரனின் 61 ஆவது பிறந்த தினத்திலே சீரும் சிறப்பும் பெற்று வாழவும், அவரது பணி சிறக்கவும் கந்தன் அருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

**கைதடி மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், கைதடி.**

(#5111)(45.6)

**Ministry of Higher Education**

# UNIVERSITY OF JAFFNA

## Invitation for Bids

### Improvements of Play Ground at Vavuniya Campus University of Jaffna, Pambaimadu.

1. **The Chairman, Department Procurement Committee, University of Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for **"Improvements of Play Ground at Vavuniya Campus University of Jaffna, Pambaimadu."** as described below and estimated to cost of **Rs.42.60 million.**

   The construction period is **180 days.**

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for grade C5 or above with the Institute for Construction Training and Development (ICTAD), valid until the date of closing of the bids. Further the registration should be valid at the date of award.

4. Interested bidders may obtain further information from **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna,** and inspect the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00hrs.**
   Contact numbers are: Tel: 021 221 9201, Fax: 021 221 9201.

5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application **to Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, from 03.12.2012until 14.12.2012 from 9:00hrs to 15:00hrs** upon payment of a non refundable fee of Rupees two thousand five hundred **(Rs.2,500/-).**

6. Bids shall be delivered or sent by registered post to **The Chairman, Procurement Committee of University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57,** to reach **on or before 14.00hrs on 21.12.2012.** Bids will be opened soon after closing the Bids, in the presence of the bidders' representatives who choose to attend.

7. Bids shall be Valid for a period of **91 Days** from the date fixed for closing of Bids or any extended period.

8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - in the form included in Section 09 in the Bidding document.
   - In favour of **Vice Chancellor, Chairman, Procurement Committee University of Jaffna.**
   - for an amount of **Rs. 426,000.00.**
   - Valid up to 119 days from the closing date of Bid.
   - Issued by one of the agencies indicated in the clause 16.2 of the Bidding Data.

9. Pre bid meeting will be held at the Vavuniya Campus, University of Jaffna, Pampaimadu, Vavuniya at 10.30 am on 13.12.2012

**Vice Chancellor,
Chairman, Procurement Committee,
University of Jaffna,
P.O Box 57, Thirunelvely,
Jaffna.**

(C/3135) (10.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 92

# வைத்தியசாலையில் மருந்து எடுக்கும் நோயாளர்கள்

**கவனத்துக்கு:-**

நீங்கள் எடுக்கும் மருந்துகள் உங்களுக்குச் சரியான முறையில் பயன்பட வேண்டுமெனில், சில விதிமுறைகளை நீங்கள் கைக்கொள்ளுதல் அவசியம்.

1.மருந்து எடுக்க வரும்போது, வைத்தியர்கள், மருந்தாளர்கள் கூறும் அறிவுரைகளை அதிக கவனத்தில் எடுக்கவும்.

2. வரும்போது, சிறிய பை (Bag) களோ, பெரிய கடித உறைகளையோ கொண்டு வருதல் மூலம் உரிய மருந்துகளின் பெயரையும், எடுக்கும் முறையையும் அதில் எழுதுவிக்க முடியும்.

3.மருந்துக் குளிசைகளில் ஏதாவது சந்தேகம் இருந்தால் மருந்தாளரை அணுகவும்.

4.ஆனால் ஒரு முறை பாவித்த உறையைப் பத்திரமாய்ப் பாதுகாத்து மறுமுறையும் கொண்டு வருதல் வேண்டும். மேலதிகமாக ஒரு சில வெறுமையான உறைகளைக் கொண்டு வருவது நல்லது. அவற்றை வீடு கொண்டு செல்லும் போது அவதானமாகக் கொண்டு செல்லவும்.

**வீடு சென்ற பின்:-**

1.எல்லா மருந்துகளையும் ஒன்றாக ஒரு பையில் அல்லது போத்தலில் போடுவதைத் தவிர்க்கவும்.

2.மருந்துகளை வெவ்வேறு போத்தல்களில் போட்டு, அதற்குரிய பெயர்களை எழுதி ஒட்டி, கவனமாக வைக்கவும்.

3.கறுப்பு நிறப் போத்தல்கள் விரும்பத்தக்கது.

4.மூடிகள் இறுக்கமாக இருக்க வேண்டும். வெடிப்புக்கள், உடைவுகள் அற்றதாக இருத்தல் வேண்டும். இவற்றை அறைகளில் அலுமாரிகளில் பூட்டி கவனமாக வைக்கவும்.

6. சமையலறையில் வைத்தல் (நெருப்பு), வெயில் படும் இடத்தில் வைத்தல், குளிர்சாதனப் பெட்டியின் மேல், உள், T.V யின் மேல், அயன் (Iron) மேசையின் மேல் வைத்தல் போன்றவற்றைத் தவிர்த்தல்.



7. உருகும் மருந்துகளை பாதுகாக்க அதற்குரிய போத்தல்கள் அல்லது அதனைத் தடுக்கும் பாதுகாப்பு பெட்டகங்கள் (சிலிக்கா ஜெல்) என்பவற்றைப் போத்தல்களினுள் மருந்துகளுடன் சேர்த்து வைக்கவும்.

8.அன்றாடம் பாவிக்கும் மருந்துகளை சிறிய போத்தல்களில் அளவாகப் போட்டுக் கண்படும் இடத்தில் வைக்கவும்.

9.பாவிக்க வேண்டிய மருந்துகளை ஓய்வாக உள்ள நேரங்களில் செய்து வைக்கலாம். இவற்றை குழந்தைகளுக்கு எட்டக் கூடிய இடத்தில் வைப்பதை தவிர்க்கவும்.

10. மேசையில், நிலத்தில் விழும் மருந்துகளை உடனுக்குடன் அகற்றவும்.

11. நீங்கள் வேலைக்கு வெளியூர் செல்லும் போது தேவையான மருந்துகளை சிறிய போத்தல்களில் கொண்டு செல்லவும்.

12. சாப்பிட்ட பின் உட்கொள்ளும் மருந்துகளை, சாப்பிட முன்பாகவே எடுத்து, சாப்பாட்டு மேசையின் மேல் வைத்து விட்டு, சாப்பிட்ட பின் மறக்காமல் உட்கொள்ளவும்.



13.மறதி ஏற்படும் என எண்ணினால் குடும்ப உறுப்பினர், அயலவரிடம் நினைவுறுத்தப் பணிக்கலாம்.

14.கைத்தொலைபேசி உள்ளவர்கள் மற்றவர்களுக்கு Miss Call செய்வதன் மூலம் நினைவுபடுத்தலாம். அல்லது கடிகாரத்தில் அலாரம் வைக்கலாம்.

15.செதி உள்ளவர்கள், கிழமை நாள்கள் பொறித்த மருந்துப் பெட்டியை வாங்கி அதில் குறிக்கப்பட்டிருக்கும் நாள்களுக்கேற்ப மருந்துகளைப் போட்டு பாவிக்கலாம்.

16. சரியான நேரத்துக்கு மருந்துகளை உட்கொள்வதற்காக பெரிய இலக்கங்களை உடைய கடிகாரத்தை வாங்கி கண்படும் இடத்தில் வைக்கவும்.

**இன்சுலின் பாவனையாளர்களுக்கு:-**

1. இன்சுலின் போன்ற மருந்துகளைக் கொண்டு செல்லும் போது உங்கள் வீட்டிலிருக்கும் சுடுதண்ணீர் போத்தலைக் கொண்டு வர வேண்டும்.

2.இதனுள் Ice (ஐஸ்) கட்டி போட்டு இன்சுலினைக் கொண்டு செல்ல வேண்டும்.

3.இதற்கு சுகாதார ஊழியர்களின் உதவியை நீங்கள் நாட முடியும்.

4. இன்சுலினை வீடு கொண்டு சென்ற பின் குளிர்சாதனப் பெட்டியில் வைக்கவும். பெட்டியின் கதவில் வைப்பதைத் தவிர்க்கவும்.

5. குளிர்சாதனப் பெட்டி அற்றவர்கள் அயலவர்களின் உதவியை நாடலாம். அல்லது மண் பானையில் நீர் விட்டு அதனுள் வைத்து மூடி வைக்கலாம்.

6. மண் பானையில் வைக்கும் போது மருந்துகளின் (Lable) லேபல்கள் உரியாமல் பொலிதீனால் சுற்றி வைக்கலாம்.

7. மண் பானையில் உள்ள தண்ணீரை ஒவ்வொரு நாளும் மாற்றவும்.

**திருமதி சறோஜினிதேவி பாலசுந்தரம்**
தாதிய உத்தியோகத்தர், நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை.

உதயனின் இந்த வைத்தியமலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் -
நித்திய சுகத்தை நோக்கி..., நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

**கேள்வி:-** எனது குடும்பத்தில் 8 அங்கத்தவர்கள் உள்ளனர். அடிக்கடி எல்லோருக்கும் தடிமன் ஏற்படுகின்றது. இது தானாக குணமடையும் நோய் என்று கூறுகின்றார்கள். இதற்கு மருந்து (Antibiotic) எடுக்க வேண்டுமா என்பது பற்றி கூறுக.



**பதில்:-** தடிமனானது (Common cold) வைரசால் (பொதுவாக றைனோ வைரஸ்) ஏற்படுத்தப்படும் நோயாகும். ஆனால் இது உடலில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை.

இந்தநோயின் அறிகுறிகளாகத் தும்மல், மூக்கடைப்பு, இருமல், மூக்கால் வடிதல், தலையிடி, உடல் நோவு, களைப்பு, சாதாரண காய்ச்சல் போன்ற அறிகுறிகள் காணப்படலாம். எனினும் இந்த அறிகுறிகள் 7-10 நாள்களுக்குள் படிப்படியாக குறைந்துவிடும்.

மூக்கால் வடியும் திரவத்துளிகள் நேரடித் தொடுகை மூலமும், காற்றில் பரவுவதன் மூலமும் இவர்களில் இருந்து மற்றவர்களுக்கு தொற்றக்கூடியது. குறைந்தளவு காற்றோட்டம், சனநெருக்கம், சுகாதார சீரின்மை என்பன தொற்றுதலை அதிகரிக்கச் செய்யும் காரணிகளாகும்.

இந்த நோயானது வைரசால் ஏற்படுத்தப்படும். தானாக குணமடையும் ஒரு நோயாகும். எனவே இந்த நோயை கட்டுப்படுத்த மருந்துகளின் (antibiotic and antivirus) பாவனை பயனளிக்க மாட்டாது.

இந்நோய் மேலும் குறிப்பிட்ட நாள் களுக்கு மேல் நீடிக்குமாயின் தகுந்த வைத்தியரை அணுகி தடிமல் அல்லது வேறு நோயா என்பது பற்றி அறிந்து கொள்ளலாம்.

தும்மும்போதும், இருமும் போதும் கைக்குட்டைகளை பாவிப்பதன் மூலமும், போதியளவு காற்றோட்ட வசதிகளை எற்படுத்துவதன் மூலமும் இந்த நோயானது மற்றவர்களுக்கு தொற்றாது தடுக்க முடியும்.

**மருத்துவர்.கீ.பரமேஸ்வரன்,**
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
யாழ். பிரஞ்சு நட்புறவுக் கழகம்

**The Only Official Centre for French Language in Jaffna**
பிரஞ்சு மொழியை பிரஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

**Alliance Française de Paris** ஆலும் இலங்கையிலுள்ள **French Embassy** ஆலும் அங்கீகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்திலுள்ள ஒரேஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனம் **Alliance Française de Jaffna** மட்டுமே.
சர்வதேச தரம் வாய்ந்த **Alliance Française de Jaffna** இல் France மற்றும் பிரெஞ் பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் கற்றுக்கொள்கிறார்கள்

வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்...
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பமாகின்றன.
உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

61, Kachcheri-Nallur Road, Jaffna Phone: 021.2228093
E-mail: alliancejaffna@yahoo.com
(முக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டிடம்


# மரண அறிவித்தல்

## திருமதி கந்தையா செல்லம்மா



திருகோணமலை ஆலங்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா செல்லம்மா (30.12.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துகருப்பர் கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கேதார கௌரி மற்றும் மகேஸ்வரன்(உதவி ஆணையாளர் சமுர்த்தி, உதவித்திட்டப் பணிப்பாளர்-யாழ்ப்பாணம்), மலர்விழி, றங்கேஸ்வரி, கமலேஸ்வரி(சுவிஸ்), சிவனேஸ்வரன் (டோகா) ஆகியோரின் அன்புத் தாயும், திருமதி லுடேவிக்கா (அதிபர், சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை), யோகநாதன், விஜயன் (சுவிஸ்), வனஜா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (03.12.2012) திங்கட் கிழமை காலை 9 மணியளவில் ஆலங்கேணி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல் :
க.மகேஸ்வரன் (மகன்).
71/2, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
(26021)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 | 02 |
| 04 | 11 |
| 1954 | 2012 |

**அமரர் சத்தியராணி கருணாநிதி**
குடும்பத்தின் குலவிளக்காய் வாழ்ந்த
அன்புத் தெய்வத்தை நினைவு கூருகின்றோம்
333(117) ஆனந்தன் வடலி வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.
(25032) (10,6)

# காணி விற்பனைக்கு

பொற்பதி றோட்,
உடையார் ஒழுங்கையில் 3 பரப்புக் காணி 3 பக்க சுற்று மதிலுடன்,
உடன் விற்பனைக்குண்டு.
தரகர்கள் தேவை இல்லை.
தொ.பே: 0770547623
(26014)

# சமையல் ஆள் தேவை

வீட்டில் நின்று சமையல் வேலை செய்ய பெண் தேவை.
தொ.பே: 0777496516
(c/3151)

# ஹன்டர் வாகனம் விற்பனைக்கு

NPLC - XXXX இலக்கமுடைய $15\frac{1}{2}$ அடி நீளம் கொண்ட வாகனம் விற்பனைக்கு.
விலை - 20,50,000/=
பேசித் தீர்மானிக்கலாம்.
தொ.பே: 0773131458
(26051)

# காணி விற்பனைக்கு

வவுனியா நெளுக்குளம் 4ஆம் கட்டையில் ஆயுள் வேத வைத்தியசாலைக்கு பின்புறமாக 200க்கு மேற்பட்ட தென்னைகளைக் கொண்ட $2\frac{1}{2}$ஏக்கர் காணி விற்பனைக்குண்டு.(வீடு ,கிணறுடன்)
தொ.பே: 0772342075
(25951)

# பதவி வெற்றிடம்

- சுத்திகரிப்புத் தொழிலாளி ( அமைய) (ஆண்/பெண்)
  8ஆம் தரச் சித்தி, வயது(18 -50)
- பாதுகாப்பு (அமைய) உத்தியோகத்தர்
  8ஆம் தரச் சித்தி, வயது 25 -60

யாழ்ப்பாணம்,
நல்லூர் பிரதேசங்களைச் சேர்ந்தோர் மட்டும்.
நேர்முகத் தேர்வு - 05/12/2012 மாலை5 மணி

**திசைகாட்டி பிறைவேற் லிமிட், (Pv82703)**
**175, பருத்தித்துறை வீதி,ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**
(25911)

# நாய்க் குட்டி விற்பனை

டோமென் இன நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 42,மார்டின் றோட்,
யாழ்ப்பாணம்.
தொ.பே.021 490 1276,
(25894) (6,7)

# மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம்
1981 விசாகம் 15 பாவம்
B.A Teacher மணமகனுக்கு மணமகள் தேவை
தொ.பே: 0718285673
(25860) (6,7)

# ஆசிரியர் தேவை

பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நாள்களில் கணினி கற்பிப்பதற்கு ஆசிரியர் (பெண்) தேவை.
சிறுப்பிட்டியில் இருந்து 5 km இல் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
சான்றிதழ்களுடன் வரவும்.
தொடர்பு : 0776051360 (சிறுப்பிட்டி).
(26009)


உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111


# All kind of Mobile phone's Unlocking



சுவிற்ஸர்லாண்ட், நோர்வே, சுவீடன், பிரான்ஸ், கொரியா, கனடா, UK, USA, etc (I Phone 3GS, 4, 4S, 5) மற்றும் (HTC, Nokia (SL), Sony ericsson, Samsung, Blackberry உட்பட அனைத்து புதுவகையான Phone கள் unlock செய்து தரப்படும். I Phone Repairing செய்யப்படும்

தொடர்புகளுக்கு:
*S.M.M. Zuhair (Razmi)*
**R & R Telecom**
127, MPCS Building, K.K.S. Road, Jaffna.
072-2441441
(25993) (6,7,10)

# பிறந்தநாள் வாழ்த்து



தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகரும் தலைவருமாகிய
**வாமதேவா தியாகேந்திரன் (தியாகி)**
அவர்களின்

## 61 ஆவது பிறந்தநாள்

(A Philanthropist in Swizerland)

ஒரு மனிதனின் சிந்தனைகள் பலவாகினும் நோக்கம் என்பது ஒன்று தான் என்பது இந்த வர்த்தக நிறுவனத்தின் செயற்பாடுகள் மூலம் உணர முடிகின்றது. தார்மீகச் செயற்பாடுகளுக்காக மூலதனம் இட்டு நலிவுற்ற குடும்பங்கள் பலவற்றுக்கு பொருளாதார மேம்பாட்டினையும், ஏழைகளுக்கு வேலை வாய்ப்பினையும் வழங்கிவரும் ஒரு வித்தியாசமான சேவை நிறுவனமாக ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிறுவனத்தில் பணியாளர்களாகப் பணிபுரிவதன் மூலம் நாமும் அறப்பணியாளர்கள் என்ற உணர்வை மட்டுமன்றி மலிவான விலையில் தரமான பொருள்களை மக்களுக்கு வழங்கி வரும் சேவை நிறுவனமாக இருப்பதனையும் எம்மால் உணர முடிகின்றது.

தனக்காக மட்டுமன்றி பிறரையும் வாழ வைக்கும் எங்கள் நிறுவுனரின் 61வது அகவைதனில் நலமாக வாழ, அறப்பணி சிறக்க இறைவன் திருவருள் வேண்டி வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

வாழ்த்துவோர்
முகாமையாளர், பணியாளர்கள்
ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையம்
527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(C/3143) (10,6)

# நன்றி நவிலல்...



கடந்த 05.11.2012 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தாயார்

அமரர்
**கருணாகரன் கௌரி**
அவர்களின்

மறைவை அறிந்து நேரடியாகவும், தொலைபேசி மூலமும் தமது அனுதாபங்களை பகிர்ந்த அனைவருக்கும் அத்துடன் அன்னாரின் இறுதிநாள் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள், வாடிக்கையாளர்கள், மற்றும் அனைத்து பாசமிகு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

என்றும் நன்றியுணர்வுடன் தங்கள் அன்பின்
**க.ரமணன் (மகன்)**
(25987) (10,6)

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



| அமரர் மாரிமுத்து பரமேஸ்வரி (சுழிபுரம்) | | அமரர் கோபாலசிங்கம் தனலட்சுமி (கொழும்புத்துறை) |
|---|---|---|
| 19.02.1946 | மண்ணில் | 27.08.1946 |
| 13.12.2007 | விண்ணில் | 14.11.2007 |
| சதுர்த்தி - 02.12.2012 | திதி | பஞ்சமி 18.11.2012 |

இரு வீட்டின் தலைவியராய் இருந்து நீங்கள்
ஒரு வீட்டின் ஒளி விளக்காய் மாறி பின்னர்
திருவீட்டில் உறைவதற்கோ சென்று நீங்கள்
இன்று ஆண்டு ஐந்தாகியும் உங்கள் நினைவோடு வாழும்

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
குமாரமந்தி, சுழிபுரம்.
(25891) (10,6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பு வர்த்தக பெயருக்கான உலக விருது HNB அசூரன்ஸுக்கு

அதிசிறப்பான சந்தைப் படுத்தல் முன்னெடுப்புகள் ஊடாக காப்புறுதித் துறைக்கு HNB அசூரன்ஸ் வழங்கியுள்ள பங்களிப்பை பாராட்டி சேவைத் துறை' பிரிவின் கீழ் சிறப்பு வர்த்தகப் பெயருக்கான உலக விருது HNB அசூரன்ஸுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2012 நவம்பர் 23 வெள்ளியன்று மும்பை தாஜ் லேண்ட்ஸ் என்ட் ஹோட்டலில் நடைபெற்ற கோலாகலமான வைபவத்தின்போது உலக வர்த்தகப் பெயர் மாநாட்டின் 2012 சிறப்பு வர்த்தகப் பெயருக்கான உலக விருது' HNB அசூரன்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. இவ்வைபவத்தில் உலக நாடுகளில் இருந்து பல முன்னணி நிறுவனங்கள் கலந்து கொண்டன. உலக வர்த்தகப் பெயர் மாநாடானது, உலகின் பல வெற்றிகரமான வர்த்தகப் பெயர் கொண்ட நிறுவனங்களில் உள்ள திறமை மிக்க பலரும் பல்வேறுபட்ட வர்த்தகத்துறைகளையும் சார்ந்த பிரதானிகளும் சந்திக்கும் ஒரு முக்கிய சர்வதேச நிகழ்வாகும்.



இதன் போது நிறுவனத்தின் வெற்றி தொடர்பாக பெருமிதத்துடன் கருத்துத் தெரிவித்த HNB அசூரன்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் மன்ஜுல டி சில்வா, நமது வாடிக்கையாளர்களுக்கு ஒப்பற்ற காப்புறுதித் தீர்வுகளை வழங்குவதற்கான நமது அயராத அர்ப்பணிப்பை இனங்கண்டதன் பயனாகவும் நமது சிறப்பான சந்தைப்படுத்தல் வியூகங்களின் முன்னெடுப்புகளை ஊக்குவிக்கும் நோக்குடனும் இவ்விருது HNB அசூரன்ஸுட்கு வழங்கப்பட்டுள்ளதுடன், இது நாம் பெற்றுள்ள மகத்தானதொரு வெற்றியாகும்' என்று கூறினார்.

அதைத் தொடர்ந்து உரையாற்றிய HNB அசூரன்ஸ் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகப் பொது முகாமையாளர் லலித் ஃபெர்ணாண்டோ, இதுவே HNB அசூரன்ஸ் பெற்றுள்ள முதலாவது சர்வதேச விருதாகும். இது பெரியதொரு சாதனையாவதுடன் HNB அசூரன்ஸ் போன்ற ஓர் இளம் நிறுவனத்திற்கு கிடைத்துள்ள நல்லதொரு ஆரம்பமாகும்' என்று குறிப்பிட்டார்.

நிறுவனத்தின் சார்பில் மேற்படி விருதை HNB அசூரன்ஸின் சந்தைப்படுத்தலுக்கான பிரதம அதிகாரி டில்ஷான் பெரேரா பெற்றுக் கொண்டார்.

செப்ரெம்பர் 30 ஆம் திகதியுடன் முடிவுற்ற 2012 நிதி ஆண்டின் இறுதியில் வரிக்கு முன்பும் வரிக்கு முன்புமான வளர்ச்சி வீதங்களாக முறையே 265% மற்றும் 336% ஐ HNB அசூரன்ஸ் பதிவு செய்திருந்தது.

இதனடிப்படையில் கொழும்பு பங்குச் சந்தைக்கு தரப்பட்ட இடைக்கால நிதி அறிக்கையில் வரிக்கு பின்பு மற்றும் பின்பாக முறையே ரூ. 173.85 மில்லியன் மற்றும் ரூ. 139.89 மில்லியன் இலாபம் பதிவாகியது.

இலங்கையில் அதிவேகமாக வளர்ச்சி கண்டு வரும் ஒரு காப்புறுதி நிறுவனம்' என பாராட்டுப் பெற்றுள்ள HNB அசூரன்ஸ், நாடளாவிய ரீதியில் 51 கிளைகளைக் கொண்டுள்ளது. மேலும் ஃபிட்ச் ரேடிங்ஸ் லங்கா லிமிடட் தரப்படுத்தலில் தேசிய ரீதியில் HNB அசூரன்ஸ் தொடர்ச்சியாக அதிக காலம் நிலைத்திருப்பதுடன், நிறுவனத்தின் நிதி ஸ்திரத்தன்மைக்காக A(lka) விருதும் HNB அசூரன்ஸுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)



மக்கள் வங்கியில் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் இடையே நடத்தப்பட்ட ஜெயஸ்ரீ அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பின் போது சுன்னாகம் மக்கள் வங்கியில் கணக்கு வைத்திருக்கும் நபருக்கு எல்சிடி தொலைக்காட்சிப் பெட்டி பரிசாகக் கிடைத்துள்ளது. (த-86)

## சாவகச்சேரி இலங்கை வங்கி வழங்கும் விவசாயக் கடன்

தென்மராட்சி,டிசெ.2

சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளையினர் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த நெற்செய்கையாளர்கள், மேட்டுநிலப் பயிர்ச் செய்கையாளர்கள் ஆகியோருக்கு விவசாயக் கடன்களை வழங்கி வருகின்றனர்.

இதுவரை மட்டுவில் வடக்கு சந்திரபுரம், சரசாலை வடக்கு, கல்வயல், நுணாவில் மேற்கு, மட்டுவில் கிழக்கு, இராமாவில், குடமியன், மந்துவில், மிருசுவில் வடக்கு, எழுதுமட் டுவாள் தெற்கு, மறவன் புலோ, தனங்கிளப்பு, கச்சாய், அல்லாரை உள்ளிட்ட நெற் செய்கையாளர்கள் மேட்டு நிலப் பயிர்ச் செய்கையாளர்கள் 575 பேருக்கு விவசாயக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் கைதடிப் பிரதேச விவசாயிகளுக்கான கடன்களை வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் இந்த வருடம் ஆயிரத்துக்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு குறுகிய காலக் கடன்கள் வழங்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

காலபோகப் நெற்செய்கை, மேட்டுநிலப் பயிர்ச்செய்கையான மிளகாய், வெங்காயம், கத்தரி உள்ளிட்ட பயிர்களுக்கு கடன்கள் வழங்கப்படுகின்றன. காலபோகப் நெற் பயிர்ச் செய்கைக்கு ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபா வீதம் பத்து ஏக்கர் வரையும், வெங்காய உற்பத்திக்கு ஏக்கருக்கு 95 ஆயிரம் ரூபா வீதம் இரண்டு ஏக்கருக்கும், மிளகாய் உற்பத்திக்கு ஏக்கருக்கு 65 ஆயிரம் ரூபா வீதம் இரண்டு ஏக்கருக்கும் விவசாயக் கடன் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## 20 பில்லியன் பெறுமதியை தாண்டியுள்ள CDB நிறுவனம்

சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பீஎல்சி (CDB) நிறுவனமானது கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்திற்கு வழங்கியுள்ள அறிக்கையின் படி மொத்த சொத்துப் பெறுமதியாக ரூ 20 பில்லியனைப் பதிவு செய்துள்ளது.

ஏழு மிகப்பெரிய நிதி நிறுவனப் பிரிவுகளின் கீழ் CDB நிறுவனமும் அடங்குகின்றது. 2012 செப்டம்பர் 30ஆம் திகதி முடிவடைந்த 6 மாதத்தின் வளர்ச்சி, முன்னைய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் 11.56% லிருந்து 15.79% சதவீதமாக வளர்ச்சியடைந்துள்ளது.

6 மாதத்தின் வரிக்கு பின்னரான இலாபம் ரூ245.5 மில்லியனை பதிவு செய்துள்ளது. 2012 செப்ரெம்பர் 30 ஆம் திகதி முடிவடைந்த ஐந்தொகை அறிக்கையின் படி 21.79% ஆக வளர்ச்சி அதிகரித்துள்ளது.

அத்துடன் கடந்த 31ஆம் திகதி மார்ச் 2012 முடிவடைந்த காலத்திற்கு ரூ20.15 பில்லியனைப் பதிவு செய்துள்ளது. கடந்த 6 மாதத்திற்கான வருவாயானது 37% வீதத்தில் இருந்து 48% சதவீதமாக ரூ1.92 பில்லியனை சம்பாதித்துள்ளது.

நிகர செயற்பாடற்ற கடன்கள் 2.54% சதவீதமாக பதிவாகியுள்ளது. (உண்மை வீதம் 1.17%) CDB நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரும், தலைவருமான மகேஷ் நாணயக்கார கருத்து தெரிவிக்கையில் CDB நிறுவனமானது சந்தையின் அமைப்பிற்கு ஏற்ப மாற்றமடைந்துள்ளதுடன், நிதி யாண்டின் இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதற் கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவித்தார். (த)



வாடிக்கையாளர் சிவானந்தனுடைய இழப்பீட்டுக் கொடுப்பனவை அவரது மனைவி திருமதி சிவானந்தனுக்கு யூனியன் அசூரன்ஸ் நிறுவனத்தின் யாழ். பிராந்திய முகாமையாளர் ந.சுகுணன் வழங்குகிறார். (த)

## விசேட தேவையுடையோருக்காக செலான் வங்கியின் சுஹத சேவா





செலான் வங்கியானது நாடெங்கிலுமுள்ள தனது மில்லியன் கணக்கான வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகின்ற உள்ளார்ந்த கவனிப்பு மற்றும் அவதானம் ஆகியவற்றை மீள்- வரையறை செய்வதற்காகவும், அவற்றை அடுத்த மட்டத்திற்கு கொண்டுசெல்லும் வகையிலும் செலான் சுஹத சேவா என்ற தனது புதிய சேவையை அங்குரார்ப்பணம் செய்துள்ளது.

செலான் சுஹத சேவா என்ற பெயர் எடுத்துரைப்பதைப் போலவே தமது அன்றாட வங்கியியல் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதில் விசேட உதவி, ஒத்தாசைகள் அவசியமானவையுள்ள வாடிக்கையாளர்கள் செலான் வங்கிக் கிளைக்கு விஜயம் செய்கின்ற வேளையில் இவ் விசேட கவனிப்பையும், சேவையையும் பெற்றுக் கொள்ளலாம்.

வெறுமனே ஒரு வங்கியியல் சேவைக்கு அப்பாற்பட்டதான ஒரு சமூக சேவை செயற்றிட்டம் என்று வரையறுக்கக் கூடிய விதத்திலமைந்த, பாராட்டத்தக்க இந்த முன்னெடுப்பின் ஓர் அங்கமாக நாடு முழுவதிலுமுள்ள 140 செலான் வங்கிக் கிளைகளும், இவ்வாறான வாடிக்கை யாளர்களின் வங்கியியல் தேவைகளை தனிப்பட்ட முறையில் கையாளும் பொருட்டு விசேடமாக பயிற்சியளிக்கப்பட்ட, அர்ப்பணிக்கப்பட்ட வங்கி ஊழியர்களைக் கொண்டியங்கும்.

இந்தச் சேவையானது மதத் தலைவர்கள், வயது முதிர்ந்த சிரேஷ்ட பிரஜைகள், மாற்று வலுவுள்ளோர், கர்ப்பிணித் தாய்மார்கள், சிறு குழந்தைகளை பராமரிக்கும் தாய்மார்கள் போன்ற தரப்பினருக்கு கிடைக்கக் கூடியதாக இருக்கும். (த)



மக்கள் வங்கியின் சிசு உதான 2011 குலுக்கலில் தெரிவு செய்யப்பட்ட சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் அ.சோமலிங்கம் டிலானுக்கு மவுண்டர் சைக்கிள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளை உதவி முகாமையாளர், மாணவனுக்கு சைக்கிளை வழங்குவதையும் அருகில் பாடசாலை அதிபர், மாணவனின் தந்தை மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள் காணப்படுகின்றனர். (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளை அழிக்குமாறு யாழ்.நீதிமன்றம் உத்தர விட்டிருந்தது. அதனையடுத்து யாழ்.மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தில் வைத்து உதவிப்பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி, கடற்றொழில் பரிசோதகர் ரமேஸ்கண்ணா ஆகியோர் தங்கூசி வலைகளை எரியூட்டினர். (ம-13)

## ஆயிரம் ரூபா கொடுப்பனவை பெறாதோர் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,டிசெ.2

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட 70 வயதைப் பூர்த்தி செய்த முதியவர்கள் ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்கு விண்ணப்பிக்கலாம்.

பொதுசன மாதாந்தக் கொடுப்பனவு அல்லது சமுர்த்திக் கொடுப்பனவைப் பெறும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட முதியவர்கள், இதுவரை ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்கு விண்ணப் பிக்காதிருப்பின் விண்ணப்பிக்க முடியும்.

இதுவரை பதிவினை மேற்கொள்ளாதவர்கள் கோப்பாய் பிரதேச செயலகத்தின் சமூக சேவைக் கிளையில் தமது பதிவுகளை மேற்கொள்ளு மாறு வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார். (3)

## அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.2

ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக் கடமையில் ஈடுபடவுள்ள இணைப்பாளர், உதவி இணைப்பாளர், மேற்பார்வையாளர்கள், நிரந்தர நோக்குநர் ஆகியோருக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் 5 ஆம் திகதி , 6 ஆம் திகதிகளில் முற்பகல் 10 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இதற்கமைவாக எதிர்வரும் 5 ஆம் திகதி புதன்கிழமை கோப்பாய் கோட்டம், வலிகாமம், வடமராட்சி ஆகிய வலயங்கள் உள்ளடக்கிய யாழ்ப்பாணம்-02 பரீட்சை பிராந்திய அலுவலர்களுக்கு கூட்டம் நடைபெறவுள்ளது.

மறுநாள் வியாழக்கிழமை கோப்பாய் கோட்டம் தவிர்ந்த யாழ்ப்பாணம், தென்மராட்சி, தீவகம் ஆகிய வலயங்களைச் சேர்ந்த யாழ்ப்பாணம்- 01 பரீட்சை பிராந்திய அலுவலர்களுக்கும் இடம்பெறும்.(3-14)

## கும்பாபிஷேகம்

இருபாலை கிழக்கு கந்தசாமி ஆலய முனி கோயில்-அம்மன் கோயில் மஹா கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 11.15 மணி முதல் நடைபெறவுள்ளது.

## சுவர் வீழ்ந்ததில் தொழிலாளி காயம்

பாழடைந்த வீட்டின் சுவரை உடைக்க முற்பட்ட தொழிலாளி மீது திடீரெனசுவர் சரிந்து வீழ்ந்தது. இதில் முகம் மற்றும் கை, கால்கள் காயங்களுக்கு இலக்கான நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் தொழிலாளி அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இளவாலை விளான் பகுதியைச் சேர்ந்த ரானின் பயஸ் (வயது-30) என்பவர் நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் கோண்டாவில் பகுதியில் பழைய வீடு ஒன்றை உடைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். இதன் போது திடீரென சுவர் இடிந்து வீழ்ந்தது என்று கூறப்பட்டது. (ம-14)

## சிவப்பிரகாச சுவாமிக்கு சமாதி அஞ்சலி

அண்மையில் சமாதியடைந்த திருவாவடுதுறை ஆதீன 23 ஆவது குருமகா சந்நிதானம் சிவப்பிரகாச தேசிக பரமாச்சர்ய சுவாமிகளுக்கு சமாதி அஞ்சலிப் பிரார்த்தனை நடைபெறவுள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இந்து சமயப் பேரவையின் ஸ்ரீநடராஜ மகா மண்டபத்தில் அகில இலங்கைத் திருமுறை மன்றத் தலைவர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் 12 திருமுறைகள் பாராயணம் செய்தல், அஞ்சலி உரைகள் என்பனவும் இடம்பெறும். (3)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், டிசெ.2

ஆனைப்பந்தி மெ.மி.த.க பாடசாலை மற்றும் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலைகளின் அதிபர் பதவிக்கு அதிபர் சேவை வகுப்பு III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிப்பவர் யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலைகளில் அதிபர் சேவை வகுப்பு III ஐச் சேர்ந்தவர்களாகவும், தற்போது கடமையாற்றும் பாடசாலைகளில் 3 வருடங்கள் சேவையாற்றியிருப்பதுடன் மேலும் மூன்று வருடங்கள் கடமையாற்றக்கூடிய வயதெல்லை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

தகுதியுடைய விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னதாக யாழ். வலயக் கல்வி அலுவலக நிர்வாகப் பிரிவில் விண்ணப்பங்களை ஒப்படைக்கலாம் என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (3-14)

## தீப்பற்றியது ஓலை வீடு

வடமராட்சி,டிசெ.2

வீட்டில் ஆள்கள் இல்லாதவேளை ஓலைவீடு ஒன்று தீப்பற்றி எரிந்து நாசமானது.

இதனால் 10 லட்சம் ரூபா வரையில் நஷ்டம் ஏற்பட்டதாகக் கூறப்பட்டது.

உடுத்துறையில் வியாழக் கிழமை இரவு 7 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த முத்துசாமி நடராசா என்பவரின் வீடே எரிந்து சாம்பலானது.

சம்பவநேரம் வீட்டில் உள்ள அனைவரும் வெளியே சென்றிருந்தனர். திரும்பி வந்து பார்த்தபோது, வீடு தீக்கிரையாகியிருந்தது. வீட்டில் இருந்த பல லட்சம் ரூபா பெறுமதிமிக்க மீன்பிடி வலைகள், மீன்பிடி உபகரணங்கள் மற்றும் வீட்டில் இருந்த அனைத்துச் சொத்துக்களும் ஆவணங்களும் தீயில் எரிந்து அழிந்துள்ளன. (ம-8)

## வினாடி வினாப் போட்டி

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசையை முன்னிட்டு அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தினால் வினாடி வினாப் போட்டி நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு யாழ்.வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் 20 வயதுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களும், 20 வயதுக்கு மேற்பட்ட சைவப்புலவர், இளம் சைவப்புலவர்,சைவ சித்தாந்த பண்டிதர்களும் பங்குபற்றலாம். என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (3-14)

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சவால்கள், விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். அரசால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமையை கண்டு மேலதிகாரி வியப்பார்.

**இடபம்:** கடந்த இரண்டு தினங்களாக இருந்த அசதி, சோர்வு, கோபம் யாவும் நீங்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுனம்:** எதையும் திட்டமிட்டு செய்யப்பாருங்கள். அடுத்தவர்களை குறை கூறி கொண்டிருக்காமல் உங்களை மாற்றிக் கொள்ளப்பாருங்கள். வியாபாரத்தில் பழைய பொருள்களைப் போராடி விற்பீர்கள். வேலைச்சுமை அதிகரிக்கும்.

**கடகம்:** குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். பணப்பற்றாக் குறையால் பிறரிடம் கடனாக வாங்க வேண்டி வரும். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்களைத் தவிருங்கள்.

**சிங்கம்:** எதிலும் வெற்றி பெறுவீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். நம்பிக்கைக்குரியவர்களை கலந்தாலோசித்து சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத்திறமை வெளிப்படும்.

**கன்னி:** உங்கள் செயலில் வேகம் அதிகரிக்கும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். உதவி கேட்டு வருபவர்களுக்கு உங்களாலானவற்றை செய்து கொடுப்பீர்கள். வியாபாரத்தில் அதிக இலாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் தலைமையின் நம்பிக்கையைப் பெறுவீர்கள்.

நாளை

*கார்த்திகை -18 திங்கட் கிழமை 03.12.2012*
*திதி: பஞ்சமி பி.இ. 04. 34 வரை*
*நட்சத்திரம்: பூசம் பி.இ. 02.09 வரை*
*சுபநேரம்: 12.15 - 01.45வரை*
*ராகுகாலம்: 07.45- 09.15 வரை*

**துலாம்:** கடந்த இரண்டு தினங்களாக இருந்த அலைச்சல், படபடப்பு யாவும் நீங்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தடைகள் நீங்கும்.

**விருச்சிகம்:** சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். குடும்பத்தில் சிறு வார்த்தைகள் கூட பெரிய தகராறில் போய் முடியும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைகழிக்கப்படுவீர்கள். பொறுமையைக் கடைப்பிடியுங்கள்.

**தனுசு:** தன் பலம் பலவீனத்தை உணருவீர்கள். சகோதரங்களால் பயனடைவீர்கள். மின்னணு, மின்சார சாதனங்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தில் சந்தை நிலவரம் அறிந்து இலாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் மதிப்புக் அதிகரிக்கும்.

**மகரம்:** அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் வெற்றி பெறுவீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்வீர்கள். திடீர் யோகம் கிடைக்கும்.

**கும்பம்:** மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக்கூடாது என்று முடிவெடுப்பீர்கள். அநாவசிய செலவுகளைக் கட்டுப்படுத்துவீர்கள். புதிய தொழில் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் புதிய பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் புது பங்குதாரரைச் சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் ஆச்சரியப்படும் அளவுக்கு அதிகாரியின் ஆதரவைப் பெறுவீர்கள். தேவைகள் நிறைவேறும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | 8 | | | 9 | 7 | |
| | | 8 | 9 | 4 | | | 2 | |
| 5 | 2 | | | | | 4 | 3 | |
| | | 4 | | 6 | 9 | 2 | | |
| 1 | | | | 8 | | | | 7 |
| | | 5 | 2 | 1 | | 3 | | |
| | 5 | 6 | | | | | 1 | 9 |
| | 9 | | | 5 | 2 | 6 | | |
| | 4 | 1 | | | 6 | | | 2 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 8 | 3 | 6 | 7 | 9 | 5 | 2 |
| 6 | 9 | 3 | 4 | 2 | 5 | 7 | 8 | 1 |
| 7 | 2 | 5 | 9 | 8 | 1 | 3 | 6 | 4 |
| 2 | 8 | 6 | 1 | 3 | 9 | 4 | 7 | 5 |
| 5 | 4 | 9 | 8 | 7 | 2 | 6 | 1 | 3 |
| 3 | 7 | 1 | 6 | 5 | 4 | 2 | 9 | 8 |
| 9 | 3 | 2 | 7 | 1 | 8 | 5 | 4 | 6 |
| 8 | 6 | 7 | 5 | 4 | 3 | 1 | 2 | 9 |
| 1 | 5 | 4 | 2 | 9 | 6 | 8 | 3 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

வேலை என்பது தேடுவோருக்குத் தேவையானது. உங்கள் திறமைக்கு வேலை என்ன வேண்டும் என்று யோசிக்க வேண்டாம். வேலைக்காகக் காத்திருப்பவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். தகைமை O/L - 06. அனுபவம் தேவையில்லை. பயிற்சியின் போது 12,000 - 15,000/= பயிற்சியின் பின் 45,000/=

தொடர்பு:
0779 994 807- 0114 986 066.

## காணி விற்பனை

இணுவிலுக்கும் மருதனார்மடத்திற்கும் இடைப்பட்ட KKS வீதியில், வீதிக்கு மிக அருகிலும் கோவில், சந்தை என்பவற்றிற்கு மிக அண்மையாகவும் 4 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு

தொடர்பு:
0778 296 998

## பணியாளர்கள் தேவை

புதிய மல்ரி சென்ரர் நிறுவனத்துக்கு

* கணினி அனுபவம் உள்ளவர்கள்
* வியாபார அனுபவம் உள்ளவர்கள்

(பெண்கள் மட்டும்.)
(நீர்வேலி பகுதியில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)

கரந்தன் வீதி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
0770515984, 0757328637

(ச/3157)(3.6)

## பணி நிலை வேண்டுகை

* கணினி இயக்குநர்கள் (அச்சக அனுபவம் உள்ளவர்கள்)
* இயந்திர இயக்குநர்கள் (பழக விரும்புவர்களும்)
* புத்தகம் கட்டுநர்கள்
* அலுவலக உதவியாளர்கள்

சுய விவரக்கோவையுடன் சமுகம் தரவும்.
சாம்பவி பதிப்பகம்
276, கஸ்தூரியார் வீதி,
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

(ச/3158)(3.6)

## உடனடி வேலை வாய்ப்புகள்

உதவியாளர்கள், சுத்திகரிப்பாளர்கள், பணிப்பெண்கள் உடன் தேவை. (இருபாலாரும்)
வயது 20 - 42 வரை.
0774193321 / 0712110764

## BANK BALANCE ARRANGEMENTS FOR ALL TYPES OF VISA

UK, USA, CANADA, AUSTRALIA & NEW ZEALAND
BANK / FINANCIAL COMPANY
SOURCE OF FUND GUIDANCE
2 - 6 Months

No:14, 1/1, 37th Lane, Wellawatta, Colombo - 06.
Mr. Lee: 07777 33 223

RG ads

## SPOT ADMISSION FOR AUSTRALIA

**CHARLTON BROWN COLLEGE**
20th - 22nd December

* Free Career Guidance
* Part Time Job Assistance
* Lower Tuition Fee
* Minimum O/L
* With or Without IELTS
* Course Fee After Visa

Course Fee Discount Up to 6000$

Reserve Your Place Now

IELTS CLASS AVAILABLE

**Other Countries**
UK, USA, CANADA, AUSTRALIA, NEWZEALAND, GERMANY MALAYSIA, CYPRUS, UKRAINE, RUSSIA, FRANCE & SWITZERLAND

Reliance Overseas Education Consultancy
No:14, 1/1, 37th Lane, Wellawatta, Colombo - 06.
Miss. Zaarah: 0778 858 358 Miss. Dilani: 0775 512 818
Mr. Aravid: 071 5848657 Tel: 0117 90 99 00

RG ads

## JCB விற்பனைக்குண்டு




ஐரோப்பாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டதும், பதிவு செய்யப்படாததுமான JCB 3CX Power 2002 விற்பனைக்குண்டு.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
No. 70, Galle Road, Mount Lavinia.
Hot Line : 0777 797 002

## காணி விற்பனைக்கு

அளவெட்டி தெற்கு பிரதான வீதியில், அலுக்கைச் சந்திக்கு அருகில் நல்ல சூழலில் கடைகள், வீடுகள் கட்டுவதற்கு ஏற்ற கிணற்றுடன் 10 பரப்பு காணி முழுமையாக அல்லது இரு பகுதிகளாக விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0779117105

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரியில் ஹென்ஸ்மென் வீதியில் நீதிமன்றத்துக்கு அருகில் 61/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0770416187

## சொகுசு பஸ் விற்பனைக்கு

யாழ்பாணம் கொழும்பு சேவையில் ஈடுபட்டிருக்கும், 40 ஆசனங்கள், ரூட்பொமிட்டுடன் விற்பனைக்கு. புதிதாக வாங்கி, 7 மாதம் பாவித்த பஸ். உரிமையாளர் வெளிநாடு செல்வதால் உடனே விற்பனைக்கு

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
0778817002

## 61 ஆவது பிறந்த தினத்தினை முன்னிட்டு வாழ்த்துகின்றோம்

HAPPY BIRTH DAY

தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகரும் தலைவருமாகிய

### வாமதேவா தியாகேந்திரன் (தியாகி)



Best Wishes

விருந்தினர் விடுதி அமைத்து விருந்தோம்பல் பல செய்து வருகின்ற வருமானத்தில்........ வறுமைதனில் வாடுவோரை வாழ வைக்கும் எங்கள் அறப்பணியாளரின், 61வது ஜனன தினத்தை முன்னிட்டு வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம் என்றும் அவர் நாமம் நிலைத்து வாழ

அவர்களின் பணி சிறக்க வாழ்த்தும்
முகாமையாளர், பணியாளர்கள்
ரிசிரி விருந்தினர் விடுதி
46, ஆசீர்வாதம் லேன்,
யாழ்ப்பாணம்.

## இலவச திருமணசேவை

பல்லாயிரம் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பதிவுகள் தொடர்புகள் முற்றிலும் இலவசம்!.
www.mailgroom.com or
www.subamangalam.com

(ச/2488)(3.6)

## வீடு வாடகைக்குண்டு

6 அறைகளுடன் சமையலறை வசதிகொண்ட, இணைந்த குளியலறை வசதிகளுடன் விசாலமான வீடும், வாகனத் தரிப்பிட வசதிகள் கொண்டதுமான ஏ-9 வீதிக்கருகாமையில் அரியாலை தபாற்கட்டைச் சந்தியில் வீடு வாடகைக்குண்டு.
அரச, தனியார் நிறுவனங்களும், தொழில்சார் நிறுவனங்களும் விரும்பத்தக்கது.
விபரங்களுக்கு: 0773126807

## மணமகள் தேவை

வயது 32, யாழ். Non R.C கௌரவ குடும்ப அரச உத்தியோகத்தில் உள்ள மணமகனுக்கு உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 0774223481

(26057)(3.6)

## விற்பனைக்கு

பாவித்த MDF தளபாடங்கள், அலுமாரி Partation, கதவுகள், ஜிப்சம் கூரை ஓடுகள், காட்சி அறைக்கான தளபாடங்கள், Display Tables, அலுவலகத்துக்கான திரைச்சீலைகள், கதிரைகள், தரை விரிப்புகள் (Carpet) தரைக்கான பலகைகள், பெயர்ப் பலகைக்கான பிறேம், கண்ணாடிகள் என்பன விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0752430841

(ச/3155)(3.6)

## வான் விற்பனைக்கு

PB - xxxx Super GL வான் விற்பனைக்கு. T.V, Woober, Camera, Re control என்பன உள்ளடங்கலாக
தொடர்பு:
0750422085

(26024)(3.6)

## கார் விற்பனைக்கு

GG - xxxx Nissan Bluebird Diesel கார் விற்பனைக்கு. விலை - 1,950,000/=
தொடர்பு:
0772220108

## தலையாழி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய வழிபாடுநர் சபை

### பொதுக்கூட்டம்

எதிர்வரும் 23.12.2012 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஆலய சிவஞான மண்டபத்தில் வழிபடுநர்சபைப் பொதுக்கூட்டம் நடைபெறும்.
புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறவுள்ளது.
ஆகவே அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி வேண்டுகின்றோம்.
நிர்வாகசபையினர்
தலையாழி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(26059)(3.6)

## - தபால் மூலம் - ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

24

NOV.'2012 TO APRIL'2013

*தமிழ் மொழி மூலம்*

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

* கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
* வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
* ஹட்டன் • அநுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 10.12.2012

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்துகள்

### விஜயதுரை விகாஷ்

**2012.12.02**

HAPPY BIRTH DAY



அன்பின் அச்சுக்குட்டியாய்............
விருப்பத்தின் விகாஷாய்.........நம்
மடியில் தவளும் செல்வனே..........
அகவை ஒன்று ஆனதடா..............
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.......
நூற்றாண்டு நீ வாழ்ந்து
நற்பெயர்கள் நீ பெற்று
நம் மனம் குளிர
நீ வாழ்க. ......!



வாழ்த்துவோர்:
அப்பா – விஜயதுரை,
அம்மா – சிந்துஜா,
அப்பப்பா – அருமைத்துரை,
அப்பம்மா – தங்கமலர்,
அம்மப்பா – சிவஞானசுந்தரம்,
அம்மம்மா – யோகேஸ்வரி,
அன்பு அத்தை ரத்னா-செல்வா,
தாத்தா – வெற்றிவேல்,
அன்ரமார்கள்:
ஜீவிதா, ஜீவனா,
பாட்டி – அசுவதம்.

'சாந்தி இல்லம்'
அல்வாய் வடக்கு, அல்வாய்.

(25530)(5.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடு வாடகைக்கு**

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் உள்ள சகல வசதிகளுடன் கூடிய வீடு நிறுவனத்துக்கு வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: 0770467008

**விற்பனைக்கு**

முத்து மணவறை விற்பனைக்குண்டு.

தொடர்பு:0779789467

(26064)

**Banking வகுப்புகள் (CBF, DBF)**

INSTITUTE OF BANKERS OF SRI LANKA

வங்கி உத்தியோகத்தர்கள் மற்றும் O/L பரீட்சையில் 6 பாடங்கள் சித்தியுடன் கணிதபாடம் உள்ளடங்கலாக 5 பாடங்களில் "C" தரச் சித்தியுடைய அனைவரும் இக் கற்கை நெறியைத் தொடரமுடியும்.

Medium English & Tamil

அனுமதிக்கான இறுதித் திகதி 15.12.2012 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

தொடர்பு- Spectra Skills, #19 Stanley Road (People's Bank 2nd Floor) Jaffna. Tel- 021 2221422 (26060)(9.14)


# மனித உரிமை ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், டிசெ. 2

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகமும் தலைமை அலுவலகமும் இணைந்து நடமாடும் சேவையை இந்த மாதம் பூநகரி, பச்சிலைப்பள்ளி மற்றும் கண்டாவளை பிரதேச செயலகங்களில் நடத்தவுள்ளன என்று மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் நடமாடும் அலுவலகத்தின் ஊடாக மக்களுக்கான சேவையை வழங்கி வருகின்றோம்.

இருப்பினும் கிளிநொச்சி மாவட்டத்தில் தூர இடங்களிலுள்ள மக்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களது பிரதேச செயலகங்களுக்குச் சென்று அவர்களது முறைப்பாடுகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் எதிர்வரும் 5ஆம் திகதி புதன்கிழமையும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் 6 ஆம் திகதி வியாழக்கிழமையும், கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

நடமாடும் சேவை காலை 9.30 மணியில் இருந்து பிற்பகல் 3 மணி வரை இடம்பெறவுள்ளது என்று பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் மேலும் தெரிவித்தார்.

(ம-5)


**மலிவு விற்பனை**

கனடா ஜெயசாயி சுப்பர் சென்டரின் நத்தார் புதுவருட மலிவு விற்பனை ஆரம்பம்..............

01.12.2012 தொடக்கம் 2013 ஆம் ஆண்டின் புதிய வரவுகள் வந்து குவிந்துள்ளன.

நகரிலே எங்குமே பெறமுடியாத மலிவு விற்பனை

ஒரு சல்வார் வாங்கினால் ஒரு சல்வார் இலவசம்

ஒரு சாரி வாங்கினால் ஒரு சாரி இலவசம்

ஒரு சேட் வாங்கினால் ஒரு சேட் இலவசம்

மற்றும் திருமண பட்டு சாரிகள் 30% விலைகழிவுடனும், மற்றைய சகல பொருள்களும் விலைகழிவுடன் வழங்கப்படும். தெரிவுக்கு முந்திக் கொள்ளுங்கள்

**கனடா ஜெயசாயி சுப்பர் சென்டர்**

114 நாவலர் றோட்

யாழ்ப்பாணம்.

0212219393


## கண்ணீர் அஞ்சலி

எமது லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி விரிவுரையாளர் **செல்வி பராசக்தி** அவர்களின் அன்னை

***திருமதி லக்சுமி கிருஸ்ணபிள்ளை*** அவர்களுடைய மரணச்செய்தி கேட்டு துயரடைந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலைகளைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

Dr. ஜெ.ஜெயலன் (செயலாளர் - வட இலங்கை சுதேச வைத்தியசபை) (26058)(9.14)

Dr. ச. ஜெயலன் (முன்னாள் விரிவுரையாளர் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக்கல்லூரி)

சுஜீவா வைத்தியசாலை, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

# காசியர் வேலுப்பிள்ளை



கரணவாய் மேற்கைப் பிறப்பிடமாகவும், லண்டனில் வசித்தவருமாகிய காசியர் வேலுப்பிள்ளை கடந்த (29.11.2012) வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசியர் -தெய்வானை தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான நாகர்-செல்லாச்சி தம்பதியரின் மருமகனும், செல்லம்மாவின் பாசமிகு கணவரும், பேரானந்தம், கருனாநிதி, மகேந்திரன், சுகேந்திரன், இரவீந்திரன், யோகேந்திரன், மோகனாம்பாள் ஆகியோரின் அன்புத் தந்தையும், தசிதா, செல்வரதி, லதா, மஞ்சுளா, ஜெயந்தினி ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, முருகேசு மற்றும் சண்முகம், சின்னத்தம்பி, ஆறுமுகம் ஆகியோரின் சகோதரரும், பொன்னம்மா, சந்திரமலர், லிங்காதேவி, குனநாயகி ஆகியோரின் மைத்துனரும், நந்தினி, ராகினி, துஷ்யந்தன், விதுரன், வின்சிகா, மேசிகா, சோபிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி/2467)(9.14)

**தகவல்: யோகேந்திரன் (யோகன்- மகன்)**

0777350468

## மரண அறிவித்தல்

# சின்னத்தம்பி நடேசபிள்ளை

K.K.S. சீமெந்து கூட்டுத்தாபனம் முன்னாள் ஊழியர்



வீமன்காமம் நெசவுசாலை வீதி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கனடாவில் வசித்தவரும் தற்பொழுது சோடாக்கொம்பனி ஒழுங்கை, மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நடேசபிள்ளை கடந்த (28.11.2012) புதன்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி -தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் இரண்டாவது மகனும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை -பொன்னம்மா தம்பதியரின் ஆசை மருமகனும், காலஞ்சென்ற தவமணிதேவியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, நவரத்தினம் (சீ.கூ.தாபனம்) மற்றும் கமலாதேவி (தேவி), பாலசுந்தரம் (தேவன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பத்மினிகலா (கனடா), உதயகுமாரி (மல்லிகா), நுணாவில் சாந்தகுமாரி (சுமதி-சுவிஸ்) ரசந்தினி (மல்லாகம்) காலஞ்சென்ற நாகராசா மற்றும் குமுதினி (பிரான்ஸ்) பாமிதரன் (சுவிஸ்) அபாஸ்தரன் (கனடா) அமுதினி (கனடா) ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும், ஞானச்சந்திரன் (கனடா) கனகரத்தினம் (சுகீ உணவகம்- நுணாவில்), நந்தகுமார் (சுவிஸ்), நாகராசா (மல்லாகம்), உமாகரன் (சமாதானநீதவான் -கொழும்பு), றஞ்சினி (சுவிஸ்), கிஷோர் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் (அளவெட்டி) இராசேந்திரம் (கிளி) இருபாலை செர்க்கலிங்கம், சிவக்கொழுந்து மற்றும் வள்ளியம்மை, வசந்தமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பாக்கியம், கமலாதேவி ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும், சூரியா, சத்தியா, நிதிதரன் (கனடா) சுகுணா, கலையரசி, கலைச்செல்வி, கௌரிதரன், கீர்த்தனா, கௌரிசங்கர், கபில்ராஜ், சுகீதரன் (நுணாவில்) ஜெனிஷா, ஜெனிசாந், ஜெபீசனா (சுவிஸ்) கௌதமன் (ஏழாலை மகாவித்தியாலயம் A/L) கபிலன் (O/L யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை) ராகுலன், ரஜிந்தன் (பிரான்ஸ்), சஜித் (சுவிஸ்), கிசாந், அபிஷா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆர்யா, அருவி (கனடா) தர்மிலன், தர்மிகா, தருண், மிதுனன், மதனுஷா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2012) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக மாவிட்டபுரம் தச்சங்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

சோடா கொம்பனி ஒழுங்கை,
மல்லாகம். (26065)(9.14)

**தகவல்: மகன் பாமிதரன் (கனடா)**

## மரண அறிவித்தல்

# இந்திரன் இராகுலன்



குலானை கரவெட்டி மத்தி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இந்திரன் இராகுலன் நேற்று முன்தினம் (30.11.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னையா இந்திரன் (கஜமுகன் ஹாட்வெயார் உரிமையாளர்- நெல்லியடி) விமலராணி தம்பதியரின் பாசமிகு சிரேஷ்ட புதல்வனும், கிருஷா, கோகுலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், குலசிங்கம் -ஜீவதாஸ் (பிரான்ஸ்) அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரூண்டை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி/3156)(9.14)

**தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியூஸ்ரார் வெற்றிக்கிண்ண

# இறுதியாட்டம் இன்று



யாழ்ப்பாணம்,டிசெ2

கலட்டி நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் 20/20 கிரிக்கெட்ட சுற்றுப் போட்டி தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொக்குவில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இந்த நிகழ்வுக்கு பிரம விருந்தினராக யாழ்.மாநகரச சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா மற்றும் சிறப்பு விருந்தினராக யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் சிகேரா, யாழ். இந்துக் கல்லூரி அதிபர் கே.கணேசராசா , கிருபா லேணர்ஸ் உரிமையாளர் கிருபாகரன், லவஸ் கோணர் உரிமையாளர் பிரசன்னா,ராஜா கிறீம் ஹவுஸ் முகாமையாளர் சண்முகானந்தன் கிறிடீஸ் ஹோட்டல் முகாமையாளர் கண்ணன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (த-23)

# சென்.ஜோன்ஸ் ஆசிரியர் அணி வெற்றி

யாழ்ப்பாணம்,டிசெ.2

சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் அணிக்கும் யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் அணிக்கும் இடையிலான நட்பு ரீதியிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கடந்த புதன்கிழமை சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. முதல்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் எப்படியாவது தமது அணிக்கான கோல்களை போட வேண்டும் என்று தமது ஆட்டத்தின் வேகத்தினை அதிகரித்து எதிர் அணியினுடைய கோல் பரப்பை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர். ஆனால் இரு அணிகளாலும் தமது அணிக்காக எந்தவித கோல்களையும் பெறமுடியவில்லை. இதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரு அணிகளும் தமது ஆட்டத்தை துரிதப்படுத்திக் கொண்டனர். இரண்டாம் பாதியாட்டத்தின் போது 5 நிமிடத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் அணி சார்பில் வினோத் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தினை சரியான முறையில் பயன்படுத்தி முதலாவது கோலை அடித்தார் .இதனைத் தொடர்ந்து 8 நிமிடத்தில் எடிசன் தனது இரண்டாவது கோலை அடித்தார்.

இதனால் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது 10 நிமிடத்தில் யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் அணி சார்பில் கமல் தனது அணியினுடைய முதலாவது கோலை அடித்தார். ஆட்டம் முடிவடைவதற்கு 5 நிமிடங்கள் இருக்கையில் சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் அணி சார்பில் மீண்டும் வினோத் மூன்றாவது கோலை அடித்தார். ஆட்ட நேர முடிவில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியினர் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றனர்.

(த-23)

## ஜெகநாதன் வெற்றிக் கிண்ண கரப்பந்து
# மின்னொளியில் இன்று மோதல்

யாழ்ப்பாணம்,டிசெ 2

கோட்டைக்காடு மல்லாகம் ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் முத்துலிங்கம் ஜெகநாதனின் 23 ஆவது ஆண்டு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை கோட்டைக்காடு மல்லாகம் ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இரவு 7 மணியளவில் இறுதியாட்டம் இடம்பெறுவுள்ளது.

இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் அணி மோதவுள்ளது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி 'ஏ' அணி மோதவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவர் கே.மனோகரனும் சிறப்பு விருந்தினராக வலி.தெற்கு பிரதேச சபை தவிசாளர் பிரகாஸும்,கௌரவ விருந்தினர்களாக மல்லாகம் ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் ஆலோசகர் ஐ.சந்திரலிங்கம்,சைவ வாலிபர் சங்க சனசமூக நிலையத்தின் செயலாளர் இன்பராசா, ஸ்ரீமுருகனர், விளையாட்டுக் கழகத்தின் வீரன் புனிதராஜா, சைவ வாலிப சங்க சனசமூக நிலையத்தின் முன்னாள் தலைவர் சு.சிவேந்திரன். அமரர் ஜெகநாதனின் சகோதரர்களான மு.குகநாதன், மு.சிவானந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (த-23)

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை

இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 22, 23 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

தரம் I, தரம் II, தரம் III மத்தியஸ்தர்களை தெரிவு செய்வதற்கான பரீட்சைகள் நடைபெறவுள்ளன. இதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களின் மத்தியஸ்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (23)

# பொற்பதியை வென்றது யூனியன் அணி

யாழ்ப்பாணம்,டி.செ.2

யாழ். உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவ கழகங்களுக்கிடையே நடத்தி வரும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரை குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்தி வருகின்றது. நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் யூனியன் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது.

ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொக்குவில் பொற்பதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதற்பாதியாட்டம் ஆரம்பமான போது இரு அணியினரும் மிகுந்த உற்சாகத்தோடு விளையாடத் தொடங்கினர் , போட்டி ஆரம்பத்திலேயே சூடு பிடிக்கத் தொடங்கியது. இதன் போது ஆனைக்கோட்டை யூனியன் அணி வீரன் ஸ்ரீபன் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி முதலாவது கோலை அடித்தார்.

ஆனால் பொற்பதி அணி தாமும் சளைத்தவர்கள் இல்லை என்பதை நிரூபிக்கும் வகையில் எதிர் அணியுடைய கோல்ப்பரப்பை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர். எனினும் அவர்களால் எந்தவித கோல்களையும் பெற முடியவில்லை ஆனைக்கோட்டை யூனியன் அணி வீரன் கனிஸ்ரன் இரண்டாவது கோலினை அடித்தார். இடைவேளைக்காக ஆட்டம் இடைநிறுத்தப்பட்ட போது ஆனைக் கோட்டையூனியன் 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமான போது பொற்பதி விளையாட்டுக்கழக அணியினர் எப்படியாவது கோல்களை அடித்து விட வேண்டுமென்ற எண்ணத்துடன் விளையாடி களமிறங்கி விறுவிறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

ஆனைக்கோட்டை யூனியன் அணி வீரன் ஸ்ரீபன் இந்த நேரத்தில் மூன்றாவது கோலினை அடித்தார்.

ஆட்டம் முடிவடைவதற்கு சில நிமிடங்கள் இருக்கையில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி வீரன் நிரோஷன் தனது அணிக்கான நான்காவது கோலினைப் போட்டார்.

ஆட்ட முடிவில் ஆனைக் கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி வாகை சூடியது. (த-23)

# இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம்,டிசெ 2

யாழ்.உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கிடையே 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை குருநகர் பாடும்மீன் மைதானத்தில் நடத்தி வருகின்றது. இன்று ஞாயிற்றுக் கிழமை பி.ப. 3.45 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

★ ★ ★

வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலைளுக்கிடையிலான 14, 16 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் 2 ஆம் கட்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், இமையாணன் அ.த.க. பாடசாலை ஆகிய மைதானங்களில் இடம்பெறவுள்ள போட்டிகளில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

**14 வயது பிரிவு**

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானம்

**காலை 8 மணி**

★ தேவரையாளி இந்துக் கல்லூரி எதிர் உடுத்துறை மகாவித்தியாலயம்

★தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம் எதிர் அல்வாய் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை

**பி.ப 2 மணி**

★பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி எதிர் மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை

★ நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் எதிர் கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை

**16 வயதுப் பிரிவு**

இமையாணன் அ.த.க பாடசாலை மைதானம்

**காலை 8 மணிக்கு**

★நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் எதிர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

★தேவரையாளி இந்துக் கல்லூரி எதிர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி

**பி.ப 2 மணிக்கு**

★ உடுத்துறை மகாவித்தியாலயம் எதிர் அல்வாய் றோ.க.த.க. பாடசாலை

★ கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி எதிர் மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை (த-23)

# கரப்பந்தில் கலைமதி பூமாவை வீழ்த்தியது

யாழ்ப்பாணம், டிசெ 2

கோட்டைக்காடு மல்லாகம் ஸ்ரீமுருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம் முத்துலிங்கம் ஜெகநாதனின் 23 ஆவது ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரை நடத்தி வருகிறது. இந்தத் தொடரில் நடைபெற்ற போட்டியொன்றில் புத்தூர் கலைமதி 'ஏ' அணி வெற்றிபெற்றது.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் புத்தூர் கலைமதி 'ஏ' அணியை எதிர்த்து தெல்லிப்பழை பூமா விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் ஆரம்பத்தில் இருந்து இறுதிவரை புத்தூர் கலைமதி 'ஏ' அணியின் கையே ஓங்கியிருந்தது. தெல்லிப்பழை பூமா விளையாட்டுக் கழகம் பதிலடி கொடுக்க முனைந்தாலும், அதனைச் சமாளித்து புள்ளிகளை கலைமதி அணி தொடர்ச்சியாகக் குவித்தது. முதலாவது செற்றில் ஓரளவுக்கு போட்டித் தன்மையை வழங்கிய பூமா அணி, இரண்டாவது செற்றில் சோர்ந்து போனது.

இதனால் ஆட்ட நேர நிறைவில் 25:16, 25:10 என்ற நேர் செற்கணக்கில் தெல்லிப்பழை பூமா விளையாட்டுக் கழக அணியை வீழ்த்தி புத்தூர் கலைமதி 'ஏ' அணி சுலபமாக வெற்றியீட்டியது.

(ங-23)

## யாழ்.கிரிக்கெட் அபிவிருத்திக்கு ஸ்ரீ லங்கா கிரிக்கெட் நிதியுதவி

யாழ்ப்பாணம்,டிசெ 2

'ஸ்ரீ லங்கா கிரிக்கெட் ' அமைப்பால், யாழ்.மாவட்ட கிரிக்கெட் அபிவிருத்திக்கென 5 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியிலிருந்து வடமராட்சி கிரிக்கெட் வீரர்கள் நன்மைகருதி கழுகு விளையாட்டு மைதானத்தில் 2 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா செலவில் புதிதாக வலைப் பயிற்சி ஆடு திடல் ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது.

அத்தோடு 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவுக்கு யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்துக்கென கிரிக்கெட் கயிற்றுப் பாய்(மற்றிங்) கொள்வனவு செய்யப்படவுள்ளது எனவும் யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கம் தெரிவித்துள்ளது. (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபிரிக்காவின் ஆதிக்கத்தில் ஆட்டம்



ஸ்மித்

ஆஸ்திரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான 3 டெஸ்ட் போட்டி கொண்ட தொடரின் 3 ஆவதும் இறுதியுமான ஆட்டத்தின் இரண்டாம் நாள் முடிவில் ஆட்டம் தென்னாபிரிக்க அணியின் முழுமையான ஆதிக்கத்தில் காணப் படுகிறது.

தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் பெற்றுக் கொண்ட 225 ஓட்டங்களுக்குப் பதிலளித்தாட ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணி நேற்றுமுன்தினம் ஆட்ட நேரநிறைவில் 2 இலக்குகளை இழந்து 33 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்த நிலையில்நேற்று தொடர்ந்து ஆடிய அந்த அணி 163 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது.

ஒரு கட்டத்தில் 6 இலக்குகளை இழந்து 45 ஓட்டங்களைப் பெற்றிருந்த அந்த அணி, அதன் பின்னர் கீழ்வரிசை வீரர்களின் துணையோடு ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சார்பாக மத்தியூ வேட் 68 ஓட்டங்களையும், ஜோன் ஹாஸ்டிங்ஸ் 32 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஸ்ரெய்ன் 4, ரொபின் பீற்றர்சன் 3, வேர்ணன் பிலாந்தர் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

அதன் பின்னர் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி நேற்றைய நாள் முடிவில் 2 இலக்குகளை இழந்து 230 ஓட்டங்களைக் குவித்துப் பலமான நிலையில் காணப்படுகிறது. தற்போதைய நிலையில் அந்த அணி 292 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஹசிம் அம்லா ஆட்டமிழக்காமல் 99 ஓட்டங்களையும், ஸ்மித் 84 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக மிற்சல் ஸ்ரார்க், மிற்சல் ஜோன்சன் ஆகியோர் தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினர். (5)



பொண்டிங்

# 'பீபா வீரர்' இறுதிக்களத்தில் மெஸ்ஸி

சர்வதேச உதைபந்து சம்மேளனம் (பீபா) ஆண்டுதோறும் உலகின் சிறந்த வீரரை தேர்ந்தெடுத்து விருது வழங்கிக் கௌரவித்து வருகிறது.

இதன்படி இந்த ஆண்டுக்கான விருதுக்கான போட்டியில் மொத்தம் 23 பேர் இருந்தனர். அதில் இருந்து 3 பேர் இறுதி சுற்றுக்கு தெரிவாகி உள்ளனர்.

ஆர்ஜென்டினா அணியின் அணித்தலைவர் லயோனல் மெஸ்சி, போர்த்துக்கல் நட்சத்திர வீரர் கிறிஸ்டியனோ ரொனால்டோ, ஸ்பெயின் முன்னணி வீரர் அண்ட்ரஸ் இனியஸ்டா ஆகிய மூன்று பேர் மட்டும் 'பீபா' சிறந்த வீரர் விருதுக்கான இறுதி களத்தில் உள்ளனர். இவர்களில் ஒருவருக்கு இந்த விருது கிடைக்கும்.

சர்வதேச அணிகளின் பயிற்சியாளர்கள், அணித்தலைவர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் வாக்களித்து சிறந்த வீரரை தேர்ந்தெடுப்பார்கள். விருதுக்குரியவர் யார்? என்பது ஜனவரி 7 ஆம் திகதி சுவிட்சர்லாந்தில் அறிவிக்கப்படும்.

இந்த விருது மெஸ்சிக்கே கிடைக்க அதிக வாய்ப்பு உள்ளது. பார்சிலோனா கழகத்துக்கா விளையாடி வரும் 25 வயதான மெஸ்சி ஏற்கனவே மூன்று முறை இந்த விருதினை பெற்றுள்ளார்.

இந்த முறையும் தெரிவானால், 4 தடவை இந்த விருதை பெற்ற முதல் வீரர் என்ற சிறப்பை பெறுவார். (5)

# இந்தியாவுக்கு டிராவிட் ஆஸிக்கு. பொண்டிங்




இந்திய அணிக்கு ராகுல் டிராவிட் எவ்வாறோ, ஆஸ்திரேலிய அணிக்கு றிக்கி பொண்டிங் அவ்வாறு காணப்பட்டதாக இந்திய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ளே தெரிவித்துள்ளார்.

ஓய்வை அறிவித்துள்ள றிக்கி பொண்டிங் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

167 டெஸ்ட் போட்டியில் பங்கு பற்றிய றிக்கி பொண்டிங், நேற்று முன்தினம் ஆரம்பித்த பேர்த் டெஸ்ட் ஆட்டத்துடன் சர்வதேசப் போட்டியிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள அனில் கும்ளே, றிக்கி பொண்டிங்கை மிகச்சிறந்த வீரர் என்று அழைத்ததோடு, இந்திய அணிக்கு டிராவிட் எவ்வாறு மூன்றாம் இலக்கத்தில் களமிறங்கி இந்திய அணியை நிலைப்படுத்தினாரோ அதேபோல் ஆஸ்திரேலிய அணியில் ஒரு சமநிலையை றிக்கி பொண்டிங் ஏற்படுத்தியதாக அனில் கும்ப்ளே தெரிவித்துள்ளார்.

றிக்கி பொண்டிங்கின் துடுப்பாட்டத்தின் முக்கியமானதாக அவர் தனது துடுப்பாட்டத்தின் அத்தனை நேரங்களிலும் நேர்முக எண்ணங்களுடனேயே அவர் காணப்பட்டதாகத் தெரிவித்த அனில் கும்ளே, றிக்கி பொண்டிங் மிகச்சிறந்த அணித்தலைவர் எனவும் தெரிவித்தார்.

அணித்தலைவராக அவர் எப்போதும் சிறப்பானவராகக் காணப்பட்டார். அவரின் கீழ் மிகச்சிறந்த ஆஸ்திரேலிய அணி காணப்பட்டதாகவும், அதைப்போலவே அணியின் வெற்றிகளும் தொடர்ந்ததாகவும், ஆனால் ஆஸ்திரேலியாவின் சாதனை வீரர்கள் ஓய்வுபெற்ற பின்பும் அணித்தலைவராக தனது பாணியை அவர் மாற்றிக் கொண்டிருக்கவில்லை எனத் தெரிவித்தார். (5)

# பிளின்டொப் குத்துச்சண்டை களத்தில்



இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் அண்ட்ரு பிளின் டொப் 2009 ஆம் ஆண்டு சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வு பெற்றார்.

சகலதுறை வீரரான பிளின்டொப் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக ஓவல் மைதானத்தில் 2009 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடந்த போட்டியில் ஆடியதே கடைசி டெஸ்ட் ஆகும்.


ஓய்வு பெற்ற வீரர்கள் பெரும்பாலும் பயிற்சியாளர்கள், தொலைக்காட்சி வர்ணையாளர்களாக அல்லது கிரிக்கெட் சம்பந்தமான நிர்வாகங்களில் ஈடுபடுவார்கள்.

ஆனால் பிளின்டொப் தொழில் ரீதியான குத்துச்சண்டை வீரராக முற்றிலும் மாறினார். 34 வயதான பிளின்டொப் மோதிய முதல் குத்துச்சண்டை போட்டி மான்செஸ்டரில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

'ஹெவி வெயிட்' பிரிவுக்கான இந்தப்போட்டியில் அவர் அமெரிக்காவை சேர்ந்த ரிச்சர்டு டாசனை எதிர் கொண்டார்.

4 சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் அவர் இரண்டாவது சுற்றிலேயே 'நொக்அவுட்' செய்தார். பிளின்டொப் 39-38 என்ற கணக்கில் தனது முதல் போட்டியிலேயே வெற்றியைப் பதிவு செய்தார்.

இது குறித்து பிளின் டொப் கூறுகையில், முதல் போட்டியிலேயே வெற்றி பெற்றது மகிழ்ச்சி அளிக்கிறது. ரசிகர்களின் ஆதரவால்தான் என்னால் வெற்றி பெற முடிந்தது என்றார். (5)



# டெஸ்ட் ஆட்டங்களே கிரிக்கெட்டின் முதுகெலும்பு

டெஸ்ட் போட்டியே கிரிக்கெட்டின் பிரதான வகையாக காணப்படுவதாக ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரும், நேர்முக வர்ணனையாளருமான ஷேன் வோர்ண் தெரிவித்துள்ளார். அத்தோடு வீரர்களும் அதை ஏற்றுக் கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆர்வம், குறைவடைந்து வருவதாக பொதுவான கருத்து நிலவுகின்ற போதிலும், நான் அவ்வாறு எண்ணவில்லை.

வேறு எல்லாவற்றையும் விட கடந்த 12 மாதங்களில் டெஸ்ட் போட்டியை எடுத்து பார்த்தால் அவை மிகுந்த சுவாரசிமானவையாக காணப்பட்டதாக தெரிவித்த அவர், டெஸ்ட் போட்டி சரியான முறையில் இடம்பெறுவதாக தெரிவித்துள்ளார்.

அனைவரும் டெஸ்ட் போட்டியை காப்பாற்ற விரும்புவதாகவும், டெஸ்ட் போட்டி தொடர்பாக ஏதாவது செய்யப்பட வேண்டும் என்று எண்ணுவதாகவும் தெரிவித்த ஷேன் வோர்ண், அது நகைச்சுவையானது எனவும் தெரிவித்தார்.

தன்னை பொறுத்தவரை டெஸ்ட் போட்டி சிறப்பான நிலையில் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். அத்தோடு டெஸ்ட் கிரிக்கெட் என்பதே முதற்தரமான போட்டி அது எப்போதுமே அவ்வாறே காணப்படும்.

'ரி-20' போட்டி விரைவான முடிவைப் பெறவிருப்பவர்களுக்கானது. டெஸ்ட் போட்டிக்கும், 'ரி-20' போட்டிக்கும் போதுமான இடம் கிரிக்கெட் உலகில் காணப்படுவதாகவும், ஒரு நாள் சர்வதேச போட்டியே ஆபத்தில் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். (5)

# மைதானப் பராமரிப்பாளர் மருத்துவ விடுப்பில்

இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும், இந்திய அணிக்குமிடையிலான 4 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரின் 3 ஆவது ஆட்டம் எதிர்வரும் 5 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள நிலையில் அந்த மைதானத்தின் ஆடுகளப் பராமரிப்பாளர் ஒரு மாதகால மருத்துவ விடுப்பில் சென்றுள்ளார்.

ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் இடம் பெறவுள்ள நிலையில் அந்த ஆட்டத்துக்கான ஆடுகளத்தை உருவாக்குவது குறித்து எழுந்த குழப்பங்கள் காரணமாகவே அந்த மைதானத்தின் ஆடுகளப் பராமரிப்பாளர் பிரபீர் முகர்ஜி ஒரு மாதகால விடுப்பில் சென்றுள்ளார்.


இந்திய அணி இந்தியாவில் பங்குபற்றும் டெஸ்ட் போட்டிக்கான ஆடுகளங்கள் முதல் நாளிலிருந்தே அதிக சுழற்சியையும், பௌண்ஸையும் வழங்க வேண்டும் என்ற இந்திய அணித்தலைவர் மகேந்திரசிங் டோனியின் கோரிக்கை தொடர்பாக எழுந்த குழப்பங்களின் தொடர்ச்சியாகவே பிரபீர் முகர்ஜி ஒரு மாதகால விடுப்பில் சென்றுள்ளார்.

3 ஆவது ஆட்டத்துக்கான ஆடுகளத்தை [illegible] போல் உருவாக்க முடியாது என்று பிரபீர் முகர்ஜி தெரிவித்ததோடு, ஆடுகளத்தில் அவ்வாறான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமாயின் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் எழுத்துமூலக் கோரிக்கையைச் சமர்ப்பிக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

பிரபீர் முகர்ஜியின் விடாப்பிடியான கருத்தையடுத்து ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் 3 ஆவது ஆட்டத்துக்கான ஆடுகளத்தை உருவாக்குவதில் பிரபீர் முகர்ஜிற்கு உதவுவதற்காக எனத் தெரிவித்து இன்னுமொரு ஆடுகளப் பராமரிப்பாளரை இந்தியக் கிரிக்கெட் சபை நியமித்தது.

இந்த நிலையில் 13 வருடகாலமாக ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் ஆடுகளப் பராமரிப்பில் ஈடுபட்டுவரும் தான் தொடர்ந்தும் அவமானப்படுத்தப்படுவதாகவும், ஆடுகளத்தின் தன்மையை ஒரு சில நாள்களில் உடனடியாக மாற்ற முடியாது எனவும், டோனியின் கோரிக்கைகள் நியாயமற்றவை எனவும் தெரிவித்த பிரபீர் முகர்ஜி, இந்த அழுத்தங்கள் காரணமாக தனக்கு உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ளதாகவும், வைத்தியரின் அறிவுறுத்தலின் படி ஒரு மாதகால விடுப்பில் செல்லவுள்ளதாகவும் அறிவித்துள்ளார். (5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





மன்னார் அடம்பன் ம.ம.வித்தியாலயத்தில் இடம்பெற்ற ஒளிவிழா நிகழ்வின்போது எழுத்தூர் பங்குத் தந்தை, நட்டாங்கண்டல் பங்குத் தந்தை, பாடசாலை அதிபர் ஆகியோர் வரவேற்கப்படுவதுடன் இறை கீதமும் இசைக்கப்படுகின்றது. (க)



வாழைப் பயிர்ச் செய்கையில் சிறந்து விளங்கும் கிளிநொச்சி மாவட்டம் முழங்காவில் பகுதியில் நடுகை செய்யப் படுவதற்கென எடுத்துச் செல்லப்படும் வாழைக்குட்டிகள். (க-18)




பகலில் சந்தையாகவும், இரவில் கால்நடைகளின் தங்கு மிடமாகவும் மாறிவரும் சுற்றுவேலிகள் அமைக்கப்படாத பாண்டியன்குளம் பொதுச் சந்தை. (க-415)





கரைச்சிப் பிரதேச பண்பாட்டு விழாவுக்கு வருகை தந்த விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றனர். விழாவில் கௌரவிக்கப்பட்ட பிரமுகர்களும், கலைஞர்களும் விருந்தினர்களுடன் காணப்படுகின்றனர். (க-9)



ஜெயபுரம் மகா வித்தியாலயத்துக்கென 'யுனிசெப்' நிறுவனத்தால் புதிய கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன. (க 18)



மல்லாவி ஸ்ரீ பாலசுப்பிரமணியர் ஆலயத்தில் சூரன்போர் நிகழ்வு பக்திபூர்வமாக நடைபெற்றது. (415)



பூநகரி நாச்சிக்குடா பிரதான வீதியில் புனரமைப்புப் பணிகளுக்கென பரவப்பட்ட சல்லிக் கற்கள் பயணிகளின் போக்கு வரத்துக்கு இடையூறாக விளங்குகின்றன. (க 18)



அம்பலப்பெருமாள் குளத்தின் வான்பகுதி தற்போது வாகனங்களைக் கழுவிச் சுத்தம் செய்யப்படும் இடமாக மாறிக் காணப் படுகின்றது. (க 18)



செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற சீ.பி.ஆர். செயலமர்வின்போது சமூக சேவைகள் உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன் விளக்கம் அளிக்கின்றார். (க-400)



மல்லாவி நகரப் பகுதியில் அமைந்துள்ள 7ஆவது ஒழுங்கை மக்களின் பாவனைக்கு உதவாத நிலையில் மோசமாகக் காணப்படுகின்றது. (க-415)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 100 நபர்களுக்கான உடனடி வேலைவாய்ப்பு

**DREAMS GLOBAL WORKERS HELPING CENTRE (PVT) Ltd.**

நிறுவனத்துக்கு தென்மராட்சி வலயத்தைச் சேர்ந்த 100 நபர்களுக்கு உடனடி வேலைவாய்ப்பு உண்டு.
வேலைக்குரிய நேர்முகத்தேர்வு
03.12.2012 திங்கட்கிழமையும், 04.12.2012 செவ்வாய்க்கிழமையும் காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

தகைமைகள்
* O/L, A/L சித்தி, * தொழில்நுட்ப கணினி அறிவு (IT Courses)

நேர்முக தேர்வு நடைபெறும் இடம் : நீதிமன்றத்துக்கு அருகில், ஸ்ரேசன் றோட், சாவகச்சேரி.
தொடர்புகளுக்கு: 0778759672, 0776534514.
(25525)(3.14)

advt@uthayan.com
0215671111

## தேவை

மருந்தகம் ஒன்றுக்கு மருந்தாளர்
தேவை
தொடர்பு-0777526066
(25970)(14)

## மாபிள் பதித்தல்

10 வருடங்கள் மத்திய கிழக்கு நாட்டில் வேலை செய்தவர்களால், டோகா அரசாங்கத்தினால் பாராட்டுப் பெற்றவர்களால் உங்கள் விருப்பத்துக்கு ஏற்றவகையில் குறுகிய காலத்தில் மாபிள் வேலை செய்துதரப்படும்.
தொடர்பு: பாபு, 0773824871
(18064)(3.14)

## வீனஸ் பாம்

உள்ளூரில் வளர்க்கப்பட்ட புறொயிலர் இறைச்சிக் கோழிகளை விரும்பிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம்
உயிருடன்நிறை 1 kg 300
சுத்தம் செய்தது 1 kg 460

வீனஸ்பாம், கலாசாலை வீதி, (முத்துத்தம்பி மகா வித்தியாலய வடக்கு வீதி,) திருநெல்வேலி.
வீனஸ் பாம், அரசடிவீதி, தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம்.

## அன்பொளி கல்வியகம்

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை
மைதானவீதி, யாழ்ப்பாணம்.
புதிய கல்வியாண்டு-2013இல் தரம்2,தரம்3 வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. அனுமதிகளை 02.12.2012 இல் இருந்து பெற்றுக் கொள்ளவும்.
(நேரம் பி.ப.3.00-பி.ப.5.00மணிவரை)
(c/3159)(14)
இயக்குநர்

## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
**S.N. குமாரசாமி**
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா?வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?
எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)
பீப்பில்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691
(20772)(15.14)

## வெளிநாடு செல்வதற்கு கட்டாயம் சித்தியடைந்திருக்க வேண்டிய ஆங்கிலப் பரீட்சையான (IELTS) உரிய வகுப்புக்களை ஆஸ்திரேலியப் பிரஜையிடம் கற்கக்கூடிய அரிய வாய்ப்பு

பௌத்த மதகுரு
அதிவண. மைக்கேல்
(Brisbare,Queensland, Australia)



* 15 மாணவர்கள் மட்டும் சேர்த்துக் கொள்ளப்படுவர்
* தனிப்பட்ட, பிரத்தியேகமான கவனிப்பு
* எம்மிடம் கல்விகற்கும் மாணவர்களுக்கு Student Visa விற்கு 25% கட்டணச்சலுகை.

திசைகாட்டி பிறைவேற் லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0212219016



(25826)(3.14)




**WINRICH INTERNATIONAL (PVT) LTD**
(Member of Pluss int.)
No. 18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03, Sri Lanka.

## விற்பனைக்கு

மாருதி 800cc கார்
(விலை 11 இலட்சம்),
Hero Honda pleasur
(கறுப்பு பிளசர்)
விற்பனைக்குண்டு.
175 பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி
யாழ்ப்பாணம்.
(25900)

## வேலையாள்கள் தேவை

திருகோணமலையிலுள்ள Guest House ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை.
- Room Boy
- தோட்டப்பராமரிப்பாளர்
- சமையல்காரர்

தொடர்பு-
0778111720,
0776912278
(25983)(14)

## ஆனை முகன் ஆலை
(இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக)

காய்ந்த கொப்பறா வெட்டி அரைத்து எண்ணெய்யாக்கி கொடுக்கப்படும்.
1 கிலோவுக்கு 30/= மட்டுமே.
(இரண்டு கிலோவில் இருந்து எடுக்கப்படும்.)
சகல விதமான தானிய வகைகளும் அரைத்துக் கொடுக்கப்படும்.
(வெள்ளிக்கிழமை தவிர ஏனைய நாள்களில் திறந்திருக்கும்)
தொடர்பு: 0776081693
K.K.S வீதி, இணுவில்.
(25892)(3.14)

## விற்பனைக்கு

இரண்டு மாதங்கள் மட்டுமே பயன்படுத்திய உடற்பயிற்சி இயந்திரம் ஒன்று குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:0779550363
(25923)

## German Swiss மொழிவகுப்புகள்

தமிழ் மொழி பெயர்ப்புடன் 05.12.2012 அன்று அடுத்த புதிய வகுப்புக்கள் ஆரம்பம். கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் கடந்த 5 வருடமாக நடைபெறுகின்றது.
தொடர்பு:
10 Palaly Road, Jaffna. (ஆரிய குளத்துக்கு அருகில்)
German Institute
Miss. Kajenthini 0771604823
(25257)(3.14)

## BRITISH COLLEGE OF LANGUAGE LEARNING

வடமராட்சியில்..........
* வளமான வடமராட்சியில் வாழ்த்துக்களுடனும் வரவேற்புடனும் தன்கால் பதிக்கிறது BCLL
* யாழ்.மண்ணில் வேரூன்றிய எம் தனித்துவமான கல்லூரி
* வடமராட்சி மண் பிறந்த வளமானவர்களின் வளவாளர் தேவை அறிந்து தன் மொழிவிருத்திச் சேவையினை விஸ்தரிப்பதில் பெருமையடைகிறது. எம் கல்லூரியில் பயன்பெற்று வளம் பெற்றுச் சென்ற ஆளுமை மிக்கோரின் பிரதேச ஆதரவுடன் ஆங்கிலப் புலமையை மெருகூட்ட வருகின்றோம். மெருகூட்டப்பட்ட எங்கும் கண்டிராத கற்பித்தல் முறைகளில்

* Fundamental English
* Absolute Spoken
* Advanced Diploma in English
* IELTS, $A_1$,$B_1$ வகுப்புக்கள்
மற்றும் விசேடமாக

தற்போது யாழிலும் நெல்லியடியிலும்

BEd.கற்கும் ஆசிரியர்களுக்கான மற்றும் 2014 இல் O/Lபரீட்சையில் Spoken English அரச பரீட்சைக்குத் தோற்றவுள்ள (தற்போது தரம் -9) மாணவர்களுக்கான பிரிவுகளும் ஆரம்பமாகின்றன. இவற்றுடன் பிரெஞ்,ஜேர்மன், சிங்கள மொழி வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
இணைவு -French Language Centre.

'பொய்யான விளம்பரத்திலல்ல எமது வெற்றி மெய்யான பயனாளர்களே எமது சக்தி'

எமது நிலையான சேவைகள்............
புதிய பிரிவுகள் 09.12.2012

யாழ்ப்பாணம் BCLL பலாலி வீதி, [Appolo Hospital முன்பாக]
021 373 4121, 077 132 7818
நெல்லியடி BCLL 181,முதல்மாடி, நெல்லியடி யாழ் பிரதான வீதி.
(F/3117)(5.6)

## ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா

* 2 வருடத்தில் நிரந்தரக் குடியுரிமை பெற சட்டரீதியான அருகதை
* குழந்தைகளின் கல்விக்கான ஆலோசனை
* வேலைவாய்ப்புக்கான ஆலோசனை
* கணவன் அல்லது மனைவி 54 வயதுக்குட்பட்டவர்கள்
* இறுதிநாள் 15.12.2012

ஆஸ்திரேலியா விசா ஆலோசனைத்துறையில் தனித்துவமான பல வித வெற்றிகளைச் சந்தித்த நிறுவனம் நாங்கள் மட்டுமே

## நியூஸிலாந்து குடும்ப விசா

* கணவன் அல்லது மனைவி பட்டதாரி அல்லது டிப்புளோமாதாரிகள்
* ஆங்கிலமொழி மூலம் பட்டப்படிப்பை மேற்கொண்டிருந்தால் IELTS தேவையில்லை அன்றேல் 5.5 புள்ளிகள் ACADEMIC அவசியம்
* 10 இலட்சம் வங்கி அனுசரணை போதுமானது.

## நியூஸிலாந்து STUDENT VISA

* 24 வயதுக்குட்பட்ட இளைஞர், யுவதிகள்
* IELTS 5.5 புள்ளிகள் அவசியம்
* வேறு ஒருவரின் வங்கி வைப்பை அனுசரணையாகக் காட்டக் கூடிய வாய்ப்பு
* 2 வருடங்களில் PR பெறலாம்
* சர்வதேச தரத்திலான கல்வி

## சைப்பிரஸ் ஐரோப்பிய நாடு

* மாதந்தம் பகுதிநேர தொழில் வாய்ப்பின் மூலம் 100000.00 வரை சம்பாதிக்கலாம்.
வங்கி அனுசரணை எதுவும் தேவையில்லை

## மலேசியாவில் மாதாந்தம் ரூபா 30000/= வேதனத்துடன் STUDENT VISA

* உணவு இருப்பிடம் இலவசம்

## VISIT VISA, SPONSOR

* எல்லா நாடுகளுக்கும் VISITA VISA, SPONSOR ஆலோசனைகள்
* எல்லா விதமான விசா ஆலோசனையுடன் சிங்கப்பூர் சென்றுவர இலவசமான ரிக்கெற்.
(நிபந்தனைகளுக்கு அமைவாக)

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் (PV82703)**
**முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்**
**175, பருத்தித்துறை வீதி,**
**ஆனைப்பந்தி,**
**யாழ்ப்பாணம்.**
**0212219016**



(25913)(3.14)

## இலவச அழகுக்கலை பயிற்சி



அன்பார்ந்த யாழ். பொதுமக்களே! இதோ மீண்டும் உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.
ஒறிபிளேம சுவீடன் நாட்டு நிறுவனம் மீண்டும் தமது அழகுக்கலை பயிற்சியை ஆரம்பிக்கவுள்ளது.
கீழ்வரும் திகதியில் அறிமுக வகுப்பில் கலந்து கொண்டு மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.
முக்கிய குறிப்பு: அன்றைய தினம் புதிய இரு நண்பர்களை அழைத்து வருபவருக்கு பரிசு காத்திருக்கிறது.

காலம்: 04.12.2012
நேரம்: 10.00am
இடம்: 187/30 யூனியன் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சத்திரசந்தி அருகில் கொட்டடி வீதி)

அனுமதி முற்றிலும் இலவசம்

* நிபந்தனைக்கு உட்பட்டது. தொடர்புகளுக்கு: 0772288243 / 0771336124 / 0770784428 / 0215888000 - 1
(25980)(3.14)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

www.mobitel.lk



தேசத்தின் அபிவிருத்திக்காக பாடுபட்டு சேவை புரியும்
அரச ஊழியர்களான உங்களுக்காக
மொபிடெல் வழங்கும் உபஹார இன்டர்நெட்

5GB தரவுப் பொதி* இலவசம்

அரச ஊழியர்களான தற்போதைய உபஹார பாவனையாளர்களுக்கு டொங்கல் இலவசம்


இவ் அனுகூலங்களுக்கான மாதாந்தக் கட்டணம் ரூ.299/- மட்டுமே
இணைப்புக் கட்டணம் ரூ.1000/-

*நள்ளிரவு 12.00 மணி முதல் காலை 9.00 மணி வரை : 3GB
காலை 9.00 மணி முதல் நள்ளிரவு 12.00 மணி வரை : 2GB

உபஹார இன்டர்நெட்

Sri Lanka Telecom Mobitel

1717





Australian Government

அவுஸ்திரேலியாவுக்கு வீசா இல்லாமல் படகுமூலம் நீங்கள் பயணம் செய்தால்

- உங்களது விண்ணப்பம் அவுஸ்திரேலியாவில் பரிசீலிக்கப்படாது போகலாம்.
- எனவே, நீங்கள் நவுறு, பப்புவா நியூகினி போன்ற வேறொரு நாட்டிற்கு இடமாற்றம் செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம்.
- இலங்கையிலுள்ள உங்களது குடும்பத்தினருக்கு அனுப்பவென நவுறுவிலோ அல்லது பப்புவா நியூகினியிலோ நீங்கள் பணத்தைச் சம்பாதிக்க முடியாது.
- விசேட மனிதாபிமான திட்டத்தின் அடிப்படையில் உங்களது குடும்பத்தை உங்களுடன் இணைத்துக்கொள்ளவென உங்களால் விண்ணப்பிக்க முடியாது.


மேலதிகத் தகவல்களை www.youtube.com/user/notopeoplesmuggling என்ற முகவரியில் 'ஆட்கடத்தலுக்கு மறுப்பு' என்ற யூ டியூப் அலைவரிசை மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

# சலிப்பு வேண்டாம் வரட்சியான சருமம் உங்களது இனிய நாளைப் பாழாக்கிவிடும்!


## புதுப்பொலிவுடனான, மென்மையான, மெருதுவான, அழகான சருமத்தைப் பெற்றுக்கொள்ள NNO இனை உபயோகியுங்கள்

உங்களுடைய வாழ்க்கைமுறை எத்தகைய நெருக்கடி மிக்கதாக இருப்பினும், நீங்கள் தினசரி காலையில் எழுகின்ற சமயங்களில் காலப்போக்கில் ஏற்படக்கூடிய உலர்ந்த சருமம், மடிப்புக் கோடுகள், சுருக்கங்கள் மற்றும் கண்ணிற்கு கீழ் ஏற்படுகின்ற கருவளையங்களை அகற்றி புதுப்பொலிவுடன் தோற்றமளியுங்கள். அழகாகவும், புதுப்பொலிவுடனும், போஷாக்கு நிறைந்ததாகவும் திகழும் அழகான சருமத்தைப் பெற்று பேணிப்பாதுகாத்து அதன் பயனாக நீங்கள் தினந்தோறும் அனைவரையும் வசீகரியுங்கள்.

30 தடவைகள் உபயோகத்திற்கான பெட்டி ஒன்று ரூபா 650







NNO

போஷாக்கு தரும் இரவுநேர எண்ணெய்
ஜோஜோபா எண்ணெய் மற்றும்
விற்றமின் ஈ யினால் வளமாக்கப்பட்டது

சருமத்திற்கு
போஷாக்கை வழங்கி
புத்தொளி பரப்பி பளபளப்பாக்குகிறது

MEGA We care

அனுமதிப்பத்திரம் வழங்கியவர் அவுஸ்திரேலியாவின் மெகா லைஃப் சயன்சஸ் நிறுவனம்
74/A, 2வது மாடி, தர்மபால மாவத்தை, கொழும்பு 07.
துரித அழைப்பு : +94 77 3410071 | தொலைபேசி : +94 11 4305366 | இயைணத்தளம் : http://www.megawecare.lk/nno

inmarc.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



APPETON NUTRITION

Wellness 60+

மேலதிக போஷாக்கு

உங்களுக்கு உண்ண முடியாததை நீங்கள் அருந்துங்கள்

## அப்பட்டன் வெல்னஸ் 60+

உங்களது முதுமையடையும் பெற்றோர்கள் அவர்களது பற்களை இழந்து வரலாம். ஆனால், அவர்கள் உணவின் பயன்களை இழந்து விடக்கூடாது. அப்பட்டன் வெல்னஸ் 60+ சிரேஷ்ட பிரஜைகளுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை சுவைமிக்கதும், இலகுவில் சமிபாடடையக் கூடிய வகையிலும் வழங்குகின்றது.

அப்பட்டன் வெல்னஸ் 60+ எமது சிரேஷ்ட பிரஜைகளுக்கான உணவு

இப்போது நாடு முழுவதுமுள்ள பிரதான பாமசிகளிலும் நவீன சந்தைகளிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு எமது துரித இலக்கங்களை அழைக்கவும்
2676213, 0777 527111

உற்பத்தியாளரின் சிபாரிசு செய்யப்பட்ட விலை: ரூபா 2700/- க்கு மேல்





விநியோகம் மற்றும் சந்தைப்படுத்துவோர்:
Delmege Forsyth & Co.Ltd - Healthcare
101, வினயாலங்கார மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.
தொலைபேசி : (+94 11) 7729248, 2676213 தொலைநகல் : (+94 11) 2698139, 2686149
மின்னஞ்சல் : pharma@delmege.com இணையத்தளம் : www.delmege.com, www.delmege.lk

உரிமம் பெற்ற தயாரிப்பாளர்கள் :
Kotra Pharma (M) Sdn Bhd
1, Jalan TTC 12, Cheng Industrial Estate, 75250 Melaka, Malaysia.
Tel : +606 336 2222 Fax : +606 336 6122 Website : www.appeton.com


# நோயைத் தெரிவிக்கும் நகங்கள்



நகங்களை ஏதோ தேவையில்லாத பகுதியாகவோ, அல்லது அழகுபடுத்திக் கொள்வதற்காக அமைக்கப்பட்ட உறுப்பாகவோ நினைக்கிறோம். அது தவறு. மனிதர்கள் மட்டுமின்றி விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் இன்றியமையாத முக்கிய உறுப்பு நகங்களாகும்.

ஆனாலும் பெரும்பாலும் நாம் நகங்களில் வண்ணங்களை தீட்டிக் கொண்டு, நீளமாக வளர்த்துக் கொண்டு ஓர் அழகு சாதன உறுப்பாகவே பயன்படுத்துகிறோம். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது போல உடலின் நலத்தை நகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

நகத்தின் அமைப்பைக் கொண்டு, நம்முடைய குணாதிசயங்களைச் சில ஜோதிடர்கள் கூறுவார்கள். அது உண்மையா, பொய்யா என்பது தெரியாது. ஆனால் மருத்துவ உலகில் நகங்களை வைத்தே நம்முடைய உடலில் என்ன பிரச்சினை என்று கூறி விடுகிறார்கள் மருத்துவ அறிஞர்கள். நகங்கள் விரல்களுக்கு அழகு சேர்க்க மட்டுமல்ல, கரட்டின் என்ற புரதச் சத்தைக் கொண்ட நகங்கள் விரல் நுனிவரை பரவியுள்ள நரம்பு மற்றும் இரத்தக் குழாய்களை பாதுகாக்கக் கூடிய ஓர் அமைப்பாகும். நகங்கள் இல்லாவிட்டால் விரல்களின் முனைகளில் கடினத்தன்மை ஏற்பட்டு விடும்.

நகங்கள் மிருதுவானவை. விரல்களின் சதைப் பகுதியின் அடிப் பாகத்தில் இருப்பது. பொதுவாக ஆண்களுக்கு அதிக வளர்ச்சியும், பெண்களுக்கு பிரசவ காலங்களிலும், வயதான காலங்களிலும் வளர்ச்சி அதிகமாக இருக்கும். பொதுவாக நகங்கள் இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும். ஆனால் நமது உடலில் ஏற்படுகின்ற பாதிப்புகளைப் பொறுத்து நகங்களின் நிறம் வேறுபட்டிருக்கும். ஈரல் பாதிக்கப்பட்டிருந்தால் நகங்கள் வெண்மையாக இருக்கும்.

சிறுநீரக செயலிழப்பு ஏற்பட்டிருந்தால் நகங்களின் வளர்ச்சி குறைந்து பாதி நகங்கள் சிவப்பாக இருக்கும். மஞ்சள் காமாலையால் பாதிக்கப்பட்டிருந்தால் நகங்கள் மஞ்சள் நிறத்தில் காணப்படும். இதயநோயால் பாதிக்கப்பட்டிருந்தால் நகங்கள் அழுத்தமான இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும். இதயத்தில் ஓட்டை ஏற்பட்டு நல்ல இரத்தமும், கெட்ட இரத்தமும் கலந்திருந்தால் நகங்கள் நீல நிறத்தில் இருக்கும். நாள்பட்ட நுரையீரல், இதய நோய் உள்ளவர்களுக்கு நகங்கள் கிளிமூக்கு போல வளைந்து இருக்கும். இரத்தச் சோகை ஏற்பட்டு இரும்புச் சத்து குறைவாக இருந்தால் நகங்கள் வெளுத்து குழியாக இருக்கும். சர்க்கரையின் அளவு அதிகமாகவும், புரதம் மற்றும் துத்தநாக சத்து குறைவாகவும் இருந்தால் நகத்தில் வெண்திட்டுக்கள் காணப்படும். நகத்தில் மஞ்சள் கோடுகள் இருப்பதற்கு காரணம், புகை பிடிப்பதே. நிக்கோடின் கறை படிந்து ஏற்பட்டதாக இருக்கலாம். நகங்களுக்கு பொலிஷ் தீட்டுவதால் ஏற்பட்ட இரசாயன மாற்றத்தின் காரணமாகவும் மஞ்சள் கோடுகள் இருக்கலாம். நகத்தில் சின்ன சின்னக் குழிகள் உண்டாகி, அவற்றில் வெடிப்பு ஏற்பட்டு செதில் செதிலாக உதிர்ந்தால் சொரியாசிஸ் என்ற தோல் வியாதியின் அறிகுறியாகும்.

இரத்தத்தில் போதிய அளவுக்கு ஒட்சிசன் இல்லாவிட்டால் நகங்கள் நீலமாக இருக்கும். ஆர்சனிக் என்ற நச்சுகளால் பாதிக்கப் பட்டிருந்தால் நகங்கள் நீலநிறத்தில் காணப்படும். இரத்தத்தில் சர்க்கரை அதிக அளவு இருந்தால் குறைத்துக் கொள்ள வேண்டும். அதிக அமிலத் தன்மையுள்ள சோப்பு மற்றும் புளிக்கரைசல் போன்றவற்றை பயன்படுத்தக் கூடாது.


உடல் பருமனை குறைக்கவும், நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தவும் இதோ வடபகுதியில் உங்களுக்காக

NATURAL CEYLON CINNAMON TEA

(இயற்கையின் சிலோன் கறுவாத் தேயிலை)


★ சகல மருந்தகங்களிலும், சுப்பர் மார்க்கெட்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.
★ அனுகூலங்கள் - நீரிழிவு, உயர்குருதி அழுத்தம், இருதய நோய்கள் (மாரடைப்பு, பக்கவாதம்) அஜீரணம் மற்றும் புண், ஆண்மைக்குறைவு, மாதவிடாய் போன்றவற்றுக்கான நிவாரணி, ஞாபகசக்தி மற்றும் பல.

தொடர்பு: ஏகவிநியோகஸ்தர் - WESCO யாழ் மருந்தகம், 470, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 2223188 Email:yaalwesco@gmail.com

தயாரிப்பாளர்கள்: The Execellent Ceylon Products (Pvt)Ltd
# 88, Stace Road, Colombo 14, Sri Lanka
Tel : 0112380442, 077 9720380
Email : inquiry.tecp@gmail.com

(தீ/4748)(5.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NIPPON PAINT
Be a Part of a Global Paint Giant

சிலிக்கோன் கோட்டிங்ஸ் பிறைவேட் லிமிட்டெட்டும் நிப்பொன்ஸ் பெயின்ற்ஸ் ஒவ் ஜப்பானிஸ் ஒரிஜினும் இணைந்து உருவாக்கிய "நிப்பொன் பெயின்ற் லங்கா பிறைவேட் லிமிட்டெட்", உலகின் முதற்தரமான 10 பெயின்ற் கம்பனிகளில் ஒன்றாக விளங்குகிறது. இந்த நிறுவனம் தனது வியாபாரத்தை விரிவுபடுத்துவதற்கு சுறுசுறுப்புள்ள குழுவாகச் செயற்படக்கூடிய நபர்களிடமிருந்து விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றது.

விற்பனைப் பிரதிநிதிகள்(யாழ்ப்பாணம்/வவுனியா)

தகைமைகள்
- விற்பனை அல்லது அதனுடன் தொடர்புடைய துறையில் 02 வருடத்துக்கு மேலான அனுபவம்
- சிறந்த இரண்டாம் நிலை கல்வி
- செல்லுபடியாகும் வாகன சாரதி அனுமதிப்பத்திரத்தினைக் கொண்டிருத்தல்
- 30 வயதிற்கு குறைந்தவராயிருத்தல்

கவர்ச்சிகரமான சம்பளப் பொதி மற்றும் இதர அனுகூலங்கள், தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிக்கு வழங்கப்படும்.
உங்களது சுயவிவரங்கள் அடங்கிய ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் சான்றிதழ்களின் பிரதியையும் இணைத்து அண்மையில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் அளவிலான புகைப்படத்துடன் கீழ் காட்டப்பட்டுள்ள முகவரிக்கு 7 நாள்களுக்குள் அனுப்பி வைக்கவும்.
கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினை குறிப்பிடவும்.

NIPPON PAINT
மனிதவள முகாமையாளர்
NIPPON PAINT LANKA (PVT) LTD
"Nippolac Towers",
69A, Buthgamuwa Road, Rajagiriya.
Tel: 011-4356900-8 Fax: 011-4356909
E-mail: careers@nippolac.lk
3" i vision

## உடல் நலனுக்கு நிலக் கடலை இயற்கை வைத்தியம்

உடல் நலனுக்கு ஏற்றது நிலக்கடலை. இருதயம் பலவீனமாக இருப்பவர்கள் முளைகட்டிய பச்சைப் பருப்பை சாப்பிடுவது நல்லது. முழு பச்சைப் பருப்பு எலும்புகள் வலுவடைய உதவும். முடி நீண்டு வளரும். குடல், கல்லீரல் முதலிய உறுப்புகளுக்கு வலுவைத் தரும். உடலில் ஏற்படும் இரத்தப் பெருக்கை நிறுத்தவும், மூக்கில் இரத்தம் வருவதை நிறுத்தவும் நிலக்கடலை உதவும். நீரிழிவு நோயாளர்கள் தினமும் ஒரு கைப்பிடி நிலக்கடலை சாப்பிட்டால் உடல் மெலிவடைவது தவிர்க்கப்படும். அத்துடன் உடலுக்கு வலிமையும் ஏற்படும். உடல் வலிமை பெற கொண்டைக் கடலையை முதல் நாள் இரவில் ஊற வைத்து அடுத்த நாள் தண்ணீரை வடிகட்டிப் பச்சையாகச் சாப்பிட்டால் உடலுக்கு மிகவும் சிறந்தது.

செலான் லீசிங் முற்றிலும் வேறுபட்டது

வாங்கும் வாகனம் போல செலுத்தும் முறையையும் தீர்மானிப்பது நீங்களே........





✓மோட்டார் சைக்கிள்களுக்கும் லீஸிங் வசதிகளுண்டு
✓இடையூறுகளற்ற 24 மணி நேர லீசிங் வசதி ✓இலகுவான மாதாந்தக் கட்டுப்பணம்
✓நாடு முழுவதும் பரவலான கிளை வலையமைப்பு ✓சினேகபூர்வமான துரித சேவை
✓திருப்பிச் செலுத்த உங்களுக்கு பொருத்தமான,வசதியான லீசிங் கட்டுப்பணம்

அதிக வருவாய் கிடைக்கும் காலங்களில், நியம வாடகையிலும் கூடிய பெறுமானத்தைச் செலுத்தவும், ஏனைய காலங்களில் குறைந்த வாடகையைச் செலுத்தவும், நெகிழ்வுத்தன்மைமிக்க தெரிவுகளை செலான் ஸ்மார்ட் லீஸ் வழங்குகிறது.

நேரடி தொலைபேசி 077 3815147
0112 456 813, 0112 456 838

SEYLAN SMART Lease
FOLLOW US ON www.facebook.com/SeylanBank
செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி
GRACE

SINCE 1960
ලංවා
සංස්ථා වානේ
தேசத்திற்கு வலுவூட்டும் உருக்கு




முதன் முறையாக இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட உங்கள் விலையில் சர்வதேச தரத்துக்கமைய.

GI PIPES
எமது நாட்டு கரங்களின் GI குழாய்
சிலோன் ஸ்டீல் கோப்பரேஷன் லிமிட்டட்
ஒருவெல, அத்துருகிரிய.
தொலைபேசி : 011 4606000 பெக்ஸ் : 011 4606060
ஈமெயில் : ceylonsteel@ceylonsteel.com

கர கர...
மொறு மொறு...
கௌரவ் அப்பளம்
உன்னத சுவையின் கௌரவ நாமம்




- சுத்தமான உழுந்தினால் ஆனது.
- 100% சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டது.

Tel : 011-2380130, 2380131 Fax : 011-2473439
GAURAV IMPORTS (PVT) LTD,
Importers of All Food Items
No.68 A, 4th CROSS STREET, COLOMBO 11.
Piccaso Ads

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலிவுற்ற மக்களின் தெய்வமகனாக விளங்கும் தியாகி அறக்கொடை நிறுவன ஸ்தாபகர்

# வாமதேவா தியாகேந்திரன் அவர்களின்

# 61 ஆவது அகவையில்...



யாழ்ப்பாண நல்லூரிலே, நாவலர் பெருமான் வீதியிலே, தர்ம வள்ளல் போல் வாமதேவா சொர்ணாம்பிகை தம்பதிகளின் அரும்புதல்வனாக வந்துதித்தவர் தான் 'தியாகி' என அழைக்கப்படும் தியாகேந்திரன்

சுவிஸ் நாட்டில் வாழ்ந்து வரும் இவர் தானும் தன் சுற்றமும் வாழ்ந்தால் போதுமெனக் கருதாது தாய் நாட்டுப்பற்றும், மக்கள் பற்றும் மனதில் மதித்து பல்வேறு சூழல்களாலும் நலிவுற்று வாழும் குடும்பங்களின் துயர் துடைக்கவென தனது சொந்த நிதிப் பங்களிப்புடன் அறக்கொடை நிறுவனம் ஒன்றை ஆரம்பித்து மக்களின் தேவைக்கேற்ப உதவிச் செயற்திட்டங்களை உருவாக்கி அதன் ஊடாக மாதாந்தம் பல லட்சம் ரூபாக்களை செலவு செய்து வருகின்றமையை நாம் காணக்கூடியதாக உள்ளது. இந்த நிறுவனம் ஒரு சமூக சேவை அமைப்பாக பதிவு செய்யப்பட்டு அரச சார்பற்ற நிறுவனமாக மக்களுக்கு பணியாற்றி வருகின்றமை யாவரும் அறிந்ததே. தன்னால் உழைக்கப்படும் பணத்தின் பெரும் பகுதி ஏழைகளின் நலத்திற்காகவே செலவு செய்து வருவது மேலும் பெருமைப்பட வேண்டிய விடயமாகும்.

தன் காலத்துடன் இத்தர்மம் நின்று விடக்கூடாது என்ற நோக்கில் தனது சொந்த நிதியிலேயே பலதரப்பட்ட வருவாய் தரும் பின்வரும் திட்டங்களை உருவாக்கியுள்ளார்

★ ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையம் ★ ரிசிரி விருந்தினர் விடுதி ★ சொர்ணாம்பிகை மண்டபம்

இதன் ஊடாக ஏறத்தாழ 80இற்கு மேற்பட்ட வறுமைக்குட்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டதுடன், அவர்களுக்கு கவர்ச்சிகரமான ஊதியமும் மற்றும் பல உதவிகளும் அளித்து வருகின்றமை பெருமைப்பட வேண்டியதொன்றாகும்.

யாழ் மாவட்டத்திலுள்ள பதினைந்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்தும் உ[illegible] பயனாளிகள் மட்டுமல்லாது முல்லைத்தீவு, அக்கரைப்பற்று, தலவாக்கொல்லை, தென்பகுதி என இலங்கையின் பல பாகங்களையும் சேர்ந்த பயனாளிகளும் பயன் பெறுவதுடன் இன, மத, மொழி வேறுபாடின்றி மூவின மக்களும் உள்வாங் கப்பட்டுள்ளமை என்பது ஒரு சிறப்பம்சமாகும்.

இந்த நிறுவனத்தினுடைய உதவித்திட்டங்களை செயற்படுத்துவதற்கான நிதி வளங்கள் அனைத்தும் முற்று முழுதாக

**★ ஸ்தாபகர் வாமதேவா தியாகேந்திரன் அவர்களின் நிதி நன்கொடையே ஆகும்.**

## யாழ். குடா நாடு முழுவதும் கிளை போல் பரந்து மக்களுக்கு நிழல் கொடுக்கும் இவரது உதவிகளாவன

**01. கல்வி உதவித்திட்டம் :-**

- **முன்பள்ளி** - மிகவும் வசதி குறைந்த முன்பள்ளிகளில் நடைபெறும் விழாக்களுக்கு பரிசில்கள் அல்லது பண உதவி வழங்கப்படுகின்றது. அத்துடன் தெரிவு செய்யப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்த ஊக்குவிப்பு உதவித் தொகை வழங்கப்படுகின்றது.
- **பாடசாலை மாணவர்கள்** - மிகவும் வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் கல்வியில் மேன்மையடைய மாதாந்தம் உதவிக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.
- **போர்ச்சூழலால் இடம்பெயர்ந்த மாணவர்கள்** - போரினால் பாதிக்கப்பட்டு கல்வியை மேற்கொள்ளமுடியாமல் இடம் பெயர்ந்து வாழும் சிறுவர்களுக்கு கல்விக்காக மாதாந்த உதவிக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.
- **பல்கலைக்கழக மாணவர்கள்** - பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் வசதி குறைந்த மாணவர்களுக்கு அவர்களின் கல்வித் தேவைக்காக கொடுப்பனவு மாதாந்தம் வழங்கப்படுகின்றது.

**2. பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான உதவித்திட்டம்:-**

இத்திட்டமானது யாழ் மாவட்டத்தில் கணவனை இழந்த, கணவனால் கைவிடப்பட்ட வறிய நிலையில் இருக்கும் குடும்பங்கள் பொருளாதார முயற்சியில் வருமானத்தையீட்ட தொடங்கும் வரை அவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்குகேற்ப மாதாந்தம் உதவித் தொகை வழங்கப்படுகின்றது. அத்துடன் பொருளாதார முயற்சியில் ஈடுபட்டுள்ள மகளிர் அமைப்புகளுக்கு உள்ளூர் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கான வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

**3. மருத்துவ உதவித்திட்டம்:-**

நோயாளருக்கான உதவி - யாழ் மாவட்டத்தில் உள்ள மிகவும் வறிய நிலையில் உள்ள புற்று நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு மருத்துவ செலவிற்காக மாதாந்தம் உதவி வழங்கப்படுகின்றது.

- மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு செல்லும் வறிய குடும்பத்தை சேர்ந்த நோயாளர்களுக்கு போக்குவரத்து செலவுக்காக உதவி வழங்கப்படுகின்றது.
- **முதியவர்களுக்கான மருத்துவ உதவி :**

பிரதேச செயலகங்களின் ஊடாக சமூகநலத்துறை திணைக் களத்தினால் வைத்திய உதவி போதியளவு பெறமுடியாத வறுமைக்குட்பட்ட முதியோர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் இலவச மருத்துவ சேவை வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன் இவர்களுக்கு போசாக்கு உணவாக இலைக்கஞ்சியும், போக்கு வரத்து வாகன வசதிகளும் வழங்கப்படுகின்றது.

**4. முதியவர்களுக்கான உதவித்திட்டம்:-**

கைவிடப் பட்டு ஆதரவற்ற நிலையில் வாழும் முதியோர்களுக்கு சீரிய வாழ்வாதார மேம்பாட்டிற்காக மாதாந்தம் கொடுப் பனவு வழங்கப்படுகின்றது. அது மட்டுமன்றி முதியோர் தினத்தை முன்னிட்டு பிரதேச செயலகங்களினால் கொண்டாடப்படும் விழாக்களுக்கு அன்பளிப் பொருள்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

**5. சிறுவர் இல்லம்**

நாட்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களாலும், யுத்தத்தினாலும், தந்தையை, தாயை இழந்த மாணவர்களுக்கு கல்வியில் உரிய வாய்ப்பினைப் பெற்றுக் கொடுத்து, பாதுகாத்து அவர்களை சமுதாயத்தில் ஒரு நல்வழிகாட்டிகளாக வாழ ஒரு பெண் சிறுவர் இல்லம் நடத்தப்பட்டு வருகின்றது.

**6. மகளிர் மீள் எழுச்சித்திட்டம்**

பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய குடும்பங் களில் கல்வியை முடித்து வேலைக்கு செல்ல முடியாமல் இருக்கும் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வழிகாட்டியாக அமைகின்றது இத்திட்டம்.

**7. சூழல் பாதுகாப்புத்திட்டம் :**

தற்பொழுது செம்மணி இந்து மயானத்தின் 2 ஏக்கர் நிலப்பரப்பல் நிழல் தரும் 200 மரங்கள் நாட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது

## கடந்த காலங்களில் இவரினால் செய்யப்பட்ட அறப்பணிகளில் சில முக்கியமானவை பின்வருமாறு

- ★ இந்தியாவின் தமிழ் நாட்டின் ஒரு தொகை ஏழைச் சிறார்களுக்கும், ஆந்திராவின் ஒரு தொகை சிறார்களுக்கும் உதவித் தொகை கொடுக்கப்பட்டது.
- ★ பல்வேறு நூலகங்களுக்கு பெருமளவு புத்தகங்கள் கொள்வனவு செய்து கையளிக்கப்பட்டது
- ★ யாழ்.பரியோவான் கல்லூரியின் ரெனிஸ் பந்து விளையாட்டு மைதான விருத்திக்கு நிதி வழங்கப்பட்டது
- ★ கிளிநொச்சி கரைச்சி பிரதேசத்தில் நலிவுற்ற மக்களின் சுயதொழில் விருத்திக்காக ரூபா 10 இலட்சம் நிதி வழங்கப்பட்டது.
- ★ சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள கச்சாய் கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க ரூபா 10,000/- வழங்கப்பட்டது.
- ★ 2004ஆம் ஆண்டு நலிவுற்ற மக்களின் சுயத்தொழில் கடனாக ரூபா 17 இலட்சம் வழங்கப்பட்டது.
- ★ மகரகம புற்று நோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகளில் தெரிவு செய்யப்பட்ட 40 பேருக்கு மாதாந்தம் 400 ரூபா வழங்கப்பட்டது.
- ★ பாடசாலைக் கல்வியை முடித்தவர்களுக்கும், முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் இலவச ஆங்கிலக் கல்வி வழங்கப்பட்டது.
- ★ தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் ஆரோக்கியம் குறைந்த மாணவர்களுக்கு சத்துணவு வழங்கப்பட்டது.
- ★ பின் தங்கிய கிராமங்களுக்கு சுகாதாரத்தினை மேம்படுத்துவதற்காக நடமாடும் மருத்துவ சேவை நடத்தப்பட்டது.
- ★ புற்று நோய், இதயமாற்று சிகிச்சை, சிறு நீரக மாற்றுச் சிகிச்சையாளர்களுக்கு பாதை மூடப்பட்டிருந்த காலத்தில் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.
- ★ வறிய கிராம மக்களுக்கு மலசலகூடங்கள் கட்ட உதவி வழங்கப்பட்டது
- ★ தொழில் வாய்ப்பற்றவர்களுக்கு இலவச தையல் பயிற்சிகள் வழங்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது.
- ★ இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியிருந்த மாணவர்களுக்கு பிரபல ஆசிரியர்கள் மூலம் இலவச வகுப்புக்கள் நடத்தப்பட்டன.
- ★ யாழ் போதனா வைத்தியசாலையில் நோயாளர் தங்குவதற்கான சிறு கொட்டகை ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டது.
- ★ கைதடி முதியோர் இல்லத்திற்கு முதியோருக்கான பொழுது போக்கு இருக்கைகள் வழங்கப்பட்டன.
- ★ பாடசாலை மாணவர்களுக்கான காலணிகள், கழுத்துப்பட்டிகள் மற்றும் இசைக்கருவிகள் வழங்கப்பட்டன.
- ★ இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபனத்துடன் இணைந்து மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ★ பாடசாலை மாணவர்களுக்கான தற்காலிக கொட்டகை அமைப்பதற்கான உதவிகள் வழங்கப்பட்டன.
- ★ சுயதொழிலுக்கான நுன்கடன் திட்டம், வாழ்வாதார உதவிகளாக ஆடு, மாடு, தையல் இயந்திரம் வழங்கப்பட்டன.
- ★ சூழல் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.
- ★ வசதி குறைந்த குடும்பங்களில் நடைபெறும் அந்தியகால கிரியைகளுக்கான உதவி வழங்கப்பட்டன.
- ★ வசதி குறைந்த பெண்களுக்கு திருமணத்திற்கான நிதி உதவி வழங்கப்பட்டது. மீளக்குடியமர்ந்த வலிகாம மக்களுக்கு காணிகளைத் துப்புரவு செய்வதற்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன.
- ★ சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. நல்லூர் தேர் திருவிழாவினை முன்னிட்டு பேச்சுப் போட்டி நடத்தப்பட்டது.
- ★ பெண்களுக்கான அழகுக்கலைப்பயிற்சி அளிக்கப்பட்டு சான்றுகள் வழங்கப்பட்டன.
- ★ 2005ம் ஆண்டு குருநாகல் பிரதேசத்தில் சமாதான நிகழ்ச்சி திட்டத்தில் மூவின மக்களுக்குமான உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டன.

இந்த வகையில் தியாகியின் தன்னலமற்ற, சமூக பற்றுறுதியுள்ள சேவையினை நாம் கண்டு பெருமையடைவதுடன் இவரது சமூகத் தொண்டும், தார்மீக உ[illegible]ணர்வும், தாராள சிந்[illegible]மையில் வாழ்த்துகின்றோம், அவர் நீடூழி [illegible]

**சி.மாணிக்கராஜா**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர்**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

(C3140) (6,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahanam.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டாம் ரென்ஷன்



இந்த நூற்றாண்டு மன அழுத்த நூற்றாண்டு. இதில் நம்மை நாம் நிலை நிறுத்திக் கொள்ள தினம் தோறும் பல விடயங்களை கற்றுக்கொள்ள வேண்டும். நம்மை சுற்றி நடக்கும் மாற்றங்களுக்கு ஏற்ப அதனை எதிர்கொள்ள நம்மை தயார் படுத்திக் கொள்ள வேண்டும். மனம் என்பது மூளையால் இயங்குவது. இதில் செயலாற்றுவது சிந்தனை மற்றும் செயல் ஆகும். சிலர் சிகரெட் குடிப்பதால் மனஅழுத்தம் குறைகிறது என்று கூறுகிறார்கள். ஆனால் அதில் உண்மையில்லை. சிகரெட் குடிக்கும் போது 10 முதல் 20 வீதம் மன அழுத்தம் அதிகரிக்கவே செய்கிறது. இது பல ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இன்றைய போராட்டம் மனப் போராட்டமாகவே இருக்கிறது. முன்பெல்லாம் உடல் போராட்டமாக இருந்தது. அதாவது முன்பு இருந்த கால கட்டத்தில் தனது உடல் வலிமையால் மற்றவர்களை சமாளிக்க முடியும் என்ற நிலை இருந்தது. அது இன்றைக்கு மன வலிமையால்தான் சமாளிக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

இன்றைக்கு இருக்கும் நவீன வளர்ச்சிகளையும், தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தி ஒரு பிரச்சினையை எப்படி லாவகமாக தீர்ப்பது என்று யோசிக்க ஆரம்பிக்கிறோம். முன்பு அதற்கான வாய்ப்புகளும் வசதியும் குறைவாகவே இருந்தன.

''காலில் செருப்பு கூட இல்லாத ஏழையாக எம்மைப் படைத்த இறைவனை சபித்துக் கொண்டிருப்பது காலே இல்லாதவனை பார்க்கும் வரை'' என்று சீன பழமொழி ஒன்று கூறுகிறது. அது போல் இன்றைய கால கட்டத்தில் இருக்கும் வாய்ப்பை உடனே பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அடுத்த கட்டத்துக்குச் செல்ல முடியும்.

### ரென்ஷன்

ஒரு செயலை விரும்பிச் செய்தால் ரென்ஷன் அங்கு இல்லை. அது திணிக்கப்பட்டது என்று நினைக்கும் போது தான் ரென்ஷன் உருவாகிறது. ஒருவர் பதட்டமாக இருக்கும் போது அவரது தசைகள் இறுக்கமாகிறது. அது ஒரு குறிப்பிட்ட நேரம் நீடித்தால் தசைகள் வலிக்க ஆரம்பிக்கின்றன. அதாவது கழுத்தின் பின்புறம் தசை இறுக்கம் ஏற்படுவதால் தலைவலி உண்டாகிறது.

அறிவியல் முறைப்படி பார்க்கும் போது பதட்டமாக இருப்பவரின் உடலில் அட்ரினலின் என்ற ஹார்மோன் சுரக்கிறது. இந்த சுரப்பி அவரைக் கவனமாக இருக்கவும் பிரச்சினைகளை எதிர்கொள்ள உதவியாகவும் உடலில் பல மாற்றங்களை ஏற்படுத்துகிறது.

அப்படிச் செய்யும் போது உடல் ஒரு சீரான நிலையில் இருந்து மாறுபடுகிறது. அதாவது கவனத்தை அதிகரிப்பதற்கு மூளைக்கு தெம்பை அதிகரிப்பதற்கு தசைகளுக்கும் இரத்த ஓட்டத்தை அதிகப்படுத்துகிறது. அப்போது வயிற்றுக்கும் குடலுக்கும் இரத்த ஓட்டம் குறைகிறது. இதனால் வயிற்றைப் புரட்டுவது போன்ற ஓர் உணர்வு ஏற்படுகிறது.

சில நேரங்களில் அடிக்கடி மலம், சிறுநீர் கழிப்பது போன்ற உணர்வு ஏற்படுகிறது. இதே போன்று பல்வேறு மாற்றங்கள் நடைபெறுகிறது. அதனால் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விளைவு ஏற்படுகிறது.

### கோபம்

ஒருவர் தன் மீது தனது கட்டுப்பாட்டை இழக்கும் போது ஏற்படுவதை கோபம் என்கிறோம். கோபம் கொல்லும். அதன் உச்சக் கட்டம் உயிரிழப்பையும் ஏற்படுத்தும். யாராவது ஒருவர் என்னுடைய கோபம் நியாயம் என கூறும்வரை கோபம் தீராது. பொதுவான கருத்து என்னவென்றால் அந்த கோபம் உங்களுக்கும் மற்றவர்களுக்கும் நன்மை பயக்கும் என்றால் அது சரியானது என்பதே ஆகும்.

அவசரம் காட்டாமல் நன்கு சிந்தித்து செயலாற்றிட வேண்டும். அதற்கு நேரம் தவறாமை மிக முக்கியமானது ஆகும். அது தவிர நம் செயல்களை பகுத்து ஆராய்தல் நம் பணிகளை மேம்படுத்த, இலக்கை அடைய உதவும். இயற்கை வெற்றிடத்தை வெறுக்கிறது என்பார்கள்.

அது போல் எந்தக் குறிக்கோளும், செயல்பாடும் இல்லாமல் ஒருவர் இருந்தால் அவரது மனதில் எதிர்மறை எண்ணங்களை உருவாக்கும். இன்றைய பொருளாதார மாற்றங்கள் எல்லோரையும் மன அழுத்தத்துக்கு கொண்டு சென்றுள்ளது. அதனை எதிர்கொள்ளச் சரியான பயிற்சி இல்லை.

பலர் மனநலம் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். அண்மைய காலப் பகுதியில் மன அழுத்தத்தை போக்கும் புத்தகங்களின் விற்பனை பன்மடங்கு அதிகரித்திருக்கிறது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மனநல மருத்துவர்களிடம் செல்ல வேண்டிய பெரும்பாலானோர் இன்று சாமியார்களை நோக்கி சென்று கொண்டிருக்கின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிகப் பெரிய சர்வதேச நிதியின் சக்தி

ஒறிக்ஸ் குழும நிறுவனமானது உலகிலுள்ள பாரிய குத்தகைக் கம்பனியும் ஜப்பானின் இரண்டாவது பாரிய நிதிச் சேவை வழங்குனருமான ஜப்பான் ஒறிக்ஸ் கோர்ப்பரேஷனின் பக்கபலத்துடனேயே இயங்குகின்றது. அதுவே எங்கள் பலமும் சக்தியும் ஆகும்.

சிரேஷ்ட பிரஜைகளின் 12 மாத நிலையான வைப்புகளுக்கு +17.5% வட்டி (வ.மொ.வ.வீ. 17.5%)

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் (ஒரு LOLC குழுமக் கம்பனி)

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பி.எல்.சி
இல. 100/1 ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய.
தொலைபேசி: 5880880, தொலைநகல்: 2865606
மின்னஞ்சல்: lofin@lankaorix.com
இணையத்தளம்: www.lankaorix.com

துரித அழைப்பு 0773815602


# விற்றமின்கள் நிறைந்த கொய்யா

பழங்கள் விற்கும் விலையில் பழங்கள் சாப்பிடுவது எல்லாம் நமக்கு கட்டுபடியாகுமா? என்ற நினைப்பு பலருக்கும் வருவது இயல்பு. காரணம் மருத்துவர்கள் நம்மிடம் பழங்கள் சாப்பிடச் சொல்லி பரிந்துரைத்தாலே பருக்கும் நினைவுக்கு வருவது ஆப்பிள், ஒரேஞ்சு, சாத்துக்குடி போன்றவைதான்.

கொய்யாப் பழம், பப்பாளி போன்றன குறைந்த விலையில் எளிதாய் கிடைக்கும். அவற்றைப் பற்றிய நினைப்பு வருவதே இல்லை. இவற்றின் விலைதான் குறைவே தவிர, சத்துக்களில் இவை எந்தக் குறையும் வைப்பதில்லை என்பதை நாம் உணர வேண்டும். பெரிய காய்கறி கடைகள், பழக்கடைகள் என்றில்லாமல் சாதாரணமாக தள்ளு வண்டி களிலேயே இவற்றை வாங்கலாம். வீட்டிலிருக்கும் சிறிய இடத்தில் கூட இவற்றை விளைவிக்கலாம். இந்தக் கொய்யாவில் அப்படி என்னதான் இருக்கு என்று யோசிக்கவேண்டாம். படித்துப் பாருங்கள். கொய்யாவில் சிவப்பு, வெள்ளை என இரு வகைகள் உள்ளன. நெல்லிக்காய்க்கு அடுத்து கொய்யாவில்தான் அதிக விற்றமின் சி உள்ளது. நார்ச்சத்து அதிகம் கொண்ட கொய்யாப் பழத்தில் விற்றமின் சி, ஏ, இ போன்ற சத்துக்களுடன் போலிக் அமிலம், பொட்டாசியம், மெக்னீசியம் போன்ற தாது சத்துக்களும் உள்ளன. நார்ச்சத்து அதிகம் உள்ளதால் மலச்சிக்கலுக்கு எளிய தீர்வை தருகிறது. ஒரே நாளில் மலச்சிக்கலைத் தீர்க்கும் வல்லமை கொண்டது கொய்யா. தொப்பையை குறைக்கும். அமிலத்தன்மை, நெஞ்சு எரிச்சல், பித்தத்துக்குத் தீர்வளிக்கும். விற்றமின்களும், தாதுச் சத்துக்களும் நிறைந்துள்ளதால் சருமம் பொலிவு பெறும். மினுமினுப்புக் கூடி, தோல் சுருக்கம் குறையும். கண் கோளாறுகள் விலகும். இது உடம்புக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கக்கூடியது.



பொட்டாசியச்சத்து இரத்த அழுத்தத்தை சீராக்கும். மெக்னீசியம் நரம்புத் தளர்ச்சியை போக்கும். இதிலுள்ள விற்றமின் சி சளித் தொல்லையைப் போக்கும். இருமலுக்கு விடை கொடுக்கும். உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை கூட்டும். வாயுத்தொல்லைக்கு தீர்வளிப்பதுடன் வயிற்றுப்போக்கு, வயிற்றுக்கடுப்பு போன்றவற்றிலிருந்தும் நிவாரணம் அளிக்கும். கொழுப்புச் சத்து குறைவான பழம் என்பதால் பசியை கட்டுப்படுத்தி, உடல் எடையைக் குறைக்க உதவுகிறது. நீரிழிவு நோயாளிகளுக்கு உகந்தது. அருமையான கனிச்சாறு கொண்டுள்ளதால் குடல் புண்ணை ஆற்றும் வல்லமை கொண்டது. கொய்யாப்பழம் மட்டுமல்லாமல், கொய்யா மரத்தின் வேர், இலைகள், பட்டை போன்றவற்றிலும் மருத்துவ குணங்கள் அடங்கியுள்ளன. குடல், வயிற்றுப்போக்கு போன்ற உபாதைகளிலிருந்து குணப்படுத்தும். கொய்யா மர இலைகளை அரைத்துத் தடவினால் காயம், புண் போன்றவை விரைவில் ஆறும். இலைகள் அல்சர், பல்வலிக்கு சிறந்த மருந்தாகும். கொய்யா இலையைக் கொண்டு தயாரிக்கப்படும் கஷாயம் இருமல், தொண்டை, இதய சம்பந்தமான நோய்களுக்குத் தீர்வளிக்கிறது.

# வடக்கில் தனது சேவைகளை விஸ்தரிக்கும் கொமர்ஷல் கிரெடிட்




கொமர்ஷல் கிரெடிட் நிறுவனம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் நெல்லியடி ஆகிய இடங்களில் புதிய சேவை நிலையங்களை அண்மையில் திறந்து வைத்ததன் மூலம் இலங்கையின் வட பகுதியிலான தனது பிரசன்னத்தை மேலும் விஸ்தரித்துள்ளது.

யாழ்ப்பாண கிளையானது இல.62/20, ஸ்டான்லி வீதியில் அமைந்துள்ள அதேநேரம், கிளிநொச்சி மற்றும் நெல்லியடி சேவை நிலையங்கள் முறையே இல. 421/1, கண்டி வீதி, கிளிநொச்சி மற்றும் இல. 163, புதிய சந்தை முன்புறம், யாழ். வீதி, நெல்லியடி போன்ற முகவரிகளில் அமைந்துள்ளன. இலங்கையில் மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்ற நிதிக் கம்பனிகளுள் ஒன்றாக கொமர்ஷல் கிரெடிட் வகித்துவரும் ஸ்தானத்தை மேலும் உறுதிப்படுத்துவதாக இது காணப்படுகின்றது. இந்நாட்டின் நிதித் துறையில் மிகவுன்னத வெற்றிக்கதைகளுள் ஒன்றாக கொமர்ஷல் கிரெடிட் திகழ்கின்றது என்பதில் எவ்வித சந்தேகங்களும் இல்லை.

புதிய கிளைகள் திறக்கப்பட்டமையானது இந்நிறுவனத்தின் சேவைகள் நாடெங்கிலும் சென்றடைவதை விஸ்தரித்துள்ளது. அதுமட்டுமன்றி உறுதிமிக்க வகையில் அதிகரித்துச் செல்லும் நாடளாவிய வாடிக்கையாளர் தளத்தினிடையே, இந்நிறுவனம் வகித்துவரும் உயர் அந்தஸ்தினை மேலும் உன்னதமான மட்டங்களிலான சேவை மற்றும் நிபுணத்துவம் ஆகியவற்றை நோக்கி கொண்டுசெல்வதாகவும் அமைகின்றது.

"மேலதிகமாக வடக்கில் புதிய கிளைகள் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் காரணமாக, நாடு முழுவதிற்குமான எமது பிரசன்னத்தை 33 அமைவிடங்களைக் கொண்டதாக அதிகரித்து இருக்கின்றோம். புதியதொரு கூட்டாண்மை வழித்தடத்தில் நிறுவனம் கால்பதித்து மூன்று ஆண்டுகளுக்குள்ளேயே இவ்வாறு கிளை வலையமைப்பு விஸ்தரிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கதொரு சாதனையாக காணப்படும் அதேநேரம், கம்பனியின் வெற்றிகரமான செயற்பாட்டுக்கு எடுத்துக்காட்டாகவும் அமைந்துள்ளது" என்று கொமர்ஷல் கிரெடிட் நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. ரொஷான் எகெடகே தெரிவித்தார்.

"யாழ்ப்பாணம், கிளிநொச்சி, நெல்லியடி மற்றும் அதனையண்டிய பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு எமது பலதரப்பட்ட உற்பத்திகள் மற்றும் சேவைகளின் மூலம் சேவையாற்ற முடிவதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். இவற்றுள் நிலையான வைப்புக்கள், குத்தகை, வாடகைக் கொள்வனவு, தங்கக் கடன்கள், வீடு காணி தொடர்பான (ரியல் எஸ்டேட்) சேவை, தனிநபர் கடன்கள், கல்விசார் கடன்கள் மற்றும் நுண்நிதியியல் வசதி போன்றவையும் உள்ளடங்கும்" என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இலங்கையின் நிதியியல் சேவைத்துறையில் முன்னணி நிறுவனங்களுள் ஒன்றாக முன்னேறுதல் என்ற இலக்கினை கொமர்ஷல் கிரெடிட் பின்தொடர்ந்து செல்கின்ற நிலையில், தனது சேவை வழங்கல் வலையமைப்பினை அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து கிளைகளை மேலும் விஸ்தரிப்பதற்கும் நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

COMMERCIAL CREDIT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



03

மீண்டும் தொடங்கும் மிடுக்கு கட்டுடைத்தது யாழ். பல்கலை



அடக்குமுறையில் இருந்து சுதந்திரம் நோக்கி

04

குடாநாட்டில் நடப்பது எந்த வகை சார் ஆட்சி



02

22

தவறை திருத்துமா ஐ.நா.





இரண்டு நாடுகள் என்ற தீர்வுதான் மத்திய கிழக்கில் அமைதிக்கு வழி

24


# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

01

உதயன் 02 டிசெம்பர் 2012 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்துநான்கு


# வலியின்றி வரலாறில்லை

ஔண்யன்



கட்டாக்காலி நாய்பிடிகாரர் போல பல்கலை மாணவர்களை நடுறோட்டில் வைத்து அடித்து, விரட்டிய பின்னரும் கூட ஆட்சியாளர்களின்வெறி அடங்கியதாகத்தெரியவில்லை.பிரச்சினைக்கான வேர்களைப் பிடுங்குவதன் மூலம் பல்கலை மாணவருக்கு பயம்காட்டும்பாணியில் அதிகாரவலாளிகள் இறங்கிவிட்டார்கள்.

போர் முடிவுக்கு வந்து புலிகளைஒழித்து விட்டதாக அரசு அறிவித்த பின்னரும் அதற்கான தலையிடிகள் வெவ்வேறு ரூபங்களில் தொடரவே செய்தன. சனல்-4 கொலைக்காட்சி வெளியீட்டு காணொலிகள், புலம்பெயர் தமிழர் ஆர்ப்பாட்டங்கள்,ஐ.நா.அறிக்கைகள்,ஜெனிவாத்தீர்மானம் என்று ஓயாது அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டிருந்த பேரினவாதிகளுக்கு யாழ்.பல்கலை மாணவர்களும்தீராத் தலைவலியாக மாறியிருந்தார்கள்.குறிப்பாக கார்த்திகை-27 இல் எப்படியேனும் பல்கலையில் மாவீரர் சுடர் ஒளிர்ந்தேதீரும்.மாணவர்கள் சுடர் ஏற்றுவார்கள் என்று படையினருக்கும் நன்கு தெரியும்.கண்களில் விளக்கெண்ணையை விட்டுக் கொண்டு, பல்கலைச்சூழலில் சீருடைகளுடனும், சிவிலுடையிலும் அவர்கள் சுற்றத்தொடங்கிவிடுவார்கள். மாணவர் தலைவர்களை மறைமுகமாக மிரட்டுவார்கள். இராமநாதன் வீதியில் சோதனை அதிகரித்திருக்கும். அப்படியிருந்த போதும் , எப்படியோ படைகளின் தலையைச்சுற்றிவிட்டு, பல்கலைக்கழக சுற்றாடலில் மாவீரநாள் சுவரொட்டிகள் முளைத்திருக்கும். கார்த்திகை -27 இல் சரியாக 6.05க்கு தீபம்ஒளிரும். செல்போனிலிருந்து சாவினை தோள் மீது தாங்கிய சந்தனப்பேழைகள் பற்றிய பாடல் பரவும்.

ஆமிகாரருக்கும் மாவீரர் நாள் கொண்டாட வேணுமெண்டு விருப்பம். அதுதான் சுடர் ஏத்துற இடத்தில வந்து நிண்டு தங்கட பங்குக்கு அஞ்சலி செலுத்திட்டு போறாங்கள் போல என்று படையினரின் தோல்விமுகத்துக்கு முன்னால் சனங்கள் நக்கலாக இவ்வாறுசொல்வதுண்டு.

எவ்வளவு காலத்துக்குத்தான் சற்றும் மனந்தளராத விக்கிரமாதித்தன் போல படையினர் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு திரும்ப முடியும். இந்தமுறை வழமைபோன்று அணில் ஏற விட்ட நாய்களாக திரும்புவதற்கு அவர்களுக்கு மனம் இருக்கவில்லை.

"போரில் வென்முந்[illegible] அவனுக்கே வெற்றிக்கான வாய்ப்பு அதிகம்.'' புலிகளின் தலைவர் அடிக்கடி உச்சரிக்கும் இந்த வார்த்தையினை மாவீரர் நாளில் தங்கள் மனதில் இருத்திய படையினர் மாலை 6 மணிக்குச் சற்று முன்னதாக பல்கலைக்கழகத்தினுள்ளும் மாணவர் விடுதிக்குள்ளும் பாய்ந்தனர். தாங்கள் முன்னரே புகுந்துவிட்டதால் இந்த முறை மாவீரர் சுடரை மாணவர்கள் ஏற்றமுடியாது என்று படைத்தரப்பு மனக்கணக்குப் போட்டது. ஆனால் படையினரின் இத்தகைய அத்துமீறலை மாணவர்கள் எதிர்பார்த்திருக்கவேண்டும்போலும். அவர்கள் தங்கள் கண்களுக்கு முன்னாலேயே படைகளின் முகத்தில் கரிபடர்வதைப் பார்க்க விரும்பினர். பறந்தது 'எஸ்.எம்.எஸ்.' ஆண்கள் விடுதியில் [illegible] பெண்கள் விடுதியில் ஒளிர்ந்தன தீபங்கள்.

இந்த அவமானத்தை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதன் பின்னர் வெறி வந்தவர்கள் போல பெண்கள் விடுதிக்குள்ளும் பாய்ந்தார்கள். கண்ணில் பட்ட எல்லோரையும் பந்தாடினார்கள். பத்திரிகையாளர்களும் தப்பவில்லை. துப்பாக்கி முனையில் மாணவிகளை மிரட்டினார்கள்.

மாணவர் விடுதிக்குள் வேண்டா விருந்தாளிகள் நுழைந்ததைக் கண்டித்து அடுத்த நாள் நடந்தது ஆர்ப்பாட்டம். பதாகைகளுடன் மாணவர்கள் வீதியில் காலடி வைத்தபோது அதிகார ஏவலாளிகளால் அதைத் தாங்க முடியவில்லை. கொட்டன்களோடும், கொடுந் துவக்குகளோடும் சட்டென்று பாய்ந்தன படைகள். நட்ட நடு வீதியில் கொட்டுண்ட நெல்மணிச் சிதறல்கள் ஆகினர் மாணவர். ஆண் என்றும் பெண் என்றும் பாராது மூர்க்கத்தின் ஆவேசம் தொடர்ந்தது வீதியில். அனாதைகளாய் பாடப்புத்தகங்கள் படபடத்துக்கொண்டு இருந்தன. தமது இணையைத் தொலைத்துவிட்டு குவிந்து கிடந்தன ஒரு நூறு ஒற்றைச் செருப்புகள். மீண்டும் ஒரு முள்ளிவாய்க்கால் மனத்திரையில்.

மாணவர்களைக் காக்கவேண்டிய மேய்ப்பர்கள் வரவே இல்லை. இளஇரத்தங்கள் துடித்தன, உடம்பெங்கும் தளிம்புகள் வலித்தன. வகுப்புப் புறக்கணிப்புக்கு விடுக்கப்பட்டது அழைப்பு. ஒரு மகத்தான எழுச்சிக்கான விதைப் பொன்று நடந்துகொண்டிருப்பதை மோப்பம் பிடித்துவிட்டது அரசு. விட்டால் நிலைமை பெரும் புரட்சியை உருவாக்கிவிடும் என்ற

(சூரியகாந்தி 23 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






■ தில்லாலங்கடி

# குடா நாட்டில் நடப்பது எந்த வகை சார் ஆட்சி

**போரில் உயிரிழந்த சிங்களப் படைகளுக்கு அஞ்சலி செலுத்த தமிழ் மாணவர்களை கட்டாயப்படுத்தி அழைத்துச் சென்று நிகழ்வை நடத்த முடியும் என்றால், தமிழ் மக்களுக்காகவே தமது உயிர்களை தியாகம் செய்த உறவுகளுக்கு தமிழ் மாணவர்கள் ஏன் அஞ்சலி செலுத்தக் கூடாது ?**

ஐயோ அம்மா ! அடிக்காதேங்கோ சேர் ! இந்தக் காட்டுக் கத்தல்களை காதில் வாங்காத படைச்சிப்பாய்கள் தாக்குவதற்காகவே களமிறக்கப்பட்டது போல தொடர்ந்து தாக்கிக் கொண்டேயிருந்தார்கள். செத்த பாம்பை அடிப்பது போல் தனித்து மாட்டுப்பட்ட ஒருவன் மீது கையில் துப்பாக்கியை வைத்துக் கொண்டு தமது வீரத்தைக் காட்டினார்கள்.

தமிழர்களது உணர்வுகளைச் சீண்டிப் பார்த்து அதனால் வந்த விளைவுகளை தென்னிலங்கை மறந்துவிட்டது. அதனால் மீண்டும் தமிழர்களது - தமிழ் மாணவர்களது - உணர்வுகளைச் சீண்டும் வகையில் அரச படைகள் செயற்படத் தொடங்கியுள்ளன.

கடந்த வருடம் அளவெட்டியில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சி மன்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அடிதடி நடத்திய இராணுவத்தினர் அதன் பின்னர், நாவாந்துறையில் கிறீஸ் பூதம் என்ற பெயரில் இளைஞர்களையும், பொதுமக்களையும் மூர்க்கத்தனமாகத் தாக்கி கைது செய்தனர்.

வருடாந்தம் தாங்கள் ஏதாவது அடாவடித்தனத்தை செய்ய வேண்டும் என்பதற்காகவே இராணுவத்தினர் இவ்வாறான கைங்கரியங்களில் ஈடுபடுகின்றனர். யாழ். குடாநாட்டில் சிவில் நிர்வாகம் வழமைக்குத் திரும்பி விட்டதாக கூறுகின்ற இணக்க அரசியல் நடத்துபவர்களுக்கு இராணுவத்தினரின் இவ்வாறான தாக்குதல்கள் தெரிவதில்லை.

தமிழர்களுக்காகத் தமது இன்னுயிர்களை உவந்தளித்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் உரிமையிருக்கின்றது. இறந்த தனது சகோதரனை, சகோதரியை, உறவினர்களை நினைவு கூருவதற்கு யாரும் தடை போட முடியாது.

போரில் உயிரிழந்த படையினருக்கு அஞ்சலி செலுத்துவதற்காக தமிழ் மாணவர்களது ஒரு நாள் கல்வியைப் பாழடித்து வடமாகாண ஆளுநர் பலாலியில் மே மாதம் 18 ஆம் திகதி நிகழ்வை நடத்துகின்றார். தமிழ் மாணவர்கள் கட்டாயத்தின் பேரால் அங்கு சென்று படையினருக்கு தாமரைப் பூ கொடுக்கின்றனர். போரில் உயிரிழந்த சிங்களப் படைகளுக்கு அஞ்சலி செலுத்த தமிழ் மாணவர்களை கட்டாயப்படுத்தி அழைத்துச் சென்று நிகழ்வை நடத்த முடியும் என்றால், தமிழ் மக்களுக்காகவே தமது உயிர்களை தியாகம் செய்த உறவுகளுக்கு தமிழ் மாணவர்கள் ஏன் அஞ்சலி செலுத்தக் கூடாது ?

பல்கலைக்கழக மாணவர்களால் மாவீரர்தினம் இந்த வருடம் அனுஷ்டிப்பதற்கு அனுமதிக்க கூடாதென்பதிலும், மாணவர்களால் ஈகச்சுடர் ஏற்றப்படக் கூடாதென்பதிலும் படையினர் உறுதியாக இருந்தனர். இதனால்தான் நவம்பர் 27 ஆம் திகதி பல்கலைக்கழகத்தினுள்ளே படைப் புலனாய்வாளர்களை உலாவவிட்டதுடன், ஆண்கள் விடுதியிலும் மற்றும் பல்கலைக்கழகத்தினுள்ளும் படையினரையும் நிறுத்தியிருந்தனர். ஆனால் இவர்களது கண்களில் மண்ணைத் தூவி இவர்கள் எதிர்பார்க்காத விதமாக பெண்கள் விடுதியில் ஈகச்சுடர்கள் எரியத் தொடங்கின. அதனால் படையினர் பெண்கள் விடுதிக்குள் ஆயுதங்களுடன் புகுந்து ஈகச்சுடர்களை அணைத்தனர். பெண்களின் விடுதிக்குள் பெண்படையினர் இல்லாமல் சென்று தமது வீரதீரங்களை காட்டிவிட்டு வந்தனர். அதற்கிடையில் ஏனைய இடங்களிலும் மாவீரர் ஈகச்சுடர் ஏற்றப்பட்டுவிட்டன. மேலும் மாணவர்கள் படையினரையும், படைப் புலனாய்வாளர்களையும் பல்கலைக்கழக வளாகத்திலிருந்து வெளியேற்றியிருந்தனர்.

பல்கலைக்கழக மாணவர்கள் தமது பல்கலைக்கழக வளாகத்தினுள்ளே அமைதியான முறையிலேயே மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த முயன்றனர். இதனைக் கூட படையினர் அனுமதிக்கவில்லை. பல்கலைக்கழக வளாகத்தினுள் நடைபெறும் நிகழ்வுக்கு படையினர் எவ்வாறு வருகைதர முடியும். அவர்கள் உள்ளே நுழைவதற்கான அனுமதி யாரால் கொடுக்கப்பட்டது? மேலும் குடாநாட்டில் சிவில் நிர்வாகம் நடைமுறையில் இருப்பதாகவே எடுத்துக் கொண்டால், படையினர் எவ்வாறு பல்கலைக்கழகத்துக்குள் அத்துமீறி பிரவேசிக்கலாம்?

பல்கலைக்கழகத்துக்குள் படையினர் அத்துமீறி நுழைந்ததைக் கண்டித்து மாணவர்களால் அமைதியான முறையில் நவம்பர் 28 ஆம் திகதி கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்தினுள் கண்டன உரைகளை முடித்துக் கொண்டு பல்கலைக்கழக பிரதான வாயில் வழியாக வெளியே வந்து 100 மீற்றர் தூரத்திலுள்ள விஞ்ஞான பீட வாயில் வழியாக உள்ளே நுழைவதற்காக வளாகத்தை விட்டு வெளியில் வந்தனர்.

இவர்கள் எப்போது வெளியில் வருவார்கள் என்று காத்திருந்த பொலிஸார் உடனடியாகவே சென்று மாணவர்களை கலைந்து விடுமாறு தெரிவித்தனர். அதற்கு மாணவர்கள் அமைதியான முறையில்தான் நாம் போராட்டத்தை நடத்துகின்றோம் என்று பதில் தெரிவித்து முடிப்பதற்கு முன்பே, மாணவர்களை அடிப்பதற்கான உத்தரவை விடுப்பதற்காக காத்திருந்தவர் போல அதிகாரி ஒருவர் மாணவர்கள் மீது தடியடி நடத்துமாறு தெரிவித்தார்.

இதனை மாணவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. இருப்பி[illegible] ஒருவர். ஓடும்போது தடுக்கி வீழ்ந்த மாணவர்களை சுற்றிச் சுற்றி பொலிஸார் தாக்கினர்.

ஏற்கனவே பொலிஸாருடன் வந்திருந்த இராணுவத்தினர் இதுதான் சந்தர்ப்பம் என்று கையில் கிடைத்த பயர்கள், கம்பிகளுடன் மாணவர்கள் மீது தாக்கத் தொடங்கினர். மாணவர்களை அடிப்பதற்காகவே அவர்கள் பொலிஸாருடன் களமிறக்கப்பட்டனர். சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு இல்லை என்று முழங்கும் அரசதரப்பு இதற்கு என்ன பதில் சொல்லப் போகின்றது?

மேலும் ஊடகவியலாளர்கள் தாம் ஊடகவியலாளர்கள் என்று இராணுவத்தினருக்கு அடையாளப்படுத்திய பின்பும் அவர்கள் மீது தாக்குதல் தொடுத்தனர் இராணுவத்தினர். இராணுவத்தினரின் அடிதடிகளைப் படம் பிடித்த ஊடகவியலாளர்களைக் கலைத்துப் பிடித்த இராணுவத்தினர் அவர்களின் புகைப்படக் கருவிகளின் படங்களை அழித்தனர்.

ஊடகவியலாளர் ஒருவர் தன்னை ஊடகவியலாளர் என்று தெரியப்படுத்தி அடையாள அட்டையை இராணுவத்தினரிடம் காட்டியதும் அதனைப் பறித்த இராணுவத்தினர் அவர் கத்திக்குளறியும் கூட அடித்துக் காயப்படுத்தினர். மேலும் ஊடக மாணவிகள் மீதும் இராணுவத்தினர் பயர்களினால் தாக்கியுள்ளனர்.

ஒரு சில மாணவர்களை பொலிஸார் கைது செய்து அழைத்துச் சென்று மீண்டும் தமது பூட்ஸ் கால்களால் தாக்கியுள்ளனர். சிங்களத்தில் பதிலளிக்க முயன்ற மாணவன் ஒருவனைப் பார்த்து பொலிஸ் தரப்பு, நீ சிங்களவனா? என்று கேட்க, இல்லை தமிழன் என்று சொன்னதும் எட்டி உதைந்து அடித்தார். அத்துடன் தமிழர்கள் எல்லாம் புலி என்றும் சான்றிதழ் வழங்கிச் சென்றார் அந்த பொலிஸ் அதிகாரி. மேலும் பொலிஸார் கைது செய்த மாணவர்கள் எல்லோரையும் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த பலர் தமது கைத் தொலைபேசிகளில் படம் எடுத்துச் சென்றனர்.

தங்களது இத்தனை அடாவடிகளையும் செய்த பின்னர், மாணவர்களை மூர்க்கத்தனமாகத் தாக்கிய திருப்தியில் படையினர் திரும்பினர்.

இதன் பின்னர் மாணவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மீண்டும் படைப் புலனாய்வாளர்களது நெருக்குதல்கள் தொடர்ந்தன.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சில நிமிடங்களிலேயே வந்து சேர்ந்த படைப் புலனாய்வாளர்கள் மாணவர்களை மிரட்டத் தொடங்கினர். இத்தனைக்கும் நோயாளர்களைப் பார்வையிடும் நேரம் முடிந்த பின்னரே படைப் புலனாய்வாளர்கள் குறித்த விடுதிக்குச் சென்று மாணவர்களை மிரட்டினர். மாணவர்கள் மிரட்டப்படுவதை வைத்திய சாலையிலிருந்து எவரும் கண்டும் காணாதது போல் இருந்தனர்.

மாணவர்களுடன் படைப் புலனாய்வாளர்கள் தொடர்ச்சியாக நின்று கொண்டிருந்த போதும் அவர்களை வெளியேற்றும் முயற்சி கூட எடுக்கப்படவில்லை.

இறுதியில் மாணவர்கள் தமக்கான பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லாத நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெறாது தப்பித்துச் சென்றுள்ளனர்.


தமிழ் மாணவர்கள் என்ற காரணத்தினால் அடியையும் வாங்கி, அடி வாங்கியதற்கு மருந்தும் கட்டாமல் வெளியேற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இராணுவத்தினராலும், இராணுவப் புலனாய்வாளர்களாலும் இத்துணை அட்டகாசங்கள் யாழ்ப்பாணத்தில் நடந்தேறுகின்ற போதும், வாய்கூசாமல் யாழ்ப்பாணத்தில் எதுவித பிரச்சினைகளும் இல்லை, சிவில் நிர்வாகம் நடக்கின்றது என்று சொல்லி இணக்க அரசியல் நடத்திவிட முடியுமா?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீண்டும் தொடங்கும் மிடுக்கு; கட்டுடைத்தது யாழ்.பல்கலை

ஜெரா



விடிந்து சில நிமிடங்கள் கழிந்திருந்தன. முதல் நாள் செய்து முடிக்காத வேலைகளுக்காக குடும்பத் தலைவர்களும், தலைவிகளும் தீவிரமாகிக் கொண்டிருந்தனர். நாய்களின் எதிர்ப்பு அந்தக் கிராமத்தையே அதிரச் செய்து கொண்டிருந்தது. மக்காட் இல்லாத சைக்கிள்களிலும், விடுதலைப்புலிகளிடம் - இறுதிப் போரில் மாட்டிக் கொண்ட பொதுமக்களிடம் இருந்து கைப்பற்றிக் கொண்ட மோட்டார் சைக்கிள்களிலும் ஒவ்வொரு வீட்டையும் சுற்றி வளைத்தது இராணுவம். நாளைக்கு (27.11.2012) எந்த முன்னாள் போராளியும் வீட்டில் இருக்கக் கூடாது. விடிந்த உடனேயே எங்களின் முகாம்களுக்கு வந்து விட வேண்டும், என்ற கட்டளையை அறிவித்துக் கொண்டே மற்றைய கிராமத்துக்கு நகர்ந்தது இராணுவம். தடுப்பிலிருந்து விடுதலையான முன்னாள் போராளிகளே மாவீரர் தினம் அனுஷ்டிப்பர் என்ற அசையாத நம்பிக்கை இராணுவத்துக்கு இருந்தது. ஏனெனில் கடந்த மூன்று வருடத்துக்குள் பொதுமக்கள், மாணவர்கள், பொது அமைப்புக்கள் என்ற அனைத்துத் தரப்பினையும் மாவீரர் தினத்திலிருந்து பிரித்து வைத்து விட்டோம் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது.

### அடக்க முடியாத அடக்கு முறை

ஆனால் முன்னாள் போராளிகள் எதிர்பார்த்தளவுக்கு எதுவுமே செய்யவில்லை. மௌனித்தனர். நீண்ட மௌனத்தை கலைத்த எழுச்சி வேறொரு பக்கமிருந்து வந்தது. அடங்கியிருத்தலின் எல்லை கட்டுடைத்தது. 3 நூற்றாண்டுகளுக்கு முன்னரான அடக்குமுறையை விட மோசமான பிலேச்சத்தனத்தை தமிழர்கள் கடந்த 3 ஆண்டுகளில் அனுபவித்திருந்தனர். நிலம் பறிப்பு, தொழில் இழப்பு, வாழ்க்கை இழப்பு என அனைத்தையும் பெரும்பான்மையினம் வேகமாக சூறையாடிக் கொண்டு வந்தது. இருந்த ஒரே தீர்வான 13 ஆவது அரசியலமைப்பையும் அழித்துவிட அரச அமைச்சர்கள் தீவிரமாகியிருந்தனர். என்றும் நடக்காது என நம்பியிருந்த விடயமும் நடந்தேறியது. தமிழ்ப் பெண்கள் இராணுவத்தில் இணைக்கப்பட்டனர். இதனால் உண்டான விரக்தியும், வெறுப்பும் பலரை மனநோயாளிகள் கூட ஆக்கியது. 24 மணி நேரமும் மனக்கொதிப்பு நிலையுடனேயே பலர் வாழ்ந்தனர். இன்னமும் வாழ்கின்றனர். இதிலிருந்து யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் விதிவிலக்கானவர்கள் இல்லையே.

### உறங்கிக் கிடந்த காலம்

2006 ஆம் ஆண்டிலிருந்து மோசமான இராணுவத்தினரின், இராணுவ புலனாய்வாளர்களின், பொலிஸாரின், இராணுவத்தோடு சேர்ந்தியங்கும் குழுக்களின் வன்முறைகளை இந்தப் பல்கலைக்கழக மாணவர்கள் தாங்குகின்றனர். அந்த ஆண்டில் உரிமைக்காக குரல் கொடுத்த பல மாணவர்களை கொடூரக் கொலை புரிந்தன இனந்தெரியாதவர்களின் துப்பாக்கிகள். அத்தோடு பலர் கல்வியை இடை நடுவில் விட்டு யாழ்.பல்கலைக்கழகப் பக்கம் திரும்பிப் பார்ப்பதையே நிறுத்திவிட்டனர். அவ்வப்போது எதிர்ப்பைக்காட்ட சிறு ஆர்ப்பாட்டங்களை செய்வதும், கலைந்து போவதும் தான் கடந்த 27 ஆம் திகதி வரைக்கும் அவர்களிடம் இருந்த போராட்ட வடிவம். மாணவர்களுக்குள்ளேயே ஊடுருவியிருக்கின்ற புலனாய்வாளர்கள் இனங்கண்டு கலைவதில் எப்போதும் தீவிரமாக இயங்கினர். அவர்களின் மீதான பயம் அந்தத் திகதி வரைக்கும் பல்கலைக்கழக கல்விருக்கைகளில் உரிமை அரசியல் பேசுவதைக் கூட தடுத்திருந்தது. ஆனால் அடங்கிப் போதலுக்கும் ஒரு எல்லைக் கோட்டைக் கிழிக்க அந்த எழுச்சி நாள் வந்தது.

### புலம்பெயர் தேசம் தந்த எழுச்சி

இந்த முறை என்றுமில்லாத எழுச்சியை நவம்பர் 27 பெற்றிருந்தது. புலம் பெயர் நாடுகளில் விடுதலைப்புலிகளின் காலத்து மாவீரர் தினம் போல் இருந்தது. அந்த எழுச்சிக்கு மாவீரர் தினம் நெருங்கிக் கொண்டிருக்கையில் பிரான்ஸில் வைத்து விடுதலைப்புலிகளின் முக்கிய செயற்பாட்டாளர் பரிதி துரோகிகளால் சுட்டுக் கொல்லப்பட்டமையும் ஒரு காரணம். எந்தத் தடை வரினும் மாவீரர் தினத்தை அதே மரியாதையுடன் அனுஷ்டித்தே தீருவோம் என சத்தியம் செய்திருந்தது புலம் பெயர் சமூகம். அதனைச் சாதித்தும் காட்டியது. பிரான்ஸ், கனடா, லண்டனில் மாதிரித் துயிலுமில்லங்களே அமைக்கப்பட்டிருந்தன. இந்த எழுச்சியின் விவரங்கள் உடனுக்குடன் முகநூல்களில் பகிரப்பட்டன. பல்கலைக்கழக மாணவர்களின் பார்வைக்கும் வந்தன. "நாங்களும் செய்ய வேணும்" என்ற முடிவை விடுதி அறைகளில் இரகசியமாக எடுத்துக் கொண்டார்கள். வழமை போல 26 ஆம் திகதிக்குரிய இரகசிய சுவரொட்டிகள் இரவோடிரவாக ஒட்டப்பட்டன. இராணுவக் கவனிப்பாளர்கள் இதனை எதிர்பார்த்திருக்கவேயில்லை. பல்கலைக்கழகம் தமது கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது என்பதில் அசையாத நம்பிக்கையிலிருந்தனர்.

### விடுதிகளில் நடந்ததென்ன?

ஆனால் அசம்பாவிதம் நடந்துவிட்டது. 27 ஆம் திகதி பல்கலைக்கழகம் இராணுவத்தின் முழுக்கவனத்துக்கு வந்தது. நேரம் மாலை 6.05 மணியை நெருங்க அந்தக் கவனம் பாலசிங்கம் விடுதிப் பக்கம் பரவியது. அங்கு நடந்த சம்பவங்களை இப்படித்தான் ஒருவர் பதிவு செய்கின்றார். (ஆனந்த குமாரசாமி பெண்கள் விடுதி)

"அப்ப நேரம் 5.30 இருக்கும்"

"எங்கட ஹொஸ்டலில் விளக்கேத்த தயாராகிக் கொண்டிருந்தம். அமைதியான முறையில் விளக்கேத்துறது என்ற முடிவை நாங்கள் எடுத்திருந்தம். ஆனா அந்த நேரத்தில பாலசிங்கம் விடுதிக்குள் அத்துமீறிய ஆமிக்காரர் பொடியளை மிரட்டினாங்கள். அங்க ஒட்டியிருந்த மாவீரர் படங்கள கிழிச் செறிஞ்சாங்கள். விளக்கேத்த தயார் செய்யப்பட்டிருந்த [illegible] நிறைய ஆமிக்காரர் [illegible]. அங்க காமான ஆண் மாணவர்கள் வெளியில இருந்து ரூமுக்குள்ள போயிட்டாங்கள். வெளியால நிக்கிறவங்களைக் கூப்பிட்டு விசாரிக்கிறாங்கள். அங்க நடக்கிற எல்லாத்தையும் எங்கட விடுதியின் மொட்டை மாடியில் இருந்து பாத்துக் கொண்டிருந்தம். எங்களோட யே கூடியிருந்து புதினம் பாத்த சிங்களப் பெட்டையளுக்கு சரியான சந்தோசம். தங்கட மொழியில் ஏதேதோ சொல்லி எங்கள நக்கல் அடிக்கிறாங்க.. எங்களுக்கு சரியான கோபம் வந்தது. அப்பதான் பாலசிங்கம் விடுதியில இருந்து, ஒன்டுமே செய்ய முடியாதென்று எங்களுக்கு எஸ்.எம்.எஸ். வந்தது".

"நாங்களாவது செய்யணும்"

எல்லாருமே வேகமாக கீழ இறங்கி சரியான நேரத்தில விளக்கேத்தினம். ஆமிக்காரர் வரப்போறான் என்டு தெரிஞ்சு கேற் பூட்ட எங்கட பிரசிடன்ட் போனவ. இதை எதிர்பாக்காத ஆமிக்காரர் பின் வாசல் வழியா எங்கட ஹொஸ்டலுக்குள்ள திமுதிமுவென்டு ஓடி வந்தாங்கள். கேற் பூட்டப் போன பிள்ளையை மிரட்டினாங்கள். எதையுமே கவனிக்கேல்ல. இரவு நேரத்தில யாரோட அனுமதியும் இல்லாம 3 ST-I பில்டிங்குக்குள்ள ஆமிக்காரர் நுழைஞ்சாங்கள். வாசலில் நின்ட பிள்ளையள துப்பாக்கி காட்டி மிரட்டினாங்கள். ஏத்தியிருந்த விளக்குகள மளமளவென்டு படம் எடுத்தாங்கள். அந்த விளக்குகள அணைச்சிட்டு ஒரு மாணவியைப் பிடிச்சு நெற்றில துப்பாக்கிய வச்சு சுடப்போறன் என்டாங்கள். இந்த நேரத்தில சிங்கள மாணவிகள் ஆமிக்காரரோட கதைக்கத் தொடங்கீற்றினம். எங்கள யார் யாரெல்லாம் விளக்கேத்தினது என்டத சொல்லிக்குடுத்திட்டாளுகள். ஒவ்வொருத்தரையும் ஆமிக்காரர் மிரட்டினாங்கள். எங்கட ரூம் கதவு, படிக்கிற மேசை- கதிர, வாளி எல்லாத்தையும் அடிச்சி நொருக்கினாங்கள். என்னோட படிக்கிற பிள்ளையின்ர மோட்டச் சைக்கிளையும் உடைச்சுப் போட்டாங்கள்.

பிறகு 3 ST-II பில்டிங்குக்கு போயிட்டாங்கள். அங்க அவங்களால நுழைய முடியல. எங்கட பில்டிங்கில பிரச்சின நடக்கும் போதே அந்த பில்டிங் கதவெல்லாத்தையும் பூட்டீட்டாளுகள். இதால ஆத்திரப்பட்ட ஆமிக்காரர் துவக்குகள், பொல்லுகளாலயன்னல அடிச்சி உடைச்சாங்கள். பில்டிங்கின்ர தண்ணீர் குழாய்வழியாக மேல ஏறி அங்க ஏத்தியிருந்த விளக்குகள வேகமாக அணைச்சாங்கள். சிட்டிகளால பிள்ளையள [illegible]ங்கள்.

[illegible]யில ஹொஸ்டலுக்கு வெளியாலயும் பெரிய கலவரம் நடந்தது. நிப்போர்ட்டர் ஆக்களுக்கு ஆமிக்காரர் அடிச்சதாம்.

இவ்வளவு பெரிய கலவரத்த ஆமிக்காரர் ஒரு மணித்தியாலத்துக்கு மேல செய்து கொண்டிருக்கேக்குள்ளயும் கம்பஸ்ல இருந்து யாருமே வரேல்ல. சரியா 7.00 மணிக்கு கம்பஸ் ஆக்கள் வந்த பிறகு ஆமிக்காரர் போனாங்கள்.

எங்கட ஹொஸ்டலுக்குள்ள ஆமிக்காரர் வரும் போது வாசலில நின்ட செக்கியூரிட்டி ஒன்றுமே செய்யேல்ல. பேசாம எல்லாத்தையும் பாத்துக் கொண்டிருந்தார். அன்றைக்கு மத்தியானமே அவர், "நீங்கள் தீபம் ஏத்தி ஆமிக்காரர் நுழைந்தால் நான் ஒன்றும் செய்யமுடியாது" என்று சொல்லியிருந்தார். அந்த நேரத்தில வோடன் கூட அங்க இருக்கேல்ல. 24 மணிநேரமும் அங்கயே இருக்கும் அவர் அன்றைக்கு அந்த நேரத்தில் மட்டும் வெளியால போயிருந்தார். ஆமிக்காரர் வந்த பிறகு போன் அடிச்சு அவருக்கு சொன்னதுக்கு" வீ.சிக்கு சொல்லீற்றன் பயப்படாதிங்க என்டு சொல்லீற்று போன வச்சிற்றா".

### இன்னொரு பேரெழுச்சியின் தொடக்கம்

மறுநாள் இந்தச் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டம் பேரெழுச்சியொன்றுக்கு வித்திட்டுள்ளது. யாருமே இதனை எதிர்பார்த்திருக்கவில்லை. அமைதியான முறையில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் தொடங்கிய போராட்டத்தை ஆயுதங் கொண்டு அடக்க முற்பட்டதன் விளைவு வேகமாக பரவியது. சமூக வலைத்தளங்களில் அதிக பகிர்வுக்குள்ளான இந்தக் கலவரச் சம்பவம் மீண்டும் ஈழத்தில் இனப் போராட்டம் ஆரம்பமாகி விட்டதா என்ற பார்வையை ஏற்படுத்தியிருக்கின்றது. தமிழ் மக்கள் மத்தியில் அவ்வாறானதொரு எதிர்பார்ப்பையும் இது உருவாக்கியிருக்கின்றது. உடனடியாக சர்வதேச கவனத்தைப் பெற்றுவிட்ட இந்தச் சம்பவம் அமெரிக்கா உள்ளிட்ட தூதரகங்களின் நேரடி கவனிப்பைப் பெற்றுள்ளது. இலங்கையிலும், புலம்பெயர் தளத்திலும் இயங்கும் பல்வேறு தமிழ் அரசியல் கட்சிகளும் இந்தப் பிரச்சினை குறித்து கவனம் செலுத்தவும், அதற்கான நியாயத்தைக்கோரவும் கூடிய நிலையை உருவாக்கியிருக்கின்றது. இன்னொரு புறத்தில் இலங்கை அரசு தமிழர்களுக்கு எவ்வாறான அநீதிகளை இழைக்கின்றது என்ற விடயமும் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

(23 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்குமுறையிலிருந்து சுதந்திரம் நோக்கி...

இன்னும் எத்தனை காலத்துக்குச் சர்வதேசம் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைப் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறது? என்ற கேள்வியே இப்போது எழுகின்றது.







ஐ.நா சபையில் பலஸ்தீனம் தனி நாடாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. 'உறுப்புரிமை அற்ற பார்வையாளர்' என்ற அந்தஸ்துக் கிடைத்துள்ளதை பலஸ்தீனியர்கள் கோலாகலமாகக் கொண்டாடுகிறார்கள். மேற்குகரையில் ரமல்லா நகரிலுள்ள யாசீர் அரபாத் சதுக்கத்தில் பாரம்பரிய இசைமுழங்க, பாரம்பரிய நடனங்களை ஆடியபடி, மக்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வருகின்றனர். காஸாநகரிலும் மக்கள் வீதிகளில் ஆடிப்பாடி, வாகனங்களில் ஒலியெழுப்பியும் கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

சர்வதேச அரங்கில் பலஸ்தீனத்தின் அந்தஸ்தை இன்னுமொருபடி மேலே உயர்த்துகின்ற தீர்மானத்துக்கு ஐ.நாவின் பொதுச்சபை சாதகமாக வாக்களித்தமையே இதற்குக் காரணம்.

பலஸ்தீனத்தை உறுப்பினர் அல்லாத பார்வையாளர் என்று அறிவிக்கும் தீர்மானத்துக்கு ஆதரவாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், ரஷ்யா, சீனா, இந்தியா மற்றும் பிரேஸில் உள்ளிட்ட 138 நாடுகள் வாக்களித்தன. இஸ்ரேலும் அமெரிக்காவும் அடங்கலாக 9 நாடுகள் எதிர்த்து வாக்களித்தன. பிரிட்டன், ஜேர்மனி உள்ளிட்ட 41 நாடுகள் வாக்களிப்பில் பங்கெடுக்காமல் ஒதுங்கிக்கொண்டன.

### பலஸ்தீனத்துக்கு பிறப்புச் சான்றிதழ்

பாலஸ்தீனர்களுக்கு சார்பாக 138 நாடுகள் வாக்களித்துள்ளன.

வாக்கெடுப்புக்கு முன்னதாக அங்கு சபையில் பேசிய பலஸ்தீனத்தின் ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ், 'பலஸ்தினத்துக்கு ஐ.நா பொதுச்சபை பிறப்புச் சான்றிதழ் வழங்குவதற்கான தீர்மானம் இது' என்று கூறினார்.

தமக்கு அங்கீகாரம் தேடி ஐ.நாவுக்கு வந்துள்ள பலஸ்தீன ஜனாதிபதியின் நடவடிக்கையை இஸ்ரேல் கண்டித்துள்ளது. ஐ.நா பொதுச் சபையில் பேசிய ஐ.நாவுக்கான இஸ்ரேலின் தூதுவர் ரொன் ப்ரோஸ்ஸர், பலஸ்தீனம் இஸ்ரேலுடன் பேச்சு நடத்தினால் தான் அமைதி சாத்தியமாகும் என்று கூறினார்.

ஆரம்பம் முதலே பலஸ்தீனத்துக்கு ஆதரவான தீர்மானத்தை எதிர்த்துவந்த அமெரிக்கா, இந்த தீர்மானத்தை 'துரதிர்ஷ்டவசமானது' என்று வர்ணித்திருக்கிறது.

மத்திய கிழக்கில் கிழக்கு ஜெருசலேம், 1967-இல் 6 நாள் போரின்போது இஸ்ரேலால் கைப்பற்றப்பட்ட காஸா பரப்பு ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய மேற்குக் கரையில் 'சுதந்திரமான, இறைமையுள்ள அரசொன்றை' உருவாக்க பலஸ்தீனியர்கள் 63 ஆண்டுகளாகப் போராடி வருகிறார்கள்.

1993-இல் இது தொடர்பில் பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் இணக்கப்பாடு ஒன்றும் ஏற்பட்டது. ஆனால் இரண்டு தசாப்தங்கள் கடந்தும் அங்கு நிரந்தரத் தீர்வு ஏற்படவில்லை.

2011ஆம் ஆண்டு செப்ரெம்பரில், 1967ஆம் ஆண்டுப் படியான எல்லைகளை முன்னிறுத்தி, ஐ.நாவில் முழுமையான உறுப்புரிமை கோரி பலஸ்தீன அதிகார சபையின் தலைவர் அப்பாஸ் முன்வைத்த தீர்மானம் ஐ.நாவின் பாதுகாப்புச் சபையால் நிராகரிக்கப்பட்டது.

அதன் பின்னரே, சற்று கீழிறங்கி, தங்களை 'உறுப்பினர் அல்லாத பார்வையாளராக' அங்கீகரிக்குமாறு ஐ.நாவின் பொதுச் சபையை அப்பாஸ் நாடினார். அதாவது வத்திக்கான் தேசம் அனுபவிக்கின்ற அந்தஸ்து தான் இது.

பலஸ்தீனத்துக்கு முழுமையான உறுப்பினர் அந்தஸ்துகோரி முன்னர் அப்பாஸ் முன்னெடுத்த தீர்மானத்தை 2011இல் பாதுகாப்புச் சபை நிராகரித்தது.

இதுவரை காலமும் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் நிர்வாகத்துக்கு வெறுமனே ஐநாவில் 'நிரந்தர பார்வையாளர்' அந்தஸ்தே இருந்து வந்தது. இன்று பலஸ்தீனத்துக்கு கிடைத்திருக்கின்ற இந்தப் புதிய அங்கீகாரம், அவர்களை ஐ.நாவின் பொதுச்சபை விவாதங்களில் பங்குகொள்ள அனுமதிக்கிறது.

ஐநாவின் துணை நிறுவனங்களிலும் ஐ.சி.சி என்ற சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்திலும் இணைந்துகொள்ளவும் பலஸ்தீனத்துக்கு இனி அங்கீகாரம் கிடைத்துள்ளது.

பலஸ்தீன நிர்வாகம் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் சமவாயத்தில் கைச்சாத்திட்டால், மேற்குக் கரையில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை எதிர்த்து அவர்கள் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவும் வாய்ப்பு இருக்கிறது.

இஸ்ரேலும் அதன் பங்காளிகளும் இதனை எப்படிப் பார்த்தாலும் பலஸ்தீனம் தமக்கான சர்வதேச அங்கீகாரத்தில் இன்னொரு படி முன்னேறி இருக்கிறது என்பதுதான் இந்த அங்கீகாரத்தின் அர்த்தம். 63 ஆண்டுகளாக இதற்காக அவர்கள் நடத்திய விடுதலைப் போருக்கு இப்போது வெற்றி கிடைத்திருக்கிறது.

பலஸ்தீன மக்கள் தங்களுடைய சுதந்திரத்தையும் விடுதலையையும் அனுபவிக்கும் நேரம் இப்போதுதான் கை கூடியிருக்கிறது. 63 வருடங்களாக அந்த மக்கள் அனுபவித்து வந்த துயரங்களுக்கு முடிவு கிடைத்திருக்கிறது. அந்த வெற்றிக் கொண்டாட்டங்களில் அவர்கள் இப்போது திளைத்திருக்கிறார்கள்.

பலஸ்தீனத்தைத் தனியரசாக அங்கீகரிக்கக் கோரி பலஸ்தீன அரசினதும், பலஸ்தீன அதிகார சபையினதும் தலைவரும், பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் நிறைவேற்றுக் குழுத் தலைவருமான மஹ்மூத் அப்பாஸ் ஐக்கிய நாடுகள் சபையில் நேற்று முன் தினம் பிரேரணை ஒன்றை முன்வைத்து உரையாற்றினார். ஐக்கிய நாடுகள் சபையில் பலஸ்தீனத்துக்குத் தற்போதுள்ள விடுதலை இயக்கம் என்ற அந்தஸ்த்தை விடுத்துப் பலஸ்தீனம் என்ற நாடாக தம்மை அங்கீகரிக்கக் கோரியே இந்தப் பிரேரணையை அவர் முன்வைத்தார்.

அவர் தனது உரையில் குறிப்பிட்ட முக்கிய பகுதிகள் இலங்கையில் விடுதலை கேட்டுப் போராடும் தமிழ்மக்களுக்கும் அச்சொட்டாகப் பொருந்தும். அனை அனைத்[illegible] பவித்திருக்கிறார்கள். பலஸ்தீனர்களின் போராட்டத்தை ஒத்ததே தமிழர்களின் போராட்டமும்.

பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் தனது உரையில்,

''உள்நாட்டிலும் புலம் பெயர்ந்தும் அகதிகளாகப் பலஸ்தீன மக்கள் அனுபவிக்கும் துயரம் முடிவுக்கு வந்து விட்டது. தங்களுடைய இடப் பெயர்வை நிறுத்தி தங்களுடைய உரிமைகளைப் பற்றி அவர்கள் சிந்திக்கும் நேரம் இது. பலர் பல தடவைகளில் இடம் பெயர நேரிட்டிருக்கிறது. பல தசாப்தங்களாக இடம் பெயர்ந்தும், ஆக்கிரமிப்பாளர்களால் முடிவற்ற துன்பங்களை அனுபவித்தும் வந்த எனது பெருமைக்குரிய வீரஞ்செறிந்த மக்கள் இந்த உலகின் ஏனைய மக்களைப் போல சுதந்திரமான இறைமையுள்ள தாய்நாட்டில் வாழ்வதற்கான நேரம் வந்து விட்டது.

எங்களுடைய ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் தங்களுடைய இயல்பு வாழ்வை வாழ்வதற்கான நேரம் வந்து விட்டது. நாளை ஒரு மோசமான நாளாக விடியும் என்ற அச்சமின்றியே அவர்கள் இன்று நித்திரைக்குப் போக முடியும். தாய்மார் தங்களுடைய குழந்தைகள் கொல்லப்படாமலோ, ஆபத்தின்றியோ, கைது செய்யப்படாமலோ, நெருக்கடிக்காளாகாமலோ வீடு திரும்புவார்கள் என்ற உத்தரவாதத்துடன் இருக்க முடியும். மாணவர்கள் காவலரண்கள் எதுவுமற்ற சூழ்நிலையில் எவ்வித இடையூறுமின்றிப் பாடசாலைகளுக்கோ பல்கலைக் கழகங்களுக்கோ சென்று வர முடியும். நோயுற்ற மனிதர்கள் எவ்வித இடையூறுமின்றி வைத்தியசாலைக்குச் சென்று வர முடியும். அதற்கான நேரம் இதோ.

சிறை வைக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கானவர்கள் விடுதலை செய்யப்படும் நேரம் வந்துள்ளது. இனி அவர்கள் தங்கள் தங்களுடைய குடும்பங்களுக்குத் திரும்பி தங்களுடைய குழந்தைகளுடன் சேர்ந்து தங்களுடைய தாய் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்'' என்றார்.

1948இல் இருந்து பலஸ்தீனத்துக்கு எதிராக இஸ்ரேல் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்தது. ஆயினும் பலஸ்தீனம் சளைத்துவிடவில்லை. தொடர்ந்து போராடியது. சர்வதேச முயற்சிகளினூடாக மேற்கொள்ளப்பட்டு வந்த பேச்சுக்களில் பலஸ்தீனத் தரப்பு அக்கறையுடனும் இதயசுத்தியுடனும் நேர்மையுடனும் கலந்து கொண்டது. ஆனால் இஸ்ரேல் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை. பதிலாக நிலப்பறிப்பு, திட்டமிட்ட இஸ்ரேலியக் குடியேற்றம் என்பவற்றிலேயே தொடர்ந்தும் கவனம் செலுத்தி வந்தது. இந்நிலையில் இறுதியாகக் கடந்த வருடம் ஆரம்பித்த பேச்சுக்கள் கூட சில வாரங்களிலேயே முடங்கிப்போனது.

இன்னும் எத்தனை காலத்துக்குச் சர்வதேசம் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைப் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறது? என்ற கேள்வியே இப்போது எழுகின்றது.


பலஸ்தீனத்தின் பிரச்சினையும் ஈழத் தமிழர் பிரச்சினையும் ஒரே வகையானவைதான். இரண்டு இடங்களிலும் ஒரே வகையான அடக்குமுறை, ஆக்கிரமிப்பு, இடப்பெயர்வு என்பனவேயே நடக்கின்றன. 68 ஆண்டுகள் போராடிய பலஸ்தீனத்தின் குரலுக்குச் சர்வதேசம் இப்போது செவிசாய்த்திருக்கிறது. அதே போன்று முடிவின்றித் தொடரும் ஈழத்தமிழர் பிரச்சினைக்கும் விரைவில் ஓர் உறுதியான தீர்வு கிடைக்க வேண்டும். இதுவே பலஸ்தீனத்துக்கு அங்கீகாரம் கிடைத்துள்ள இந்த நேரத்தில் தமிழர்கள் விரும்பும் எதிர்பார்ப்பு ஆகும்.

இதேபோன்றதே இலங்கை தமிழர்களின் இனப்பிரச்சினையும். இலங்கை அரசின் இந்த சர்வதிகாரப் போக்கையும் அராஜக ஆட்சியையும் இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் ஐ.நாவும் சர்வதேசமும் பார்த்துக் கொண்டிருக்கப்போகின்றன என்பதே இன்று தமிழர் மனங்களில் எழுகின்ற கேள்வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிப்புக் கலையின் உச்சத்தைத் தொட்டவர்

## கலைஞான பூரணன் பி.யூல்ஸ் கொலின்



■வைரமாவிலான் தவமைந்தன்

> தனது தந்தையின் நாடகங்களில் சிறு பாத்திரங்கள் ஏற்று நடித்து வந்த இவர், ஆரம் என்னும் அண்ணாவியாரின் நெறிப்படுத்தலில் 1975இல் மேடையேறிய இம்மானுவல் என்னும் கூத்தில் முதன் முறையாகத் தோன்றிச் சிறப்புடன் பாடியும் ஆடியும் நடித்தும் எதிர்காலத்தில் பெரும் கூத்துக் கலைஞனாக வரவிருப்பதைக் கட்டியம் கூறி நின்றார்.

செந்தமிழ்ப் பாடல்கள் பல வற்றைப் படைத்தளித்த தமிழ்ப் புலமையாளர்கள் வாழ்ந்த கிராமமாக இருந்தமையால் அந்த ஊருக்குப் பாசெய்யூர் எனக் காரணப் பெயர்வழங்கி வந்ததாகச் சிலர் கூறுகின்றனர். தற்போது பாசையூர் எனும் பெயரால் அழைக்கப்படும் இந்தக்கிராமமானது கூத்துக் கலையின் ஆடுகளமாகத் தொன்று தொட்டு இன்றுவரை விளங்கி வருகின்றமை யாவரும் அறிந்ததே.

எண்ணற்ற கூத்துக் கலைஞர்களை உருவாக்கிய இந்த ஊரின் கலைமகனாக வும் நூற்றி இருபதிற்கும் மேற்பட்ட நாடக ஆற்றுகைகளில் கால் பதித்த ஒப்பற்ற நடிகனாகவும் நாடக நெறியாளனாகவும் எழுத்தாளனாகவும் தென்மோடிக் கூத்து அண்ணாவியாராகவும் பன்முகத்திறன்களோடு கடந்த பல ஆண்டுகளாகக் கலைப் பணியாற்றி வருபவர் கலைஞானச்செல்வன் பி. யூல்ஸ் கொலின்.

அமரர் பிரான்சிஸ் - திருமதி பிலோமினா தம்பதிகளின் மகனாக 23.12.1955இல் பாசையூரில் இவர் பிறந்தார். கொழும்புத்துறை புனித.யோசப் பாடசாலையில் கல்வி கற்ற இவர் அந்தக் காலத்தில் புகழ் பெற்ற கூத்து அண்ணாவியாராகவும் பாடல்களைப் புதிதாக எழுதுகின்ற கவிஞராகவும் இருந்த தனது பேரனாரான முத்துத்துரை என்பவரிடம் கூத்துக் கலையைக் கற்று வந்தார். அத்துடன் கிராமியப் பாடல்கள் அனைத்தையும் இனிமையுடன் பாடும் திறன் கொண்டிருந்த தனது தாயாரிடமும் பல வகையான பாடல்களைக் குழந்தைப் பருவத்திலேயே கற்றுக் கொண்டார்.

அந்தக் காலத்தில் நாடக நெறியாளராக விளங்கிய தனது தந்தையின் நாடகங்களில் சிறு பாத்திரங்கள் ஏற்று நடித்து வந்த இவர் ஆரம் என்னும் அண்ணாவியாரின் நெறிப்படுத்தலில் 1975இல் மேடையேறிய இம்மானுவல் என்னும் கூத்தில் முதன் முறையாகத் தோன்றிச் சிறப்புடன் பாடியும் ஆடியும் நடித்தும் எதிர்காலத்தில் பெரும் கூத்துக் கலைஞனாக வரவிருப்பதைக் கட்டியம் கூறி நின்றார்.

எடுப்பான தோற்றமும் கனகச்சிதமான நடிப்பும் இனிமையான குரலும் கொண்டமைந்த இவர் அண்ணாவியார் அ.பாலதாஸின் ஏராளமான கூத்துக்களிலும் இசைநாடகங்களிலும் நடித்துத் தன்னை மேலும் வளப்படுத்திக் கொண்டதுடன் வளர்பிறை, ஒளிமலர், சாந்தி, அருள், உதயசூரியன், பிரகாஸ், மதுரகான சபா, அலெக்ஸ், சென்யூட், வான்மதி போன்ற பெயர்களில் அந்தக் காலத்தில் இயங்கி வந்த நாடக மன்றங்களின் நாடகத் தயாரிப்புக்களில் முக்கிய பாத்திரமேற்று நடித்து வந்தார்.

1989இல் திருமறைக் கலாமன்றத்தில் இணைந்து கொண்ட இவர் அம்மன்றத்தின் ஆரம்பத்தைத் தொடர்ந்தும் அதிகமான நாடக ஆற்றுகைகளில் சிறப்பு நடிகராக இது

# 71

## சாதனைக் கலைஞரைச்

### சந்திப்போம் சிந்திப்போம்

வரையில் நடித்திருக்கின்றார். அவற்றுள் ஞானசவுந்தரி, சத்திய வேள்வி, ஏழு பிள்ளை நல்லதங்காள், சீகை சிந்தாமணி, வைரமாலி, நீயொரு பாறை, அனைத்தும் அவரே, எஸ்தாக்கியார், ஜெனோவா, சோழன் மகன் போன்ற வரலாற்றுப் படைப்புக்கள் குறிப்பிடத் தக்கவைகள் ஆகும். அத்துடன் அசோகா, தர்சனா, திருச்செல்வ காவியம் போன்ற மௌன நாடகங்களிலும் தனது தனித்துவமான நடிப்பாற்றலை மிக நுட்பமாக வெளிப் படுத்தி வந்துள்ளார்.

இம் மன்றத்தால் ஆண்டு தோறும் மேடையேற்றப்பட்டு வரும் மாபெரும் நாடகப் படைப்பான திருப்பாடுகளின் காட்சியில் பல ஆண்டுகளாக கைப்பாஸ் என்னும் பாத்திரமேற்று அனைவரும் வியக்கும் வண்ணம் நடித்து வருகின்ற இவர் திருமறைக்கலா மன்றத்தின் புலம் பெயர்நாடுகளிற்கான கலைப் பயணங் களிலும் இணைத்துக் கொள்ளப்பட்டவர்.

நாடக அரங்கக் கல்லூரியும் திருமறைக் கலாமன்றமும் இணைந்து நடத்திய இரண்டு ஆண்டு கால நாடக அரங்கப் பயிற்சியில் கலந்து கொண்டு விசேட சித்தி பெற்று அருட் கலாநிதி நீ.மரிய சேவியர், குழந்தை ம.சண்முகலிங்கம் ஆகியோரின் அன்பையும் மதிப்பையும் பாராட்டையும் ஆசீர்வாதத்தையும் நிறைவாகப் பெற்றுக் கொண்ட இக் கலைஞர் பாடசாலை மாணவர்களுக் கான நாடகங்களைப் பயிற்றுவதிலும் களப்பயிற்சிகளை வழங்குவதிலும் இன்றுவரை பெரு விருப்புடன் ஈடுபட்டு வருகின்றார்.

சகல விதமான நாடக அளிக்கை முறைமைகளிலும் துறைதோய்ந்த நடிகராக விளங்கி வருகின்ற இவர் இவ்வழியால் வாருங்கள், ஏழைக் குமரி, பூதத்தம்பி போன்ற சிறு திரைப்படங்களிலும் சித்திரம் என்னும் தொலைக்காட்சி நாடகத் தொடரிலும் நடித்ததுடன் ரூபவாஹினியில் ஒளிபரப்பப்பட்ட அனைத்தும் அவரே, களங்கம் போன்ற கூத்துக்களிலும் நடித்ததுடன் இன்றுவரை இத்துறையின் முன்னணி நடிகராகவும் விளங்கி வருகின்றார்.

சுருதி, இலயம் தவறாமல் பாடியவாறு, பாத்திரத்தின் தன்மையில் இருந்து நாடகம் முடியும் வரை விடுபடாமல் மிகைப்படுத்தல் இல்லாமல் பொருத்தமாகவும் அளவாகவும் அழகாகவும் நடிக்கும் இயல்புடைய இவர் ஈழத்தின் தமிழ் நாடகக் கலைத் துறையில் எடுத்துக் காட்டான சிறந்த நடிகராக நாடகப் பேராசான்களால் மதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

"நாட்டுக் கூத்தின் விளை நிலமாக விளங்குகின்ற பாசையூரின் கலையெழில் சூழல் என்னைக் கலைத்துறையில் ஈடுபட வைத்தது. அதன் பின் அருட் தந்தை நீ. மரியசேவியர்அடிகளாரின் அருளாசியால் நாடறிந்த, உலகறிந்த நடிகனானேன். எனது உயிரிலும் மேலான கூத்துக் கலையையும் எனது ஊரையும் என்னை உருவாக்கிய அத்தனை பேரையும் என் மனதால் தினமும் வணங்கிக் கொள்கிறேன்.

தமிழரின் அடையாளமாக விளங்குகின்ற தென்மோடிக் கூத்தினை நாம் அனைவரும் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது என்றே நான் கருதுகின்றேன். தேசிய மட்டத்தில் நடைபெற்று வருகின்ற தமிழ்த் தினப்போட்டிகளில் நடுவர்களாக வருகின்ற ஒவ்வொருவரும் தமது பகுதியில் நிகழ்த்தப்படுவதே உண்மையான தென்மோடி என்று வாதிட்டு வருகின்றனர்.

எனவே ஈழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இருக்கும் அண்ணாவிமார்களும் ஒன்றாக இணைந்து ஒரு குரலில் இதுதான் உண்மையான தென்மோடி வடிவம் என்பதைத் தெளிவுபடுத்திக் கூறி இப்பிரச்சினையைத் தீர்க்க முன்வர வேண்டும்" என்று தனது வலிமையான கருத்துக்களை இவர் உறுதியுடன் கூறுகின்றார்.

மனித உயிர் உடலைவிட்டுப்
பிரிந்து செல்லும்போது அந்த
மனித உயிர் சேருமிடம்
மோட்சமென்றும் நரகமென்றும்
விதி சமைத்தார் நாம் வணங்கும்
வானுலகின் மா இறைவன் -
விதி அமைக்கப் பரமாத்துமன்
பரம்பொருளாய் விளங்குமந்தப்
பரமனோடு வாழ்தல் வேண்டில்
பத்திரமாய் நடக்க வேண்டும்
சிரமத்தோடு - பக்தியோடு
நற்செயல்கள் ஆற்றவேண்டும்
பகையொழித்துப் பரமன் சொன்ன
நன்மை தரும் அறப்பத்துத்
தகையறிந்து நடப்போர் அமர
இனத்தராகி மோட்சம் செல்வர்
ஆனால் சில மனிதர்கள் - தாம்
செய்வதெல்லாம் மானிடர்க்குத்
தேனாய்ப் பல நன்மை செய்யும்
உச்சத்திலே ஏற்றி வைக்கும்
என்றபடி நடக்கிறார்கள்




மடமையினை விதைக்கிறார்கள்
காலத்தின் சுழற்சியிலே
பாயில் விழும் அவர்கள் நோயின்
வேகத்தில் வாதையுற்று
அழுந்தும்போது இறைவா என்று
கைகெடுத்துத் தொழுகிறார்கள் -
காத்திடு நீ என்கிறார்கள்
வாய் திறந்து கடவுள் குரல்
வானின் வழி ஒலித்திட்டது
"மன்னித்தேன் பல தடவை
அசட்டையே செய்திட்டீர்கள்
மன்னித்தேன் என்று இனிச்
சொல்லவே மாட்டேன்" என்று
பதில் தந்து உணர்த்திற்றிங்கே
"வளர்கின்ற இளைஞர் பாவத்
திகிலற்று வாழ நீங்கள்
நரகமாம் சேற்றுள் வீழ்வீர் -
மோசடிப் பேர்களோடு
இணைந்துமே என்னுடைய
பாதடி நினைத்திடாமல்
அழுந்தியே வதை படுவீர்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடிகளில் புரளும்


டானியல் கிறேய்க்

■ ஆதங்கன்

பிரிட்டனின் அடையாளங்களில் ஒன்று ஜேம்ஸ் பொண்ட் என்ற கற்பனைக் கதாபாத்திரம். நூலுருவில் நாவலாக வந்து விற்பனையில் சாதனை படைத்த ஜேம்ஸ் பொண்ட் பாத்திரத்தை திரையிலும் உலவவிட்டார்கள். உலகெங்கும் ஜேம்ஸ் பொண்டுக்கு இலட்சக்கணக்கான ரசிகர்கள் தோன்ற, ஒரு தொடர்போல ஜேம்ஸ் பொண்ட் திரைப்படங்கள் வெளிவரத்தொடங்கின. வசூலிலும் இந்தப் படங்கள் வஞ்சகம் செய்யவில்லை. படத்தின் கதை ஏற்கனவே வெளிவந்த முன்னைய ஜேம்ஸ் பொண்ட் கதைகளை ஒத்திருந்தாலும் கூட, பார்வையாளர்கள் ஒரு போதையைப் போல ஜேம்ஸ் பொண்டை விரும்பினர்.

ஜேம்ஸ் பொண்ட் ஒரு பிரிட்டன் உளவாளி. 007 என்ற இரகசியக் குறியீட்டுடன் வலம் வரும் ஜேம்ஸ் பொண்ட், தன் சாகசங்கள் மூலம் எதிராளிகளின் இரகசியத்தைத் திருடுவார். இல்லாவிட்டால் பிரிட்டனின் இரகசியங்கள் அல்லது ஆயுதங்கள் தவறானவர்களின் கைகளுக்குப் போகவிடாமல் தடுப்பார். இதில் பிரிட்டன் தன்னுடைய பனிப்போர்க் கால எதிரிகளான ரஷ்யா, சீனா, வியட்னாம், ஜேர்மன் போன்ற நாடுகளையே 'தவறானவர்களாக' சித்திரித்தது. இந்த நாடுகளில் குதிக்கும் பொண்ட் எதிரணியின் கோட்டைக்குள் கோட் சூட் போட்டபடி துப்பாக்கியில் புகை பறக்க நடத்தும் அதிரடி வேட்டைகள் ஒருபோதும் யதார்த்தத்துக்கு ஒத்துவராதவை. நடைமுறை வாழ்விலிருந்து ஜேம்ஸ் பொண்டின் வாழ்வுக்கு ஏணி வைத்தாலும் எட்டாது. எனினும் தமது எதிரிகளை திரையிலேனும் தோற்கடிப்பதற்காக பிரிட்டன் மக்கள் ஜேம்ஸ் பொண்டின் தொடர்ச்சியான இருப்பை விரும்பினர். இதனால் 1962 இலிருந்து இன்றுவரை ஜேம்ஸ் பொண்ட் படங்கள் வந்தபடியே இருக்கின்றன.

ஜேம்ஸ் பொண்டாக நடிப்பதற்கு பிரிட்டன் நடிகர்களிடையே பெரும் போட்டி எப்போதும் இருக்கும். அதிர்ஷ்டம் அடிக்கும்வரை அவர்கள் காத்திருக்க வேண்டும். ஜேம்ஸ் பொண்ட் நடிகர்களுக்கு சில பொதுவான குணங்கள் இருக்க வேண்டும்.

1. 6 அடி 1 அங்குலத்துக்குக் குறையாத உயரம்

2. எப்போதும் கூர்மையான தன்மையை வெளிப்படுத்தக் கூடிய கண்கள்

3. ஆழ்ந்த யோசனையைக் காண்பிக்கும் நெற்றிச் சுருக்கங்கள்

4. எடுத்த எடுப்பிலேயே பெண்களைக் கவிழ்க்கும் வசீகரம்

5. அலட்டல் இல்லாமல் அதிரடி செய்துவிட்டு வெளியேறும் அமைதியான அதேநேரம் ஆழத்தை வெளிப்படுத்தும் வகையில் (எப்போதும் ஒரே பாவனையில் எல்லா உணர்ச்சிகளையும் காட்டக்கூடிய) முக அமைப்பு

6. கட்டுக்குலையாத தேகம்

7. ஜேம்ஸ் பொண்ட் பாத்திரம் எப்போதாவது இருந்துவிட்டே கோட் சூட்டைக் கழற்றும். எனவே கோட் சூட் அணிந்தாலும் ஒரு இராணுவக் கம்பீரத்தைக் காட்டக்கூடிய உடல்வாகு.

இவ்வளவும் இருப்பவர்களுக்கே ஜேம்ஸ் பொண்டாக திரையில் தோன்றும் வாய்ப்பு வாசற்கதவில் வந்து தட்டும். அத்தோடு கோடிகளையும் கொட்டும். இதுவரை 6 பேர் ஜேம்ஸ் பொண்டாக திரையில் வாழ்ந்திருக்கிறார்கள். மக்களின் மனங்களைக் கட்டிப்போட்ட இந்த ஜேம்ஸ் பொண்ட் நடிகர்கள் பற்றி ஒரு சிறிய நோக்கு.

1. சீன் கொனறி

1930 ஆம் ஆண்டு பிறந்த சீன் கொனறிதான் ஜேம்ஸ் பொண்டுக்கு உயிர்கொடுத்த முதல் நடிகர். துறு துறுவென்ற சுபாவம் மிக்கவர். ஜேம்ஸ் பொண்டாக இவரையே ரசிகர்கள் உருவகித்தார்கள். 1962 இல் வெளிவந்த 'டொக்டர் நோ' முதலாவது ஜேம்ஸ் பொண்ட் படத்திலேயே உலகெங்கும் பிரபலமாகிவிட்டார். அதன்பின்னர் அவர் 7 படங்களில் ஜேம்ஸ் பொண்டாக உருவெடுத்தார்.


சீன் கொனறி

எனினும் இடையே (1969இல்) இவருக்குப் போட்டியாக இடையே நுழைந்த ஜோர்ஜ் லாஸன்பியைத் தோற்கடித்து அடுத்த படங்களில் மீண்டும் ஜேம்ஸ் ஆக முடிசூடினார். ஆயினும் இவருக்குப் பலமான போட்டியாளராக உள்நுழைந்தார் றோஜர் மூர்.


1973 இலிருந்து 1983 வரை சீன் கொனறி அஞ்ஞாதவாசம் செல்லுமளவுக்கு றோஜர் மூரின் ஆட்சி பலமாக இருந்தது. ஆயினும் மீண்டும் 1983 ஆம் ஆண்டுதன்னுடைய கடைசி ஜேம்ஸ் பொண்ட் படத்தில் தோன்றி ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார் சீன் கொனறி. தன்னுடைய முதலாவது படத்துக்கு ஒரு இலட்சம் அமெரிக்க டொலர்களைச் சம்பளமாகப் பெற்ற சீன் கொனறி கடைசிப் படத்துக்குப் பெற்ற சம்பளத்தின் பெறுமதி 50 இலட்சம் அமெரிக்க டொலர்கள்.

சீன் கொனறி ஜேம்ஸ் பொண்டாக நடித்த படங்கள்:

1. டொக்டர் நோ - 1962
2. ஃபுறம் ரஷ்யா வித் லவ் - 1963
3. கோல்ட் ஃபிங்கர் - 1964
4. தண்டர் ஃபோல் - 1965
5. யூ ஒன்லி லிவ் ருவைஸ் - 1967
6. டைமண்ட்ஸ் ஆர் ஃபொரெவர் - 1971
7. நெவர் சே நெவர் எகெய்ன் - 1983

2. ஜோர்ஜ் லாஸன்பி

1939ஆம் ஆண்டு பிறந்தவர் ஜோர்ஜ் லாஸன்பி. ஜேம்ஸ் பொண்ட் நடிகர்களிலேயே ராசி இல்லாதவர் என்று முத்திரை குத்தப்பட்ட துர்ப்பாக்கியசாலி. கையின் அளவைவிட மிகச்சிறிய


ரிமோத்

# போடா போடி

தீபாவளிக்கு வெளிவந்த படங்களில் ஒன்றுதான் 'போடா போடி'. சிலம்பரசன், வரலட்சுமி எனும் திரையுலகப் பிரபலங்களின் வாரிசுகள் பிரதான பாத்திரமேற்று நடித்துள்ள படம். தன் அடுக்குமொழி வசனங்களால் ஆரம்பகாலத்தில் ஈர்ப்பையும் பிற்காலத்தில் கிண்டலையும் சம்பாதித்துக் கொண்ட டி.ராஜேந்தரின் மகன்தான் சிம்பு என்கிற சிலம்பரசன் என்பது எல்லோருக்கும் தெரியும். ஏற்கனவே பல படங்களில் இவர் நடித்திருக்கிறார். சில படங்களில் கிழித்தும் இருக்கிறார். கிழி வாங்கியும் இருக்கிறார். தந்தைக்கு தலைமுடியும் தாடியும் அடுக்கு வசனங்களும் தான் அடையாளம் என்றால் இவருக்கோ விரல்வித்தையும், சர்ச்சைகளும், இடைநடுவில் முறிந்துபோகும் காதல்களும் அடையாளங்கள்.

இத்தகைய சர்வவல்லமை பொருந்திய நாயகவிம்பமான சிம்புவோடு இணைந்துள்ளார் வரலட்சுமி. இவர் நடிகர் சரத்குமாரின் மகள். வரலட்சுமியின் முதற்படம் இதுதான். போடா போடி சொல்லவரும் கதை சாதாரணமானதுதான்.

லண்டனில் வாழும் நாயகன் சிம்பு காதலிக்கலாமா? வேண்டாமா? என்ற குழப்பத்துடன் அலைகிறார். இறுதியாக காதலிக்கலாம் என்ற முடிவு செய்து நாயகியான வரலட்சுமியைச் சந்திக்கிறார்.

வரலட்சுமி லண்டனில் ஒரு நடன வகுப்பில் சேர்ந்து நடனம் கற்றுக் கொண்டிருக்கிறார். லண்டனில் நடக்கும் நடன நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வெற்றிபெற வேண்டும் என்பதே இவரது குறிக்கோள்.

இதற்கிடையே சிம்புவுக்கும், வரலட்சுமிக்கும் இடையே காதல் மலர்கிறது. சிம்புவுக்கு தன் காதலி நடனப் பள்ளிக்கு செல்வது, அங்கு மற்றவர்களுடன் சேர்ந்து நடனமாடுவது, அவள் நண்பர்களுடன் சகஜமாகக் கட்டி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 007




பிஸ்டலை ஏந்திய முதலாவது ஜேம்ஸ் பொண்ட் இவர்தான். ஜேம்ஸ் பொண்டாக சீன் கொனறி ரசிகர்களின் மனதில் நிரந்தரமாகக் குடியிருந்த காலத்தில் அறிமுகமானதால், வந்த வேகத்திலேயே திரும்பவேண்டிய நிலை ஏற்பட்டது. இவர் 1969 இல் வெளியான 'ஒன் ஹேர் மஜஸ்ரிஸ் சேர்விஸ்' என்ற படத்தில் மட்டுமே நடித்தார். இதில் இவருக்கு வழங்கப்பட்ட சம்பளம் 50 ஆயிரம் பவுண்ட்ஸ் மாத்திரமே.

3. ரோஜர் மூர்


1927 இல் பிறந்தவர். வசீகரமான முகத்தோற்றம் கொண்டவர். ஜேம்ஸ் பொண்ட் என்றாலே சீன் கொனறிதான் என்ற அசைக்கமுடியாத கருத்தை மாற்றியமைத்தவர். ஏற்கனவே சீன் கொனறியுடன் மோதமுடியாமல் ஜோர்ஜ் லாஸன்பி மூக்கு உடைபட்ட பின்னர் ஜேம்ஸ் பொண்டாக துணிந்து நடித்தார். இவரின் நடிப்பில் ரசிகர்கள் மயங்கிப் போக ஜேம்ஸ் பொண்ட் என்ற சிம்மாசனத்தில் இருந்து சீன் கொனறி தூக்கியெறியப்பட்டார். எனினும் ஒரு கட்டத்தில் இவரது நடிப்பும் ரசிகர்களுக்கு புளித்துப் போகத் தொடங்கியது. இதனால் ஒரே வருடத்தில் (1983 இல்) சீன் கொனறியும், ரோஜர் மூரும் தனித்தனியாக நடித்த இரண்டு படங்களை ரசிகர்கள் பார்க்கும் வாய்ப்புக் கிட்டியது. ஆயினும் 1983ஆம் ஆண்டு வெளியான இரு படங்களிலும் ரோஜர் மூர் நடித்த 'ஒக்ரோபஸ்ஸி' யே ரசிகர்களை அதிகம் கவர்ந்தது. இதனால் அடுத்த படத்திலும் 007 ஆகும் வாய்ப்பை ரோஜர் மூர் பெற்றார். இவர் கடைசியாக நடித்த படத்துக்கு 75 இலட்சம் அமெரிக்க டொலர்களை வேதனமாகப் பெற்றார்.

ரோஜர் மூர் நடித்த ஜேம்ஸ் பொண்ட் படங்கள்:

1. லிவ் அன்ட் லெட் டை - 1973
2. த மான் வித் த கோல்டன் கன் - 1974
3. த ஸ்பை ஹூ லவ்ட் மீ - 1977
4. மூன் ரேகர் - 1979
5. ஃபோர் யுவர் ஐஸ் ஒன்லி - 1981
6. ஒக்ரோபஸ்ஸி - 1983
7. ஏ வியூ ரூ ஏ கில் - 1985

4. திமோத்தி டல்டன்

இவர் 1946 இல் பிறந்தவர். எனினும் இவரால் சீன் கொனறி போன்றோ ரோஜர் மூர் போன்றோ அதிக காலம் 007 பாத்திரத்தில் நிலைக்க முடியவில்லை. இரண்டு படங்களில் ஜேம்ஸ் பொண்டாக தோன்றியதோடு




திருப்திப்பட்டுக்கொண்டார். நீலக் கண்களைக் கொண்ட ஜேம்ஸ் பொண்டாக இவர் அடையாளப்படுத்தப்பட்டார். இவர் கடைசியாக 50 இலட்சம் அமெரிக்க டொலர்களைச் சம்பளமாக அள்ளினார்.

திமோத்தி டல்டன் ஜேம்ஸ் பொண்ட் படங்கள்:

1. த லிவிங் டே லைற்ஸ் - 1987
2. லைஸன்ஸ் ரு கில் - 1989

5. பியர்ஸ் பிரஸ்னன்

1953 இல் பிறந்தவர். அயர்லாந்தைத் தாயகமாகக் கொண்டவர். இன்றைய தலைமுறைக்கு ஜேம்ஸ் பொண்டாக அறிமுகமாகியவர் இவர்தான். இதற்கு முன்னர் இருந்த ஜேம்ஸ் பொண்ட்களின் காலத்தை ஒரேயடியாகக் கடந்து உடற்பலம், தொழில்நுட்பம் இரண்டையும் கலந்துகட்டி எதிரிகளை வீழ்த்தும் உத்திகளோடு பியர்ஸ் பிரஸ்னன் ஜேம்ஸ் பொண்டாக திரையில் பிரசவமானார். இவரின் இளமையும், ''மை நேம் இஸ் பொண்ட். ஜேம்ஸ் பொண்ட்'' என்று எதிரிகளிடமும் தடாலடியாகத் தன்னை அறிமுகப்படுத்தும் பாணியும், சண்டைக் காட்சிகளில் காட்டும் வேகமும், காதல் காட்சிகளில் புகுந்து விளையாடும் வித்தையும் கொண்டவராக ஜேம்ஸ் பொண்டுக்கு நவீன வடிவம் கொடுத்தார். பிரஸ்னன் 4 படங்களில் 007 ஆகத் தோன்றி ரசிகர்களைக் கிறங்கடித்தார். கடைசிப் படத்துக்கு இவர் பெற்ற சம்பளம் 1 கோடி 65 இலட்சம் அமெரிக்க டொலர்கள் மட்டுந்தானாம்.

பியர்ஸ் பிரஸ்னன் நடித்த ஜேம்ஸ் பொண்ட் படங்கள்:

1. கோல்டன் ஐ - 1995
2. ருமாறோ நெவர் டைஸ் - 1997
3. த வேர்ல்ட் இஸ் நொட் இனஃப் - 1999
4. டை எனெதர் டே - 2002

6. டானியல் கிறேய்க்

1968 இல் பிறந்த டானியல் கிறேய்க் தான் இப்போதைய ஜேம்ஸ் பொண்ட். எதிர்பார்த்ததைப் போல ரசிகர்களை இவர் கவராவிட்டாலும், டானியல் நடித்த படங்கள் தோற்கவில்லை. இதனால் 3 படங்களில் ஜேம்ஸ் பொண்டாக உருமாறும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது.

வழமையாக படங்களின் முடிவில் வாகை சூடும் ஜேம்ஸ் பொண்ட் பாத்திரத்தின் தன்மை டானியல் கிரேய்க்கின் வருகையின் பின் அடியோடு மாறிப்போனது. மெதுவான திரைக்கதை, இழையோடும் காதல், வெளிவர முடியாத சூழ்ச்சிகள், தலைமறைவு வாழ்க்கை, கடைசியிலும் எதிரியிடம் தோற்றல் என்று ஒரு தோல்வியின் நாயகனாக டானியல் கிறேய்க் ஜேம்ஸ் பொண்டை திரையில் கொண்டுவந்துள்ளார். வழமையான சாகசங்கள் நீங்கப்பெற்ற சாதாரண உளவாளியாக 007 உலவுவது டானியல் கிறேய்க்கின் படங்களில் தான். இவர் 2012 இல் வெளிவந்த 'ஸ்கை ஃபால்' படத்துக்காக வாங்கிய வேதனம் ஒரு கோடி 71 இலட்சம் அமெரிக்க டொலர்கள்.

டானியல் கிறேய்க் நடித்த ஜேம்ஸ் பொண்ட் படங்கள்:

1. கசினோ றோயல் - 2006
2. குவொன்டம் ஒஃப் சோலஸ் - 2008
3. ஸ்கை ஃபால் - 2012

இந்த ஆறு நடிகர்களோடு மட்டும் ஜேம்ஸ் பொண்டின் சகாப்தம் ஓய்ந்துவிடப்போவதில்லை. சாகசங்களை விரும்பும் ரசிகர்கள் இருக்கும் மட்டும் வெவ்வேறு நடிகர்களின் உடலில் ஜேம்ஸ் பொண்ட் தன் வேட்டையை நிகழ்த்துவது தொடரும்.







## விமர்சனம்

அணைப்பது, முத்தமிடுவது போன்ற நடவடிக்கைகள் பிடிக்கவில்லை.

இதனால் இவர்களது காதலில் விரிசல் விழ ஆரம்பிக்கிறது. இதன்காரணமாக இருவரும் பிரிய முடிவு செய்கிறார்கள். ஆனால், ஒருவர் மற்றொருவர் மீது கொண்டுள்ள ஆழமான காதலால் பிரிய முடியாமல் தவிக்கிறார்கள்.

சிம்பு தனது பிறந்த நாளன்று வீட்டில் யாருமில்லை எனக் கூறி நாயகியை வீட்டுக்கு வரவழைக்கிறார். அங்கு இருவரும் நெருக்கமாக இருக்கிறார்கள்.

அப்போது, சிம்புவுக்கு தெரியாமலேயே அவரது பிறந்தநாளைக் கொண்டாட நினைக்கும் அவரது சித்தப்பா கணேஷும், அவரது மனைவியும் இவர்களைப் பார்த்துவிடுகிறார்கள்.

உடனே, இருவரையும் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று அறிவுறுத்துகிறார்கள். இதற்கு இருவரும் ஒப்புக் கொள்கிறார்கள்.

ஆனால் இதற்கு சிம்பு சில நிபந்தனைகள் போடுகிறார். அதன்படி, நடனப் பள்ளிக்கு போகக்கூடாது. மற்றவர்களுடன் நெருக்கமாகப் பழகக் கூடாது என்று வரலட்சுமிக்கு கட்டளையிடுகிறார். இது தனக்கு ஒத்துவராது என்று வரலட்சுமி கோபித்துக்கொண்டு சென்றுவிடுகிறார்.

பின்பு, ''ஒருநாள் உன் பேச்சை நான் கேட்கவேண்டும். மற்றொரு நாள் என் பேச்சை நீ கேட்கவேண்டும்'' என்ற நிபந்தனையோடு வரலட்சுமி திருமணத்துக்கு சம்மதிக்கிறார். இதற்கு சிம்புவும் சம்மதிக்கிறார். இருவருக்கும் திருமணம் நடக்கிறது.

வரலட்சுமியை நடனப் பள்ளிக்கு செல்லவிடாமல் தடுக்க இருவரும் குழந்தை பெற்றுக் கொள்ளுமாறு சிம்புவுக்கு கணேஷ் யோசனை கூறுகிறார். அதன்படி, சிம்புவும் வரலட்சுமியும் சேர்ந்து குழந்தை பெற்றுக் கொள்கிறார்கள்.

இதைப்பற்றி ஒன்றும் அறியாத வரலட்சுமி, ஒருகட்டத்தில் இவர்களின் திட்டத்தை அறிந்து கொள்கிறார்.

இதுகுறித்து சிம்புவுடன் சண்டை போட, அப்போது எதிர்பாராத விதமாக இவர்களின் குழந்தை விபத்தில் சிக்கி இறந்துவிடுகிறது. இதனால் விரக்தியடைந்த வரலட்சுமி சிம்புவைப் பிரிந்து செல்கிறார்.

இறுதியில் இவர்கள் இருவரும் இணைந்தார்களா? வரலட்சுமியின் நடனக் கலைஞர் ஆசை நிறைவேறியதா? என்பதே மீதிக்கதை.

இப்படத்தில் சிம்பு இளமைத் துடிப்புடன், மிடுக்கான இளைஞனாக வலம் வருகிறார்.

தனது முந்தைய படங்களில் உள்ளது போல், பஞ்ச் வசனங்களும், பறந்து பறந்து அடிக்கும் சண்டைக் காட்சிகளும் இல்லாமல் மென்மையான நடிப்பில், ஆக்ரோஷமான வசனங்களைக் குடும்பப் பாணியில் பேசியிருப்பது ஆறுதல் தருகிறது.

அம்மாவின் அழகையும், அப்பாவின் கம்பீரத்தை சேர்த்துச் செய்த கலவையாக இருக்கும் வரலட்சுமி அறிமுகப்படத்திலேயே கலக்கி இருக்கிறார்.

இந்தப் படத்துக்காக சிறந்த அறிமுக நடிகைக்கான விருது தனக்குக் கிடைப்பது உறுதி என்று நம்பவும் செய்கிறார் வரலட்சுமி.

முற்பாதியில் கதை எங்கு செல்கிறது என்பது சற்று சிந்திக்க வைத்தாலும், பிற்பாதியில் கதையை விறுவிறுப்பாக நகர்த்தியிருக்கிறார் இயக்குனர் விக்னேஷ் சிவன். முழுக்க முழுக்க இளைஞர்களுக்காகவே இப்படத்தை இயக்கியிருக்கிறார்.

தரண் இசையில் பாடல்கள் குத்தாட்டம் போட வைக்கின்றன. பின்னணி இசையிலும் பட்டையைக் கிளப்பியிருக்கிறார்.

ஒளிப்பதிவாளர் டன்கன் டெல்போர்ட் ஒளிப்பதிவில் லண்டனின் அழகை மேலும் அழகாகக் காட்டியிருக்கிறார். படத்தின் இளமையான தோற்றத்துக்கு இவரும் ஒரு முக்கிய காரணகர்த்தா என்றால் அது மிகையல்ல.

நாகரிகம் எவ்வளவுதான் வளர்ந்தாலும், எந்த நாட்டில் இருந்தாலும் தமிழர்களின் பாசமும், பண்பாடும் என்றுமே மாறாது என்பதைச் சொல்ல வந்துள்ளார்.

எனினும் அதில் பாதியளவே வெற்றி கண்டுள்ளார். என்றாலும் ஒரு குழந்தைக்குத் தந்தையாக நடிக்கும் துணிச்சல் சிம்புவுக்கு வந்ததைப் பாராட்டத்தான் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

02.12.2012 முதல் 08.12.2012 வரை

தருபவர் - வித்தியா

**மேஷம்**- ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து எளிய வாழ்க்கை நடத்துவீர்கள். தாய்வழி உறவினரிடம் அதிருப்தி மனதுடன் பேச வேண்டாம். எதிரியின் அவதூறு பேச்சுக்களைப் பொருட்படுத்தாமல், சொந்தப் பணியில் கவனம் கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் சில நடைமுறை மாற்றம் செய்து உற்பத்தி, விற்பனையில் முன்னேற்றம் காண்பீர்கள். பணியாளர்கள் உடல்நலம் சீராக பாதுகாத்து பணிகளை ஆர்வத்துடன் நிறைவேற்றுவது அவசியம். பெண்கள், குடும்ப நலன் பேணுவதில் கூடுதல் அக்கறையுடன் செயற்படுவர். மாணவர்கள், வெளிவட்டாரப் பழக்கத்தைக் குறைத்து படிப்பில் கவனம் செலுத்தவும்.

**இடபம்**- தாழ்வு மனப்பான்மைக்கு தவிர்த்து லட்சிய மனதுடன் செயற்படுவதால், அளவற்ற நன்மை கிடைக்கும். இடம், சூழ்நிலை உணர்ந்து பேசி நற்பெயர் பெறுவீர்கள். நோய் தொந்தரவு குறைந்து உடல் நலம் ஆரோக்கியம் பெறும். நண்பருக்கு உதவியாகக் கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும். அலைச்சல் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி செய்ய அனுகூல நிலை உருவாகும். பெண்களுக்கு, விரும்பிய பொருட்கள் வாங்க கணவரிடம், எதிர்பார்த்த பணவசதி கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்த வேண்டும்.

**மிதுனம்**- குடும்ப உறுப்பினர்களின் கவனக்குறைவான செயல்களை இதமுடன் கண்டித்து நல்வழி நடத்துவீர்கள். குடும்பத் தேவைகளை நிறைவேற்ற, போதுமான பணவசதி துணை நிற்கும். ஓரளவு சமூகப்பணி புரிந்து, நல்லவர்களின் அன்பு, ஆசி பெறுவீர்கள். எதிரியின் தொல்லை அணுகாத வகையில், சந்தோஷமான வாழ்க்கைமுறை பெறுவீர்கள். இல்லறத்துணை, உங்கள் கருத்துக்களை மதித்து நடந்து, கூடுதல் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை செழித்து உபரி பணவரவு கிடைக்கும். பணியாளர் கூடுதல் வேலை வாய்ப்பு, சம்பள உயர்வு பெறுவர். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவர்.

**கடகம்**- மனதில் புத்துணர்வுடன் செயற்பட்டு நிலுவையில் உள்ள முக்கியமான பணிகளை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த பணவரவு திருப்திகரமாக கிடைக்கும். புத்திரரின் உடல்நலம், ஆரோக்கியம் பெற சிறியளவிலான மருத்துவ சிகிச்சை உதவும். நிர்ப்பந்த பணக்கடனில் ஒரு பகுதி செலுத்தி ஓரளவு நிம்மதி அடைவீர்கள். நண்பரிடம் முன்னர் கேட்ட உதவி எதிர்பாராத வகையில் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனத்துடன் அபிவிருத்திப் பணி செய்வீர்கள். மாணவர்கள், ஞாபகத்திறன் வளர்ந்து, படிப்பில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

**சிங்கம்**- மனதில் உருவாகும் குழப்பமான எண்ணங்களை உங்கள் நலம் விரும்புபவரின் ஆலோசனைபெற்று மாற்றுவீர்கள். உங்களை அவமதித்துப் பேசுபவர்களிடம் விலகுவதால் சில நன்மை பெறுவீர்கள். இளைய சகோதரர் நல் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வர். புத்திரரின் விருப்பங்களை பண வசதிக்கேற்ப நிறைவேற்றி மகிழ்வீர்கள். அரசு தொடர்பான அனுகூலம் பெறுவதில் தாமதம் இருக்கும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சிறக்க நண்பரின் உதவி கிடைக்கும். பணியாளர்கள் சிறப்பாகச் செயற்பட்டு அதிக பணவரவு பெறுவர். மாணவர்கள், தகுந்த பயிற்சியால் மட்டுமே நல்ல தரதேர்ச்சி பெற இயலும்.

**கன்னி**- இனிய வார்த்தைபேசி நண்பர், உறவினரை வசீகரிப்பீர்கள். குடும்பத் தேவைகளை நிறைவேற்ற, சிக்கன பணச்செலவு செய்து, சிரமம் அணுகாமல் பாதுகாத்திடுவீர்கள். பொது இடங்களில் நடைபெறும் விவகாரங்களை வேடிக்கை பார்ப்பதைத் தவிர்ப்பது நல்லது. உடல்நல ஆரோக்கியம் சீராக இருக்கும். இல்லறத்துணை அன்பு, பாசத்துடன் நடந்து, உங்களின் செயல்கள் நிறைவேற ஆலோசனை, உதவி வழங்குவர். அரச பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகைப்பயன், பதவி உயர்வு கிடைக்கும்.

**துலாம்**- உங்கள் வாழ்வியல் நடைமுறையின் சிறப்பைப் பார்த்து பலரும் வியப்படைவர். இதனால் உங்களின் பணப்புழக்கத்தினை நடைமுறைக்கையில் சில மாற்றம் பின்பற்றுவீர்கள். புத்திரர் தகுதி, திறமை வளர்த்து, படிப்பில் முன்னேறத் தேவையான உதவி செய்வீர்கள். உடல்நல ஆரோக்கியம் பலம்பெற, நல்ல பழக்க வழக்கங்களைப் பின்பற்றுவீர்கள். இல்லறத்துணையுடன், குடும்ப உறவினர் சுபநிகழ்ச்சியில் கலந்து கொண்டு அன்பும், நல்ல உபசரிப்பும் கிடைக்கப் பெறுவீர்கள். பணியாளர்களுக்கு கிடைக்கிற கூடுதல் வேலை வாய்ப்பை மனமுவந்து ஏற்றுக்கொள்வர். பணவரவு அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் நன்மையடைவர்.

**விருச்சிகம்**- உங்கள் வாழ்வில் தேவைகளை உணர்ந்து உரிய பணிகளில் ஈடுபடுவீர்கள். சான்றோர், உங்களின் நலம் விரும்புபவரின் ஆசி, ஆலோசனை கிடைத்து முன்னேற்ற வழியில் நடைபோடுவீர்கள். மறைமுகமாக உங்களுக்கு எதிரிடை செய்பவரை அடையாளம் காண்பீர்கள். உத்தியோகத்தர், நிர்வாகத்தின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற பணியாளர்களை அனுசரித்து வேலை வாங்குவது நல்லது. குடும்பப்பெண்கள், பணச்செலவில் சிக்கனம் பின்பற்றி, சேமிப்பை அதிகரிப்பர். மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்த வேண்டும்.

**தனுசு** - மனதில் உறுதியான எண்ணங்கள் உதயமாகும். வாழ்வு வளம்பெற புதிய திட்டங்களைச் செயற்படுத்துவீர்கள். வெளியூர் பயணம் நல்லவிதமாக அமைந்து இனிய அனுபவங்களைத் தரும். புத்திரர், சக மாணவர்களுடன் கருத்துபேதம் கொள்கிற சிரமமான சூழ்நிலை உள்ளது. உரிய வழிகாட்டுதல் தந்து அவர்கள் மனதில் தைரியம் வளர்ப்பீர்கள். உடல் நல ஆரோக்கியம் சீராக இருக்கும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். உத்தியோகத்தர்களுக்கு சலுகை பயன் கிடைக்கும். மாணவர்கள் காரம் நிறைந்த உணவு வகை உண்பதை தவிர்ப்பதால் உடல் நல ஆரோக்கியம் பலம் பெறும்.

**மகரம்** - வாழ்வில் நிறைவேற்ற வேண்டிய இலட்சியப் பணிகளை உணர்ந்து செயற்படுவீர்கள். நல்லோரின் ஆதரவு எதிர்பார்த்த வகையில் கிடைக்கும். இளைய சகோதரர், சிலநன்மை பெற்று தெய்வ நம்பிக்கையில் முன்னேற்றம் அடைவர். வீடு, வாகனத்தில் பராமரிப்பு பணச்செலவு ஏற்படும். எதிர்மனப்பான்மையுடன் உங்களிடம் பேசிய ஒருவர், தன் குறை உணர்ந்து நல் அன்பு பாராட்டுவார். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்வீர்கள். அரசு தொடர்பான உதவி எதிர்பார்த்த வகையில் கிடைக்கும்.

**கும்பம்** - சுயதகுதி திறமையைப் பயன்படுத்த புதிய வாய்ப்புகள் வரும். இளைய புத்திரரின் உடல்நல ஆரோக்கியத்திற்கு, சிறு அளவில் மருத்துவ சிகிச்சை தருவதும், சத்து நிறைந்த உணவு உண்பதும் அவசியம். எதிரியால் தொல்லை குறைந்தாலும், பணக்கடன் தொந்தரவு இருக்கும். இல்லறத்துணை குடும்ப சூழ்நிலை உணர்ந்து அக்கறையுடன் செயல்படுவர். உற்பத்தி, விற்பனையை அதிகரித்து கணிசமான பணவரவு பெறுவீர்கள். அரச பணியாளர்களுக்கு சலுகைப்பயன் கிடைக்கும். மாணவர்கள் அக்கறையுடன் படித்து நல்ல தரத்தேர்ச்சி பெறுவர்.

**மீனம்**- எவரிடமும் அளவுடன் பேசி இருக்கிற நற்பெயரை தற்காத்துக் கொள்வது நல்லது. பாதுகாப்பு குறைவான இடங்களில் பிரவேசிக்கக் கூடாது. குடும்பத்தேவைகளுக்காக சிறியளவில் பணக்கடன் பெறுவீர்கள். இல்லறத்துணை உற்சாக மனதுடன் செயற்பட்டு குடும்ப நலனைப் பாதுகாப்பார். தொழில், வியாபாரத்தில் உருவாகிற குளறுபடிகளை மாற்று உபாயத்தினால், சரிசெய்வீர்கள். உற்பத்தி, விற்பனை சீராகும். உத்தியோகத்தர்கள், திட்ட இலக்கை நிறைவேற்ற கூடுதல் அவகாசம் எடுத்துக் கொள்வர். மாணவர்கள், உடல் நலத்திலும், படிப்பிலும் கூடுதல் கவனம் கொள்வது நல்லது.

■ ஒளரீஷ்



# கல்லறையிலும் நிம்மதி இல்லை




தோண்டப்பட முன்னர் யசீர் அரபாத்தின் கல்லறை (பிரான்ஸ்)

யசீர் அரபாத். விடுதலைப் போராளிகளின் மானசீகக் குரு. அவர் பலஸ்தீனத்தில் மட்டுமல்லாமல் ஏனைய நாடுகளிலும் உள்ள அடிமைப்படுத்தப்பட்ட மக்களின் விடுதலையை விரும்பியவர். வாழ்நாளில் பெரும் பகுதியை சிறையிலும், போர்க் களத்திலும் செலவிட்டவர். இஸ்ரேலிய அடக்குமுறைக்கு எதிராக பலஸ்தீன மக்களை ஆயுதம் தாங்கி போராட அத்திவாரம் போட்டவர் யசீர் அரபாத் தான்.

இவரது தலைமையில் தோன்றிய பலஸ்தீன விடுதலை இயக்கம், இஸ்ரேலியர்களுக்கு பெரும் தலையிடியாக உருவெடுத்தது. அமெரிக்காவின் ஆதரவு இருப்பதால் ஒட்டுமொத்த பலஸ்தீனத்தையும் விழுங்குவதற்கு இஸ்ரேல் தயாரான சமயத்தில், சிவபூசையில் கரடி புகுந்தது போல, உருவெடுத்த பலஸ்தீன விடுதலை இயக்கம் இஸ்ரேலை குலைநடுங்கச் செய்தது. பதிலுக்கு இஸ்ரேலும் தன் அடக்குமுறை வடிவங்களை வெவ்வேறு ரூபங்களில் பலஸ்தீனம் மீது பிரயோகித்தது. எப்போதும் வெடிகணைகளால் அதிரும் பூமியாக அது மாறியது.

பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தோற்றமும் அது ஒரு வல்லரசுக்கு எதிராக குவித்த வெற்றிகளும் ஏனைய நாடுகளில் மக்களின் விடுதலைக்காக போராடிய அமைப்புகளுக்கு மானசீக நம்பிக்கையை ஏற்படுத்தின. தன் நாட்டு மக்கள் மட்டுமல்லாமல், ஏனைய தேசத்தவர்களும் சுதந்திரமாக வாழ வேண்டும் என்று அரபாத் நினைத்ததன் விளைவாக ஈழ போராட்ட அமைப்புகளுக்கும் பலஸ்தீனத்தில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பயிற்சியின் போது வெளிப்படுத்திய திறமைகளைக் கண்டு வியந்த அரபாத் தன்னுடைய கைத் துப்பாக்கியை பரிசளித்திருந்தார்.

நீண்ட போராட்டத்தின் பின்னர் உருவாகிய பலஸ்தீன அதிகார சபையின் முதலாவது தலைவராக அரபாத்தே தெரிவானார். ஆயினும் அவரது இருப்பை எப்போதும் இஸ்ரேல் விரும்பியதில்லை. இந்த நிலையில் திடீரென நோய்வாய்ப்பட்ட அரபாத் பிரான்ஸில் சிகிச்சை பெற்று வரும்போது 2004ஆம் ஆண்டு உயிரிழந்தார். எனினும் தனது கணவரின் மரணத்தில் மர்மம் இருப்பதாக அவரது மனைவி தொடர்ச்சியாக வெளியிட்ட கருத்துக்களின் அடிப்படையில் அவர் கடைசியாக அணிந்திருந்த ஆடைகள் இந்த வருட ஆரம்பத்தில் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன. அந்த ஆடைகளில் விஷத் துணிக்கைகள் கண்டறியப்பட்டதால், இப்போது நவம்பர் 27ஆம் திகதி (இங்கு மாவீரர் தினம் கடைப்பிடிக்கப்பட்ட போது) மாவீரர் அரபாத்தின் கல்லறை தோண்டப்பட்டது. அங்கிருந்த அவரது உடல் இப்போது தீவிரமாக பரிசோதனையில் இருக்கிறது. இன்னும் சில தினங்களில் அவர் விஷம் வைத்துக் கொல்லப்பட்டாரா இல்லையா என்ற விடயம் உறுதிப்படுத்தப்பட்டுவிடும். வாழ்நாள் முழுதும் மக்களின் விடுதலைக்காக போராடியவரை கல்லறையில் கூட நிம்மதியாக உறங்க விடுகுதில்லையே உலகம்.



கல்லறையைத் தோண்டி அரபாத்தின் உடலை எடுக்கும் பணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரணி:
## சண்முகனின் 'அழகியின் துயரங்கள்'

■ பி.மயூரரூபன்



குப்பிளான் ஐ.சண்முகனின் 'உதிரிகளும்...' சிறுகதைத் தொகுப்பினை வாசித்த போது எழுந்த எண்ணங்களில் குறிப்பாக அத்தொகுதியில் இருக்கும் 'அழகியின் துயரங்கள்' சிறுகதையை மையமாகக் கொண்டு இப்பத்தி அமைகிறது.

இவரது கதைகளின் பொதுவான பண்பு, சூழலின் அக-புற நிலையியல், இலக்கியல் தன்மைகளை மிக நுட்பமாக காட்சிப்படிமமாக்கும் எழுத்துவன்மை ஆகும். அ.யேசுராசா, இவரது தொகுதிக்கான பின்னடைக் குறிப்பில், அவர் ஒரு அகவயாதி, ஆன்மிக நம்பிக்கையும், மெல்லுணர்வுகளும், அழகியல் இரசனைத் திளைப்புக் கொண்டவர். என்றார். அத்துடன், இவரது எழுத்துக்களில் புறவயமான கோட்பாட்டுச் சிந்தனைகளின் ஊடுருவல் காணப்படுவதையும் சேர்த்தே சண்முகனை சொல்ல முடியும்.

கலைப்படைப்பு ஓர் உருவாதல் (Process) ஒரு மரம் போன்ற, மண் போன்ற பொருள் அல்ல. என்றும் மாறாக்கலை என்பது இல்லவே இல்லை.

இந்த அழகியின் துயரங்கள் சிறுகதையில் நல்ல கலைப்படைப்புக்கான 'உருவாதல் நிகழ்ந்து கொண்டிருக்கிறது' மனங்களில் சதா தோன்றும் வக்கிர எண்ணங்களும், "அவளின் துயரங்களுக்கு விடிவு ஏற்படுமா? என கதைசொல்லியின் கேள்விகளும் இவ்வுருவாதலை உற்பவித்துக் கொண்டிருக்கின்றன.

ஒரு நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த அழகான இளம்பெண்தான் குடும்பச் சுமையைக் குறைக்க வேலைக்குச் செல்வதால் அவள் சந்திக்கும் துயரங்கள் இந்தக் கதையில் பேசப்படுகின்றன. குறிப்பாக ஆண்களால் பாலியல் நோக்கில் செய்யப்படும் உற்றுப்பார்த்தல் (Gaze), இரட்டை அர்த்த வசனங்களும், உடல் உரசல்களும் இந்தக் கதையின் மைய இழைகள்.

ஓர் இலக்கியப்படைப்பு முற்றிலும் துயதான கண்டுபிடிப்பல்ல, அதேபோல் இல்லாததிலிருந்து உருவாவதல்ல, வெளியிலிருந்து திடீரென எழும் தோற்றமுமல்ல. அது ஒரு தேவையிலிருந்து எழுவது.

பொதுவாக சண்முகனின் கதைகளும் இப்படியானவையே. அந்தப் புதிய கண்டுபிடிப்புகள் இல்லை சாதாரணமாக நமக்கு முன்னால் நிகழும் விடயங்களே இவரது கதைகள். இந்த. அழகியின் துயரங்கள்' கதை அமைப்புகள் புறவயமாக நின்று எழுத்தாளன் தனது பார்வையில் பேசுகின்றது போதன்ற தொனியில் காணப்படுகிறது. இதனால் தான் புறவயமான விவரணைகளின் ஆதிக்கம் இங்கு பரவிக் காணப்படுகின்றது.

"............புத்தம் புதிய பனிமலராக நீண்டு நெளிந்த 'பாஸ்கியூவில்
அவள் நின்றாள். கலகலப்பான காலையில் உடலைத்தடவி
புத்துணர்ச்சி ஊட்டிச் செல்லும் இனிய குளிர்ந்த தென்றலின்
அருவியாகச் சொரியும் 'சவர்பாத்தில் குளித்த.... "

இந்தக் கதையில் விவரணையின் இடம் சற்று அதிகமோ என்ற ஐயம் எழுந்தாலும் எனது வாசிப்பிலிருந்து ஒரு விடயம் காரணத்துடன் இங்கு தொட்டுக்காட்ட முடியும்.

அவள் சந்திக்கும் ஆண்கள் எல்லோரும் ஒரே மாதிரியான பார்வை எண்ணங்கள் கொண்டு அணுகுகிறார்கள். இங்கு சண்டுகன் குறிப்பிடும் அவன், பஸ்ஸில் நிற்பவர், கொன்ரோலர், கொண்டக்டர், இன்ரவியூ செய்தவர், நடுத்தர வயது மனிதன்.......

இப்படி நீளும் ஒரு வகை மாதிரியான ஆண்களின் வரிசையில் அவளின் அழகை வார்த்தைகளில் அள்ளும் சண்முகனின் (கதைசொல்லி) இணைந்துவிடுவது மௌன வெளியில் நிகழ்கிறது. நினைத்துச் செய்யப்படாத உத்தியாக அது அமைந்து விடுகிறது.

உண்மையில் ஒரு படைப்புக்கு ஓர் வடிவம் உண்டு என்பது பிழை. ஓர் எழுத்து பல தொனிகளை அல்லது பல குரல்களை உள்ளடக்கியது. மேலோட்டமாக இவ்வாறு படைப்புகள் வாசிப்பவர்களுக்கு பொதுவான அர்த்தத்தை தருவதில் கணிசமான வாய்ப்புகளைக் கொண்டிருந்தாலும் ஒரு சமூகம் தனிமனிதனிடம் சேமித்து வைத்துள்ள பேசாமொழியும் தனிமனிதன் பயன்படுத்தும் பேச்சு மொழியும் எழுத்துக்களில் பன்முக வாசிப்புக்கான களத்தினை தரவல்லது.

'அழகியின் துயரங்கள்' மாதிரியான கதை சொல்லலின் அதாவது புறவயமாக கதைசொல்லி அவளை/, அவனை பேசுகின்ற போது சில முற்சாய்வுகள் (Prejudice) நிகழ்வதற்கான வாய்ப்புகள் உருவாகிவிடுகின்றன.

★அழகியின் வருணனை

★ புலியாக நின்ற அவள் பெண்ணான மாறி குழுங்கி அழுதாள்

'பெண்' பற்றிய வழக்கமான பார்வையைச் சொல்லும் இந்தப் பகுதிகள் கதைகளில் ஊடு பரவியிருக்கும் சில முற்போக்கான எண்ணங்களுக்கு முரணியாக தொழிற்படும்.

இதுகதை சொல்லின் பார்வையில் வெளிப்படுவதால் இந்த முரண்கதையைச் சற்றுப் பல வீனப்படுத்துவதற்கான வாய்ப்புகளை உட்புகுத்தி விடும்.

இன்று எழுதப்படும் கதைகளில் வெளிப்படையாகப் பேசப்படாத கோட்பாடு எண்ணங்கள், குறிப்பாக மார்க்ஸிய சிந்தனைகள் சண்முகனின் எழுத்துக்களில் வெளிப் படையாக ஆங்காங்கே தூவப்பட்டுள்ளன.

★ புதியதோர் உலகை அவள் ஆவலோடு எதிர்பார்த்தாள்.

★முதலாளியின் மாடிவீடும் அவளின் வசிப்பிடமும் ஒப்பீடு

★உழைக்க வேண்டிய ஒரு சாரார் உழைக்காது உழைப்பவர்களை சுரண்டி வாழும் வாழ்க்கை.

★துயரங்களிலிருந்து புரட்சிகள் தோன்றியிருக்கின்றன.

இவை சண்முகனை ஒரு மாக்சிஸ வாதியாக காட்டுவதை மறுக்க முடியாது.

முன்னர் குறிப்பிடுவது போல், இவரின் கதைகளில் முரணிகள் அதிகம் வந்துவிடுகின்றன.

அவள்,

★அவளும் கனவு காண்கின்ற இளம் பெண் தானே

★ஏற்றத்தாழ்வுகளை வெறுத்தார் .

★காலங்காலமாக வந்த தார்மீக உணர்வுகளில் கட்டுப்பட்டு, அவற்றை புனிதமானவை என்று போற்றும் தனக்கு, நாகரிகம் என்ற பெயரில் நிகழும் அருவருப்புகளில் உருவாகும் அவலங்கள் ஏற்பட்டிருக்காது என்றும் நம்பினர்.

சாதாரண மனநிலையுடைய சமூக,தார்மீக எண்ணங்களுக்கு கட்டுப்பட்ட ஒரு பெண்ணாகவும், மார்ஸிய, மாறும் உலகை எதிர்பார்க்கும் பெண்ணாகவும் அவள் முரண் பாத்திரமாக உருவாக்கப்பட்டுள்ளார்.

கலைப்படைப்புகளில் முரணிகள் மிகுந்த கலைத்தத்துவத்தை உருவாக்கவல்லன.

எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ள குப்பிளான் ஐ.சண்முகனின் இந்தக்கதை சமூக விமர்சனமாகவும், முற்போக்கு சிந்தனையுடையதாகவும் அமைந்துள்ளது.


இவரது எழுத்து நடை என்பன நீண்ட கதை எழுதலுக்கான சாத்தியங்களை அதிகம் கொண்டுள்ளன. நெடுக்கதைகள்/நாவல்கள் சண்முகனின் எழுத்தில் எப்படி அசையும் எனப் பார்க்கும் ஆவலுள்ளது.

---

# அடிமைகளின் மீட்பர்
## ஆபிரஹாம் லிங்கன்

நெடுந் தொடர்

28 ■ பா.உண்மை



1846 ஆம் ஆண்டு. லிங்கன் மறுபடியும் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதற்கு அடுத்த ஆண்டு, அவரது மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் அவரை காங்கிரஸ் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்தார்கள். அப்போது அமெரிக்காவின் மத்திய அரசின் சட்டமன்ற மேல் சபைக்கு செனட் என்றும், கீழ் சபைக்குப் பிரதிநிதிகள் சபை என்றும் பெயர். அமெரிக்காவில் இரண்டு சபைகளையும் சேர்த்து காங்கிரஸ் என்று குறிப்பிடுவார்கள். அப்போது லிங்கனுக்கு 39 வயது. விக் கட்சி சார்பாக இல்லினாய்ஸ் மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே காங்கிரஸ் பிரதிநிதி லிங்கன்தான்.

அந்த நேரத்தில் மிகவும் புகழ்பெற்ற மனிதர்கள் காங்கிரஸில் இருந்தார்கள். லிங்கனுக்கு வாழ்நாள் முழுவதும் போட்டியாளராகவும், எதிரியாகவும் இருந்த ஸ்டீபன் ஏ.டக்ளஸ் இல்லினாய்ஸ் மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த செனட்டர்களில் ஒருவர். மேலும், டேனியல் வெப்ஸ்டர், ஜான் சி.கால்ஹூன் மற்றும் ஜெஃபர்சன் டேவில் ஆகியோரும் செனட் சபைக்கு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்கள். செனட் சபையில் பெரும்பான்மையான உறுப்பினர்களாக ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்களே இருந்தார்கள். பிரதிநிதிகள் சபையில் மிகக் குறைந்த வித்தியாசத்தில் விக் கட்சி பெரும்பான்மை பெற்றிருந்தது.

காங்கிரஸின் முதல் கூட்டம் 1847 டிசெம்பரில் வாஷிங்டனில் கூடியது. வாஷிங்டனில் அப்போதைய மக்கள் தொகை 40 ஆயிரம் மட்டுமே. அதில் 10 ஆயிரம் பேர் கறுப்பர்கள். அவர்களில் 8 ஆயிரம் பேர் சுதந்திரமான கறுப்பர்கள். 2 ஆயிரம் பேர் அடிமைகள். சட்டமன்றத்துக்கு அருகிலேயே கறுப்பின மக்கள் தங்கியிருந்த குடியிருப்புகள் இருந்தன. அங்கிருந்த கறுப்பின மக்களைப் பற்றி லிங்கன் இப்படிக் குறிப்பிட்டார்.

"கறுப்பர்கள் இங்கே தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டு, பிறகு தென் மாநில அடிமைச் சந்தைகளுக்கு, குதிரைக்கூட்டங்களைப் போல அழைத்துச் செல்லப்பட்டனர்."

வாஷிங்டனில் திருமதி ஸ்பிரிஸ் என்பவர் ஒரு விடுதியை நடத்தி வந்தார். அங்கு தான் லிங்கன் மலிவான வாடகைக்கு தன் குடும்பத்தோடு தங்கியிருந்தார். விக் கட்சியைச் சேர்ந்தவர்களே, அதிகமாக அந்த விடுதியில் தங்குவார்கள். அப்போது விக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அடிமையொழிப்பில் தீவிரமாக இருந்ததால், அந்த விடுதி 'அடிமை ஒழிப்பு இல்லம்' என்று அழைக்கப்பட்டது.

மேரி டாட்டுக்கு அந்த விடுதி வாழ்க்கை ஒத்துவரவில்லை. தகுந்த துணை இல்லை. பேச்சுத் துணைக்கும் [illegible] மூன்றே மாதங்களில் [illegible] உறவினர் இந்த லெக்சிங்டனுக்கு வந்து விட்டார்.

லிங்கன் அமெரிக்க காங்கிரஸுக்குப் பிரதிநிதியாகப் போயிருந்த சமயத்தில், அமெரிக்காவில் நடந்து கொண்டிருந்த மிக முக்கியமான பிரச்சினை மெக்ஸிகோ போர்.

ஆரம்பத்தில் ஸ்பெயினிடம் அடிமைப்பட்டுக் கிடந்தது மெக்ஸிகோ. 1826 இல் விடுதலையடைந்தது. எனினும் உள்நாட்டில் பிரச்சினை. 1833 ஆம் ஆண்டு, குட்டை சொல்லிவிட்டு மெக்ஸிகோவிலிருந்து தனியாகப் பிரிந்து சென்றது டெக்ஸாஸ் மாநிலம்.

டெக்ஸாஸ் மாநிலத்தில் மிகச் சிறப்பாக நடந்துகொண்டிருந்த ஒரு விடயம் அடிமை முறை. டெக்ஸாஸ் அவ்வப்போது தங்களையும் அமெரிக்காவுடன் இணைத்துக்கொள்ளச் சொல்லி விண்ணப்பித்துக் கொண்டே இருந்தது. ஆனால் அமெரிக்காவில் இருந்த பல மாநிலங்களுக்கு டெக்ஸாஸ் தங்களுடன் இணைவது பிடிக்கவில்லை.

1845 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதியாக [illegible] ஜோன் ரெய்லர். என்ன அவருடைய [illegible] பதவிக் காலம் முடியும் சமயத்தில் டெக்ஸாஸை அமெரிக்காவுடன் இணைத்து விட்டதாக அவர் அறிவித்தார். முறைத்துக் கொண்டது மெக்ஸிகோ. அமெரிக்காவுடனான எல்லா அரச உறவுகளையும் அந்த நாடு துண்டித்துக் கொண்டது.

அடுத்த அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவி ஏற்றவர் ஜேம்ஸ் கே.போக். அவராவது கொஞ்சம் இறங்கிவந்து, மெக்ஸிகோவை குளிரப்பண்ணி கொஞ்சம் அமைதி ஏற்பட வழி செய்திருக்கலாம். ஆனால் அவரும் கப்சிப் என்று இருந்துவிட்டார். டெக்ஸாஸ் பிரச்சினை தீயாகப் பற்றிக் கொண்டது.

டெக்ஸாஸ் மாநிலத்தின் எல்லையாக, ரியோ கிராண்ட் ஆறு வரை நிர்ணயித்தது அமெரிக்கா. "அது எப்படி? ரியோ கிராண்ட்டின் இரு கரைகளும் எங்களுக்குத்தான்" என்று விட்டுக் கொடுக்காமல் முரண்டு செய்தது மெக்ஸிகோ. பிறகென்ன? போர்தான். அமெரிக்கப் படைகளை ரியோ கிராண்ட் ஆற்றங்கரைக்கு ஆசீர்வாதம் செய்து அனுப்பி வைத்தார் அமெரிக்க ஜனாதிபதி. சரியான சண்டைப் பயிற்சி இல்லாத மெக்ஸிகோ படைகளை, சுலபமாக அடித்துத் துவைத்துவிட்டன அமெரிக்கப் படைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அசை போட ஒரு விடயம் 55

# காற்றினிலே வரும் கீதம்

ரம்யன்

காலையிலே எந்திரிச்சி
கஞ்சி தண்ணி இல்லாமே
கஷ்டப்படுகிறோமே-கடவுளே
கொஞ்சம் கண்ணைத்
தொறந்து பாரேன்-கடவுளே
குடும்பம் ஆலாய்ப்
பறக்குதடா-கடவுளே
காலையிலே எந்திரிச்சி
கயிறு வலை எடுத்துக்கிட்டு
கடல் மேலே போனானே-கடவுளே
போனவன் திரும்பலையே கடவுளே
அவன் போனவன் திரும்பலையே கடவுளே
கெண்டை குஞ்சை தூண்டியிலே
மாட்டி நடு தண்ணியிலே
கொண்டு அதை வீசினேனே கடவுளே
பாசி புடிச்சிக்கிட்டு
தொங்குதடா கடவுளே
பாசி புடிச்சிக்கிட்டு
தொங்குதடா கடவுளே

இந்தப் பாட்டில் இன்னும் பல வரிகளும் கருத்தும் உண்டு. பழைய 'சகுந்தலை' என்ற படத்தில் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனும் டி.எஸ்.துரைராஜும் இதைப் பாடி ஆடி நடித்திருந்தார்கள். பழைய இசைத் தட்டுகளில் இந்தப் பாட்டும் அதனோடு வரும் உரையாடலும் உண்டு.

அவர்கள் இருவரும் மிக இளையவர்களாய் இருந்த போது நடித்த படம் இது. பாட்டு முடிய வரும் உரையாடல் பின்வருமாறு இருக்கும்.

"ஏலே குட்டை"

என்னடா பிச்சை

காலையிலே இருந்து தூண்டி போடுறேன் ஒரு மீன் கூட கெடைக்கலைடா,

இந்தாடா என் தூண்டியிலே ஒன்னு கிடைச்சிருக்கு

என்னடா உன் தூண்டி மாதிரி பேசுறே என் தூண்டியிலே தான் கெடைச்சிருக்கு எனக்குத் தாண்டா சொந்தம்

இல்லை என் தூண்டியிலேதான் கெடைச்சிருக்கு அதனாலே எனக்கு தாண்டா சொந்தம்.

அதிகம் பேசினியோ மீனைப் புடுங்கி தண்ணியிலே போட்டிடுவன்.

அப்படியோ ஒன் தலையைக் கிள்ளி தண்ணியிலே போட்டிடுவேன் அதிகம் பேசாதே அடிச்சிடுவேன்.

அடிப்பியே ஒங்கப்பன் மவனே சிங்கண்டா

எங்கடா சிங்கம் பேசாதே....

அடிப்பியே ஒங்கப்பன் மவனே சிங்கம்டா....


சரிடா அழாதே, ஒன்னு செய்வோமாடா

என்னமாடா?

ஆளுக்கு பாதியா அறுத்து எடுத்துக்குவம்

ம்...எனக்கு முழு மீனுதான் வேணும்.

ஒருவாறு இருவரும் ஒரு முடிவுக்கு வந்து மீனை இரண்டாக அறுக்கிறார்கள். பங்குபோட்டுக் கொள்வதற்கு, மீனின் வயிற்றில் இருந்து



ஒரு தங்க மோதிரம் கிடைக்கிறது. மீனைப் போட்டுவிட்டு மோதிரத்தை விற்பதற்குக் கடைக்குப் போகிறார்கள். விலை உயர்ந்த மோதிரம் என்பதால் அரச சேவகருக்கு தகவல் போகிறது. சேவகர் மோதிரம் அரசக்குரியதென்று கண்டு, அரசனிடம் கொண்டு போகிறார். மோதிரத்தைப் பார்த்த மாத்திரத்தில் சாபம் நீங்கப்பெற்று துஷ்யந்த மன்னனுக்கு சகுந்தலையின் நினைவு வருகிறது.

மகாகவி காளிதாசரின் சாகுந்தலம் காவியத்தின் கதையை தமிழில் சகுந்தலை என்ற பெயரில் எடுத்திருந்தார்கள். ஏறத்தாழ 70 வருடங்களுக்கு முன் எடுக்கப்பட்ட இந்தப் படத்தில் காலஞ்சென்ற பழம் பெரும் நடிகர்களைக் காணலாம்.

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், டி.எஸ்.துரைராஜ், செருகளத்தூர்சாமா, சாரங்கபாணி, எம்.எஸ்.சுப்புலட்சுமி, ஜி.என்.பாலசுப்பிரமணியம் முதலியவர்கள் முக்கியமானவர்கள்.

அண்மையில் இந்தப் படத்தின் சில காட்சிகளை 'முரசு' அலைவரிசையில் ஒளிபரப்பினார்கள். பார்க்க முடிந்தது.

எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்கள் சகுந்தலைக்குப்பிறகு சத்தியவான்-சாவித்திரி படத்தில் ஆண் வேடத்தில் நாரதராக நடித்திருந்தார். பக்த மீராவில் அவர் பாடிய காற்றினிலே வரும் கீதம் இன்றும் கேட்பதற்கு ரம்யமாக இருக்கும். அந்தப் படம் இந்தியிலும் வெளிவந்திருந்தது.

சுப்புலட்சுமி சிறுவயதிலேயே கீர்த்தி பெற்ற வித்துவான்களிடம் கர்நாடக மற்றும் இந்துஸ்தானி கற்றுத் தேர்ந்தவர். சமஸ்கிருதம், தெலுங்கு மொழிகளையும் அவர் கற்றிருந்தார். ஆண்களே ஆக்கிரமித்துக் கொண்டிருந்த இசைத் துறையில் பெண்களாலும் சாதிக்க முடியும் என்பதை நிரூபித்து நின்றார். தமிழ் தவிர கன்னடம், சமஸ்கிருதம், பஞ்சாபி, இந்தி, மலையாளம், தெலுங்கு, வங்காளம், குஜராத்தி மற்றும் மராத்தி ஆகிய மொழிகளில் பக்திப் பாடல்களை பாடியுள்ளார் அவர். பல நாடுகளுக்கு விஜயம் செய்திருந்த அவர் 1966 ஐ.நா.மகா சபையில் ஐ.நா.தினத்தில் இசை நிகழ்ச்சி நடத்தினார்.

இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு ஒருமுறை சுப்புலட்சுமி பற்றி கூறுகையில், "நான் யார், ஓர் இசை ராணியின் முன் வெறும் பிரதம மந்திரி மட்டும் தான்" என்றார். லதா மங்கேஷ்கர் அவரை தபஸ்வினி (அவதாரம்) என்றார். உஸ்தாத் படே குலாம் அலிகான் சுஸ்வர லக்ஸ்மி என்று வர்ணித்தார். இந்தியாவின் தேசிய தலைவர்களில் ஒருவரும் கவிக்குருமான சரோஜினி நாயுடு இந்தியாவின் நைட்டிங்கேல் என்றார்.

சகுந்தலையில் கதாநாயகனாக நடித்தவர் ஜி.என்.பாலசுப்பிரமணியம். பாமா விஜயம், ருக்மாங்கதன் முதலிய படங்களில் நடித்திருந்தார். அவரது அழகான தோற்றமும், நடிப்பும், இனிய குரலும் சினிமாத் துறையால் வெகுவாக ஈர்க்கப்பட்டாலும் அவர் அதனை ஒதுக்கி விட்டு கர்நாடக இசையிலேயே கவனம் செலுத்தலானார். 1965 ஆம் ஆண்டு மறையும் வரை கர்நாடக இசையில் புகழின் உச்சியில் திகழ்ந்தார். எம்.எஸ்.சுப்புலட்சுமியும் ஜி.என்.பாலசுப்பிரமணியமும் இணைந்து பாடியிருந்த பாடல் ஒன்று பின்வருமாறு அமைந்திருந்தது.

ஆண்: மனமோகனாங்க அணங்கே
நானும் உன் அழகினால் வாடினேன்
பெண்: மதனாங்க சுந்தர ரூபா
நானும் உம் அழகினால் வாடினேன்

அந்தக் காலத்தில் இளைஞர்களால் முணு முணுக்கப்பட்ட பாடல்களில் ஒன்று இது. இன்று தொழில்நுட்பமும் இரசிகத்தன்மையும் நாகரிகமும் அதீத வளர்ச்சி கண்டுள்ள நிலையில் இந்தக் காலத்து இளைஞர்களால் அந்தக் காலத்துப் படங்களை இரசிக்க முடியாமல் இருக்கலாம்.


ஆனால் இன்றைய வளர்ச்சிக்கு அவைதான் வழிகாட்டியாக இருந்துள்ளன என்பதை மறுக்க முடியாது. இன்று பெரும்பாலும் கதைகளில் கதையம்சம் பூஜ்யமே. ஒரு வெற்றிப்படம் வந்துவிட்டால் அதே பாணியில் பல படங்களைப் பார்க்கலாம்.

இன்றைய வசதிகள் எதுவும் இல்லாத அந்தக் காலத்தில் எவ்வளவு அழகாக கதையை நகர்த்தியிருக்கிறார்கள் என்பது ஆச்சரியமாகவிருக்கிறது.

# வீ(வி)தி விபத்து

வாகனக் கணக்கெடுப்பு
நம் சனத்தொகைக்கு சமனோ
வீதிகள் எல்லாம் அகன்றது இங்கு
நம் ஆயுள்மட்டும் குறைந்தது இங்கு
சமிக்ஞைகள் இல்லாத சறுக்கிடும் வீதி
சமிக்ஞை இன்றி திரும்புதல் முறையோ?
எமனின் வாகனம் எருமை என்றனர்.
இன்று எமனின் வாகனம் டிப்பர் என்றனர்
மாட்டுவண்டி சவாரிகள் வெட்டவெளியிலே
வாகனச் சவாரிகள் வீதியின் நட்டநடுவிலே
முந்தி வருவோர்க்கு மரணம்தான் பரிசு
பின்னால் வந்தவர்க்கு காயங்கள் பரிசு

தனியார் வாகனம் தடுமாறி ஓடும்
துவிச்சக்கர வண்டி சமாந்தரமாய் ஓடும்
மோட்டார் சைக்கிள் பாலத்திலும் பாயும்
பேருந்து தினமும் மின் கம்பத்தில் மோதும்
சிந்திய குருதிகள் போதும் நம் மண்ணில்
இரத்த வங்கியும் வற்றிவிட்டது.
செய்யும் தொழிலே தெய்வம்என்பர்
இங்கு பயணிகள் தெய்வம் சாரதியன்றோ?
கடிகார முள்ளை சில நிமிடம் முன்னகர்த்து
வேகமானியின் முள்ளை சற்று பின்னகர்த்து
வீதியில் நிதானம் உயிர்க்கு உத்தரவாதம்
விவேகம் போதும் வீதியை வெல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குணமும் குற்றமும் தெரிந்து வினை செய்தல்



156




உலகத்திலே குணமே முழுமையாய் உள்ளவராகவோ அன்றிக் குற்றமே வடிவாகியவராக இருப்பவர் யாருமிலர். அவ்வாறு குணம் குற்றங்களை எவ்வாறு அறிந்து கொள்ளலாம் என்ற வினா எழுகிறது. அவ்வாறு அறிவதற்கு அவரவர் செய்யும் கருமத்தைக் கொண்டு அறியலாம். இவ்வாறு தெய்வப் புலவர் கூறியுள்ளார்.

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். [குறள் 505]

ஒருவர் செய்யும் கருமத்தை ஆராய்ந்து பார்த்து, அவருடைய குணம் குற்றங்களை அறிய முடியும் என்கிறார். ஆபத்து வேளையில் நண்பனை அறியலாம் என்பது போல, சாதாரணமாக நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் போது, மற்றவர்களுடைய தன்மைகளைப் பாராட்டாமல், உலகத்தோடு ஒட்ட ஒழுகியிருப்போம். ஆயின், குணநலம் வாய்க்கப் பெற்றவரை சமூகம் மதிக்கும் போது, அவருடைய குணநலத்தை ஏனையவர்களும் மதித்து நடக்கப் பழகிக் கொள்வதும், அவர்களைப் பின்பற்றித் தாம் முன்னேறப்பார்ப்பதும் சமூக முன்னேற்றத்துக்கு அல்லது நாட்டு முன்னேற்றத்துக்கு நன்மை பயப்பதாக இருக்கும்.

ஆனால் குணவான்களை ஒரு சாரார் போற்றும் போது ஏனையோர் அழுக்காறு கொண்டால் அதனால் அந்தச் சமூகத்துக்கோ, அல்லது அழுக்காறு கொண்டவர்களுக்கோ பாதகமாய் அமைந்து விடுகிறதை நாம் காணலாம்.

இந்த வகையிலே தான் போர்க்களங்கள் உருவாகின்றன. அதிலும், மகாபாரதப் போர், ஒரே குடும்ப உறவுகளுக்கிடையில் உண்டான அழுக்காறு காரணமாகவே உண்டானதென்பதும் அது பாரத நாட்டையே பாதித்தமையால், அக்கிரமத்தை அழிப்பதற்காக, பூபாரந் தீர்ப்பதற்காக கிருஷ்ண அவதாரம் ஏற்பட்டது என்பது நாம் அறிந்ததே.

கிருஷ்ணபகவான் கௌரவர் பக்கத்துக்குப் போன தூது என்பது

குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல் [குறள் 504]

என்ற திருவள்ளுவரின் வாக்கின்படி, துரியோதனனின் குணம் குற்றங்களில் ஏதும் மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா என நாடிப் பிடித்துப் பார்ப்பதற்கோ என்பது வெளிப்படையானது. ஏன்? போரை விரும்பாது போனால் அக்கிரமம் அழியவும் அவதார நோக்கம் நிறைவேறவும் வாய்ப்பு இல்லாமல் போகும். அங்கதன் தூதுபோன போது, இராவணன் சீதையை விடமாட்டான் என்பதை இராமர் அறிந்திருந்தமை போன்றதே.

எனவே, கிருஷ்ணன் தூது போய் மீண்டபின், போர் நிச்சயம் என அறிந்து, குருஷேத்திரப் போர்க்களத்துக்குப் பாண்டவர், கௌரவர் சேனைகள் வந்து சேர்ந்துவிட்டன. பாண்டவர் சேனை தருமன் தலைமையிலும் கௌரவர் சேனை பீஷ்மர் தலைமையிலும் வந்து சேர்ந்து, பாசறை அமைத்து, அணி வகுத்து நிற்கின்றன. அந்தக் கால முறைப்படி நால்வகைச் சேனைகளையும் ஒழுங்கு செய்யவே பலநாள் சென்றிருக்கும்; இனி தருமன் கொடி அசைத்ததும் போர் தொடங்கிவிடும் என்ற தருணத்தில், தருமன் தேரினின்றும் இறங்கி, எதிர் பக்கத்தில் நிற்கும் பீஷ்மரிடம் போகிறான். போர்க்கவசமோ ஆயுதமோ எதுவும் அவன் வசம் இருக்கவில்லை. இப்படியான நிகழ்வு இந்தக் காலப் போர் முறையில் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. தருமன் செயலைக் கண்டு அருச்சுனனும் தேரினின்று குதித்து ஓடுகிறான். ஏன் அண்ணன் போகிறான் என்பது அருச்சுனனுக்கும் விளங்கவில்லை. இதுவரை குடும்பத்தில் குணவானாக மதிக்கப்பட்ட ஒருவரான பீஷ்மரின் ஆசீர்வாதம் பெறத் தருமன் போயிருக்கிறான். பீஷ்மர் உடனே இறங்கி வந்து கட்டித்தழுவி, ஆசி கூறியதுமன்றி, வெற்றி உனக்கே எனத் தருமனிடம் கூறி நிற்கிறார். ஆனால் யாராலும் வெல்ல முடியாதவர் என விளங்கிய பீஷ்மருக்கு எப்படி தோல்வி வரலாம் என்ற சந்தேகத்துக்கு பீஷ்மரே வழி சொல்லுகிறார் தருமனுக்கு. "நேரம் வரும் போது அந்த இரகசியத்தை வெளியிடுவேன்" எனக் கூறி அனுப்புகிறார்.

பின்னர் துரோணாச்சாரியாரிடம் போகிறான் தருமன். "தருமனே! மனிதனுக்குப் பொருள் அடிமைப்படாது; மனிதன் தான் பொருளுக்கு அடிமையாகிறான். அந்த வகையில் நான் கௌரவருக்குக் கட்டுப்பட்டவன்; அதனால் அவர் பக்கம் நின்று போர் புரிவேன். என்னை யாராலும் வெல்ல முடியாது. எனினும் எனக்கு நம்பிக்கையான ஒருவன் மூலம் எனக்கு ஒரு துன்பமான செய்தி கிடைத்தால் எனது மனம் குழம்பிவிடும்; அப்போது நான் தோற்கடிக்கப்படுவேன்" என்று துரோணர் குற்ற உணர்வை வெளியிடுகிறார்.

இவ்வாறு துரோணரிடமும் ஆசிபெற்ற தருமன், கிருபர், சல்லியன் ஆகியோரிடமும் ஆசிபெற்றுத் தனது தேரில் ஏறினான்.

தருமன் கொடியை அசைப்பான் என்றிருந்த நேரத்தில், அருச்சுனன் தனக்கு முன்னே போர்க்களத்தில் எதிரிகளாக வந்திருக்கும் குணவான்களான பீஷ்மர், துரோணர், கிருபர் முதலியோரைக் கண்டு, அவர்களோடு போர்புரிய மனமின்றி ஆயுதத்தைப் போட்டுவிட்டுத் தேர்தட்டில் இருந்து விட்டான். அதனால் பார்த்த சாரதியாய் வந்த கிருஷ்ணபரமாத்மா அவனுக்கு கர்மயோகமான உபதேசத்தை (பகவத்கீதை) செய்யத் தொடங்கினார். தர்மயுத்தம் - பகைவர்களுடன் போர் நடந்தாலும் - கட்டுப்பாடுகளைப் பின்பற்றிய அந்தக்காலத்தில் கீதோபதேசம் முடியும் வரை போர்தொடங்கவில்லை.

இவ்வாறு தனக்கு எதிரிலே எதிரிகளாக நிற்பவர்கள், உறவு முறையானவர்; கனம் பண்ண வேண்டியவர்கள்; ஆசிரியர்கள். இத்தகையவர்களைப் போர் புரிந்து கொல்வதிலும் பார்க்க தான் ஒருவன் இறந்து போவது நல்லது என்றவாறு அருச்சுனன் கண்ணனுக்கு கூறியதனால் அவர் அவனுக்கு கர்மயோகம் பற்றி விளக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. நமக்கு பகவத்கீதை கிடைக்கிறது.

"அருச்சுனா! போர் என்று தொடங்கிவிட்டால், முன் நிற்பவர் யார்? யார்? என்று எண்ணிப் பார்ப்பதை விட்டுவிட வேண்டும். அவர்கள் ஏதோ ஒரு வகையில் குற்றவாளிகளாக இருப்பதனாலேதான் போர்க்களம் வந்துள்ளார்கள். அவர்களைத் தண்டிப்பது ஷத்திரிய தர்மம். தண்டிக்காது விட்டால் அந்தப் பழிபாவம் உன்னைச் சேரும். அதனால் பாரத்தை என்மீது போட்டு விட்டுத் தெளிந்த மனத்தோடு போர் புரிவாய்" என்கிறார் பரமாத்மா.

இவ்வாறு குணம் குற்றங்களைத் தெரிந்து வினை செய்வது பற்றித் திருவள்ளுவரின் அறிவுரையையும் நாம் நோக்குவோமாக.

குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல் [குறள்-504]

"கௌரவர் பக்கத்தில் போர் புரிவோர் பெரும்பாலானவர் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் என்பன காரணமாக மிகுந்த குற்றமுடையவர்கள். அவர்களுக்காக உதவிக்கு வந்த பெரியோரும் அதர்மத்துக்குத் துணைபோன குற்றமுடையவரே. அதனால் வெற்றி தோல்வியைச் சமமாகமதிப்பாய்; போரைச்செய்வாய்" என்று சொன்னதும் பார்த்தன் காண்டீபத்தைக் கையில் எடுத்தான்.

அதர்மத்துக்காக ஒத்துழைப்பு வழங்கிய பீஷ்மரும் துரோணரும் தம்மை வெற்றி கொள்ளத் தாமே இரகசியத்தை வெளிப்படுத்தி அழிந்து போகிறார்கள். துரியோதனன் ஆகியோர் மிகைப்பட்ட குற்றத்தால் பூண்டோடு அழிந்து போகிறார்கள். பாண்டவர் வெற்றி பெறுகிறார்கள்.



மட்டுவில் நா.நல்லதம்பி

# கம்பனின் படைப்புக் கலை

சவரி சொன்னதை இராமன் எப்படிக் கேட்டான் என்று கூறும் போது, சவரியின் தவச்சிறப்பை விளக்கிவிடுகிறான். அதேசமயத்தில், தான் பிரிந்த சீதையை இராமன் அடைவது அவனுக்கு வீட்டை அடைவது போன்றதாகும் என்பதையும் உணர்த்தி விடுகிறான். இராமன் பரம்பொருள் என்பது கம்பனின் எண்ணம்.

புலவர் புகழேந்தி

இந்த நிகழ்ச்சியின் சிறப்பு என்னவென்றால் இராம-இலக்குமணர் கேட்பதற்கு முன்னால் சவரி ருசியமூக பருவதத்துக்குப் போகும் வழியையெல்லாம் தானாகவே சொல்லி விடுவதாகும். இப்படிச் சவரி சொன்னதை இராமன் எப்படிக் கேட்டான் என்பதைக் கம்பன் கூறும் முறையும் அருமையுடைத்து.

சவரியின் பேச்சை இராமன் கேட்ட வகை

வீட்டினுக்கு அமைவது ஆன மெய்ந்நெறி வெளியிற்று ஆகக்
காட்டுறும் அறிஞர் என்ன, அன்னவள் கழறிற்று எல்லாம்
கேட்டனன் என்பமன்னோ

[கம்பன்-3705]

அதாவது, வீட்டு மார்க்கத்துக்குரிய நெறியை விளக்கிக் கூறும் ஒரு பரமாசாரியனிடத்து ஓர் உண்மையான மாணவன் எப்படி ஆர்வத்தோடும் உள்ளுணர்ச்சியோடும் அவர் கூறுவனவற்றைக் கேட்பானோ அப்படிச் சவரி கூறியவற்றையெல்லாம் கவனத்தோடு இராமன் கேட்டான் என்று கம்பன் கூறுகிறான். அப்படிக் கேட்டவன் யார் தெரியுமா? "கேள்வியால் செவிகள் முற்றும் தொட்டவர் உணர்வின் உண்ணும் அமுதத்தின் சுவையாய் நின்றான்"-அதாவது, ஆன்றோரிடம் கேட்ட நல்ல அறிவுரைகளால் தங்கள் காதுகள் முழுதும் துளைக்கப்பட்டவர்களாகிய பெரியோர்கள் தம் உணர்ச்சியினால் நுகரும் ஞானாமுதச் சுவையாய் நின்றவன்.

இந்தப் பாட்டிலும் பல நயங்களைக் கம்பன் அமைத்து விடுகிறான். சவரி சொன்னதை இராமன் எப்படிக் கேட்டான் என்று கூறும் போது, சவரியின் தவச்சிறப்பை விளக்கிவிடுகிறான். அதே சமயத்தில், தான் பிரிந்த சீதையை இராமன் அடைவது அவனுக்கு வீட்டை அடைவது போன்றதாகும் என்பதையும் உணர்த்தி விடுகிறான். இராமன் பரம்பொருள் என்பது கம்பனின் எண்ணம். ஆக, அந்தப் பரம்பொருளுக்கு வேறு யாரிடமிருந்தும் எதையும் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை.


ஆனால், தான் பரம்பொருள் என்று கொண்டிருக்கும் இராமனை, பரம்பொருளாகப் பேசவோ நடக்கவோ விடாமல் கம்பன் சாதாரண மனிதனாகவே பேசவும் நடக்கவும் விட்டிருக்கிறான். அதையும் வலியுறுத்துவதற்காகவே தான், கேள்வி ஞானத்தினால் பிற பெரியோர்கள் ஞானாமுதமாக உணர்கின்ற இராமனை இப்போது சவரியிடத்திலிருந்து ருசியமூக பருவத்துக்குப் போகும் வழியை, மோட்சத்துக்குப் போகும் நெறியை ஒரு பரமாசாரியனிடத்திருந்து கேட்டுத் தெரிந்து கொள்ளும் மாணவனைப் போலக் கேட்டுத் தெரிந்து கொண்டான் என்று சொல்கிறான்.

### சவரியின் தவ மகிமை

இதற்குப்பிறகு, தான் மெய்வருந்திச் செய்து பெற்ற யோகத்தின் பெற்றியாலே சவரி தன் உடல் துறந்து முக்தி புலகை இனிது சேர்கிறாள். அதனைக் கண்டு இராம-இலக்குமணர் அதிசயம் அளவின்றி எய்துகின்றனர். இப்படிச் சொல்லும் போது கூட சவரியின் தவ மகிமையை வலியுறுத்துவதோடு, இராம-இலக்குமணர் சாதாரண மனிதர்களாகவே நடந்து கொண்டார்கள் என்பதையும் கவிஞன் வற்புறுத்துகிறான்.

இப்படியாகக் கம்பராமாயணத்திலேயே உள்ள மிகச் சிறிய படலத்தில் மிகப் பெரிய தவத்திருக் குன்றைக் கண்டு அதிசயம் அளவின்றி எய்துகின்றோம். அத்துடன் விறுவிறுப்பான நாடகக் காட்சியொன்றைக் கவிஞன் நமக்கு அளிப்பதைக் கண்டு களிக்கிறோம். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கண்கெட்ட பின்...

பிரம்மதத்தன் காசியை ஆண்டபோது ஒருமுறை போதிசத்துவர் குரங்காகப் பிறந்தார். அதன் பெயர் சஞ்ஜீவன் என்பதாம். அதற்கு ஒரு தம்பியும் இருந்தது. இரு வானரங்களும் எண்பதாயிரம் குரங்குகளின் தலைவர்களாக இருந்தன. அவர்கள் தம் வயதான தாயை அன்புடன் பேணிப் பாதுகாத்து வந்தார்கள். அவளுக்கோ பார்வை இல்லை.

சஞ்ஜீவனும், அவனது தம்பியும் பழங்களைப் பறித்து தம் பணி யாள்களிடம் கொடுத்து தம் தாய்க்குக் கொடுக்கச் சொல்வார்கள். ஆனால் பழங்களை எடுத்து வந்து பணிபுரியும் வானரங்களோ, வழியில் அவற்றைத் தின்றுவிட்டு சஞ்ஜீவனின் தாயைப் பட்டினி போட்டன.

சில நாள்களுக்குப் பின் தன் இருப்பிடத்திற்குத் திரும்பி வந்த சஞ்ஜீவன் தன் தாய் மிகவும் மெலிந்திருப்பது கண்டு ''என்ன அம்மா இது? உடம்புக்கு என்ன? சரியாகச் சாப்பிடுவது இல்லையா? நாங்கள் உனக்குப் பழங்களை நிறைய அனுப்பிக் கொண்டுதானே இருந்தோம். பின்னர் ஏன் இவ்வளவு மெலிந்து காணப்படுகிறாய்?'' என்று கேட்டது.

தாய்க் குரங்கும் ''எனக்கு யாருமே பழம் கொண்டு வந்து கொடுக்க வில்லையே.



அதனால் தான் பட்டினி கிடக்கும்படி ஆயிற்று'' என்றது.

அப்போது சஞ்ஜீவன் தன் தம் பியைப் பார்த்து ''தம்பீ! நம் பணி யாள்களை நம்பிப் பயனில்லை. இனி மேல் நான் இங்கே இருந்து நம் தாயை கவனித்து கொள்கிறேன். நீ வானரங்களுக்குத் தலைமை தாங்கிச் செல்'' என்றது.

ஆனால் தம்பியோ ''இல்லை. நானும் போகவில்லை. நானும் இங்கேயே இருந்து விடுகிறேன் என்றது.

இருவரும் சேர்ந்து தாய்க்குப் பணி புரியலாம். வேறு ஏதாவது ஒரு குரங்கு தலைமைப் பதவியை ஏற்கட்டும்'' எனக் கூறியது. இதைக் கேட்ட சஞ்ஜீவனும் தன் தம்பி சொல்வது சரியென முடிவு செய்தது. அதன்பிறகு சஞ்ஜீவன் அதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டுத் தன் தாய் ஒரு ஆலமரத்தடியில் வாழ இடம் செய்து கொடுத்தது. இரு குரங்குகளும் தாயைக் கவனித்துக் கொண்டன.

இதே சமயம் தட்சசீலத்தில் ஒரு குருவிடம் கல்வி கற்று வந்த ஒரு பிராமணன் தன் படிப்பு முடிந்ததும் குருவிடம் விடை பெறச் சென்றான். அவரும் ''நீ என்னிடம் கல்வி கற்றது சரியே. ஆனால் நீ சிறிது ஆத்திரப்படுபவன். அதனால் கொடூரமான செயல்களைச் செய்து விடுகிறாய். இவ்வாறு செய்தபின் நீ மனம் வருந்திப் பயன் இல்லை. எனவே கொடூரமான செயல்களைச் செய்யாதே. இதுதான் நான் உனக்குக் கூறும் அறிவுரை. இதை நீ கடைபிடித்து வந்தால் கண்டிப்பாக முன்னேற்றம் அடைவாய்!'' எனக்கூறி அனுப்பினார்.

அந்த பிராமணனும் குருவிடம் விடை பெற்றுக் கொண்டு காசி நகரை அடைந்தான். ஆனால் அவனுக்கு எந்த வேலையும் கிடைக்கவில்லை. குடும்பம் நடத்தப் பணம் வேண்டுமே. அதனால் காடு மலைகளில் திரிந்து அங்கு காணப்படும் மிருகங்களை வேட்டையாடி மிருகங்களைக் கொன்று அவற்றை விற்றுக் காலம் கழிக்கலானான்.

ஒருநாள் அவன் வேட்டையாடப் போய் எதுவும் கிடைக்காமல் சஞ்ஜீவனும் அவனது தாயும் வசிக்கும் ஆலமரத்தின் பக்கம் வந்தான். அங்கு சஞ்ஜீவனும் அவனது தம்பியும் அப்போது தம் தாய்க்குப் பழங்களைக் கொடுத்துச் சாப்பிடச் செய்து கொண்டிருந்தார்கள்.

அப்போது வேட்டையாட வந்த பிராமணன் தன் வில்லை எடுத்து தாய்க்குரங்கிற்கு குறிவைத்தான். இதைக் கண்டதும் சஞ்ஜீவன் சட்டெனத் தன் தாய்முன் பாய்ந்து வந்தது. அது வேடனிடம் ''என் தாயைக் கொல்லாமல் என்னை எடுத்துச் செல்'' எனக் கூறியவாறே அவன் எய்த அம்பிற்கு இரையாகி விழுந்தது. வேடன் அத்துடன் நில்லாமல் மறுபடியும் ஒரு அம்பை



எடுத்துத் தாய்க்குரங்கிற்குக் குறி வைக்கவே தம்பியான குரங்கு குறுக்கே பாய்ந்தது. அம் அதனையும் கொன்றது.

அப்போதும் மனம் இளகாமல் வேடன் தாய்க்குரங்கிற்கும் குறி வைத்து அதனை அடித்துக் கொன்றான். இப்படிக் கொடூர செயல்களைப் புரிந்து மூன்று இறந்த குரங்குகளையும் தூக்கிக் கொண்டு மகிழ்ச்சி தாங்க முடியாமல் அவன் தன் வீட்டிற்குத் திரும்பலானான்.

ஆனால் தன் வீட்டிற்குச் சற்றுதூரம் வந்தபோது அவன் தன் வீடு தீப்பற்றி எரிவது கண்டு திகைத்துப் போனான். தன் மனைவியும் இரு குழந்தைகளும் எரிந்து போனது கண்டு அவன் ''ஆ''வென அலறினான். அப்போது அவன் நின்ற இடத்தில் தரை பிளந்து கொண்டது. அவன் கிடுகிடுவெனப் பாதாளத்தில் விழுந்து நரகலோகத்திற்குச் செல்லலானான்.

அப்போது அவன் மனம் ''ஐயோ! என் குரு கொடூரச் செயல்களைச் செய்யாதே என அறிவுரை கூறினாரே! அவர் கூறிய அறிவுரையைக் கேட்காமல் போனதால் என் குடும்பமே அழிந்து போனதே'' என எண்ணி மனம் வருந்தினான்.

**காலம் கடந்து எண்ணி என்ன பயன்!**

# அறிவுக்கு

★அனைத்து அறிவாளிகளுக்கும் மேலாக ஓர் அறிவாளியாக இறைவன் இருக்கிறான்.

★கடன்படுதல் வலைக்குள் சிக்கிக் கொள்வது போன்றதாகும்.

★ஒரு பாவம், நூறு பாவங்களை அதன் பின்னே இழுத்துச் செல்லும்.

★உன்னை வஞ்சித்தவனை ஒரு போதும் நம்பாதே.

★தனக்கென்று இருந்தால் தான் சமயத்துக்கு உதவும்.

★நல்லாரை நாவிலுரை பொல்லாரைக் கல்லிலுரை.

★வறுமை அறிவாளியாக்கும். செல்வந் தனாக்காது.

சா.ஜிந்துஜா
கோண்டாவில்.


# தாய் அன்பு




அம்மாவென்று அழைத்தால், பிள்ளை
நிலை என்ன வென்று அறிய
ஆவலுடன் வந்திடுவாள் அன்னையவள்
இரவிலே அம்மா என்று அழுதால்
தன் தூக்கத்தைக் கலைத்து
பால் ஊட்டிடுவாள்
ஆசையுடன் அன்னையவள்.

தான் பசி ஆறாமல் பிள்ளை பசி ஆறிட
வேண்டும் என்று பிள்ளைக்கு உணவு
ஊட்டிடுவாள் அன்னையவள்.
பள்ளி செல்ல வேண்டும் என்று பாடம் தனை
கற்பித்திடுவாள் அன்னை, பிள்ளை மனம்
நோகாமல் பணிவுடனே
நடந்திடுவாள் அன்னை.


செ.விஜித்தா
தரம்-8
கிளி/கிராஞ்சி அ.த.க.பாடசாலை




எஸ்.அனிருத்தன், தரம்-1, யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி



வை.ஜெனா, கொக்குவில்



பு.யதுசிகா, கோண்டாவில்



ஜி.றிந்தியா, தரம்-4சி, யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி



ஞா.மாதுரி, தரம்-7சி, யா/மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை.

## விடை தெரியுமா? 188

### உங்களுக்கும் பரிசில்கள்

1. 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' எனப் பாடிய சங்கப் புலவர் யார்?
2. 'தங்கத் தாத்தா' என்று அழைக்கப்படும் ஈழத்துப் புலவர் யார்?
3. இலங்கையில் புகழ்பெற்ற குகை ஓவியங்கள் காணப்படும் இடம் எது?
4. இலங்கையில் தாவரவியற் பூங்காக்கள் அமைந்துள்ள இடங்கள் எவை?
5. மனித உடலில் மிகப் பெரிய உறுப்பு எது?

### விடைகள் 185

1. மாசிடோனியா
2. ஜப்பான்
3. ஈரல்
4. கியூரியோ சிற்றி
5. ஜனவரி -01

### வெற்றி பெற்றோர் விவரம் (186)

* செ.கபிலன், தரம் -5, கிளி/கிராஞ்சி அ.த.க.பாடசாலை.
* செ.விஜித்தா, தரம் -8, கிளி/கிராஞ்சி அ.த.க.பாடசாலை.
* லோ.சித்திரா, தரம்-8, மானிப்பாய் சென் ஆன்ஸ் றோ.க.த.க.பா.
* சி.கார்த்திக், தரம்-11ஏ, யாழ். இந்துக் கல்லூரி.
* சி.ஹரிகரன், யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.

### விடை தெரியுமா?

தெரிந்தால் 08 .12.2012 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் [illegible] பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நியாயம் இல்லாத நியாயங்கள்

அன்புள்ள மகன் வசந்தகுமாருக்கு, அப்பா எழுதிக்கொள்வது.

தம்பி வசந்தன், நான் இங்கு சுகமாக இருக்கின்றேன். நீயும், மருமகள், பிள்ளைகளும் சுகமாக இருக்க மடத்துவாசல் பிள்ளையார் துணைபுரிவாராக.

தம்பி வசந்தன், கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் அம்மா இறந்தபோது நீ ஊருக்கு வந்திருந்தாய். அதன்பிறகு நீ இங்கு வரவே இல்லை. அப்பா இருப்பதை மறந்துவிட்டாயா? தம்பிஎனக்குஉன்னைப் பார்க்க வேணும்போலை இருக்கு. நீங்கள் இங்குவந்து என்கூட ஊரிலே வாழமுடியாவிட்டால் போகட்டும். என்னை உங்கையாவது கூப்பிட முடியாதா? ஏனென்றால் இப்போது கொஞ்ச நாளாய் என்னால் எதுவுமே முடிவதில்லை. தனிமையும், வயோதிபமும் என்னை மிகவும் வாட்டுகிறது. என் கடைசி காலத்தில் உங்களுடனே சேர்ந்து வாழ விரும்புகிறேன். ஆனால் நீ ஏதோவெல்லாம் சொல்கின்றாய். தம்பி நீ "அமெரிக்காவில் பெரிய டாக்டர்" என்று என்னால் பெருமைப்பட்டுக்கொள்ள முடிகிறது. வேண்டிய அளவு பணமும் அனுப்புகின்றாய். இது போதுமா தம்பி?

வசந்தன் உனக்கு நினைவிருக்கிறதா? நீ அப்போ முதலாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தாய். "அப்பா கால் நோகுதப்பா. பள்ளிக்கூடம் போகமாட்டேன்." என்று அழுவாய். நான் நீ நடந்து போகக்கூடாது; உனக்குக் கால் நோகக்கூடாது என்பதற்காக ஒரு கார் வாங்கினேன். பின்னர் "கைவிளக்கில் படிக்க முடியாது; கண் வலிக்கிறது." என்று அழுதாய். உடனே நான் ஆயிரக்கணக்கில் செலவு செய்து எங்கள் வீட்டுக்கே மின்சாரம் பெற்றுக்கொண்டேன். எங்கள் ஊரிலேயே மின்சாரம் பெற்றுக்கொண்ட முதல்வீடு; கார் வைத்திருந்த முதல் வீடு எங்களின் வீடுதான். இதையெல்லாம் உன்னுடைய படிபுக்காகத்தான் நான் செய்தேன்.

தம்பி வசந்தன்! நீ ஊரிலே இருந்தால், எங்கே உனது படிப்புக்கு இடையூறு வந்துவிடுமோ? என்று பயந்தேன். அதனால் செலவைப் பற்றிப்பாராமல் உன்னை விடுதியில் தங்கவைத்துப் படிப்பித்தேன். அதன்பிறகு எங்கள் பிரதேசத்தில் நல்ல கல்வி இல்லை என்று சிலர் கூறினார்கள். அதனால் என்னுடைய காணியை விற்று உன்னைக் கொழும்புக்கு அனுப்பிப் படிப்பித்தேன். இவ்வளவும் ஏன்? நீ வெளிநாடு போய் படிக்க வேண்டிய நிலை வந்தபோதுகூட, மறுக்கவில்லை. "நீ அமெரிக்காவா? லண்டனா? போகப்போகின்றாய்" என்றுதான் கேட்டேன். அதற்காக நான் பட்ட கஷ்டம் கொஞ்சநஞ்சமில்லை. வியர்வை சிந்தி உழைத்தேன். ஆனால் இன்று நீ "சித்தப்பா வீட்டிலா, பெரியப்பா வீட்டிலா தங்கப் போகிறீர்கள்." என்று கேட்கின்றாய். என்னுடைய மகன். நீ இருக்கும்போது நான் ஏனப்பா இன்னொருவர் வீட்டிலை போய்த் தங்கவேணும்?

தம்பி உனக்கு ஒரு திருக்குறள் தெரியுமா?

**"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்.."**

திருவள்ளுவர் சொன்னது போல ஒரு தந்தையாக நான் உனக்கு செய்ய வேண்டியவற்றை எல்லாம் சரியாகச் செய்திருக்கின்றேன், என்றுதான் நினைக்கின்றேன். ஆனால் நீயொரு மகனாக செய்யவேண்டியவற்றை மறந்துவிட்டாயா?

தம்பி உனக்குப் பணம் அனுப்ப வேண்டும் என்பதற்காக நான் இரவு, பகலாக உழைத்து ஓடாகத் தேய்ந்து போனேன். இப்போது எனது உடம்பு ஓய்ந்துவிட்டது. என்னால் எதுவுமே முடியவில்லையப்பா! எனக்கு உறவு என்று சொல்லிக் கொள்ள நீ மட்டும்தானே இருக்கின்றாய். உன்னையும் பிரிந்து என்னால் எப்படியப்பா தனியாக வாழமுடியும். நீ என்மீது பாசம் வைக்க வேண்டாமா? என்னைப் பிரிந்திருக்க உன்னால் எப்படியப்பா முடிகிறது.? "பெற்ற மனம் பித்து பிள்ளைமனம் கல்லு" என்று சொல்லுவார்கள். இதை என்னையும் சொல்ல வைத்திடாதே அப்பா.

தம்பி வசந்தா, என்னைத் தவறாக நினைக்காதையப்பா. ஏதோ மனதிலபட்டதைத்தான் எழுதியிருக்கிறன். எதற்கும் நீ நன்றாக யோசித்து நல்லதொரு முடிவை எடு. எனக்கு கடிதம் போடு.

இப்படிக்கு உன் அப்பா.

★★★

*கடிதத்தை வாசித்து முடித்தான் வசந்தன். மனதுக்குக் கஷ்டமாக இருந்தது. அப்பா மனவருத்தப்பட்டு எழுதியிருந்தார். ஆனாலும் என்ன செய்வது. இவையெல்லாம் அவருடைய விருப்பங்கள் தானே! தனது மடியில் நித்திரையாகியிருந்த கடைசி மகனைத் தூக்கி கட்டிலில் கிடத்தி போர்த்து விட்டான். பக்கத்தில் மூத்த மகன் ஆழ்ந்த நித்திரையில்...! தனது பிள்ளைகளைப் பார்த்தான் வசந்தன். இவர்கள் எவ்வளவு கொடுத்து வைத்தவர்கள்? தன் தாய் தந்தையுடன் வாழப்போகின்றார்கள். தனிமையின் கொடுமையைப் பற்றி அப்பாவுக்கும் இப்போது தான் புரிகின்றது போலும். அப்பாவுக்கு பதில் எழுத வேண்டும். பேனாவையும் பேப்பரையும் எடுத்துக்கொண்டு வந்து மேசைக்கு முன்னால் உட்காா்ந்தான்.*

★★★

*நியூயோர்க்*
*22.08.2012*

*அன்புள்ள அப்பாவுக்கு உங்கள் மகன் வசந்தன் எழுதிக் கொள்வது,*

*உங்களின் கடிதம் கிடைக்கப் பெற்றேன். அப்பா நாங்கள் இங்கே சுகமாக இருக்கின்றோம். நீங்களும் சுகமாக இருக்க அதே பிள்ளையார் துணைபுரிவாராக. அப்பா முதலில் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். உங்களை இங்கு அழைப்பது மிகவும் கடினம். உங்களுக்கு 'விசா' தரமாட்டார்களாம். தவிர நான் அமெரிக்காவில் ஒரு பிரபல்யமான டாக்டர். தொடர்ந்தும் மருத்துவ ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வருகின்றேன். இந்த நிலையில் நான் ஊரில் வந்து என்ன செய்ய முடியும். அதனால் கொஞ்சம் சமாளித்து வாழ முயற்சி செய்யுங்கள்.*

*அப்பா தனிமை என்பது கொடுமைதான். ஆனாலும் போகப் போக எல்லாம் சரியாகிவிடும். இந்தத் தனிமையை வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே உணர்ந்தவன் அப்பா நான். நீங்கள் அம்மா இறந்த பின்புதான் உணருகின்றீர்கள். நான் உங்களிடம் இருந்த நாள்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். ஊரிலே ஒரு சிட்டுக் குருவியைப்போல சிறகடித்துத் திரியும் காலங்களையெல்லாம் இழந்தவன் அப்பா நான். "படிப்பு படிப்பு படிப்பு" இதனைத் தவிர வேறு என்னத்தைத் தான் நீங்கள் எனக்கு போதித்திருந்தீர்கள்.*

*அப்பா உங்களுக்கு நினைவிருக்கிறதா? சிறுவயதிலையே என்னை விடுதியில் கொண்டு போய் விட்டுவிட்டீர்கள். நான் எவ்வளவு தனிமையை அனுபவித்திருப்பேன் தெரியுமா? ஊரிலே கல்யாண வீடு, பூசை வீடு என்று எத்தனை தினங்கள் எல்லாம் நடக்கும், நான் ஆசைப்பட்டுக் கடிதம் எழுதுவேன். நீங்கள் மறுத்துவிடுவீர்கள். என்னுடைய படிப்பு கெட்டு விடுமாம். அப்பா ஒரு பிள்ளை செய்யக்கூடிய குறும்புகள், தவறுகள், சண்டை சச்சரவுகளை எல்லாம் நீங்கள் அனுபவித்திருக்க முடியாது. நீங்கள் என்னைக் கண்டித்தது கிடையாது. எனக்கு அடித்தது கிடையாது. என்னை அரவணைத்ததும் கிடையாது. எல்லாம் விடுதியில் முடிந்துவிட்டது. அப்பா உங்களிடம் அடிவாங்க வேண்டும் போல இருக்கு உங்களுக்கு முன்னால் நின்று அழ வேண்டும் போல இருக்குது அப்பா.*

*கொழும்பிலே நான் படித்துக் கொண்டிருந்த போது கோயில் திருவிழாவுக்கு வர ஆசையாக இருக்கிறது அப்பா என்று எத்தனை கடிதங்களை எல்லாம் எழுதியிருப்பேன். நீங்கள் மறுத்து விடுவீர்கள் என்னுடைய படிப்பு கெட்டுவிடுமாம். இந்தச் சந்தோஷங்களை எல்லாம் நினைத்து என் மனம் ஏங்கும். அந்தத் தனிமை என்னைக் கொல்லும். அழுவேன்... கேட்க யாரிருந்தார்கள்?*

*அப்பா "நீ என்மீது பாசம் வைக்க வேண்டாமா?" என்று கேட்டு எழுதியிருந்தீர்கள் விதைத்தால் தானே அறுவடை செய்ய முடியும். அப்பா என் அம்மாவின் கையால் சோறுவாங்கி உண்ட நாள்கள் கூட [illegible] அப்பா. எனக்கொரு தலையிடி காய்ச்சல் வந்தபோது எனக்குத் தைலம் தடவிவிட அம்மா இல்லை. வைத்தியரிடம் அழைத்துப் போக அப்பா இல்லை. சோறு ஊட்டிவிட ஆச்சியில்லை. என் வாழ்வில் இழக்கவே கூடாத அடிப்படைச் சந்தோஷங்களைக் கூட இழந்தவன் அப்பா நான். என் உறவினர், நண்பர்கள் அயலவர்களின் முகங்கள் கூட எனக்கு ஞாபகத்தில் இல்லை. அப்பா நான் எனது பெற்றோரின் அரவணைப்பில் வளரவில்லை. விடுதி வோர்டனின் கண்டிப்பில் வளர்ந்தவன் அப்பா. என்னிடம் எப்படி அப்பா பாசத்தை எதிர்ப்பார்க்கலாம்.*

*அப்பா நான் உலகில் தலைசிறந்த டாக்டர் தான். ஆனாலும் என்னைப்போல ஒரு துரதிர்ஷ்டசாலியை நீங்கள் பார்த்திருக்கவே முடியாது. மனதளவில் நான் மிகவும் நொந்துபோய் இருக்கின்றேன். படிப்பு படிப்பு இதைத்தவிர வேறு எதைத் தான் நீங்கள் எனக்குப் போதித்திருக்கின்றீர்கள். அன்பு பாசத்தைப் பற்றியெல்லாம் நீங்கள் எனக்குச் சொல்லித் தரவில்லையே? பிறகு எப்படியப்பா அதை நீங்கள் என்னிடம் எதிர்பார்க்கலாம்? ஆனால் ஒன்றப்பா. என்னுடைய பிள்ளைகளை நான் என்னுடனே, என்னுடைய அரவணைப்பிலே கண்காணிப்பிலே தான் வளர்க்கப்போகின்றேன். அவர்களின் முன்னேற்றம் எனக்கு இரண்டாம் பட்சம் தான். என்னுடைய பிள்ளைகளின் முகத்தை ஒரு தடவையேனும் பார்க்கா விட்டால் எனக்குத் தூக்கமே வராதப்பா. நான் இல்லாமல் எனது கடைசி மகன் சாப்பிடவே மாட்டான். என்னுடைய பிள்ளைகள் அதிர்ஷ்டசாலிகள் அப்பா!*

*அப்பா நீங்கள் ஒரு தந்தையாக மகனுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளையெல்லாம் சரிவரச் செய்துவிட்டதாக ஒரு குறளைக்குறிப்பிட்டு விளக்கியிருந்தீர்கள். அது முற்றிலும் உண்மைதான். உங்களுக்கு இந்தக் குறளைக்கூடத் தெரிந்திருக்கும்.*

**"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல் எனுஞ்சொல்"**

*அப்பா அதாவது நல்லஒரு மகனுடைய கடமை தந்தைக்குப் பெருமை, புகழ் சேர்ப்பது தான் என்கிறார் வள்ளுவர். நானும் ஒரு சராசரி மனிதனை விட அதிகமாக, உங்களுக்கு பெருமை சேர்த்திருக்கின்றேன். அப்பா இந்த மருத்துவத்துறையில் நான் சாதனை படைக்கும் ஒவ்வொரு தடவையும் என்னுடைய பெயருக்கு முன்னாலே இந்த உலகம் உங்களுடைய பெயரைத் தான் சொல்லியழைக்கின்றார்கள். இதைவிட வேறு என்னப்பா வேண்டும்? அப்பா உங்களின் கனவும் அதுதானே! அப்பா என்னுடைய ஒருமாதச் சம்பளம் எவ்வளவு தெரியுமா? இலங்கை ரூபாவில் பத்து இலட்சம் ரூபாய்கள். இதுஎல்லாம் நீங்கள் பட்ட கஷ்டத்துக்கு கிடைத்த பலன் அப்பா.*

*அப்பா இதையெல்லாம் நான் உங்களை வேதனைப் படுத்துவதற்காக எழுதவில்லை. என் உணர்வுகளின் நியாயங்களை நீங்களும் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் எழுதுகின்றேன். அப்பா வேண்டிய அளவு பணம் அனுப்புகின்றேன். ஒன்றுக்கு இரண்டு உதவியாளர்களை வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள். அப்பா கவனமாக உடம்பைப் பார்த்துக்கொள்ளுங்கள். நீங்கள் நன்றாக வாழ வேண்டும்.*

*இப்படிக்கு உங்கள் மகன் வசந்தன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துணிவே துணை

சு. சிவாஜினி
சுன்னாகம்.

இன்றைய காலத்தில் பெண்கள் மென்மையாகவும் அழகுப்பதுமைகளாகவும் இருப்பது அவர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துமா? ஒரு பெண் எங்கு சென்றாலும் அவளுக்கு துணையாக ஒரு ஆண் துணையை அழைத்துக்கொண்டு தான் செல்ல வேண்டும் என்பது சில சமூக அமைப்புக்களின் கட்டாய நிலைப்பாடாகவே உள்ளது. இந்த விடயமானது அவளின் பாதுகாப்புக்கான துணை என்று அனைவரும் ஏற்றுக்கொள்கின்றோம்.

ஆனால், பெண்ணுக்கு வெளிப்பாதுகாப்பை விட அவளுக்குள் இருக்கின்ற ஆத்ம பலத்தின் துணிவே பெரும் துணையாக இருக்க வேண்டும். உண்மையில் நாம் எமது தேவைகள் நிமித்தம் எத்தனையோ இடங்களுக்குச் செல்கின்றோம். எத்தனையோ ஆண்களோடு பேசுகின்றோம் அனைத்துக்கும் எமக்கு காவலாக ஒருவரை நியமிக்க முடியுமா? காவலாக நியமிப்பவரால் நாம் பாதுகாக்கப்படுகின்றோமா? இப்படியான கேள்விகள் எத்தனை சகோதரிகளின் மனங்களில் எழுகின்றது. கேள்விகள் எழும்பாத வரை விடைகளும் கிடைப்பதில்லை.

நான் நானாக இருக்க வேண்டும். எந்த ஆண்கள் என்னை தப்பான வழிக்கு அழைத்தாலும் தற்துணிவு கொண்டு அதனை எதிர்த்து நின்று என் கற்பு நெறி தவறாமல் வாழவேண்டும் என்ற மனத்திடம் கொண்டு எங்கு சென்றாலும் ஒரு பெண்ணால் புனிதமாக வாழமுடியும். நாம் நாமாக இருந்தாலும் வெளிச்சச்சரவுகளை உடைத்தெறியலாம். தெளிந்த நீரில் முகம் பார்ப்பதைப் போன்று நல்ல தெளிவுள்ள பெண்களிடத்தில் இந்த சக்தியை உணர முடியும். அந்த சக்தியே எமக்கு என்றும் துணை நிற்கும். எத்தனை எத்தனை பாதுகாப்புக்கள் எம்மைச் சுற்றியிருந்தாலும் அத்தனையும் எமக்கான காப்பு ஆகுமா? வேலியே பயிரை மேயும் நிலை தான் இன்று.

இந்த விடயத்தில் பெண்களான நாம் மிகமிக கவனமாக இருக்க வேண்டும். இன்று சில ஆண்கள் கூறுவார்கள் நீ எனக்கு தங்கச்சி போல, அக்கா போல என்று. இறுதியில் அவர்கள் சேட்டைகளுக்கு எத்தனை பெண்கள் பலிக்கடாக்களாகி உள்ளார்கள்.

எம் சகோதரரே கொஞ்சமும் யோசியாமல் எந்த ஆண் நண்பரோடும் பழகாதீர்கள். அது உங்களோடு முடிவதில்லை. தொடர்ந்து ஒரு பாதிக்கப்பட்ட கேவலமான அப்பா இல்லாத பிள்ளையை உருவாக்கி அந்தப் பிள்ளையூடாக தொடர்ந்து உங்கள் பரம்பரைக்கே ஒரு கெட்ட பெயரை உருவாக்கும்.

நாம் எங்கிருந்தாலும் தங்கமான தமிழ்ப்பெண்கள், எங்கள் ஆணிவேரின் புனிதம். அதன் பலம் அனைத்துமே உலகமே பறைசாற்றி நின்ற காலங்களை மீட்டிப் பாருங்கள். எத்தனை கௌரவத்தோடு இருந்த எம் இனம் இன்று அனைத்தையும் இழந்தாலும் மானத்தை இழக்கலாமா?

தமிழ்ப்பெண்ணுக்கு என்று ஒரு குணம் உண்டு. அதனை களங்கப்படுத்தலாமா? யோசித்து முடிவெடு.



## ஒவ்வொரு பெண்ணும் உணர வேண்டும்

பெண்மை என்ற விலங்கைக் கொண்டு
உன்னைப் பூட்டாதே வெறும்
கண் மை மயக்கும் அழகு என்றும்
உண்மை இல்லையே...

கொங்கைகள் உனக்கு
இறைவன் தந்தான்
குழந்தைக்குப் பாலூட்ட - அதை
சந்தையில் விற்று மோகம் கொண்டு
சாதிக்க முனைவதென்ன...

தொப்புள் கொடியில்
தொடரும் சொந்தம்
தாய் சேய் உறவல்லவோ? அதில்
கப்பல்விட்டு பம்பரம் ஆட்டி
கவிழ்வது உன் வாழ்வே

பாரம்பரியம் பண்பாடென்று- பிறர்
பேசுவதில் பயனென்ன?
ஒவ்வொரு பெண்ணும்
உணர்ந்தாலொழிய
உருப்பட வழியில்லை

இறைவன் தந்த அழகு யாவும்
உனக்கே சொந்தமடி
தனக்காய் ஆழ ஒரு கணவன் வருவான்
பிணக்கின்றி வாழ்ந்திடு நீ...

ஜெ.யஸ்மின், உசன்.

## விழி எழு இயங்கு...

நாளைக்கு செய்யலாம்
பிறகு பார்க்கலாம்
என்பதே நமக்கு
வாடிக்கையான வார்த்தை
நாளை என்பதும் பிறகு
என்பதும்
இல்லை என்றே
ஆகிவிடும்
மாற்ற முடிந்ததை
மாற்றிக் கொள்
மாற்ற முடியாததை ஏற்றுக்
கொள்
திட்டங்களைத் தீட்டு.
செயல்களில்
காட்டு. இப்போதே
விழித்துக் கொள்.
இப்போதே திருத்திக் கொள்
உன் பாதையில் நில்..
தயாராக.. ஓடு!

யே.லீலியட் நிர்மலி

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் "திலகம்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி

# காதல் வந்தும் சொல்லாமல்.....

காதல் இல்லாத ஒருவரைக்கூட இந்த உலகில் பார்க்க முடியாது. அந்த அளவில் அது ஓர் உன்னதமான ஒரு தெய்வீக உணர்வு. இவ்வாறு காதல் செய்பவர்களில் அதிகம் யோசிப்பவர்கள் யார் என்று பார்த்தால், அது பெண்கள் தான். ஏனெனில் அவர்களுக்குச் சற்றுப் பயம் அதிகம். அந்த பயத்தால் தான் அவர்கள் தமக்குக் காதல் இருந்தாலும், அதை வெளிப்படுத்த தயங்குகிறார்கள். மேலும் பெண்களின் மனமானது மென்மையானது. அதில் அவர்கள் எப்போதும் சந்தோஷம் வேண்டும் என்று தான் விரும்புவார்கள். மேலும் அவர்கள் மனதில் ஒரு சில கேள்விகள், சந்தேகங்கள் எழுவதாலும் அவர்கள் வெளிப்படுத்த மறுக்கிறார்கள். சரி, இப்போது பெண்கள் எதனால் தங்கள் காதலை ஒப்புக் கொள்ள மறுக்கின்றனர் என்ற உண்மையை அனுபவசாலிகள் கூறுகின்றனர்.பார்ப்போமா

★ பெண்களின் காதலில் முதலில் தடையாக இருப்பது அவர்களது பெற்றோர்கள் தான். ஏனெனில் இத்தனை நாட்கள் தன்னை பெற்று வளர்த்தெடுத்த பெற்றோர் தன் காதலை ஒப்புக் கொள்ளவில்லையெனில் என்ன செய்வது என்ற ஒரு பயம், எப்போதுமே அவர்களது மனதில் இருக்கும். இதனால் அவர்கள் தங்கள் மனதில் காதல் இருந்தாலும், அதனை வெளிப்படுத்தாமல், மனதிலேயே வைத்துக் கொள்வர்.

★ பொதுவாக பெண்கள் காதல் செய்துவிட்டால், காதலிப்பவரையே மணக்க வேண்டும் என்று நினைப்பார்கள். அது நடக்காவிட்டால், பின் அவர்கள் மனதை கல்லாக்கிக் கொண்டு பெற்றோர் சொல்பவரை திருமணம் செய்து கொள்ள வேண்டும். இவை அனைத்தும் வேண்டுமா என்று நினைத்து, அந்தக் காதலை மனதிலேயே புதைத்துவிடுவர்.

★ நமது சமூகம் கூட பெண்களின் காதலை வெளிப்படுத்துவதற்கு ஒருவித தடையாக உள்ளது என்றும் சொல்லலாம். ஏனெனில் நமது சமுதாயத்தில் ஜாதி, மதம் போன்றவற்றை அதிகம் பார்ப்பது வழக்கம். இதனால் எவரும் விரும்பியவர்களை மணக்க முடியாத [illegible] ஒரு இந்து பெண், [illegible] அந்தச் சமுதாயம் அதனை வித்தியாசமாகப் பார்ப்பதோடு, தவறாக பேசுவதால், வீட்டில் இருக்கும் பெற்றோர்களும் அவர்களை ஏற்க மறுக்கின்றனர். இதுவும் பெண்களின் காதலுக்கு தடையாக உள்ளது. ஆண்கள் தைரியத்துடன் பார்க்கலாம் என்று இருப்பார்கள். ஆனால் பெண்கள் அத்தகையவர்கள் அல்ல.

★ சில பெண்கள் தைரியத்துடன் காதலித்து தான் திருமணம் செய்து கொள்ளலாம் என்று இருப்பார்கள். ஆனால் சில பெண்கள் காதலித்து மணப்பதற்கு தைரியமின்றி, காதலித்த பின் காதலன் தன்னை விட்டு போய் விடுவாரோ என்ற எண்ணத்தில், காதல் தனக்கு வந்தாலும் மனதை கல்லாக்கிக் கொண்டு வெளிப்படுத்த தயங்குவார்கள். இந்த விடயத்தில் பெண்களுக்கு நம்பிக்கை இல்லை என்று தான் சொல்ல வேண்டும்.

மேற்கூறிய காரணங்களாலேயே பெண்கள் தங்கள் மனதில் காதல் மலர்ந்தாலும், அவற்றை மறைத்து மனதிலேயே புதைத்து விடுகின்றனர். வேறு என்ன காரணங்கள் இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்களோ, அதை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்கவாத்தியமாக தவிலா?


எஸ்.எம்.கோபாலரத்தினம்

தமிழ் நாட்டிலிருந்து திருவாடுதுறை ஆதீனமோ வேறு ஒரு ஆதீனத்திலிருந்தோ யாழ்ப்பாணம் வந்து கல்லூரி வீதியிலிருக்கும் நாவலர் ஆச்சிரமத்திலிருந்து பண்ணிசைப் பயிற்சி வழங்கிக்கொண்டிருந்த பண்ணிசை ஓதுவார் டி.கே.ராஜசேகரனை இருவரும் சென்று சந்தித்தோம். ஸ்ரீராம பட்டாபிஷேக விழாவில் கலந்துகொண்டு பண்ணிசை விருந்தளிக்க விரும்பினார். இந்து அமைப்பினால் ஒப்பந்த அடிப்படையில் வந்திருப்பதால் அந்த அமைப்புக்கு 300 ரூபா கொடுக்க வேண்டும் என்றார். நாங்கள் அதைக் கொடுக்கச் சம்மதித்தோம். பட்டாபிஷேக விழாவின் முதல்நாள் நிகழ்ச்சி கலைஞர்கள் வைரவநாதன், சின்னராசா சகோதரர்களின் மங்கள இசையுடன் ஆரம்பமானது. பண்ணிசை ஓதுவார் டி.கே.ராஜசேகரனின் பண்ணிசைக் கச்சேரி சிறப்பாக அமைந்தது. இந்தக் கச்சேரியை நாதஸ்வரக் கலாநிதி என்.கே.பத்மநாதன் வெகுவாகக் கேட்டு மகிழ்ந்தார். இதன்பின் அவரது நாதஸ்வர இசையை ராஜசேகரன் அவர்களும் வெகுவாக ரசித்து மகிழ்ந்தார். இருவருக்கும் இந்தவிழா திருப்தியும் மகிழ்ச்சியும் அளித்தது!

இசைநிகழ்ச்சிகளுடன் கவியரங்கு, கருத்தரங்கு என நிகழ்ச்சிகள் அமைத்தோம். மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக ஸ்ரீராம பட்டாபிஷேக விழா நடைபெற்றது. கவியரங்கில் இன்று கனடாவில் கவிநாயகராக வாழும் கவிஞர் வி.கந்தவனம், கவிஞர் கல்வயல் வி.குமாரசாமி இன்று அமரர்களாகிவிட்ட கவிஞர் காரை செ.சுந்தரம்பிள்ளை, கவிஞர் அரியாலையூர் வே.ஐயாத்துரை ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். கருத்தரங்குகளில் மூதறிஞர் க.சொக்கலிங்கம் (சொக்கன்), ஈழநாடு நிர்வாக ஆசிரியர் கி.பி.ஹரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். மற்றையோர் நினைவில்லை.

முதல் நாள் விழா நடந்து முடிந்ததுமே இரண்டொருவருக்கு புகைச்சல் கிளம்பிவிட்டது. இரண்டாவது விழாவிற்றான் தனித்தவில் கச்சேரி நடந்தது.

இந்த விழாவுக்கு லயஞான குபேரபூபதியை ஏற்பாடு செய்வதற்கு இரத்தினகோபாலும் நானும் போயிருந்தோம். கம்யூனிஸ்ட் வி.பொன்னம்பலம் அவர்களுடன் தெட்சணாமூர்த்தி அவர்கள் முதல்தடவை அலுவலகம் வந்தபோது, ஏற்பட்ட சந்திப்பைத் தொடர்ந்து பின்னரும் சந்தித்திருக்கிறேன். பட்டாபிஷேக விழாவுக்கு வருவதாகவும் வாசிப்பதாகவும் சம்மதம் தெரிவித்தார். நண்பர் இரத்தினகோபாலுக்கு இதில் நம்பிக்கை இல்லை. விழாவில் கலந்து வாசிப்பதற்குச்




சின்னராசா, கணேசன் ஆகியோர் வந்துவிட்டனர். அவர் வருவதாகச் சொல்லியிருக்கிறார். வருவாரென்று அவர்கள் இருவரும் சொன்னார்கள்.

நேரங்கடந்துகொண்டு இருந்தது. அவரின் தவிலை எதிர்பார்த்து வந்திருந்த சனக்கூட்டம் மெதுவாகக் கலையத் தொடங்கியது. சரி அவரைக் காணோம்; நாங்கள் வாசிப்போம் என்று அவர்கள் இருவரும் தொடங்கவும் தேரடியில் கார் வந்தது! அவர் இறங்கிக் கோயிலுக்கு வந்து நேரே மூலவர் வாசலில் போய் நின்றார். நான் சிறிதுநேரம் (கால்மணி நேரத்துக்கு மேல்) சுவாமி தரிசனம் செய்தபின்தான் திரும்பிப் பார்த்தார்! மூன்று வித்துவான்களின் தனித்தவில் கச்சேரி பெருமாள் கோயில் மண்டபத்தில் ஸ்ரீராம பட்டாபிஷேக விழாவில் சுமார் இரண்டு மணி நேரம் முழங்கித்தள்ளியது! இப்படியொரு நிகழ்ச்சி நடந்தது பலரும் நம்பமுடியாதது. முன்சொன்னபடி அவர்களுக்கு வாகனப் பெற்றோல் செலவாகக் கொடுத்தோம். இந்த நிகழ்ச்சி பலருக்கும் மகிழ்ச்சியையும், சிலருக்கு அதிர்ச்சி கலந்த எரிச்சலையும் கொடுத்தது. சின்னராசா, கணேசன் ஆகியோர் நீண்டநாள் என்னுடன் நட்பாக இருந்தார்கள். பின்னர் திருச்சியில் நண்பர் சபிபாரதி சாரெத்தினத்தின் மகள் கலியாணத்திலும் கணேசண்ணனைச் சந்தித்திருக்கிறேன். திருவானைக்காவில் அவர் சிலகாலம் தங்கியிருந்த போதும் போய்ப் பார்த்திருக்கின்றேன்.

சின்னராசா அண்ணருடன் முன்னரே மெல்லிசைப் பாடகர் ஈழத்து சீர்காழி என்றழைக்கப்பட்ட ஆர்.ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி மூலம் தொடர்பிருந்தாலும் பின்னர் அவருடன் நல்ல நட்பு ஏற்பட்டது. அவர் வீட்டுக்கும் வந்திருந்து அளவளாவியிருக்கிறார். பிரபலசங்கீத வித்துவானும் நல்ல பாடகரும் கல்லூரி அதிபராக இருந்த வருமான (சமீபத்தில் ஆஸ்திரேலியாவில் மறைந்த) எஸ்.பரம்தில்லைராஜா ஒரு கலை நிகழ்ச்சியில் தெரிவித்த ஒரு கருத்து சின்னராசா உட்பட சில கலைஞர்கள் என் வீடு வரை வருவதற்கு வழி செய்துவிட்டது.

இன்னிசைக் கச்சேரியிலும் பரத நாட்டிய நிகழ்ச்சிகளிலும் தவிலும் ஒரு பக்கவாத்தியமாகச் சேர்க்கப்பட்டு நிகழ்ச்சிகளில் இடம்பெற்று வந்த காலமது. இசைக் கச்சேரிகளில் தவில் ஒரு பக்கவாத்தியமாகச் சேர்க்கப்படுவதைக் கடுமையாகக் கண்டித்து நண்பர் பரம்தில்லைராஜா அவர்கள் ஒரு இசை நிகழ்ச்சியில் கருத்துத் தெரிவித்திருந்தாராம். பரம் தில்லையும் இலேசுப்பட்டவரல்லர். யாருக்கோ சாட்டையை விசிறியிருக்கிறார். இவரது கருத்து பத்திரிகைகளில் வெளிவந்ததாகத் தெரியவில்லை.

இசைக் கலைஞர்கள் மத்தியில் விவாதத்தைக் கிளப்பி பெரும் சர்ச்சையானது. "பரம் தில்லை சொன்ன கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் விட்டால் நமக்கெல்லாம் மதிப்பில்லாமல் போய்விடும்" என்று சில கலைஞர்கள் ஆத்திரத்தோடு கூறினர். பரம்தில்லைக்கு எப்படி மறுப்புத் தெரிவிப்பது? இது பற்றி ஆலோசனை செய்வதற்கு கஸ்தூரியார் வீதி-நாவலர் வீதிச் சந்தியில் மூன்று மாடி வீட்டில் வசித்த சட்டத்தரணியும் சங்கீதவித்துவானும் வானசாஸ்திர அறிஞரும் எனது முன்னாள் கல்லூரி ஆசிரியருமான டபிள்யு. எஸ்.செந்தில்நாதன் அவர்களிடம் முதலில் சென்றிருக்கிறார்கள்.

செந்தில்நாதன் அவர்கள் என்ன சொன்னாரோ தெரியாது. பிரபல சங்கீத வித்துவான் சங்கீத பூஷணம் பொன் சுந்தரலிங்கம் (இன்று கனடாவில் வாழ்கிறார்) நாதஸ்வரமேதை என்.கே.பத்மநாதன் சுரஞான கேசரி தவில்வித்துவான் என்.ஆர்.சின்னராசா ஆகியோர் அங்கம் வகித்த அந்தக் குழு என் வீட்டுக்கு வந்தது.

பத்மநாதன் சுந்தரலிங்கம் ஆகிய இருவரும் ஆவேசப்பட்டுப் பேசினர். நான் பொறுமையாக அவர்கள் சொன்னதைக் கேட்டுக்கொண்டிருந்தேன். பரம்தில்லை கூறியதற்கு மறுப்புத் தெரிவித்து ஓர் அறிக்கை நல்லமுறையில் 'ஈழநாடு' பத்திரிகையில் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட வேண்டும் என்று அவர்கள் இறுதியில் கேட்டுக்கொண்டனர்.

"நீங்கள் அறிக்கை தந்தால் பத்திரிகையில் வெளியிடுவதில் பிரச்சினையில்லை" என்று சொல்லி முதலில் அவர்களைச் சாந்தப்படுத்தினேன். பரம்தில்லை கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட நிகழ்ச்சிக்கு நிறையப் பார்வையாளர்கள் வந்திருந்தார்களா? என்று கேட்டேன். **(நினைவுகள் நீளும்...)**

# நாச்சுவை இன்மையைப் போக்கும் ஈச்சை





## நலம் தரும் தெய்வீக மூலிகைகள்

### ஈச்சைமரம்

*வேறுபெயர்-சிற்றீச்சை*
*தாவரவியற் பெயர்- Phoenix SyLvestris*
*(பீனிக்ஸ் சில்வெஸ்ரிஸ்)*
*குடும்பம்- Palmae (பாமே)*
*சிங்களப் பெயர்- இந்தி*
*சமஸ்கிருதப் பெயர்- சுத்ர கர்ஜூர*
*ஆங்கிலப் பெயர்- Small datepalm*

இது உலர் வலயத்துக்குரிய செடியாகும். மரமாகவும் வளரக்கூடியது கடற்கரையோரங்கள், பற்றைக்காடுகளில் தானாக வளர்ந்திருக்கும். தண்டு மிகவும் குறுகியது. கூட்டிலைகள். நீண்டவை, சிறைப்பிரிப்பானவை, சிற்றிலைகள் ஒடுங்கி, நீண்டு கூரான முள்ளில் முடிவடையும். ஆண், பெண் மரங்களில் பூந்துணர்களில் பூக்கள் உண்டாகும். காய் பச்சைநிறம் பின், சிவந்து, கறுத்த நிறமாகும். தை-பங்குனியில் பூக்கும், சித்திரை - ஆனியில் காய்களைக் காணலாம்.

### நாச் சுவையின்மைக்கு

ஈச்சங்காயை வாயிலிட்டுச் சப்பிச் சாப்பிட்டால் நாச்சுவையின்மை, வாய்ப்புண் என்பன தணிவடையும் அதிக உமிழ்நீர் சுரத்தலையும் கட்டும்.

### மாதவிடாய்க் கோளாறுகளுக்கு

பெண்களில் மாதவிடாய் ஒழுங்காக போகாத நிலைமைகளுக்கு ஈச்சங்குருத்தைத் தின்பதால் தீர்வு கிட்டும். ஈச்சங்குருத்து அல்லது முளையரும்பு உண்பதற்கு ருசியாக இருப்பதுடன் பெண்களுக்கு ஏற்படும் உதிரச்சிக்கல், மாதவிடாயின் போது ஏற்படும் அடி வயிற்று வலி, கிருமி என்பவற்றையும் நீக்கும்.

### ஈச்சம் கள், பதநீர்

தென்னை, பனை மரங்களிலிருந்து பதநீர் எடுப்பது போல ஈச்சை மரத்திலிருந்தும் பதநீர் பெறப்படும். ஆனால், தென்னை, பனை போன்று இங்கு பாளையை சீவி பதநீர் பெறப்படுவதில்லை மரத்தில் பாளைகள் உள்ள பகுதிகளுக்கு அருகில் மரத்தைச் சீவி, அதிலிருந்து பெறப்படும் சாற்றையே பதநீர் என அழைப்பர். அது புளிப்படைந்தும் ஈச்சங்கள் எனப்படும்.

ஈச்சம் பதநீர், கள் என்பவற்றில் உயிர்ச்சத்து B, உயிர்ச்சத்து C என்பன அதிகளவில் உள்ளது. வாய்ப்புண் உள்ளவர்களுக்கு ஈச்சம் பதநீர் மருந்தாகிறது. இது உடலுக்குக் குளிர்ச்சியையும் அளிக்கிறது.

ஈச்சம் பதநீரில் இருந்து வெல்லம், கற்கண்டு என்பன தயாரிக்கப்படுகின்றன. ஆயினும் இவை மருத்துவத்தில் அதிகம் பயன்படுவதில்லை.

### பல்வலிக்கு

ஈச்சம் வேரைக் கொண்டு பல்துலக்கிவரப் பல்வலி மாறும்.

### பேரீச்சு

*வேறுபெயர்- பேரீஞ்சு*
*தாவரவியற் பெயர்- Phoenix dactylifera*
*(பீனிக்ஸ் டக்ரிலிபெரா)*
*குடும்பம்- Palmae (பாமே)*
*சமஸ்கிருதப் பெயர்- கர்ஜூர*
*ஆங்கிலப் பெயர்- Datepalm*

இது ஆபிரிக்கா, அரேபியா, எகிப்து நாடுகளுக்குரிய மரம். ஓரளவு உயரமாக வளரும். நிமிர்ந்த தண்டு, கூட்டிலைகள் பெரியவை, சிறைப்பிரிப்பானவை. சிற்றிலைகளின் நுனி முள்ளாகத் திரிபடைந்திருக்கும். கனி சதைப்பற்றானது உண்ணத்தக்கது.

### உடற்பலவீனத்துக்கு

பேரீச்சம் பழத்தைத் தனித்தாவது, தேனில் ஊற வைத்தாவது தினமும் சாப்பிட்டுவர உடற்பலவீனம் நீங்கி, தேகம் திடம் பெறும், தாது விருத்தியாகும். மலச்சிக்கல், அருசி, இரத்தப்பித்தம் என்பனவும் நீங்கும்.

### குன்மத்துக்கு

பேரீச்சம் குருத்தை அடிக்கடி சாப்பிட்டுவர வயிற்றுப்புண், குன்மநோய் என்பன தணிவடையும்.

### கழிச்சலுக்கு

பேரீச்சங்காயை மென்று தின்பதால் கழிச்சல், அதிகளவில் வாய்நீர்சுரத்தல், நாச் சுவையின்மை என்பன நீங்கும்.




Dr. சே.சிவசண்முகராஜா M.D. (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களைவிடத் திறன்படச் செயல்படுபவர்கள், அருகிலிருப்பார்கள். அதற்காக அவர்கள் மீது பொறாமைப்படாதீர்கள். பொறாமை உங்கள் திறமையை மேம்படுத்தாது. அதனால் எதிர் மறையான எண்ணங்களை வெளியேற்றுங்கள். உங்களிடமிருக்கும் சிறப்புக்களில் கவனத் தைச் செலுத்துங்கள்.

# வெற்றி பெறலாம் வாங்க!

ராகவன் அல்பி




**ஆரோக்கியத்தைப் பேணுதல்**

உங்களின் ஆரோக்கியத்தைக் காக்க நீங்கள் மட்டும் தனியாக முயற்சிக்க வேண்டியதில்லை. நிறையப் பேர் உதவி செய்யவும், உதவி செய்யத் தயாராகவும் இருப்பார்கள். அவர்கள் யாரென உங்களுக்கு முன்பே தெரியும் என்றாலும் பின்வரும் அத்தியாயம் யார் யாரிடமிருந்து சிறப்பாக ஆலோசனை பெறமுடியும் என்பதைக் குறிப்பிடுகிறது.

உங்களுக்கான நேரத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள்- எந்த ஒரு காரணத்துக்காகவும் உங்களை வதைத்துக் கொள்ளாதீர்கள். ஒவ்வொரு வாரமும் (ஏன் ஒவ்வொரு நாளும் கூட) உங்களுக்கென நேரத்தை ஒதுக்குங்கள். அப்போது நீங்கள் நீங்களாகவே இருங்கள். உங்களுக்கு எது பிடிக்கிறதோ அதை மட்டும் செய்யுங்கள்.

**வேறுபாடுகளை அங்கீகரியுங்கள்**- ஒவ்வொருவரும் வித்தியாசமானவர்கள். மதிப்புகளும் பார்வைகளும் கலாசாரம் மற்றும் அனுபவத்தால் உருவாகிறது. உங்கள் பார்வையை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளாததற்காக வருத்தப்படாதீர்கள். அவர்களுடைய அபிப்பிராயத்தைப் பற்றியும் புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள்.

**உங்களிடம் இருக்கும் நல்ல விடயத்தைப் பாராட்டுங்கள்**- உங்களை எது சிறப்பானவராக ஆக்குகிறது என்பது உங்களுக்குத் தெரியும். அந்தச் சிறப்பான விடயங்களை சாதாரணமாக எடுத்துக் கொள்ளாதீர்கள். உங்கள் திறமைகளைக் கொண்டாடுங்கள்.

**உங்களின் மோசமான விடயங்களை ஏற்றுக் கொள்ளுங்கள்**- நீங்கள் உங்களிடம் இருக்கும் மோசமான குணங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் அதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தாமல் உங்கள் பலங்களில் கவனம் செலுத்துங்கள்.

**உறவுகளை மேம்படுத்துங்கள்** - உறவுகள் நாம் விவேகமானவராக ஆவதற்கு உதவுகின்றன எனப் பல ஆய்வுகள் கூறுகின்றன. உங்களைச் சுற்றியுள்ளவர்களிடம் உறவுகளைப் பலப்படுத்துங்கள்.

**நண்பர்களை உருவாக்குங்கள்**- நமது முன்னோர்கள் கூடி வாழ்ந்தார்கள். கூடி வாழ்வது என்பது நமது இயல்பு. அதனாற்றான் தனிமை என்பது துன்பம் நிறைந்ததாக இருக்கிறது. நல்ல நண்பர்களைப் பாதுகாத்து வையுங்கள்.

**தீர்வு கண்டு கடந்து போங்கள்**- கருத்து வேறுபாடுகள் உங்களைப் புண்படுத்தவும், உங்களை விழுங்கி விடவும் அனுமதிக்காதீர்கள். அதற்கான தீர்வுகளை கண்டறிந்து விட்டுக் கடந்து போய் விடுங்கள்.

**பொறாமைப்படாதீர்கள்**- உங்களைவிடத் திறன்படச் செயல்படுபவர்கள், அருகிலிருப்பார்கள். அதற்காக அவர்கள் மீது பொறாமைப்படாதீர்கள். பொறாமை உங்கள் திறமையை மேம்படுத்தாது. அதனால் எதிர்மறையான எண்ணங்களை வெளியேற்றுங்கள். உங்களிடமிருக்கும் சிறப்புக்களில் கவனத்தைச் செலுத்துங்கள்.

**ஆரோக்கியமான உடல் நலம்**- உங்கள் உடல் ஆரோக்கியமானதாக இருந்தாற்றான் மன அழுத்தம் உட்பட அனைத்து நோய்களும் உங்களைத் தாக்காது.

**எதிர்காலம் இங்குதான் தொடங்குகிறது**- கடந்து போன நேரத்தைத் திரும்பிப்பெற முடியாது. கடந்த காலத்தில் எடுத்த முடிவுகளுக்காக வருத்தப்படுவது தேவையற்ற தொல்லைகளைத்தான் ஏற்படுத்தும். கடந்த காலத்தை ஏற்றுக் கொண்டு எதிர்காலத்தைச் சந்தியுங்கள்.

**மன அழுத்தத்தைப் புரிந்து கொள்ளுங்கள்**

அழுத்தத்துக்கு எல்லோரும் ஒரே மாதிரி எதிர் வினை ஆற்ற மாட்டார்கள். அதனால் ஒருவருக்கு அதிகப்படியான அழுத்தம் இருக்கிறது என்பதைக் கண்டறிவது கடினம். ஆனால் மன அழுத்தத்தைப் பல அறிகுறிகள் காட்டிக் கொடுத்துவிடும். மன அழுத்தம் இருப்பதை அறிந்தால் அதை உடனே தீர்க்க முயல வேண்டும்.

**தூக்கமின்மை**- மனதில் பிரச்சினை இருக்கும் போது தூங்குவது கடினம். மன அழுத்தத்தின் மிகப்பெரிய அறிகுறி மூளை முழுதும் நிறைந்து கிடக்கும் கவலையால் அதிகாலையிலேயே எழுந்து விடுவது ஆகும். கவலைகளை கழற்றி வைத்து விட்டு படுக்கைக்குப் போங்கள்.

**தலைவலி**- மன அழுத்தத்தின் போது எப்படியாவது தலைவலி வந்து விடும். தலை கடுமையாக வலிக்கும். நோயுற்றது போல உணர்வீர்கள். அது போன்ற சமயங்களில் அதை எதிர்த்துப் போராட வேண்டி வரும். வலி நிவாரணிகள் அதற்கு உதவலாம். இருப்பினும் அதுபற்றிச் சிந்திக்க நேரம் எடுத்துக்கொள்வது நல்லது.

**பதட்டமான எதிர்பார்ப்பு**- இது நீங்கள் எப்போதும் பயங்கரமான விடயத்தை எதிர்பார்த்திருப்பதைப் போன்றது. பல நேரங்களில் இது சாதாரணமானது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். உதாரணமாக சில சமயங்களில் பொதுக் கூட்டங்களில் பேசும் போது நீங்கள் எவ்வாறு பேசப் போகிறீர்கள் எனக் கவலையாக இருக்கும். அது போன்ற சமயத்தில் மன அழுத்தத்திற்கான அறிகுறிகளைக் கண்டறிந்து அதைத் தீர்க்க முயலுங்கள்.

**ஜீரண அமைப்பு**- உங்களின் ஜீரண அமைப்பே உங்களுக்கு எந்த அளவு மன அழுத்தம் இருக்கிறது என்பதைக் காட்டிக் கொடுத்து விடும். வயிற்று வலி, உப்புசம் போன்றவை வந்து விடும். மன அழுத்தத்தில் இருக்கும் போது நீங்கள் வெகு வேகமாகச் சாப்பிடுவீர்கள். அதைத் தவிர்த்து மிக மெதுவாக சாப்பிட வேண்டும்.

**ஆண்மையின்மை**- இது ஆண்கள் சம்பந்தப்பட்ட விடயம் என்றாலும் இது பற்றிப் பேசித்தான் ஆக வேண்டும். மனதில் தோன்றும் பதட்டமானது உங்கள் இடுப்புக்குக் கீழ் எதிர்மறையான விளைவை ஏற்படுத்தி விடும். ஆனால் இதைப் பற்றியே கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் போது நிலைமை இன்னும் மோசமாகி விடும். மருத்துவரிடம் ஆலோசித்தால் அவரால் உங்களுக்கு உதவ முடியும்.

**அரிப்பு மற்றும் சொறி**- மன அழுத்தத்தினால் அரிப்புக்கள் கூட உண்டாகும். அது போன்ற விளைவுகள் ஏற்பட்டால் இறுக்கமான உடை அணியாமல் தளர்வாக அணிவது நல்லது. தளர்வான உடைகள் உங்களைத் தளர்வடையச் செய்யும்.

**மார்பு வலி**- திடீரென்று மார்பு வலி ஏற்பட்டு மருத்துவ மனைக்கு வேகமாகப் போவீர்கள். ஆனால் அது மாரடைப்பாக இருக்காது. அதிகமான மன அழுத்தத்தினால் ஏற்பட்ட மார்பு வலியாக இருக்கலாம். அது போன்ற சமயத்தில் மன அழுத்த அளவை குறைக்க முயல வேண்டும்.

**சிடுசிடுப்பானவர்கள்**- அதிக மன அழுத்தம் உள்ள நபர்கள் உடனிருப்பது மோசமான நிலையாகும். அவர்களுக்கு எதுவும் சரியாக இருக்காது. எதற்கெடுத்தாலும் எளிதாகப் புகார் செய்வார்கள் என்று கவனியுங்கள்.

# மதிப்பும் மிதிப்பும்

இயற்கையோடு மோதி வெல்ல முடியாதென்பதை உணர்ந்து கொண்ட மேற்குலக நாடுகள், தமது போக்கை மாற்றத் தொடங்கியுள்ளன. குறிப்பாக இயற்கையின் வளங்களை அளவுக்கு மிஞ்சி சுரண்டுதல், சூழல் சமநிலையை குழம்பச் செய்தல் போன்ற நடவடிக்கைகளை அவை கைவிட்டு வருகின்றன. அத்தோடு வீணே போகும் இயற்கை வளங்களை பயன்மிக்க சக்தி வளங்களாக மாற்றும் முயற்சியில் அந்த நாடுகள் இறங்கியுள்ளன. எரிபொருள் வளம் குறைந்து வருவதாலும், பெற்றோலியப் பயன்பாட்டால் சூழலில் காபனீர் ஒட்சைட்டின் அளவு அதிகரிப்பதாலும் பூமிக்கு பாதிப்பே. எனவே இப்போது சூரிய ஒளியை சக்தி வளமாக பயன்படுத்த தொழில் நுட்பத்தில் முன்னேறிய நாடுகள் முயல்கின்றன. இந்த முயற்சியில் பெரும் சாதனை ஒன்றை ஜேர்மனி படைத்திருக்கிறது.



சூரிய ஒளி சக்தி மூலம் மணிக்கு 22ஜிகாவாற்ஸ் மின் உற்பத்தி செய்து ஜேர்மன் உலக சாதனை படைத்துள்ளது. இது 20 அணு மின்நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கு சமம் ஆகும்.

ஜப்பானில் ஏற்பட்ட நிலநடுக்கம், சுனாமி போன்ற பேரழிவிற்கு பின்

ஜேர்மன் தனது அணு மின் திட்டத்தை கைவிட்டு, வேறொரு எரிசக்திக்கு மாறி உள்ளது.

இதில் சூரிய ஒளி மின் சக்தி தொழிலில் ஜேர்மன் முன்னணி வகிப்பதால் இதன் மூலம் மின் தேவையினை பூர்த்தி செய்கிறது. இதன் ஒரு பகுதியான சூரிய ஒளி மின்சக்தியை பயன்படுத்த துங்கியுள்ளது.

இந்தாண்டு ஜேர்மன் முதல்கட்டமாக 7.5 ஜிகாவாற்ஸ் மின் உற்பத்தி செய்யும் சூரிய ஒளி மின் உற்பத்தி மையத்தினை நிறுவியது.

இதில் குறிப்பிட்ட அளவு முன்னேற்றம் ஏற்படவே ஒரு மணிக்கு 22 ஜிகவாற்ஸ் மின் உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளது.

இது 20 அணு மின் நிலையங்களில் உற்பத்தியாகும் மின் உற்பத்திக்கு சமம் என கணக்கிடப்பட்டுள்ளது. (ஒரு ஜிகாவாற்ஸ் என்பது 1000 மெகாவாற்ஸ் ஆகும்)

இதன் மூலம் தற்போது நாட்டின் 50 சதவீத மின்தேவையினை சூரிய ஒளி சக்தி மூலம் பூர்த்தி செய்து 'ஜேர்மன் சாதனை படைத்துள்ளது. இவ்வாறு விஞ்ஞானத்தில் [illegible] தொழில்நுட்ப கர்வத்தை களைந்து விட்டு இயற்கையோடு சமரசம் [illegible] இயற்கையை இன்னமும் மிதித்தபடியே தான் இருக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பருவத்துக்கு ஏற்ற படிமுறையில் பாலியல் கல்விமுறை புகுத்தப்படல் வேண்டும். பாலியல் கல்வியானது மிகுந்த எச்சரிக்கையுடன் நடைமுறைப்படுத்தல் வேண்டும். பிள்ளையார் பிடிக்கப் போய்க் குரங்காய் மாறியது போல் ஆகிவிடக்கூடாது.*

# இயற்கை உந்தலை தோற்கடிக்க முயல்வோம்



■ சி.அருணகிரிநாதன்

நாளும் காலையில் நாளிதழைப் புரட்டிப் பார்த்தால் அநேகமாக முதற்பக்கத்திலோ அன்றி உட்புறத்திலோ வன்புணர்ச்சி, கொலை, கொள்ளை, வழிப்பறி, விபசாரம் ஆகிய புதினங்களைக் காணலாம். இதன் எதிர் ஒலியாக ஒருமுறையோ பலதடவைகளோ அரச உயரதிகாரிகள், சமயப் பெரியார்கள், சமூக ஆர்வலர்கள் இத்தகைய சமூகச் சீரழிவுகளைத் தடுப்பது பற்றி மேடைகளில், சொற்பொழிவாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் நிகழ்வுகள் தொடர் கதையாகவே உள்ளன. இந்தப் பண்பாட்டுச் சீரழிவு தமிழ் மக்களிடம் மாத்திரமல்ல, ஆழிசூழ் உலகமெங்கும் பரவலாக நிகழும் வெறிவிளையாட்டே! பண்பாட்டுச் சீரழிவில் முக்கிய பங்கு வகிக்கும் காரணியில் ஒன்று வேண்டத்தகாத அல்லது விரும்பத்தகாத பாலியல் நடத்தையாகும். காமவேட்கை என்பது மண்ணில் தோன்றிய உயிரினங்கள் யாவுக்கும் இயற்கை தந்த பிறவிப் பிணியாகும். உயிரினங்களுள்ளே மனிதனும் அடங்குவதால், மனிதனும் இந்த வேட்கைக்கு இயற்கையால் உந்தப்படுகிறான். உயிரினங்கள் தங்கள் சந்ததியை உருவாக்குவதற்காகவே இயற்கை இந்தக் காம உணர்வை அல்லது வேட்கையை உயிருக்குள்ளேயே படைத்துள்ளது. எனவே டெங்கு, சிக்கின் குனியா போன்ற நோய்கள் போன்று திடீரென மனிதனை இது பீடிக்கவில்லை என்பதை நாம் உணர்தல் வேண்டும். ஆதலால் இயற்கையான இந்த உணர்வை, ஒழுங்கான சீரான முறையில் சமுதாய அமைதிக்காக, திருப்திக்காக, மகிழ்ச்சிக்காக உரிய முறையில் வெளிப்படுத்துதல் வேண்டும்.

பாலியல் ரீதியான பிறழ்வுக்கு பொருளாதார (வறுமை) வீழ்ச்சிதான் காரணம் என்பதே யதார்த்தமாகும். பொருளாதார வீழ்ச்சியைச் சரி செய்வதற்காகப் பலரும் தமது நாட்டை விட்டு மேலைநாடுகளுக்கு இடம்பெயர்ந்து செல்கிறார்கள். இதனால் கணவன் மனைவியைவிட்டோ அல்லது மனைவி கணவனை விட்டோ தனித்திருக்கும் காலத்தில் தோன்றும் உடற் தேவையைப் பூர்த்தி செய்வதன் மூலம் பாலியற் குறைபாடுகள் பரவலாக நடைபெறச் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன.

சீரான சிறப்பான வாழ்க்கையை மேற்கொள்ளச் சங்ககாலம் தொடக்கம் வள்ளுவர், ஔவையார் அடங்கலாகப் பாரதிவரை அறம், பொருள், இன்பம் என்ற மூவகைத் துறைகளில் எமக்கு வாழ்க்கை விதிமுறைகளைக் கூறியுள்ளார்கள். அந்த வாழ்க்கை நெறியையே தமிழர் பண்பாடு என்று கூறிப் பெருமையடைகின்றோம். பண்பாட்டு விழுமியங்களில் காலத்துக்குக் காலம் சிற்சில சீர்கேடுகள் ஏற்படத்தான் செய்யும். அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்கோடு பாலியல் சம்பந்தமான விடயங்களில் முதற்கண் கவனத்தைத் திருப்புவோம்.

மக்களின் வாழ்க்கையில் முதலிடத்தைப் பிடிக்கும் சந்ததி விருத்திச் சக்கரம். இது மூன்று பருவங்களைக் கொண்டது. முதலாவது பதின்ம வயதுப்பராயம், இரண்டாவது இளவயதுப் பராயம், மூன்றாவது பக்குவ வயதுப் பராயம் எனப் பகுக்கப்பட்டுள்ளன. அதன் இயல்புத் தன்மைக்கேற்ப குறைகளைக் கண்டு களைவதற்குச் சில முன்மொழிவுகளைக் குறிப்பிடலாம். சந்ததி விருத்திக் காலச் சக்கரத்தில் முதலாவதாக பதின்ம வயது (Teen age) பருவத்தை எடுப்போம். இந்தக் காலம் 13 வயது தொடக்கம் 19 வயது வரையாகும். இந்தக் காலகட்டத்தில் பாலகர் - குழந்தைப் பருவத்தை (சிறுபராயத்தை) எய்தலாகும். (எமது அரசு 18 வயதுக்குக் குறைந்தவர்களை; குழந்தை என்றே அழைக்கிறது.) பெண்பிள்ளை 12, 13 வயதிலும் ஆண்பிள்ளை 14, 15 வயதிலும் பருவம் அடைகிறார்கள். இயற்கையின் சாகசத்தால் இந்தக் காலத் தொடக்கத்தில் இருந்து இவர்கள் வாரிசு விருத்திக்கு உந்தப்படுகிறார்கள். மனிதனைத் தவிர மற்ற உயிரினங்கள் பருவம் எய்தியவுடன் பெண் தாய்மைத் தன்மையையும், ஆண் பிதா இடத்திலும் அமரத் தொடங்குகிறார்கள். ஆனால் எம்மக்களுக்கு திருமணக் காலம் 18 வயதுக்கு மேல் என்றே அரசு சட்டம் வகுத்துள்ளது. அரசு இப்படியான ஒரு வரம்பை வைத்தமையானது பதின்ம வயதினர் நல்ல அறிவைப் (கல்வி) பெற்றுச் சிறந்த உளஉடல் நலத்தோடு பொருள் ஈட்டித் தேவையான உணவு, உடை, உறையுள் முதலிய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தியாக்கி நல் எண்ணத்தோடு முறையான வாழ்க்கை மேற்கொள்வதற்கான கால அவகாசத்தைக் கொடுப்பதற்கேயாகும். ஆனால் இயற்கையோ பதின்ம வயதுடைய பிள்ளைகளை வாரிசு விருத்திக்காகப் பாதாளத்துக்குள் தள்ளப்பார்க்கிறது. என்னதான் உயர்பண்பாட்டையோ சீரிய நெறி முறைகளையோ மேடைகளிலும் பட்டிமன்றங்களிலும் பெரியவர்கள் பேசினாலும் இந்தப் பருவத்தில் ஏதோ ஒரு வகையில் சறுக்கி விழாதார் யார் உளர்? பதின்ம வயதினர் கிரமமாக கல்லூரிகளுக்கும், தனியார் கல்விக்கூடங்களுக்கும் ஈடுபாட்டுடன் செல்கிறார்களா? - இரவில் உரிய நேரத்தில் தத்தமது வீட்டில் இருந்து பாடம் கற்கிறார்களா? - ஓய்வுநேரத்தைப் பயனுள்ள விதத்தில் பயன்படுத்துகிறார்களா? - கைபேசி, தொலைக்காட்சி, கணினி, மோட்டார் [illegible] என்ன தேவைகளுக்காகப் பயன்படுத்துகிறார்கள்? என்பது போன்ற விடயங்களை பெற்றோர் அவதானித்தல் முக்கியமானதாகும். இரவு நேரம் பெற்றோர் தம் பிள்ளைகளுடன் ஒன்றாக அமர்ந்து உணவு உண்ணும் போது மனம்விட்டு உரையாடி உண்ணுதல் வேண்டும்.

இதன்மூலம் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையே நல்ல பிணைப்பும், மகிழ்ச்சியும் உண்டாகுமல்லவா? பதின்ம வயதினரைக் கல்விக்கூடங்கள் கவனித்தல் வேண்டும். பெரியவர்களுக்குக் கீழ்ப்படிதல், நற்பண்பாடு, சிறந்த ஒழுக்கம், அறவாழ்வு போன்றவற்றை ஆசிரிய சமூகம் எதிலும், எப்போதும் போதித்துப் பிஞ்சு மனதில் பதியவைத்தல் ஆசிரியர் கடனே! நவீன வசதிகளைத் துஷ்பிரயோகம் செய்யாது தடுத்துத் தமது பொன்னான எதிர்கால வாழ்வைச் சிறப்பாக அமைக்க உதவுவது சமூக அங்கத்தவர்களின் கடமையாகும். எது எப்படியிருந்தாலும் விடலைப் பருவத்தினரின் அறிவு, ஆளுமை, ஆற்றல், சுதந்திரம் ஆகியவற்றுக்கும் உரிய இடம் கொடுக்கவும் வேண்டும். அவர்களை நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் ஆக்கசமூகம் பின்நிற்கக்கூடாது.

அடுத்த பருவமான இள வயதுப் பராயமான 20 தொடக்கம் 45 வயதுடையோரைக் கவனத்துக்கு எடுத்துக்கொள்வோம்.

கூடுதலான உணர்ச்சியும், குறைந்த அறிவும் கொண்ட பதின்ம வயதுடையோரைக் காட்டிலும் உணர்ச்சியும் அறிவும் சமனாகக் கொண்டவர்களாக இளவயதுப் (20-45) பருவத்தினராக இருப்பார். ஒரு விடயத்தைப் பற்றிச் சிந்திக்கவும் பகுக்கவும் தெளிவு பெறவும் ஆரம்பித்துவிடுவர். தமது வாழ்க்கையை எப்படி அமைக்க வேண்டும் என்ற உண்மையையும், நல்லது தீயது பற்றி அறியும் அறிவையும் பெறும் திறனுடைய பருவத்தினுள் இவர்கள் பிரவேசிக்கிறார்கள். இந்தக் காலமே உயிரின் தாகமான சந்ததி விருத்தியை நாடும் திருமணப்பருவக் காலமாகும். இந்தப் பருவமே காதல் புரியவும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவும் முந்தும் காலமாகும். ஒப்பீட்டளவில் பதின்ம வயதுடையோரைக் காட்டிலும் இளவயதுப் பருவத்தினர் தாம் (20-45 வயது) வன்புணர்ச்சி, கணவன் மனைவிக்கோ, மனைவி கணவனுக்கோ தெரியாமல் வைத்துக் கொள்ளும் தகாத பாலியல் தொடர்பு என புள்ளி விபரங்கள் கூறுகின்றன. வயது வந்த பெண் அல்லது குடும்பப் பெண் ஒருத்தி தமது ஆடை அணிகலன்களை பிற ஆடவரைக் கவராத வகையில் ஒழுங்கான முறையில் அணிவது மிக முக்கியமான படிப்பறிவும் பட்டறிவும் கொண்ட இளவயதினர் தங்களை ஒரு முன்னுதாரண புருடராக எண்ணி தாம் ஒரு லட்சியவாதி என்ற கற்பனையை வளர்த்துக்கொண்டு அதன்படி செயலாற்ற முற்பட்டாலே சமூக விதிமுறைகளையோ சட்டத்தையோ மீறாமல் சுகவாழ்க்கை வாழலாம். அதனை முயற்சி செய்து பார்ப்பது இளவயதினர் சமுதாயத்துக்குச் செய்யும் ஒரு சீரிய பணியாகும்.

நாம் பாகுபடுத்திய மூன்றாவது பருவத்தினுள் 45 வயதுக்கு மேற்பட்டவர்கள் உள்ளனர். இவர்களைப் பக்குவ வயதினர் என்போம். இவர்கள் அறிவும் பட்டறிவும் கொண்டவர்கள். உணர்ச்சிவசப்படும் தன்மை குறைந்தவர்கள். சட்டமீறல்கள், சமூக நெறிமுறைகளை அனுசரித்துச் செல்பவர்களாக இவர்கள் இருப்பர். என்றாலும் அறிவிலிகளும் பண்பு குறைந்தவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். இந்தப் பருவத்தினரும்வன் புணர்வு, தகாத உடலுறவில் ஈடுபடமாட்டார்கள் என்று கொள்வது மடமைத்தனமாகும். உடல் உள ஆரோக்கியமானவர்களுக்கு வயது முதிர்ந்தாலும் காம வேட்கை இருக்கத்தான் செய்யும்.

தமிழ் சமுதாயத்தில் நடக்கும் சீர்கேட்டைத் தமிழ் சான்றோராலும் நற்பண்பாளர்களாலும் ஜீரணிக்க முடியாமல் இருக்கிறது.

பருவத்துக்கு ஏற்ற படிமுறையில் பாலியல் கல்விமுறை புகுத்தப்படல் வேண்டும். பாலியல் கல்வியானது மிகுந்த எச்சரிக்கையுடன் நடைமுறைப்படுத்தல் வேண்டும். பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காய் மாறியது போல் ஆகிவிடக் கூடாது.

தமிழர் பண்பாட்டு விழுமியங்களை ஒருவன் ஒருத்தி இல்வாழ்க்கை, பிறர் மனைவியையோ பிறர் கணவனையோ நாடாமை, சமூக நெறிமுறைகளை மீறாமை போன்றவற்றைக் காப்பதற்கு மக்கள் மயப்படுத்தக்கூடிய பிரசாரங்கள், அறநெறிமுறைகள் திரும்பத்திரும்பச் சொல்லி மனதில் பதிய வைக்கக்கூடிய மனப்பயிற்சிகள் மூலம் சமூகக் குறைபாடுகளைத் தவிர்ப்பதற்கு நல்ல செயற்திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

மனதில் நல்ல எண்ணங்களை விதைக்கும்போது நாளடைவில் அவை நற்செயலாக மாறும் என்பது உறுதி. இந்தவண்ணம் நல்ல மனப் பயிற்சிகளை நாளும் செய்துவந்தால் அது பழக்கமாகிப் பின்னர் அது வழக்கமாகிப் பண்பாக மலரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 245

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | | 10 | | ■ | 11 | |
| | ■ | 12 | | ■ | 13 | | ■ |
| ■ | 14 | | ■ | 15 | | ■ | 16 |
| 17 | | ■ | 18 | | | 19 | |
| 20 | | 21 | | ■ | 22 | | |
| 23 | | | ■ | 24 | | | ■ |

அனுப்புபவர் பெயர்:..........................................................

விலாசம்:..........................................................

..........................................................

கையொப்பம்:..........................................................

### இடமிருந்து வலம்

1. இறந்தவர்களுக்கு மாதம் தோறும் செய்யும் பிதிர்க்கடன்
4. பாக்குத் தரு
7. பூ
8. வேகமாகச் செல்லும் (வாகனம்)
9. சூல் கொண்ட பெண்
11. காட்டு மிருகம்
12. முழங்கும் கருவி
13. சாப்பிடு
14. இசைவுச் சொல்
15. இரும்பில் பிடிப்பது
17. நூல், கயிறு, கொடி, சங்கிலி போன்றவற்றைப் பிய்த்து வேறாக்க விடுக்கும் உத்தரவு
18. பிராமணன்
20. நாட்டிய வகை
22. வராகம்
23. சிதம்பரம்
24. (கடுமையான) சூடு/வெப்பம்

### மேலிருந்து கீழ்

1. மாமாங்கம்
2. ஒருவருமல்ல, பலருமல்லர்
3. கருக்கட்டிய நிலை
4. கசப்பு
5. முகத்துக்கு முன்னால் செய்யும் உபசாரம்
6. பரி
8. கணக்கெடு
10. சந்திரனின் தேய்ந்த வடிவம்
13. மாற்றம் ஏற்படும் சந்தர்ப்பம்
14. தேறுதல்
15. கெட்ட
16. இது கொன்றார்க்கு உய்வில்லை
17. ஏதிலி
18. ஒரு மொழி
19. பலவாகிய தன்மை
21. இது அறுபத்திநான்கு

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 241 க்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) தீவிரவாதி (5) ஆவி (7) பாடு (8) கடத்தல் (9) வதிவிடம் (11) வலை (12) நாம் (13) பின் (14) சய (15) சரி (17) மரகதம் (18) மற (19) தகர் (20) பாதகம் (22) கும் (23) அதிகம்

### மேலிருந்து கீழ்

(1) தீபாவளி (2) விடுதி (3) வாகடம் (4) திடம் (5) ஆதவன் (6) வில்லை (10) விநாயகர் (13) பிரி (14) சரகம் (15) சம்பாதி (16) அறம் (17) மதகு (18) மகம் (21) தக

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 245**
*நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (12.12.2012 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.243இல் வெற்றி பெறுவோர்களது விபரம் 16.12.2012 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 241 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**ம.அருள்ராஜ்,**
3 ஆம் வட்டாரம், மண்டைதீவு.

**2 ஆம் பரிசு**
**ம.ஜெ.மகாராசா,**
கந்தன் அருள், இருபாலை கிழக்கு, இருபாலை.

**3 ஆம் பரிசு**
**சி.பானுராஜா,**
அ.த.க.பா சாலை, கோணாவில், கிளிநொச்சி

**4 ஆம் பரிசு**
**சி.செபரியா,**
தங்கபுரம், அளம்பில்

**5 ஆம் பரிசு**
**கா.கஜன்,**
ஏழாலை மேற்கு, ஏழாலை.

**பாராட்டுப் பெறுவோர்**

**சி.தர்மகுலராஜா,**
தெல்லிப்பழை கல்விக் கோட்டம், மல்லாகம்.

**ர.லதாங்கி,**
இல:224 , 'குங்குமகிரி' பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

**ஏ.வைதேகி,**
சிவனருள் இல்லம், திருக்கேதீச்சரம்.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.*

# காக்க... காக்க... கபடியைக் காக்க

அபிமன்யு. எஸ்



பாரம்பரிய கிராமிய விளையாட்டாக இருந்த கபடி இன்று தேசிய மட்டத்தில் மட்டுமன்றி சர்வதேச மட்டத்திலும் விளையாடப்படும் அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளது. முன்னைய காலங்களில் பெரும்பாலாக யாழ்ப்பாணத்துக் கிராமங்களில் கபடி விளையாட்டே இளைஞர்களின் பிரதான பொழுது போக்காக இருந்தது. ஆயினும் அந்த நிலையில் இப்போது தலைகீழ் மாற்றம். போட்டிகளில் மட்டுமே விளையாடப்படும் சம்பிரதாயபூர்வ விளையாட்டாக கபடி தேய்வு நிலையை நோக்கி நகர்கிறது.

தென்னிந்திய மாநிலங்களில் பூர்வீக விளையாட்டாக இருந்த கபடி கிராம மட்டங்களில் பிரபல்யம் பெற்றிருந்தது. தென்னிந்தியாவுடன் யாழ்ப்பாணம் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததால் யாழ்ப்பாணத்திலும் கபடி நீண்ட காலத்துக்கு முன்னரே காலூன்றி இருக்க வேண்டும். எனினும் அதன் தோற்றத்தைக் கணிப்பது கடினமே.

ஆரம்ப காலங்களில் கபடி மாலை நேரங்களில் தோட்ட வெளிகளிலேயே அரங்கேறும். இளவட்டத்தினர் ஒன்றுகூடி இரு 'கன்னைகளாக' பிரிந்து விளையாடுவார்கள். கபடி விளையாட்டில் ஏழு பேர் கொண்ட அணி களத்தில் இறங்கும் எதிரணியை வெற்றிகொள்வதற்காக பலத்துடன் மோதுவார்கள். ஒரே ஊர், சொந்த பந்தம் காரணங்களால் போட்டியின்போது 'அடிபாடுகள்' வருவது குறைவு. தோட்ட வெளியில் நடக்கும் கபடியைப் பார்க்க ஊரே ஒன்று கூடும். ஆனால் இன்று கபடி என்றால் 'சண்டை', 'ரவுடிகளின் விளையாட்டு' போன்ற தவறான எண்ணங்கள் மக்கள் மத்தியில் விதைக்கப்படுமளவுக்கு அந்த விளையாட்டின் நிலை மாறிவிட்டது.

காலப்போக்கில் விளையாட்டு கழகங்களின் தோற்றமும் வளர்ச்சியும் கபடியில் போட்டி முறையை உண்டாக்கியது. தற்போது பிரதேச மட்டங்களில், விளையாட்டுக் கழகங்கள் தம் ஊரில் உள்ள இளைஞர்களை கஷ்டப்பட்டு ஒன்று திரட்டியே கபடியை ஆட வேண்டிய நிலை. அந்தளவுக்கு கபடி மீதான ஈர்ப்பு இளைஞர்களிடத்தே அருகத் தொடங்கிவிட்டது.

ஆயினும் நெடுந்தீவு, ஊர்காவற்துறை, பருத்தித்துறை, தெல்லிப்பழை, வேலணை, கரவெட்டி, சாவகச்சேரி போன்ற பிரதேசங்களில் கபடியின் மவுசு இன்னமும் குறையவில்லை.

இதேவேளை சில இடங்களில் வலைப்பந்து, கிரிக்கெட் என்று மேற்கத்தேய விளையாட்டுகளின்மீது நாட்டம் கொண்ட யாழ்ப்பாணத்துப் பெண்கள் இன்று கபடியிலும் காலடி எடுத்து வைத்துள்ளனர். தெல்லிப்பழை பருத்தித்துறை, நெடுந்தீவு, உடுவில் போன்ற பிரதேசங்களில் பெண்கள் கபடி விளையாட்டில் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

யாழ். மாவட்ட கபடி அணியினர் மாகாண மட்ட போட்டிகளில் பங்குபற்றுகின்ற போதும் வெற்றிவாய்ப்பு எட்டாக்கனியாகவே இன்னமும் உள்ளது. ஏனெனில் தேசிய, மாகாண மட்டப் போட்டிகளின்போது காப்பெற் தரைகளிலேயே விளையாட வேண்டும். மணற்தரைகளில் விளையாடிப் பழகிய வீரர்களுக்கு காப்பெற் தரையில் விளையாடுவது சவால் நிறைந்த ஒன்று. யாழ்ப்பாணத்தில் கபடிக்கென தனியான காப்பெற் ஆடுகளம் இல்லை. இதனால்தான் யாழ். மாவட்ட வீரர்கள், மாகாண, தேசிய மட்டப் போட்டிகளின் போது காப்பெற் தரையில் விளையாட முடியாது தடுமாறுகின்றனர்.

தற்போது கபடி விளையாட்டில் ஈடுபடும் வீரர்கள் முழுநேரப் பயிற்சியில் ஈடுபடுவதில்லை. தமது வேலைகளை முடித்து விட்டு பகுதிநேரப் பொழுது போக்குக்கான விளையாட்டாகவே கபடியை பார்க்கின்றனர். தற்போது யாழ்.மாவட்ட பாடசாலைகளில் கபடி பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் கபடி விளையாட்டு மீதான ஆர்வத்தை இளைஞர்களிடத்தே மேம்படுத்த வேண்டியுள்ளது. காப்பெற் தரை ஆடுகளத்தில் வெறும் காலுடன் விளையாட முடியாது. கபடி போட்டியாளர்கள் பயன்படுத்தும் காலணிகள் விலையுயர்ந்தவை. ஒரு வீரருக்கான காலணிக்கு குறைந்தது 3 ஆயிரத்து 500 ரூபா தேவைப்படுகின்றது. ஆனால் அநேக கபடி வீரர்களின் பொருளாதார நிலை இவ்வளவு பெறுமதிகொண்ட காலணியை வாங்க இடமளிப்பதில்லை. எனவே நிதிப் பற்றாக்குறைகாரணமாகவும் கபடி விளையாட்டினை வளர்த்தெடுக்க முடியாத சூழ் நிலை காணப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் கபடிக்கான போட்டிகள் குறைவாகவே நடத்தப்படுகின்றன. இதனால் வீரர்கள் தம் திறமையை வெளிப்படுத்தவும் பலப்பரீட்சையில் ஈடுபடவும் வாய்ப்பில்லாமல் போகின்றது. இத்தகைய குறைகளைக் களைந்து, உரிய பயிற்சிகள், நிதிவளம், காப்பெற் ஆடுகளம் போன்றன ஏற்படுத்தப்பட்டால் யாழ்ப்பாணத்திலும் கபடியைக் காப்பாற்றி, அந்தத் துறையில் வெற்றிகளைக் குவிக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதைஞர்கள் பார்வையில் கற்பு

■ த. அஜந்தகுமார்

## சமகால ஒழுங்கழிப்புச் சூழலில் ஒரு பார்வை

நவீன இலத்திரனியல் ஊடகங்களும் உலகமயமாக்கலின் வலிய கரங்களும் சூழ்ந்துள்ள தமிழ்ச் சூழலில் எமது பண்பாட்டின் ஆழ்வேர்களை இனங்காணவும் பாதுகாக்கவும் புத்துயிர்ப்புச் செய்யவும் வேண்டிய தேவை எம்முன் விரிந்திருக்கின்றது. பண்பாட்டை மீள் கண்டுபிடிப்புச் செய்யவும் அவற்றில் உள்ள ஒற்றைப்படைத் தன்மைகளையும் தேவையற்றவைகளையும் நீக்கி மறுவாசிப்புச் செய்யவும் வேண்டியது ஓர் இனத்துக்கு மிகவும் அவசியமாகும். தமிழர்களின் சமூக ஒழுங்கையும் ஒழுக்கத்தையும் நிலைநாட்டும் கருவிகளில் 'கற்பு' தலையாயது ஆகும்.

சமூகமாற்றங்கள் இடம்பெறும்போது தேவைக்கேற்ப பண்பாட்டு அடையாளங்களைத் தகவமைக்க வேண்டியது எமது கடமையாகும். இந்த வகையில் கற்புப் பற்றிய கதையாடல்கள் ஆரம்பகாலத்தில் இருந்து தற்காலம் வரைக்கும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இவற்றில் படைப்பாளிகளின் கருத்துக்களுக்கும் கணிசமான இடம் இருக்கின்றது.

ஆரம்பத்தில் தாய்வழிச் சமுதாய அமைப்பில் வலியுறுத்தப்படாத 'கற்பு' தந்தைவழிச் சமுதாய அமைப்பில் கட்டாயமான ஒன்றாக நிர்ப்பந்திக்கப்பட்டது.

1. பெண்ணை அடக்கும் கருவியாக பயன்படுத்தப்பட்டது.
2. பெண்ணுக்கு உரியதாகக் கூறப்பட்டது.
3. கற்பு என்பது உடலில் உள்ளதாக 'உடற்புனிதம் பாதுகாத்தல்' என்பதாகக் கருதப்பட்டது.

ஆரம்பத்தில் இவ்வாறு கருதப்பட்ட கற்பு மறுவாசிப்புக்கு உட்படுத்தப்பட்டபோது,

1. பெண்ணிடம் மட்டுமல்ல ஆணிடமும் இருக்க வேண்டிய ஒன்றாகக் கருதப்பட்டது.
2. உடலில் மாத்திரம் என்பது மறுதலிக்கப்பட்டது மனப்புனிதமே கற்பெனக் கருதப்பட்டது.
3. சந்தர்ப்பத்தினாலோ விபத்தினாலோ உடல் கெடுவது 'கற்பு இழத்தல்' என்பது ஏற்க மறுக்கப்பட்டது.
4. 'கற்பு' என்பது சமூகத்தில் உள்ள 'மாயத்திரை' எனப் புறக்கணிக்கப்பட்டது, நிராகரிக்கப்பட்டது.

இந்த மறுவாசிப்புக்களுக்கான புள்ளி பாரதியிடம் இருந்து ஆழமாக வெளிப்பட்டது எனலாம். ஏனெனில்

''கற்பு'' என்னும் சொல்லுக்குப் 'பதிவிரத தருமம்' என்றும் மண உறவில் மனைவி, கணவனுக்கு விசுவாசமாய் இருத்தல் என்றும் தமிழ் லெக்ஷிக்கன் மரபுவழிக் கருத்தைக் கூறுகிறது. இது ஆண்நிலை ஆதிக்கத்தின் கருத்தாக்கமே.''

கற்பு நிலையென்று
சொல்ல வந்தார்.
இருகட்சிக்கும் அஃது
பொதுவில்
வைப்போம்.

இருபாலாருக்கும் அது பொதுவான தேவையான ஒன்று என்றும் பாரதி வலியுறுத்தினான்.

இன்றைய சூழலில் கற்பு பற்றிய கருத்தாக்கம் பெண்களிடம் நோக்கப்படும்போது ஏற்படும் சவால்கள் தாராளமானவை.

இந்தப் பெண்களை முன்னால் நிறுத்தி யோசிக்கின்ற போதுதான் கற்புப் பற்றிய மறுவாசிப்புகளும் கற்பு பற்றிய இறுக்கமான விழுமியத் தேவைகளும் என்று பல பரிமாணங்கள் எம் முன்னால் நிற்கின்றன.


தமிழ்ச் சிறுகதைகளில் கற்புப் பற்றிய கதையாடல்கள் சிலவற்றை நோக்குவதனூடாக தற்கால சமூகக் கேள்விகள் சிலவற்றுக்கு வகைநிலைத் தோன்றல்களூடாக பதிலிறுக்க வைப்பதே இக் கட்டுரையின் நோக்கம்.

புதுமைப்பித்தன், கு.ப.ரா, ஜெயகாந்தன், வரதர், சிந்தாமணி, அருண் விஜயராணி, கார்த்திகாயினி, சுபேஸ் ஆகிய எழுத்தாளர்களின் சில கதைகளை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

புதுமைப்பித்தன் 'கற்பு' பற்றி முன்வைக்கும் கருத்துகள் தேவையானவை, கவனத்துக்குரியவை.

கண்ணகி உருவில் வீரவணக்கம் செய்யப்பட்ட கற்பை மணிக்கொடி எழுத்தாளர்கள் கேள்விக்கு உட்படுத்தினர் என்று எஸ் தோதாத்ரி கூறுவதன் பொருத்தப்பாடு புதுமைப்பித்தனுக்கே அதிகம் உள்ளது எனலாம் என்கிறார். (எம்.ஏ. சுசீலா)?

புதுமைப்பித்தனின் அகல்யை, சாபவிமோசனம், இரண்டு உலகங்கள், ஆண்மை, வாடாமல்லிகை, வழி ஒப்பந்தம், இந்தப் பாவி, பொன்னகரம், ஒப்பந்தம் என்று பல சிறுகதைகளில் கற்பு பற்றிய கருத்துக்களைத் தரிசிக்கலாம். புதுமைப்பித்தன் இக் கதைகளில் காட்டுகின்ற பெண்களைப் பின்வருமாறு கூறலாம்.




1. நெஞ்சினால் பிழை செய்யாது உடல் இச்சைக்குப் பலியாகும் பெண் (சாபவிமோசனம், அகல்யை)
2. நெஞ்சினால் பிழை செய்யாது உடலைக் கெடுத்துக் கொண்டதால் சமூகத்தின் அவதூறுக்கு ஆளாகும் பெண் (சாபவிமோசனம்)
3. தன் கணவனின் 'பாற்கஞ்சி' ஆசையை நிறைவேற்ற முக்கால் ரூபாய்க்கு தனது உடலை இன்னொருவனுக்குப் பகிரும் பெண் (பொன்னகரம்)
4. கணவன் இறந்த பிறகு இயற்கைத் தேவையான உடற்பசி தீர்க்க நினைக்கும் பெண் (வாடாமல்லிகை)
5. தனது கணவனிடமே தன்னை இழந்து தாயாகியும் கணவன் துணிவின்மையால் சமூக அவதூறுக்கு ஆளாகி மனநோயாளி ஆக்கப்பட்ட பெண் (ஆண்மை)

இக்கதைகளூடாகப் புதுமைப்பித்தன் பேசும்போது முன்வைக்கும் கருத்துக்கள் கவனத்துக்குரியவை.

'கற்பு நிலை என்னவென்பது எனக்கு நன்கு தெரியும் பிறர் புகுத்திக் கற்பு நிலை ஒழுகுவது அனுபவ சாத்தியமான காரியமன்று' (இந்தப் பாவி)

''இந்தக் காதல் என்று பேத்திக் கொண்டு இருக்கிறாங்களே அதெல்லாம் சுத்த ஹம்பக்......''.

பெண்கள் தங்கள் இஷ்டப்படி இருந்தால் அது எப்படி முடியும்? அதற்குத்தான் கலியாணம் ஒன்றை வைத்தான். பிறகு தனக்குத் தெரியாமல் ஒன்றும் நடந்து விடக்கூடாது என்பதற்கு கற்பு என்பது பெருமை என்று பொய் சொல்லி வேலி கட்டினான். (இரண்டு உலகங்கள்)

நான் ஒரு பரத்தையன்று நான் ஒரு பெண் இயற்கையின் தேவையை நாடுகிறேன் (வாடாமல்லிகை)

நெஞ்சினால் பிழை செய்யாதவளை நீ ஏற்றுக் கொள்வதுதான் பொருந்தும் (அகல்யை)

என்னமோ கற்பு, கற்பு என்று கதைக்கிறீர்களே இதுதான் ஐயா பொன்னகரம் (பொன்னகரம்)

கற்பு காப்பதை வள்ளுவன் சொல்வது போல்

**இறைகாக்கும் காப்பு என் செய்யும்**
**'நிறை காக்கும் காப்பே தலை'**

என்று பெண்ணிடமே உள்ளது அதை ஆண் திணிக்கத் தேவை இல்லை என்றும்

2. ஆண்களால் பெண்களுக்கு உருவாக்கப்பட்ட பொன்விலங்கு வேலியே கற்பு என்றும்
3. நெஞ்சினால் பிழைசெய்யாத மனத்தூய்மையே கற்பு என்றும்

இழந்தவள் தன் இயற்கைத் தேவையைப் பூர்த்தி செய்ய நினைப்பதையும் (வாடாமல்லிகை)


உடலை விட மனத்தூய்மை என்னும் கற்பே பெரிதென்றும் முன்வைக்கின்றார்.

(அடுத்த வாரமும் பேசுவோம்)

### நீ என்னிடம் வரவேண்டும்

நீ என்னிடம் வர
வேண்டும்-என்
உள்ளத்தில் எரியும்
உன் நினைவெனும்
தீயை அணைப்பதற்கும்
உன் உதடு கொண்டு
என் உதட்டை
நனைப்பதற்கும்!
உன் இரு கைகொண்டு
என் இரு கன்னங்களில்
கண்ணீர்க் கோலங்களை
அழிப்பதற்கும்!
உன் உயிருள்
என் உயிரை தொலைத்து
நாம் காதலில் நிலைத்திட
நீ என்னிடம்
வர வேண்டும் அன்பே

பா.பிரா
திருநெல்வேலி



### பதிலை எதிர்பார்த்து....

அடிக்கடி-என்
நெஞ்சை
சொல் அம்பால்
துளைக்கிறாய்
அடுத்த நொடி
அதை எண்ணி
நீயே அழுகிறாய்
ஏன் இந்த
கண்ணாம் பூச்சி-நம்
இருவருக்கிடையில்...?
விடைகேட்கிறது
தினமும்-என் இதழ்கள்
விழி தாழ்த்துகிறது
தினமும்-உன் இமைகள்.

வி.சிறான்
சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்தக் காசில் சூனியம்

■ டிலீப்

இந்திய அணி தானே காசு கொடுத்து தனக்கே சூனியம் வைத்த கதையாக இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் நிறைவடைந்தும், இன்னமும் அதிலிருந்து திருந்தாத அணியாகவே இந்தியா இருக்கின்றது. சுழலுக்கு சாதகமாக ஆடுகளம் அமைத்து இங்கிலாந்தின் சுழலில் சிக்கி சிதைந்த பின்னரும் டோனி சுழல் பந்து வீச்சுக்கு சாதகமான மைதானமே அமைக்கப்பட வேண்டும் என்பதில் ஒற்றைக் காலில் நிற்கின்றார்.

கடந்த ஆண்டு இங்கிலாந்து மண்ணில் 'வைற் வோஷ்' செய்யப்பட்டதற்கு இந்திய அணி அதே போன்று இங்கிலாந்துக்கு திருப்பி கொடுப்பதற்கு கங்கணம் கட்டிக் கொண்டிருந்தது. அதற்கேற்ப இந்திய அணியின் வீரர்கள் ஒவ்வொருவரும் இங்கிலாந்துடனான தொடர் பழிவாங்கும் தொடராகவே இருக்கும் என்று அறிக்கைகளும் விடுத்தனர்.

இதனை விட இந்தத் தொடரை எப்பாடுபட்டாவது வென்று தனது தலைமைப் பதவியை தக்க வைப்பதில் டோனியும் குறியாக இருந்தார். இங்கிலாந்து அணியைப் பொறுத்த வரையில், ஆசிய மண்ணில் சுழல் பந்து வீச்சுக்கு அந்த அணி தாக்குப்பிடிக்காது. இங்கிலாந்து அணியின் இந்தப் பலவீனத்தையே இந்திய அணி தனது பலமாகக் கருதியது.

இதனால் இந்திய அணித் தலைவர் மஹேந்திர சிங் டோனி, முதலாவது டெஸ்ட் ஆட்டம் இடம்பெற்ற அஹமதாபாத் மைதானத்தை சுழல் பந்து வீச்சுக்கு சாதகமாக அமைக்குமாறு தெரிவித்திருந்தார். அதற்கு அமைய அந்த மைதானம் அமைக்கப்பட்டிருந்ததுடன், இந்திய அணியின் சுழல் பந்து வீச்சுக்கு எதிர்பார்த்த வெற்றியைக் கொடுத்து 9 இலக்குகள் வித்தியாசத்தில் இங்கிலாந்தையும் வீழ்த்த உதவியது. தொடரை வெற்றியுடன் தொடங்கிய மகிழ்ச்சியில் இந்திய அணி எப்பாடுபட்டாவது 4-0 என்ற கணக்கில் இந்தத் தொடரை வெல்ல வேண்டும் என்ற முனைப்புடன் களமிறங்கியது.

முதலாவது டெஸ்ட் ஆட்டம் முடிந்த பின்னர் கருத்துத் தெரிவித்த இந்திய அணித் தலைவர் டோனி, அஹமதாபாத் மைதானம் எதிர்பார்த்தளவு சுழலுக்கு ஒத்துழைக்கவில்லை என்று தெரிவித்தார். அத்துடன் முதல் நாளிலிருந்தே சுழல் பந்து வீச்சுக்கு ஒத்துழைக்கும் மைதானத்தை மும்பையில் அமைக்குமாறு டோனி பணித்திருந்தார்.

இதனை ஆஸ்திரேலிய அணியின் வெற்றி அணித் தலைவராக திகழ்ந்த ஸ்டீவோ வன்மையாகக் கண்டித்திருந்தார். அணித் தலைவர்கள் ஒரு நாளும் தமக்கு வேண்டிய வகையில் இவ்வாறு மைதானங்கள் அமைத்துத் தரப்பட வேண்டும் என்று கோரக் கூடாது. மாறாக அமைக்கப்படும் மைதானங்களில் அதற்கேற்ப விளையாடி வெற்றிகளைப் பெற வேண்டும். இதுவே திறமையான அணித் தலைவருக்கு அழகு என்று தெரிவித்திருந்தார். அத்துடன் தான் தனது தலைமைப் பதவி வகித்த காலத்தில் சொந்த மண்ணில் ஒரு நாளும் இவ்வாறு ஆடுகளம் அமைத்துத் தருமாறு கேட்டதில்லை என்று தெரிவித்து டோனியின் செயலை வன்மையாகக் கண்டித்திருந்தார்.

இதற்கு இந்திய அணியின் முன்னாள் வீரர் சிந்து, டோனி சொல்வதுதான் சரி என்று வக்காலத்து வாங்கியிருந்தார்.


இங்கிலாந்து அணியும், இந்தியா தனது சொந்த மண்ணில் வெற்றியைப் பெறுவதற்கு எவ்வளவு கீழ்த்தரமான வேலைக்கும் இறங்கும் என்று கணித்திருந்தது. அதற்கமைய இரண்டாவது டெஸ்டில் இந்திய வம்சாவளி வீரரான மொன்டி பனேஷரை இங்கிலாந்து களமிறக்கியது. இரண்டாவது டெஸ்டில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இந்திய அணிக்கு பனேஷரின் சுழல் திணற வைத்தது. எப்படித் தடுத்தாடுவது என்று தெரியாமல் தடுமாறிய இந்திய அணி பனேஷரின் சுழலில் இறுதியில் 'சரண்டர்' ஆனது.

தாம் தயாரித்த மைதானத்தில் தமது சுழல் வித்தைகளைக் காட்டமுற்பட்ட இந்திய சுழல் பந்து வீச்சாளர்கள் திணறிப் போயினர். இந்திய அணியின் சுழல் பந்து வீச்சை இலகுவாக எதிர்கொண்ட இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்கள் அடித்தாடி ஓட்டங்களைக் குவித்தனர்.

சரியான 'போமில்' இருந்த அணித் தலைவர் குக்கும், பீற்றர்ஸனும் சிறப்பாக ஆட இந்திய அணியின் வெற்றி தொலைதூரம் போனது. சரியான 'போமின்றி' தவித்த இங்கிலாந்தின் நம்பிக்கை நட்சத்திரம் பீற்றர்ஸன் கூட இந்த ஆட்டத்துடன் தனது 'போர் முக்கு' திரும்பியுள்ளார்.

இரண்டாவது இன்னிங்ஸிலாவது தமது வீரத்தை காட்டலாம் என்று களமிறங்கிய இந்திய அணிக்கு படுமோசமான அடியே கிடைத்தது. பனேஷர், சுவான் இருவரும் இந்திய அணியை விடுவதாக இல்லை. தமது சுழலில் இந்திய அணியைப் போட்டுப் புரட்டியெடுத்தனர். இதனால் இங்கிலாந்தின் வெற்றிகூட இலகுவாகிப் போனது.

இந்திய அணி தனக்குத் தானே குழிபறித்துக் கொண்டது. தானே விரும்பிக் கேட்டமைத்த சுழல் மைதானத்தில் இங்கிலாந்தை ஆட்சி செய்ய விட்டு இறுதியில் அசடுவழிந்துகொண்டிருக்கின்றது. இங்கிலாந்தை வீழ்த்தப் போய் தான் வீழ்ந்து விட்டு விட்டு வீண் விமர்சனங்களையும் எதிர்கொண்டிருக்கின்றது.



" இந்திய அணி தனக்குத் தானே குழிபறித்துக் கொண்டது. தானே விரும்பிக் கேட்டமைத்த சுழல் மைதானத்தில் இங்கிலாந்தை ஆட்சி செய்ய விட்டு விட்டு இறுதியில் அசடு வழிந்து கொண்டிருக்கின்றது. இங்கிலாந்தை வீழ்த்தப் போய் தான் வீழ்ந்து விட்டு வீண் விமர்சனங் களையும் எதிர்கொண்டிருக்கின்றது.


இதனை விட இந்திய அணி தனியொரு துடுப்பாட்ட வீரரில் தங்கியிருக்கின்றது என்ற உண்மையையும் சொல்லாமல் சொல்லிச் சென்றிருக்கின்றது இரண்டாவது ஆட்டம். புஜாரா என்ற தனிமனிதனது திறமையாலேயே இந்திய அணி முதலாவது டெஸ்ட் ஆட்டத்திலும் ஓட்டங்களைக் குவித்தது. இரண்டாவது டெஸ்டிலும் முதலாவது இன்னிங்ஸில் புஜாரா சதம் கடக்கவே இந்திய அணி வலுவான நிலையை அடைந்தது. இரண்டாவது இன்னிங்ஸில் புஜாரா ஒற்றை இலக்கத்துடன் வெளியேற இந்திய அணியால் 200 ஓட்டங்களைக் கூட எட்ட முடியவில்லை.

இரண்டாவது டெஸ்டில் தோல்வியடைந்ததன் மூலம் இந்திய அணி தனது பழி வாங்கும் முயற்சியில் தோல்வியடைந்து விட்டது. எஞ்சிய இரண்டு ஆட்டத்திலும் வெற்றி பெற்றாலும் இந்திய அணியால் 4-0 என்று தோற்றதை திருப்பிக் கொடுக்க முடியாது.

இருந்தும் இந்திய அணித் தலைவர் டோனி, பொல்லைக் கொடுத்து அடி வாங்கியும் திருந்தாதவராக இருக்கின்றார். மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்துக்கான ஆடுகளமும் சுழல் பந்து வீச்சுக்கு சாதகமாகவே அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கின்றார்.

மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் ஈடன்கார்டன் மைதானத்தில் இடம்பெறுகின்றது. இந்த மைதானத்தின் பராமரிப்பாளர் டோனி சொல்வதைப் போன்று ஆடுகளம் அமைக்க முடியாது என்று மறுத்து விட்டார். உடனடியாகவே வெற்றிக்காக அலையும் இந்தியக் கிரிக்கெட் சபையும் - டோனியும் தமக்கு சாதகமான மைதானம் அமைத்துத் தராத பராமரிப்பாளரை இடமாற்றி விட்டார்கள்.

இவ்வளவு சர்வதிகாரப் போக்குடன் செயற்பட்டு மூன்றாவது டெஸ்டிலும், இரண்டாவது டெஸ்டில் ஏற்பட்ட நிலை ஏற்படுமாயின் அதற்குப் பின்னராவது இந்திய அணி வெல்லுமா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரசேகரஆஷாத்



# சிலுவையில் அறையப்படும் மனிதாபிமானம்

1996 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தின் சூரியக் கதிர் நடவடிக்கை மூலம் யாழ்ப்பாணக் குடாநாட்டை ஏற்கனவே கைப்பற்றிய அரச படையினர் சத்ஜெய நடவடிக்கை மூலம் ஆனையிறவிலிருந்து கிளிநொச்சியை நோக்கி முன்னேற முயன்ற நாள்கள் அவை. அப்போதுதான் வட இலங்கையின் கிழக்கு முனையில் ஒரு பூகம்பம் வெடிக்கிறது. விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் ஒன்று பொங்கியெழுந்து முல்லைத்தீவு இராணுவத்தளம் மீது பாய்கிறது. யாழ்.குடாநாட்டைக் கைப்பற்றிய வெற்றியின் மமதை சிதறடிக்கப்பட்டு முல்லைத்தளம் முற்றாகவே நிர்மூலம் செய்யப்படுகிறது. மீண்டும் முல்லைத்தீவைக் கைப்பற்ற கடல் மூலம் மேற்கொள்ளப்பட்ட முயற்சியும் முறியடிக்கப்படுகிறது. அளம்பிலில் தரையிறங்கிய ஒரு பகுதி படையினரும் பலரைப் பலி கொடுத்துவிட்டுக் கப்பலேறித் தப்புகின்றனர்.

முல்லைத்தீவு இராணுவத் தளம் முற்றாகவே துடைத்தழிக்கப்படுகிறது. இதில் ஏறக்குறைய 800 படையினரின் சடலங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்படுகின்றன. சடலங்களை செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் இலங்கை அரசிடம் ஒப்படைக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியில் முடிவடைகின்றன. அன்றைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை சடலங்களை ஏற்க மறுக்கிறார். இந்த நிலையில் விடுதலைப் புலிகள் படையினரின் சடலங்களைச் சுத்தம் செய்து புதிய ஆடைகள் உடுத்தி முறைப்படி இராணுவ மரியாதையுடன் கொக்காவில் பிரதேசத்தில் தகனம் செய்கின்றனர். அந்தப் படைவீரர்களின் பெயர்கள் நீண்ட காலமாகவே இலங்கை இராணுவத்தின் காணாமற் போனோர் பட்டியலிலேயே வைக்கப்பட்டிருந்தன.

இன்றைய ஜனாதிபதி, பல சிரேஷ்ட அமைச்சர்கள் ஆகியோர் அன்றைய ஆட்சியில் அமைச்சர்களாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் பங்கு கொண்டிருந்தனர். ஆனால் எவரும் தங்கள் ஆட்சிக்காக உயிர் கொடுத்த அந்த வீரர்களின் சடலங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டி ஒரு சிறு முயற்சி கூட எடுக்கவில்லை. வீதியில் வாகனத்தில் அடிபட்டுச் சாகும் நாயைக் கூட எடுத்து ஒரு பக்கமாகப் புதைப்பதுண்டு. ஆனால் இவர்கள் தமக்காக உயிர் விட்டவர்களின் சடலங்களைப் பொறுப்பேற்று அவற்றை உரிய மரியாதையுடன் அடக்கம் செய்ய மறுக்கும் அளவுக்கு மனிதாபிமானமற்றவர்களாக விளங்கினர் என்பதை நாம் இங்கு அவதானிக்க வேண்டும்.

இவர்கள் எமது போராளிகள் தொடர்பாகவோ மக்கள் தொடர்பாகவோ மனிதாபிமானத்துடன் நடந்து கொள்வார்கள் என எதிர்பார்க்க முடியுமா?

போர் என்பது ஒருவரையொருவர் அழிப்பதற்காக நடத்தப்படும் ஒரு சமர் என்பதில் சந்தேகமில்லை. அங்கு கொலைகள், அழிப்புகள் குற்றமாகக் கருதப்படுவதில்லை. ஆனால் போரின் போது ஒருவன் இறந்துவிட்டால் அவன் எதிரிப் படையைச் சேர்ந்தவனாக இருந்தாலும் அவனின் சடலத்துக்கு உரிய மரியாதை வழங்கப்படுவது காலம் காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் ஓர் இராணுவ மரபு. அந்த வகையில் முல்லைப் போரில் கைப்பற்றப்பட்ட படையினரின் சடலங்களுக்கு விடுதலைப் புலிகள் உரிய இராணுவ மரியாதை வழங்கி அவற்றை எரியூட்டினர்.

**ஞாயிறு காரம்**

ஆனால் இலங்கை அரசோ தமது படை வீரர்களின் சடலங்களை ஏற்க மறுத்ததன் மூலம் அந்த இராணுவ மரபை மதிக்கத் தவறியதுடன் தமது மனிதாபிமானமற்ற தன்மையையும் வெளிக்காட்டியிருந்தது.

2009 மே மாதம் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டு களத்திலிருந்து அகற்றப்பட்ட பின்பு தமிழ் மக்களின் தாயகப் பிரதேசமெங்கும் படையினர் குவிக்கப்பட்டனர். எங்கும் படை முகாம்கள் அமைக்கப்பட்டன.

அதையடுத்து சகல மாவீரர் துயிலும் இல்லங்களும் அழிக்கப்பட்டன. மாவீரர் கல்லறைகள் இடித்து நொருக்கப்பட்டன.

போராளிகளின் எலும்புக் கூடுகள் கூட தோண்டி எடுக்கப்பட்டு எரியூட்டப்பட்டன.

இது இலங்கை இராணுவத்தினர் எதிரிப் படையின் இறந்த வீரர்களுக்குக் கௌரவம் வழங்கித் தமது ஒழுக்கத்தையும் பண்பையும் வெளிப்படுத்திய விதம்.

கல்லறைகள் நொருக்கப்பட்டாலும் எலும்புகள் எரியூட்டப்பட்டாலும் அந்த மாவீரர்கள் [illegible] மக்கள் நெஞ்சில் என்றும் நிலைகொண்டு வாழ்வர். அதை எவராலும் அழித்துவிட முடியாது. ஆனால் இலங்கைப் படையினரின் மனிதாபிமானமற்ற நடவடிக்கை வரலாற்றில் என்றுமே அழிக்க முடியாத கேவலமான கறையைப் பதித்துவிட்டது என்பதுதான் இங்கு முக்கிய விடயமாகும். இதற்காக அவர்கள் மிகவும் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

இலங்கை இராணுவத்தின் மனிதாபிமானப் படுகொலைகள் பல்முனைகளில் விரிவடைந்துள்ளன என்பது சர்வதேசமே ஏற்றுக் கொண்ட உண்மையாகும். மாவீரர் துயிலும் இல்லங்கள் மீதும் மாவீரர் கல்லறைகள் மீதும் மாவீரர் எலும்புக் கூடுகள் மீதும் அவர்கள் மேற்கொண்டு வரும் கேவலமான அநாகரிகங்கள் அவற்றின் ஒரு பகுதியேதான். அதேவேளையில் இவ்வழிப்பு நடவடிக்கைகளுடன் அவர்கள் நிறுத்திவிடவில்லை. அதாவது வருடாவருடம் மக்கள் மாவீரர் தினத்தன்று மாவீரர்களை நினைவுகூர்வதையும் அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதையும் தடுப்பதில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

மாவீரர் கல்லறைகளை அழிப்பது மாவீரர் எலும்புகளை எரிப்பது போன்றவை ஒரு மிருகத்தனமான பழிவாங்கும் உணர்ச்சியிலிருந்து பிறப்பவை. ஆனால் மாவீரரை நினைவுகூர்வதைத் தடுப்பது அப்படியல்ல. அது ஒரு விதமான அச்ச உணர்வி லிருந்தே பிறக்கிறது. அதாவது அவர்களை நினைவு கூர்வதன் மூலம் அவர்களின் இலட்சியங்கள் நினைவுகூரப்பட்டு அவை ஒரு சக்தியாக மேலெழுந்து விடும் என்ற அச்சமே இதற்குக் காரணமாகும்.

ஆனால் நினைவுகூரல் என் [illegible] மட்டுப்படுத்தப்பட்டதல்ல.

அது ஒரு மனம் சார்ந்த நிகழ்ச்சி. உதிரம் சிந்தி எமது உரிமைகளுக்காக உயிர் நீத்தவர்களின் நினைவுகள், இலட்சியங்கள் என்பன அணைபோட்டுத் தடுக்குமளவுக்குப் பலவீனமானவையல்ல. அவை என்றும் இதயத்தில் நின்றெரியும் நெருப்பாக நிலைத்து நின்று ஒளி விடுபவை. அதை எந்த ஒரு சக்தியாலும் தடுத்துவிட முடியாது.

இராணுவத்தினரின் எத்தகைய கெடுபிடிகள் மத்தியிலும் எமது மக்கள் விளக்கேற்றி மலர் தூவி அஞ்சலிக்கத் தவறுவதில்லை. படையினரின் இறுக்கமான கண்காணிப்பின் மத்தியிலும் எமது மக்கள் அவர்களின் கண்களில் மண்ணைத்தூவி விட்டு மாவீரர் துயிலும் இல்லம் இருந்த இடங்களில் விளக்கேற்றி விடுகின்றனர். ஆலயங்களில் மணியொலித்து விடுகின்றனர்.

ஏனெனில் மாவீரர் அஞ்சலி என்பது இதய உணர்வாக எழுந்து எல்லாத்தடைகளையும் மீறிக் கொழுந்துவிட்டு எரிவது. அது ஓர் இனத்தின் தியாக வரலாற்றின் புனிதமான அடையாளச் சின்னம்.

அவ்வகையிலேயே இந்த வருடம் மாவீரர் தினத்தன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் தங்கள் அஞ்சலி நிகழ்வை விளக்குகளேற்றி நிறைவேற்றினர். ஆனால் வழமை போலவே அது நடைபெறாமல் தடுப்பதற்காகப் படையினர் அன்று மாலையே தமது பகீரத முயற்சிகளையும் அச்சமூட்டும் நடவடிக்கைகளையும் ஆரம்பித்துவிட்டனர். பல்கலைக்கழக வளாகத்துக்குள் அத்துமீறிப் புகுந்த படையினர் அங்கு சோதனை நடவடிக்கை என்ற பேரில் மாணவர்களைப் பயமுறுத்தியதுடன் மாணவ, மாணவியரின் இயல்பு நிலைமையைக் குழப்பினர். அதுமட்டுமன்றி பெண்கள் விடுதிக்குள் அவர்கள் உட்புகுந்த போது சில மாணவிகள் மூர்ச்சையடைந்தனர். இந்த நிலையில் மாணவர்களுக்கும் படையினருக்குமிடையே முறுகல் நிலை தோன்றியது.

> ஆனால் போரின் போது ஒருவன் இறந்து விட்டால் அவன் எதிரிப் படையைச் சேர்ந்தவனாக இருந்தாலும் அவனின் சடலத்துக்கு உரிய மரியாதை வழங்கப்படுவது காலம் காலமாகப் பின்பற்றப் பட்டு வரும் ஓர் இராணுவ மரபு.

அந்த வேகத்தில் இந்தச் சம்பவங்கள் தொடர்பான செய்தி சேகரிக்கச் சென்ற உதயன் ஆசிரியர் படையினரால் தாக்கப்பட்டதுடன் அவரின் புகைப்படக் கருவியையும் பறிக்க முயற்சிக்கப்பட்டது. அந்தச் சம்பவம் பற்றிக் கேள்விப்பட்டு அங்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் அவர்களின் வாகனக் கண்ணாடிகள் உடைக்கப்பட்டன.

அதாவது படையினரால் எவ்வித சட்டவரம்புக்கும் உட்படாத காடைத்தனம் பல்கலைக்கழகச் சுற்றாடலிலும் உள்ளும் அரங்கேற்றப்பட்டன.

எனினும் குறிப்பிட்ட நேரத்தில் விடுதிகளின் மாடிகளிலும் இன்னும் சில இடங்களிலும் சுடர்கள் எரிய ஆரம்பித்தன. எல்லாத் தடைகளையும் மீறி மாவீரர் நினைவுகள் எங்கும் ஒளியாய்ப் பரவின.

பல்கலைக்கழகத்தினுள் இராணுவம் அத்துமீறி நுழைந்து குழப்பம் விளைவித்தமையைக் கண்டித்து மறுநாள் ஆர்ப்பாட்டம் செய்த மாணவர் மீது பொலிஸார் தடியடிப் பிரயோகம் மேற்கொண்டு தங்கள் அடாவடித்தனத்தை வெளிப்படுத்தினர். அதில் நான்கு மாணவர்கள் காயமடைந்தனர்.

உதயன் ஆசிரியர் மேல் தாக்குதல், மாணவர் மீது தடியடிப் பிரயோகம் என வன்முறைகளை வலிந்து தூண்டும் வகையில் பொலிஸாரும் படையினரும் செயற்பட்டுள்ளனர். ஏற்கனவே இலங்கையின் ஆட்சியாளர்களாலும் அரசபடைகளாலும் தொடர்ந்து சொல்லப்பட்டு வரும் சில செய்திகள் இம்முறை மாவீரர் நாளன்று மீண்டும் அழுத்தமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அதாவது எமக்காக உயிர்நீத்த, எமது குருதியில் உருவாகி எமக்காகக் குருதி சிந்திய எமது பிள்ளைகளுக்காக கண்ணீர் விடும் உரிமையையோ அஞ்சலி செலுத்தும் உரிமையையோ கூட சிங்கள தேசம் அனுமதிக்கத் தயாரில்லை. இலங்கை அரசும் படைக்கட்டமைப்பும் சகலவிதமான மனிதாபிமான நடைமுறைகளையும் இராணுவ ஒழுக்க விழுமியங்களையும் நிராகரித்து அடாவடித்தனத்தையே கொள்கையாக ஏற்றுக் கொண்டுள்ளன. தமிழ் மக்கள் சிங்கள தேசத்தின் அடிமைகளாக வாழமட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

அதேவேளையில் தமிழ் மக்கள் விடுக்கும் மாவீரர் தினச் செய்தி ஒன்றுண்டு. அதாவது எந்த ஒடுக்குமுறைகளும் தமிழ் மக்களின் உரிமைப் போருக்குத் தடைக் கல் போட முடியாது. மனிதாபிமானத்தைச் சிலுவையில் அறைபவர்கள் தங்களைத் தாங்களே சிலுவையில் ஏற்றுபவர்கள் என்பது வரலாறு சொல்லும் அனுபவமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் 2009 இல் நிகழ்ந்த இனப்படுகொலை

## ஐ.நா. விட்ட தவறுகளும் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்களும்

– யாழ். ஆனந்தன் –



திட்டமிட்ட தவறுகள் தொடர்கொலைக்கும் வன்முறைக்கும் தமிழர் உள்ளக ஏதுவாக அமைந்தது. இதன்போது 360,000 மக்கள் பாதிக்கப்பட்டனர். இது உலக நாடுகளுக்கு வெறும் இலக்கங்களாகத் தெரிந்தாலும், ஈழத்தமிழர்களுக்கு பாரிய சமூக அழிவின் பரிமாணமேயாகும்.

புலிகளின் அரசியல் பீடம் சரணடைவதற்கு முறையான நேரடிக் கண்காணிப்பினைச் செலுத்த ஐ.நா. தவறிவிட்டது. இதற்கு இந்திய இராஜதந்திரமும் ஒரு காரணம். இதனால் பல இளைஞர், யுவதிகள் கொடூரமாக சித்திரவதைக்கு உட்பட்டுச் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதற்கும் ஐ.நா. பொறுப்பு. இது ஒரு இனப்படுகொலையே.

ஐ.நா. நிபுணர் குழு உள்ளக அறிக்கையில் சிவிலியன் எனக் கூறுவது தவறு. மாறாக அப்பாவித் தமிழ் மக்கள் எனக் குறிப்பிட்டு இருத்தல் வேண்டும். அவ்வாறு குறிப்பிட்டாலேயே இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலை என்று உறுதிப்படுத்தலாம். அடுத்து உள்ளக இடம்பெயர்ந்தோர் (IDP) எனக் குறிப்பிட்டமை தவறு. வலிந்து துரத்தப்பட்டோர் (Forced displaced People) எனக் குறிப்பிட்டு இருத்தல் வேண்டும்.

போரின்போது விடுதலைப் புலிகள் அமைப்பு சீர்குலைக்கப்பட்டு விட்டது. (இந்திய, இலங்கைப் புலனாய்வுக் கட்டமைப்புகளூடாக) எனவே போரின் இறுதிக்கட்ட நடவடிக்கைகளுக்கு விடுதலைப் புலிகள் எனக் குற்றம் சாட்டல் தவறானது.

அதில் சமாதான உடன்படிக்கையில் இணைத்தலைமை நாடுகள் அமைத்தமை தவறு. ஐ.நா. உள்ளடக்கப்படவில்லை எனவே தமிழர்களுக்குரிய தீர்வுத்திட்டம் ஐ.நா.வுக்கூடாகவே அணுகல் வேண்டும்.

சுனாமி நிவாரணத்தில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டமை சுனாமி பொதுக் கட்டமைப்பு உருவாக்காதது தவறானது. தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டமை ஐ.நா. கவனம் செலுத்தவில்லை. அதேபோல் போருக்குப் பின்னரான நிவாரண அமைப்பிலும் ஐ.நா. புறக்கணிக்கப்பட்டுள்ளது. இது தொடர்ந்தும் தெரிந்து விடும் தவறாகும். எனவே தமிழர்களின் அரசியல் சமூகப் புனர்வாழ்வில் ஐ.நா. நேரடியாக அணுகுதல் வேண்டும்.

ஐ.நா. மக்களுக்கு மட்டுமல்லாது தனது பணியாளர்களுக்கும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தமுடியாது போனமை ஐ.நா. மீது தமிழ்மக்களுக்கு அவநம்பிக்கையினை ஏற்படுத்தியுள்ளது.

2009 ஆம் ஆண்டு தை மாதத்திலிருந்தே மக்கள் மீதான காட்டுமிராண்டித் தாக்குதல்களை ஐ.நா. அறிந்தும் தொடர்ந்து 4 மாதங்களில் ஏற்பட்ட அழிவுகளை நிறுத்த முயற்சி எடுக்கவில்லை. இது பாரிய மனித அழிவினைத் தடுக்கத் தவறிய தன்மையாகும்.

புலிகளைக் கண்டித்து அறிக்கை விட்ட ஐ.நா., இலங்கை அரசைக் கண்டிக்கத் தவறிவிட்டது. மேலும் யாதெனில் புலிகளின் செயல்கள் எனக் கூறப்பட்டமை சில அரச கூலிப் படைகளால் - கையாள்களாலேயே மேற்கொள்ளப்பட்டது. கண்ணுக்குப் புலப்படக்கூடிய இடத்தில் மக்கள் கூட்டமாக அகதிகளாக இருந்த போது அவர்களை நோக்கி கடுமையான எறிகணைகளை இலங்கை அரசு பிரயோகித்தது. இதனை ஐ.நா. கண்டிக்கவில்லை. இது இனப்படுகொலையின் அம்சம் என்பதை ஐ.நா. இன்றுவரை உணரவில்லை.

2009 அகதிகளுக்குப் புனர்வாழ்வு அளிக்க ஐ.நா.வுக்கும் ஏனைய நிறுவனங்களுக்குமான தடங்கள் Implied Genocide (தெரிந்தும் செய்யும் இனப்படுகொலை வரையறைக்குள் அடங்கும்).

UNITAR's Operational Satellite Applications Programme (UNOSAT) இல் காணக்கூடியதாக இருந்தும் இன அழிப்பு என்ற பதத்தினை ஐ.நா. பயன்படுத்தாமை இன்னமும் செய்யும் தவறாகும். ஐ.நா. பாதுகாப்புச் சபையின் சில அங்கத்துவ நாடுகளுக்குக் கூட இலங்கையில் தமிழர்களுக்கு என்ன நடக்கின்றது என்பதை அறிவிக்காதது தவறாகும். அதேபோல் இன்றும் என்ன நிகழ்கின்றது என்பதை அறிவிக்காமை தவறாகும்.

LLRC அறிக்கையும் சர்வதேசத்தை தாஜா பண்ணும் எழுத்துமூலமே ஆகும். அப்பாவித் தமிழ் மக்களது காயத்துக்கும், கொலைக்கும் ஐ.நா. அவதானிப்பும் பிரதிபலிப்பும் காணப்பட வில்லை. ஐ.நா. செயலர் இலங்கை அதிபருடன் அந்நியோன்னியமாக பிரச்சினை காலத்தில் பழகியுள்ளார். இதனை அவர் முகாம்களுக்கு உதவ உபயோகித்துள்ளார். ஆனால் கடுமையான அழுத்தங்களைப் பிரயோகிக்கவில்லை. சரணடைபவர்களை அணுக ஐ.நா. தவறிவிட்டது. இது பலர் காணாமற் போவதற்கும், கொலை செய்யப்படவும், நீதி விசாரணையின்றித் தடுத்து வைக்கவும் ஏதுவாக அமைந்தது.

இலங்கை தொடர்பாகத் திட்டமில் இருக்கவில்லை. இதனை தற்போதாவது உருவாக்கவேண்டும். திட்டமிட்ட தவறுகள் தொடர்கொலைக்கும் வன்முறைக்கும் தமிழர் உள்ளாவதற்கும் ஏதுவாக அமைந்தது. இதன்போது 360,000 மக்கள் பாதிக்கப்பட்டனர். இது உலக நாடுகளுக்கு வெறும் இலக்கங்களாகத் தெரிந்தாலும், ஈழத்தமிழர்களுக்கு பாரிய சமூக அழிவின் பரிமாணமேயாகும்.

இலங்கையில் ஐ.நா.வுக்கு பாரிய தோல்வி ஏற்பட்டது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இதனை ஐ.நா. எதிர்வரும் காலங்களில் ஏனைய நாடுகளில் திருத்திக்கொள்ளும். ஆனால் இலங்கை இன அழிப்புக்கு உட்பட்ட தமிழ் இனத்துக்கு நிலையான அரசியல் தீர்வினைப் பெற ஐ.நா. மேற்பார்வையில் இன அழிப்புக்குப் பின்பான சமூகக் கட்டுமானத்தைத் தமிழர்கள் மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

புலிகளின் அரசியல் பீடம் சரணடைவதற்கு முறையான நேரடிக் கண்காணிப்பினைச் செலுத்த ஐ.நா. தவறிவிட்டது. இதற்கு இந்திய இராஜதந்திரமும் ஒரு காரணம். இதனால் பல இளைஞர், யுவதிகள் கொடூரமாக சித்திரவதைக்கு உட்பட்டுச் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதற்கும் ஐ.நா. பொறுப்பு. இது ஒரு இனப்படுகொலையே.

இலங்கை மனிதநேயச் செயற்பாடுகளை இனவாத அரசியல் அர்த்தத்தில் நோக்குதல் தன்மையைக் கருத்தில் எடுக்க ஐ.நா. தவறியுள்ளது. இலங்கையில் தமிழ் மக்களது இன அழிப்பில் ஆயுத உதவி வழங்கிய நாடுகள், தொழில்நுட்ப உதவி வழங்கிய நாடுகள் என்பன தமிழர்களுக்கு நீதியை வழங்குவதற்கு பக்கச்சார்பாக அமைந்துள்ளன என்பதையும் ஐ.நா. கவனிக்க வேண்டும்.

போரின் முடிவை ஐ.நா. வரவேற்றமை, ஐ.நா. தமிழ் இனப்படுகொலையை ஆதரித்த தன்மையைக் காட்டுகின்றது. இதற்கு ஐ.நா. காலந்தாழ்த்தியேனும் மன்னிப்புக் கோரவேண்டும். மேலும் இது ஐ.நா. இலங்கை அரசுடன் பொறுப்புக் கூறும் தன்மையை வலியுறுத்தவில்லை. அரசியல் தீர்வு பற்றிக் கூறவில்லை, தவறு. இலங்கை அரசு அரசியல் புனர்வாழ்வினை ஏற்படுத்த ஐ.நாவின் உதவிகளை உதாசீனம் செய்தமை தொடர் இனப்படுகொலைக்கும், சிங்கள இன ஆக்கிரமிப்புக்கும் ஏதுவான நிலையாகும். அதுவே இன்றுவரை தொடர்கின்றது.

அடுத்து இவ்வளவு அழிவுகளைச் செய்த இலங்கை அரசோ அன்றேல் சிங்கள மக்களோ ஐ.நாவின் அறிக்கையினை அலட்சியம் செய்யும் போக்கையே கொண்டுள்ளன. இது மேலும் மேலும் இனரீதியான நெருக்குவாரம் தொடரவும், இன அழிப்புகள் மேற்கொள்ளவும் கட்டியம் கூறுவதாகவே அமைகின்றது. மேலும் சிங்களக் குணாம்சம் என்பது நாசிக்குணாம்சம் என்பதனை இலங்கைத் தமிழர்கள் புரிந்து வைத்துள்ளனர். ஆனால் அதனை உலகம் புரிந்துகொள்ளவில்லை. இதனை உலகுக்கு உணர்த்த எமது அரசியல் தலைவர்கள், கல்வியியலாளர்கள் முன்வரவேண்டும். ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை நீதிக்கு நீதி வேண்டுமென்றே ஏங்குகின்றார்கள். அதற்காக அநீதியின் அசபை அகல வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வலியின்றி வரலாறில்லை

(சூரியகாந்தி முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலக்கம் அதிகாரத்தின் அடி வயிற்றில் உதித்தது. புரட்சியைக் கருச்சிதைவு செய்வது என்று முடிவாயிற்று.

மாணவர்களுக்கு வழி காட்டியவர்கள் அல்லது முன்னின்று அடி வாங்கியவர்கள் குறிவைக்கப்பட்டார்கள். "பெற்றோல் குண்டு வீசினார்கள். சுவர் ஒட்டி ஒட்டினார்கள்." இன்னும் புனைவுகளால் உருவான கைவிலங்குகள் மாணவர்களின் கைகளில் பிணைக்கப்பட்டன. மாணவர் எழுச்சியின் மையப் புள்ளிகள் அவர்கள் தான் என்று நம்பியது. புள்ளிகள் இருந்தால் தானே கோலம் வரைய முடியும். அழித்துவிட்டால் அவ்வளவுதான். அது தான் அவர்களின் திட்டம். புள்ளிகளை அழிப்பது என்பது இப்போதைக்குச் சாத்தியமற்றது. அமெரிக்கா உள்ளிட்ட எல்லா நாடுகளும் கண்கொத்திப் பாம்புகளாகி விட்டன. ஒரு சின்ன அசைவும் அவர்களின் பார்வையில் இருந்து தப்ப முடியாது. மாணவர்களுக்கு ஒரு 'பழைய பாணியில்' ஏதேனும் செய்துவிட்டால் ஜெனிவாவில் தொங்கிக்கொண்டு இருக்கும் சுருக்குக் கயிறு இன்னும் இறுகி விடும். அழிப்பதற்குப் பதிலாக கொஞ்சம் அடக்கிவைப்போம் அல்லது அதட்டி வைப்போம் என்ற நினைப்பிலேயே மாணவர்கள் பயங்கரக் குற்றவாளிகளாக சித்திரிக்கப்பட்டனர்.

நடுச்சாமத்தில் நாயின் குரைப்பொலிகளை மிதித்துக்கொண்டு சப்பாத்துக் கால்கள், பாடப்புத்தகம் ஏந்தியவர்களைப் பெற்றோரிடம் இருந்து பிரித்து எடுத்து விலங்கிட்டு இழுத்துச் சென்றனர். அன்றைய கொடும் இருளில் விலங்கிட்டுத் தூக்கிச்சென்ற தங்கள் பிள்ளைகளை முழுவதும் காலன் நெருங்கிவிடக் கூடாது என்று கண்ணீரால் மன்றாடினர் பெற்றோர். அவர்களின் வீடுகள் கண்ணீர் வெள்ளத்தில் மிதந்துகொண்டு இருந்தன. விடிகாலையில் ஓடிச்சென்றார்கள். சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் விலங்கிடப்பட்ட நிலையில் தம் பிள்ளைகள் உயிரோடு இருப்பதைக் கண்ட பின்னரே அவர்களுக்கு போன உயிர் மீள வந்தது.



மாணவர்கள் எழுச்சியை நாலு பேரைக் கைது செய்வதன் மூலம் ஒடுக்கிவிடலாம் என்று அதிகாரம் கணக்குப் போடுகிறது. ஆனால் உண்மை அதுவல்ல. வரலாறின் ஏராளமான செந்நிறப் பக்கங்கள் மாணவர் புரட்சிகளாலேயே நிறைந்து இருக்கின்றன. ஆட்டம் போட்ட கொடும் அரசுகளின் அச்சாணிகள்கூட ஆட்டம் கண்டன. மாணவர் புரட்சிகளால் வீடுவந்து சேராது என்று எண்ணிய சிறுபிள்ளையின் வேளாண்மைகள் நாட்டின் தலைவிதியை மாற்றியது கண்கூடு. பிரான்ஸ், சீனா, ரஷ்யா என்று மாணவர்களின் புரட்சிகள் அந்த நாட்டு மக்களின் விடியலுக்கான முதல் அத்தியாயங்கள் விரிந்து இருந்தன. அங்கும் அதிகாரம் எழுச்சியின் மையப் புள்ளிகளைக் கருவறுத்தது ஒவ்வொரு புள்ளிகளும் விழவிழ, ஓராயிரம் புள்ளிகள் உற்பவிக்கத் தொடங்கின. ஒளி உள்வரும் துவாரம் ஒன்றை அடைத்துவிட்டதாக அதிகாரம் நிம்மதி கொண்டு நிமிர்கையில் அதைவிடவும் பன்மடங்கு பெரிய துவாரங்கள் தோன்றியிருக்கும்.

அதிகாரத்தின் தோள்களில் ஆயுதங்களோடு முளைத்த ஆயிரமாயிரம் கரங்களாலும் மாணவர் சக்தி என்ற ஆதவனை மறைக்கவோ அழிக்கவோ முடியவில்லை. கடைசியில் அதிகாரத்தின் கரங்கள் புரட்சியின் வெம்மையில் பொசுங்கியதாகவே வரலாறு எழுதிச் செல்கிறது. வரலாற்றுக்கு எல்லாமே தெரியும். ஒன்றைத் தவிர, அது மன்னித்தல் என்பதுதான்.

'ரமணா' படத்தில் வருகிற விஜயகாந்துக்கு மட்டுமல்லாமல் வரலாற்றுக்கும் "தமிழில் பிடிக்காத ஒரே வார்த்தை மன்னிப்பு." வரலாற்றை மறந்துவிட்டு - முன்னைய காலத் தவறுகளிலிருந்து பாடம் படிக்காமல் மீளவும் அதேதவறுகளைச் செய்தவர்கள், செய்பவர்கள் வரலாற்றின் இரக்கப் பார்வைக்குள் எட்டுவதில்லை. அவர்களை காலவெள்ளத்தில் தூசிகளாக்கி விடுவதுதான் வரலாறு தரும் பரிசாக இருக்கிறது.

வலியின்றி வரலாறு இல்லை. வலிகள் எல்லாம் விடிவுகளுக்கானவை. புதிய பிறப்பின் தொடக்கம் வலிதான். எந்த விலங்கிடலாலும் புரட்சிக்கு சிறையிடப்பட்டதில்லை. (இது பல்கலைக்கழக மாணவர்களை உசுப்பேற்றுவதற்காக எழுதப்படும் பத்தி அல்ல. உலகின் வரலாற்றுப் பாதையில் கடக்கப்பட்ட கணங்களின் அனுபவங்களிலிருந்து பிறந்த வார்த்தைகள் மாத்திரமே உண்மையின் ஒளிக்காக ஏங்குகின்ற சொற்கள். அவ்வளவுதான்) மீண்டும் ஒருமுறை வரலாற்றின் பக்கங்களில் மலம் கழித்துவிட்டு, அதிகாரம் மமதையுடன் மாணவர் எழுச்சியின் நான்கு புள்ளிகளைப் பதுக்க நினைக்கிறது. ஆனால், ஒன்று நூறாகி, நூறு ஆயிரமாகி, ஆயிரம் இலட்சமாகி அந்தப் புள்ளிகள் விரிவடையப் போவது அதிகாரத்துக்குத் தெரியவேயில்லை. மமதையால் பார்வையற்றுப்போன அதிகாரத்தின் முன்னால் சிரித்தபடி தீர்ப்பிடக் காத்திருக்கிறாள் வரலாறு என்ற 'கண்டிப்பான கிழவி.'

# மீண்டும் தொடங்கும் மிடுக்கு...

(03 ஆம் பக்கம் தொடர்ச்சி)

### தன்னிச்சையான போராட்டம்

இது ஈழத் தமிழ் மக்கள் கடந்த காலங்களில், அதாவது 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முன்னெடுத்த ஜனநாயக வழியில் அமைந்த போராட்டங்களில் இருந்து முற்றிலும் மாறுபட்டது. நில அபகரிப்பு, காணாமல் போதல், சிறைக் கைதிகள் விடுவிப்பு போன்ற காரணங்களுக்காக அரசியல் கட்சிகள் ஒழுங்குபடுத்திய போராட்டங்களில் மக்கள் கலந்து கொண்டனர். ஆனால் இந்தப் போராட்டம் சுயமாக உருவானது. யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட பெரும்பாலான மாணவ நிலை அரசியல் போராட்டங்களுக்கு அரசியல் பின்னணி இருந்தது. ஆனால் இது எந்தப் பின்னணியையும் வைத்துக் கொள்ளாமல் தமது பிரச்சினையை தாமே தீர்த்துக் கொள்ள மாணவர்கள் முன்னெடுத்த போராட்டம். முற்றிலும் ஜனநாயக வழிப்பட்டது. கட்சிகளின் சாயங்களற்றது. இந்தக் காரணத்தினால் தான் இதனை அடக்க அரச யந்திரங்கள் காட்டுமிராண்டித்தனத்தைக் கட்டவிழ்க்க வேண்டியிருந்தது.

### அரியதோர் சந்தர்ப்பம்

இந்தப் போராட்டம் இப்போது இரண்டாம் கட்ட நிலையை அடைந்திருக்கின்றது என்றே குறிப்பிட வேண்டும். யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டு இரண்டாம் நாளே பேராதெனிய பல்கலைக்கழக மாணவர்கள் ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர். றுகுணு பல்கலைக்கழக மாணவர்கள் அடுத்த ஆர்ப்பாட்டம் ஒன்றுக்கு தயாராகின்றனர். இது தமிழ் தேசிய மீள் எழுச்சிப் போராட்டமாக தமிழர் தரப்பில் நோக்கப்பட்டாலும், அதனை ஏற்றுக் கொண்ட அனைத்து சக்திகளும் கலந்து போராட வேண்டிய சந்தர்ப்பத்தை உருவாக்கியளித்துள்ளது. இனியும் தமிழருக்காக தமிழர்கள் மட்டுமே போராடி வெல்வது சாத்தியமற்றது. தமிழர்களுக்கு தொடர்ந்தும் நீடிக்கும் சுதந்திரமற்ற நிலையும், உரிமை மறுப்பும் இலங்கையில் வாழும் ஏனைய இனங்களுக்கு எடுத்துச் சொல்லப்பட வேண்டியவை. அதற்கான முதற் தொடக்கமாக பல்கலைக்கழக போராட்டம் அமைந்துவிட அனைத்து தரப்பினரும் முயற்சிக்க வேண்டும். ஆனால் இதுவரையில் அதற்கான எந்த சமிக்ஞைகளும் எதிர்பார்க்கப்படும் தரப்பினரிடமிருந்து வரவில்லை.

### அடுத்த கட்டமும் தயார்

ஆக, இது மாதிரியான கல்விச் சமூகத்தின் போராட்டங்களுக்கு நம்பிக்கை தரும் ஒரு விடயம் கட்டுரை எழுதப்படும் நேரத்தில் நடந்திருக்கின்றது. யாழ்.பல்கலைக் கழக யாழ். பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர்கள் மாணவர்கள் தாக்கப்பட்டதை எதிர்த்து நடத்திய ஆர்ப்பாட்டத்தில் முக்கியமான ஒரு முடிவு அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இனிவரும் காலங்களில் இறந்தவர்களுக்கு தாமும் மாணவர்களுடன் இணைந்து தீ மேற்றப்போவதாக அறிவித்திருக்கின்றனர். இது போன்ற இன உரிமை சார்ந்த நிகழ்வுகளை மாணவர்கள் தனியே நடத்துவதாலேயே தாக்கப்படுகின்றனர். இவ்வாறு பல தரப்பினரும் இணைந்து அதனை நடத்தினால் யாரது வெளிக்கு கொண்டுவர முடியும். அடுத்த கட்டமாக பொது மக்களும் அதில் தாமாக முன்வந்து இணைந்து கொள்வர். இழந்து விட்ட ஒரு உரிமை மீளக் கிடைக்கும். அதுவே அடுத்த கட்டம் நோக்கி நம்மை இழுத்துச் செல்லும்.

### முடக்கப்படுவதற்கான சந்தர்ப்பங்களும் தயார்

ஒரு அரிய சந்தர்ப்பத்தை புலிகளற்ற இந்த மாவீரர் தினம் தமிழர் தரப்புக்கு தந்து போயிருக்கின்றது. கடந்த காலங்களைப் போல இதனையும் ஆறவிடமால் பற்றிப் பிடித்தால் 30 வருடப் போராட்டத்துக்கு நல்லதொரு விளைவைப் பெற்றுக் கொள்ளலாம். பல்கலைக்கழக சூழலைப் பொறுத்த வரையில் இந்தக் கொதிநிலையை நீண்ட காலத்துக்கு தக்க வைத்திருக்க முடியாது. அங்கு தற்போது நிலவும் நிர்வாக நிலைமைகள் முற்றிலும் தமிழ்த் தேசிய அரசியலுக்கு முரணானது. உயர்பீடங்கள் பதவிகளுக்காக ஒடுக்கும் அரசின் கால்களில் விழுந்து கிடந்து, அதன் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக இயங்குவதை அவதானிக்க கூடியதாகவுள்ளது. மறுபுறத்தில் போராட்டத்தில் ஈடுபடும் மாணவர்களும், ஏனையவர்களும் இராணுவப் புலனாய்வாளர்களின் அதீத கண்காணிப்புக்கு உள்ளாகின்றனர். இனி வரும் நாள்களில் மிரட்டல்கள், உயிர் அச்சுறுத்தல்கள், கைதுகள் மேற்கொள்ளப்படலாம். எப்படியாவது இந்த தன்னெழுச்சியை கட்டுப்படுத்த வேண்டிய தேவை அதிகாரத் தரப்புக்கு உண்டு.

### இவர்கள் என்ன செய்வர்?

இதனைக் கருத்தில் கொண்டு வடக்கில் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரு பிரதான அரசியல் கட்சிகளும் தமது எதிர்கால அரசியல் நிகழ்ச்சி நிரலில் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும். இதில் ஒரு முரணான, மாற்றங்காணப்பட வேண்டிய விடயத்தை சுட்டிக்காட்டலாம். மாணவர்கள் தாக்கப்பட்ட நாளன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்திருந்தது. அந்தக் கட்சியின் ஆர்ப்பாட்டம் எதிர்வரும் 4ஆம் திகதி என அறிவிக்கப்பட்டிருந்தது. உடனடியாக தமிழ் தேசிய கூட்டமைப்பும் ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கான அறிவிப்பை வெளியிட்டது. அதனுடைய ஆர்ப்பாட்டம் எதிர்வரும் 3ஆம் திகதி. அதவாது தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஆர்ப்பாட்டத்துக்கு முதல் நாள் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆர்ப்பாட்டம். இப்போதிருக்கின்ற நிலையில் இவ்வாறான போராட்டங்களுக்கு மக்களை அணிதிரட்டுவதென்பது மிகக் கடினம். உயிர்ப்பயமும், கடந்த காலங்களில் போராட்டங்களில் ஈடுபட்டோருக்கு ஏற்பட்ட மோசமான அனுபவங்களும் பொது மக்கள் அணிதிரள்வதை அச்சத்துக்குரிய ஒன்றாக மாற்றியிருக்கின்றது. இந்த கட்டத்தில் கூட இரு கட்சிகளும் போட்டியிடுகின்றன. ஏன் இரு கட்சியினரும் இணைந்து ஒரே நாளில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை வெற்றிகரமாக நிகழ்த்த முடியாது?

மாவீரர் நாள், தமிழ்த் தேசியத்தின் எழுச்சி நாளாகவே அடையாளப்படுத்தப்படுகின்றது. அதனையே அந்த நாளுக்கான அறிவிப்புக்களிலும் எழுதி வைத்திருக்கின்றனர். அந்த நாளுக்குரிய எழுச்சியை காலம் இம்முறை உருவாக்கியளித்திருக்கின்றது. அதைப்பற்றிப் பிடித்துக் கொள்வதும், உதறித் தள்ளுவதும் தமிழர் தரப்பிடமே இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரண்டு நாடுகள் என்ற தீர்வுதான் மத்திய கிழக்கில் அமைதிக்கு வழி

## சொல்கிறார் ஐ.நா. செயலாளர் நாயகம்

■ ரெங்கன்

- மத்திய கிழக்கில் இரண்டு நாடுகள் என்ற தீர்வுதான் அமைதியைக் கொண்டு வரும் - பான் கீ மூன்
- ஐ. நா. வில் பலஸ்தீனத்தின் அந்தஸ்தை அதிகரிக்கக் கோருகிறார் -மக்மூத் அப்பாஸ்
- துரு பனிப்பாறைகள் உருகி உலக வெப்பத்தை அதிகரிக்கும் ஆபத்து - ஐ. நா. விடுக்கும் எச்சரிக்கை.

உலக நடப்புகள் ஒரு பார்வை

மத்திய கிழக்கில் இரண்டு நாடுகள் என்ற தீர்வு ஏற்றுக்கொள்ளப்படுமானால் அங்கு ஏற்பட்டுள்ள சிக்கல் தீர்க்கப்பட்டு விடும் என்று ஐ. நா. செயலாளர் நாயகம் பான் கி மூன் கருத்து தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்புக்குமிடையில் போர் நிறுத்தம் ஒன்று ஏற்பட்டதன் பின்னர் பான் கீ மூன் இக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

மத்திய கிழக்கில் ஆக்கிரமிப்பும் முரண்பாடுகளும் முடிவுக்கு கொண்டு வரப்படுவதற்கு முன் எப்போதையும் விட இப்போது இங்கு பேச்சு வார்த்தை மூலமான இரண்டு நாடுகள் என்ற தீர்வு காணப்படுவது அவசியம் என்றார் பான் கீ மூன்.

சமயங்களுக்கிடையிலான உறவுகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை வியன்னாவில் ஆரம்பித்து வைத்து பேசுகையில் அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

அவர் அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில், இப்பொழுது ஏற்பட்டுள்ள போர் நிறுத்தம் நீடித்திருப்பதை நாம் உறுதிப்படுத்தியாக வேண்டும். உடன்பாட்டை இருதரப்பினரும் அனுசரித்து ஒழுக வேண்டும். தொடர்ந்துவரும் பிரச்சினைக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். அப்பிரதேசத்தில் ஸ்திர நிலைமை ஏற்படுவதற்கு இது முக்கியம். நீதியும் விரிவான அமைதியும் எமது இறுதி நோக்கமாக இருக்க வேண்டும். எல்லோருக்கும் நீடித்த பாதுகாப்புக்கு இது அவசியம்.

அப்துல்லா பின் அப்துலஸிஸ் சர்வதேச சமூகங்கள் மற்றும் கலாசாரங்களுக்கான மையத்தின் ஆரம்ப நிகழ்வில் மூன் உரை நிகழ்த்தினார்.

### பலஸ்தீனத்தின் அந்தஸ்தை உயர்த்துவதற்கு கோரிக்கை

பலஸ்தீன அந்தஸ்து உயர வேண்டும். ஐ. நா. செயலாளர் நாயகம் இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கும் அதேவேளை பலஸ்தீன தலைவர்கள் தமது நாட்டின் ஐ. நா. பிரதிநிதித்துவத்தின் அந்தஸ்தை மேலும் உயர்த்திக்கொள்ள உதவும் படி ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் கோரிக்கை வைத்து வருகிறார்கள்.

சர்வதேச மட்டத்தில் பலஸ்தீனத்துக்கு புதிய அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக இந்த முயற்சி எடுக்கப்படுவதாக கூறப்படுகின்றது.

ஐ. நா. பொதுச் சபையில் பலஸ்தீனத்துக்கு வழங்கப்பட்டுள்ள பார்வையாளர் அந்தஸ்தை மாற்றி உறுப்பினர் அல்லாத பார்வையாளர் (Non member observer status) என்ற அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமென்று பலஸ்தீன தலைவர்கள் கோருகிறார்கள். இந்த கோரிக்கையை பலஸ்தீன அதிபர் மகமூத் அப்பாஸ் தாமே நேரடியாக ஐ. நா. முன் வைக்கவிருப்பதாக அறிக்கைகள் தெரிவித்தன.

இந்த கோரிக்கை 193 உறுப்பு நாடுகளின் ஐ. நா. பொதுசபையால் ஏற்றுக்கொள்ளப்படுமானால் ஐ. நா. முகவர் அமைப்புகள் பலவற்றில் பலஸ்தீனத்துக்கு இடம் கிடைப்பதாய் இருக்கும். குறிப்பாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இடம் கிடைக்க வாய்ப்பிருக்கிறது.

ரமல்லாவில் அண்மையில் ஒரு கூட்டத்தில் அதிபர் அப்பாஸ் உரை நிகழ்த்துகையில், எமது செயற்பாடுகளில் முழு நம்பிக்கை வைத்துத் தான் ஐ. நாவுக்கு செல்கின்றோம். நியாயமான நீதியை நாம் கேட்கின்றோம். ஏற்கனவே சர்வதேச சமூகத்தால் இது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

கிழக்கு ஜெருசலத்தை தலைநகராகக் கொண்ட எமது நாட்டை அவர்கள் எமக்கு தரவேண்டும். அது இல்லாமல் வேறு நம்பிக்கை எதுவுமே இருக்க முடியாது என்று கூறினார்.

அப்பாஸ், அம்மானிலிருந்து சில தினங்களுக்கு முன் நியூயோர்க்குக்குப் புறப்பட்டுச் சென்றார். தங்கள் கோரிக்கைக்கு ஆதரவாக வாக்களிப்பார்கள் என்று கருதப்படும் பிரான்ஸ், டென்மார்க் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்கு அவர் செல்வதாக இருந்தது.

பலஸ்தீனத்தின் ஐ. நா. வில் உள்ள தற்போதைய நிரந்தர பார்வையாளர் அந்தஸ்தினை உயர்த்துவதற்கான தீர்மானத்தை ஆதரிப்பதாக வாக்குறுதியளித்துள்ள முதல் ஐரோப்பிய வல்லரசு பிரான்ஸாகும். பிரிட்டன் தன் நிலைப்பாட்டை இனிமேல்தான் தீர்மானிக்க வேண்டும் என்று அறிவித்திருந்தது. டென்மார்க்கும், ஸ்பெயினும் ஏற்கனவே ஆதரிப்பதாக அறிவித்துள்ளன.

பலஸ்தீனம் தொடர்பான தீர்மானம் ஐ. நா. பொதுச் சபையில் கடந்த வியாழக் கிழமை வாக்களிப்புக்கு விடப்படுவதாக இருந்தது.

பிந்தி கிடைத்த செய்திகளின் படி நியூயோர்க்கில் பலஸ்தீனிய தலைவர் அப்பாஸ் பல்வேறு நாடுகளின் தலைவர்களை சந்தித்துத் தமது கோரிக்கைக்கு ஆதரவு தேடி வருவதாக அறிய முடிந்தது. ஏறக்குறைய 132 நாடுகள் பலஸ்தீனம் தொடர்பான தீர்மானத்தை ஆதரிக்க முன் வந்திருப்பதாக பலஸ்தீன தரப்பினர் கூறினார்கள். இந்த நாடுகளில் சில கடைசி நேரத்தில் நடு நிலை வகிக்கக்கூடும் என்பதும் அவர்கள் கருத்து.

பலஸ்தீனத்தின் அந்தஸ்து உயர்த்தப்படும் தீர்மானத்தை பொதுச் சபையில் அமெரிக்காவும் இஸ்ரேலும் கடுமையாக எதிர்க்க விரும்புவதாகக் கூறப்படுகிறது என்றாலும் தீர்மானம் நிறைவேறும் என்று பலஸ்தீனியர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

ஐ. நா. சபையில் பலஸ்தீனத்துக்கு இருந்து வரும் பார்வையாளர் அந்தஸ்தை உறுப்பு நாடு அல்லாத பார்வையாளர் அந்தஸ்துக்கு உயர்த்தப்பட வேண்டும் என்று அவர்கள் கோரி வருகிறார்கள்.

அமெரிக்க ராஜாங்க அமைச்சின் பிரதி செயலாளர் வில்லியம்ஸ் போர்ன்ஸ் மற்றும் மத்திய கிழக்கு தூதுவர் டேவிட் ஹேல் ஆகிய இருவரும் மக்மூத் அப்பாஸை சந்தித்து தீர்மானத்தை வாபஸ் பெற்றுக்கொள்ள அல்லது மாற்றி அமைக்கும் படி கோரியிருப்பதாக செய்திகள் கூறின. பலஸ்தீனர்கள் தமது கோரிக்கையை மாற்றிக் கொள்வார்களா என்று பலஸ்தீனிய வெளிநாட்டமைச்சர் றியாத் அல் மலாக்கியிடம் நிருபர்கள் கேட்ட போது ''அது எனது பெயரை மாற்றிக் கொள்வது போல் இருக்கும்'' என்று அவர் கூறினார்.

### சிரியா உறவு ஆழமானதாக இல்லை

உள்நாட்டு போரினால் நிலை குலைந்து போயிருக்கும் சிரியா நாட்டின் ஆளும் தரப்பினருக்கு ஆயுதங்கள் மற்றும் தார்மீக ஆதரவுகளை வழங்கிவரும் நாடுகளில் ஒன்றாக ரஷ்யா இப்பொழுது சிரியா ஆட்சியாளர் தொடர்பாக வெளியிட்டிருக்கும் கருத்து அந்நாட்டுடனான ரஷ்யாவின் உறவில் கீறல் ஏற்பட்டிருப்பதாக சந்தேகம் ஏற்படுத்துவதாய் உள்ளது. சிரியா அதிபர் பஷார் அல்- அசாத்துக்கு ரஷ்யா சீனாவுடன் சேர்ந்து ஆயுத உதவிகள் மட்டுமன்றி ஐ. நா. விலும் ஆதரவு வழங்கி வந்துள்ளது. சிரியாவுக்கு எதிராக ஐ. நா. பாதுகாப்பு சபையால் மேற்கு நாடுகளில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களையும் சீனாவுடன் சேர்ந்து வீட்டோ செய்திருந்தது.

இந்த நிலைமையில் ரஷ்ய பிரதமர் டிமிட்ரி மெட்வடேவ் வெளியிட்டுள்ள ஒரு கருத்தில் அதிபர் அசாத்துடனான விசேஷ உறவு என்பது பழையகதையாகும். அவருடன் இப்பொழுது ஒரு ''செயல்படும்'' உறவு மட்டுமே கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்துள்ளனர்.

அப்படியானதொரு உறவு சோவித் யூனியனுக்கும் அவரது தந்தை காலஞ்சென்ற சிரிய அதிபர் ஹாபெஸ் அல்- ஆசாத்துக்கு மிடையில் நிலவியதுண்டு. இப்போதைய அதிபருக்கும் எமக்குமிடையில் அவ்வாறான உறவு கிடையாதுஎன்று கூறினார் பிரதமர் மெட்வடேவ்.

இருந்தாலும் சிரியாவில் போராடி வரும் குழுக்களை ஆதரிக்கவும் அவைகளுக்கு ஆயுதங்கள் வழங்கவும் பிரான்ஸ் முன் வந்திருப்பதை வெட்வடேல் ஏற்கமுடியாது என்று கண்டித்தார்.

எந்த அரசையும் ஆதரித்து நிற்பதல்ல எமது நிலை, போரிடுகின்ற இருதரப்பினரையும் பேச்சு மேசைக்கு கொண்டு வர வேண்டியது உலக சமுதாயத்தின் கடமையாகும் என்றார் அவர்.

### வேகமாக உருகிவரும் துருவப் பனிப்பாறைகள்

துருவப்பகுதியில் நிரந்தரமாக உறைந்த நிலையில் காணப்படும் பனிப்பாறைகள் வேகமாக உருக ஆரம்பித்துள்ளன. இதனால் உலகின் வெப்பம் அதிகரிக்கும் ஆபத்து தலை தூக்கப்போகிறது. ஐ. நா. சுற்றுச்சூழல் நிகழ்ச்சித்திட்ட அமைப்பு இவ்வாறு அச்சம் தெரிவித்துள்ளது.

ஐ. நா. காலநிலை கலந்துரையாடல்கள் கட்டாரில் நடைபெற்றுக்கொண்டிருந்த அதேவேளை ஐ. நா. சுற்றுச் சூழல் அமைப்பு வெளியிட்டதொரு அறிக்கையில், துருவப்பகுதியிலுள்ள பனிப்பாறைகள் உருகத்தொடங்கியிருப்பது கவலையளிக்கும் விடயமாக இருக்கப்போகிறது என்று விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளார்கள். ஆனால் இதில் அரசியல் வாதிகளுக்கு எதுவித கவலையும் இல்லாமல் இருக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது காலநிலையைத் தொடர்ந்து பாதிக்கும் ஒரு விடயமாகும். ஆனால் சுற்று சூழல் உயிரினங்கள் மற்றும் உட்கட்டமைப்புகள் தொடர்பான தரப்பினர் அளவுக்கு அதிகமாகவே கவனம் செலுத்தாமல் இருந்துவந்துள்ளனர் என்று அந்த அமைப்பின் பணிப்பாளர் அச்சின ஸ்டீனர் தம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வடசைபீரியா மற்றும் கனடா பகுதிகளுடன் சீனா, அமெரிக்க நாடுகளின் பகுதிகளில் இந்த உருகா நிலை பனிப்படலம் விசால இடப்பரப்பை அடக்கியுள்ளது. இந்த பனிப்பாறையின் மேல் பகுதியில் இரண்டு மீற்றர் அளவில் ஆழம் கொண்ட பகுதி எப்பொழுதும் செயற்பட்டுக் கொண்டே இருக்கின்றது.

கோடை காலத்தில் உருகிப் போவதும் குளிர்காலத்தில் உறைந்து போவதும் இதன்தன்மை. அதற்கும் கீழுள்ள பகுதி நிரந்தரமாகவே உறைந்து போயுள்ளது. இந்த அடிப்பாகத்துக்கு வெப்பம் ஊடுருவுமானால் பெருமளவில் கார்பன்டையொட்சைடையும் மெதேனையும் வெளியிடும். அடியில் ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன் அடைபட்டு போன தாவரங்களிலிருந்து இவை வெளிப்படுவதாகும்.

ஆனால் அவை இதுவரை காலமும் பத்திரமாக பனிப்பாறையின் அடியில் உறைந்த பகுதியில் அடைந்து கிடக்கின்றன.

இந்த பசுமை இல்ல வாயுக்கள் வெளிவந்து சுற்றுச்சூழலில் கலக்குமானால் வெப்பம் அதிகரிப்பதோடு நிரந்தரமாக உறை நிலையிலுள்ள பனிப்பகுதியை உருகச் செய்துவிடும். இது ஒரு அபாயகரமான சுற்றோட்டமாக இருக்கும் என்கிறார்கள் விஞ்ஞானிகள். பீட்பேக் (feedback) என்று விஞ்ஞானிகளால் அழைக்கப்படும் இந்த நிலைமை குறித்து 10 ஆண்டுகளுக்கு முன்பே அறிவிக்கப்பட்டிருந்தது. இப்பொழுதுதான் அது கவலையளிக்கும் நிலையை எட்டியுள்ளது என்கிறது ஐ. நா. அறிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org